
THE BOOK WAS DRENCHED

UNIVERSAL
LIBRARY
OU_208104
UNIVERSAL
LIBRARY



வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

உ

திருச்சிற்றம்பலம்

நாடகவியல்

இது

சென்னைக்கிறித்தவகலாசாலைத்

தலைமைத் தமிழ்ப் பண்டிதர்

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

இயற்றியது

அண்ணாமலை பல்கலைக்கழகத்

தமிழ்ப்பண்டிதராயிருந்த

ந. பலராம ஐயர்

எழுதிய உரையுடன் கூடியது



வி. சூ. சுவாமிநாதன்

புஸ்தக வியாபாரி

மதுரை — திருநெல்வேலி

[பதிப்புரிமை]

Third Edition, 1100 Copies.

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.

பொருளடக்கம்

க.	உரிமையுரை	...	1
உ.	முகவுரை	...	4
ங.	முன்னுரை	...	16
ச.	நாடகவியல்	...	19
	1. பாயிரம்	...	19
	2. நூல்	...	27
(க)	பொதுவியல்பு	...	29
	I. கதை	...	31
	II. நாற்பொருள்	...	35
	III. சந்தி	...	42
	IV. சுவை	...	48
	V. பொருத்தம்	...	81
	VI. நடை	...	84
	VII. கவிகூற்று	...	107
	VIII. பாத்திரம்	...	108
(உ)	சிறப்பியல்பு	...	135
	I. சாதி	...	135
	II. உபசாதி	...	149
	III. ஒழிபு	...	168

(ரு)	**உறுப்பியல்பு**	...	178
	I. வாழ்த்து	...	178
	II. நடாத்துநர்	...	180
	III. முன்னுரை	...	182
	IV. குறிப்பு	...	186
	V. அங்கம்	...	188
	VI. களம்	...	190
	VII. கூற்று	...	192
	VIII. கூத்து	...	195
	IX. பின்னுரை	...	211
	X. ஒழிபு	...	214
(சு)	**நடிப்பியல்பு**	...	217
	I. மெய்ப்பாடு	...	218
	II. விறல்	...	220
	III. ஒற்றுமை	...	226
	IV. அவிநயம்	...	227
	V. நிலை	...	250
	VI நாடகசாலை	...	255
	VII. நூற்புறனடை	...	270
(டு)	**நூற்பொருளகராதி**	...	271
(கூ)	**சூத்திர முதற்குறிப்பகராதி**	...	278
(எ)	**மேற்கோட் செய்யுள் முதற் குறிப்பகராதி**	...	282
(அ)	**மேற்கோள் நூல்களின் அகராதி**	...	285



மதுரையம்பதி மகாவித்துவான்

சு. சபாபதி முதலியார்

வ

திருச்சிற்றம்பலம்

நாடகவியல்

நாடகவியல் என்னுஞ் சொற்றொடர் நாடகத்திற்கு இலக்கணஞ்சொல்லும் நூல் என்னும் பொருளுடையது. இனி நாடகத்தினது இலக்கணத்தைக்கூறும் நூல் என விரித்தலுமாம். மூன்னதாயின் நான்காம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயராய் நூலுக்காயிற்று. பின்னதாயின் ஆறும்வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அவ்வாறுயிற்று. இன்னும் இந் நூலின் பெயர்க்காரணத்தை ஆசிரியர் தமது முகவுரையின் முதற் பக்கத்திலேயே தெளிவுபெற விளக்கியிருத்தல் காண்க.

உரிமையுரை

செந்தமிழ்த்தீம் பாஓட்டிச் சீராட்டி நாளுமெமை
வந்தைநலங் கூர மிகவளர்த்த—வெந்த
மருமைச் சபாபதிக்கெ மன்பின்குறி யாவிஃ
துரிமை புகுத்துகின்று மோர்ந்து.

—நூலாசிரியர்

அஃதாவது ஒருவர் தாஞ்செய்ததோர் நூலைத் தக்க பெரியோர்க்கு உரிமைசெய்துவிட்டதாகக் கூறுங்கூற்று. இது வசனமாகவேனுஞ் செய்யுளாகவேனு மிருக்கலாம்.

முன்னதே பெரும்பான்மை. உரிமைசெய்தல், உரிமையாக்கல், உரிமைபுகுத்தல், உரிமைகொளுத்தல், உரிமையுறுத்தல் என்றுங்கூறப. இதனை அங்கிதஞ் செய்தல், அர்ப்பணஞ் செய்தல் என்று முரைக்கலாம்; ஆங்கில நூலார் Dedication என்பர்.

செம்மை தமிழ் தீம்பால் ஊட்டி - செவ்விய தமிழென்னும் இனிய பாற்கடலைப் புகட்டி, சீராட்டி - சிறப்புச் செய்து, நாளும் - தினந்தோறும், எமை - எம்மை, விந்தை நலம் கூர - வித்தையாகிய நன்மை மிகுதியு முண்டாக, மிக வளர்த்த - பேரன்புடன் வளர்த்த, எம் தம் அருமை சபாபதிக்கு - எமது அருமைமிக்க சபாபதிப் பெயருடைய ஆசிரியனுக்கு, எம் அன்பின் குறியா - அன்னன்மாட் டெமக்குள அன்பிற்கு அறிகுறியாக, இஃது - நாடகவிய லென்னுமிந்நூலை, ஓர்ந்து உரிமை புகுத்துகின்றும் - நன்றாக ஆராய்ந்து உரிமையாக்குகின்றும்.

குறிப்பு:—இச்செய்யுள், தமது தமிழ்நூற் போதகாசிரியராகிய மதுரையம்பதி மாவித்துவான் சபாபதிமுதலியாரவர்கட்கு, இந்நூலை யுரிமை புகுத்தியதனைத் தெரிவிப்பான் எழுந்தது. தமதாசிரியரை நடராஜப்பெருமானுகத் தொடர் புருவமாகக் கூறியதற்கேற்பச் செந்தமிழைப் பாற்கடலாகவும் தம்மை உபமன்னியுவாகவும் ஈண்டுக் கூறுமையின் இஃது ஏகதேசவுருவகவணியாம். வியாக்கிரபாதர்தம் புதல்வராகிய உபமன்னியுமுனிவர் இளங்குழவிப் பருவத்தில், தமது மூதாதையாகிய வசிட்டருடைய ஆச்சிரமத்தில் வளரும்போழ்து காமதேனுவின் இன்சுவைப்பாலையுண்டு வளர்ந்தமையின், பின்னர்த் தமது தாதையார் வதியுந் தில்லைவ

னஞ் சார்ந்துழி ஆண்டு அப் பால் பெருமற் பசியாலழ, அடியார்க்கெளியனும் நடராஜப்பெருமான் மனமிரங்கிப் பாற் கடலை யுண்ணவளித்த கதையினை யீண்டறிக. பாலுண்டார் நலம்பெறுதல் ஒருதலை யாதலின் 'விந்தைநலங்கூர' என்றார். விந்தை: வித்தையென்பதன் மெலித்தல் விகாரம். இனி, விந்தை வியப்புடைமையுமாம். பாலூட்டி வளர்த்த நன்றியறிவினை அறிந்ததுடன் நாடகவியலினை நடிக்குந்தொழில்செயும் நடராசருக்கே உரிமையாக்குதல் தகவுடைத்தா மென்று ஆராய்ந்துஞ் செய்தமையின் 'ஓர்ந்து' என்றுரைத்தார். இனி, மகற்குத் தாயினிடத்து அன்பு பெருகுமாறு போலத் தமக்குத் தம்மாசிரியர்மாட்டுப் பெருகிய அன்பினைப் புனைந்துரைத்ததூஉமாம். 'அன்பின்குறி': இச்சீரினிடத்து 'ன்' அலகுபெறுமை காண்க, 'வேங்கடவா சத்திருமான் மேற்பத்தி யுள்ளசனர், தாங்கடவா நிற்பர்பவ சாகரத்தை' என்றவிடத்து 'ர்' அலகு பெறுதலாறு போல.

* முகவுரை

உலகின்கண்ணுள்ள மக்களனைவர்க்கும் உள்ளத்து உவகை பயப்பன நூல்களேயாம். அவை கேள்விநூலென்றும், காட்சிநூலென்றும், இருதிறத்தனவாம். சிந்தாமணி, கம்பராமாயண மாதிய முற்றிறத்திற்கும், கலாவதி, ரூபாவதி முதலியன பிற்றிறத்திற்கும், உதாரணங்களாம்.

இவ்வாறு பின்னர்க்கூறிய காட்சிநூலாகிய நாடகங்களின் இலக்கணங்களை ஒருசேரத் தொகுத்துக் கூறுதலின் இந்நூல் நாடகவியலென்னும் பெயர்த்தாயிற்று அற்றேல், வடநூலார் ரூபகங்களென்று கூறுவனவற்றை யெல்லாம், நீவிர் நாடகமென்றுரைத்தல் எங்ஙனமெனில், கூறுதும். சிலப்பதிகாரவுரை வகுத்த அடியார்க்கு நல்லாரும் வீரசோழியவுரைப் பெருந்தேவனாரும், தண்டியலங்காரவுரைச் சுப்பிரமணிய தேசிகரும், ஏனைய தொல்லை நூலாசிரியரும், வடமொழியாளர் கூறிய வுருவகங்களெல்லாம், நாடகச் சாதியெனக் கூறுபவாதலான், யாம் அவ்வுருவகங்களனைத்தையும் நாடகத்தின்பாற்படுத்து, நாடகவியலெனப் பொதுப்படக் கூறுதற்கண், யாதோ ரிழுக்குமின்றுமென விடுக்க. அன்றியும், மேற்கூறிய உருவகங்கள் யாவற்றினும் நாடகமே சிறப்புடைத்தாமாதலானும், நாடகத்தின் இலக்கணங்களுட்

---

* இது மிகவும் விசேஷமாகக் கூறப்பட்டுளது. இதன் கண்ணே நூலாசிரியர் தாம் ஆராய்ச்சிசெய்துள பல்வகைய இரகசியங்களேயும் எடுத்துரைத்திருக்கின்றனர். அவையனைத்தும் படித்து அறிந்துகொண்டு இன்புறத்தக்கன. இம் முகவுரையின் நடை தெளிவாயிருத்தலால் அதிலே ஆங்காங்குக் காணக்கூடிய சிற்சில கிரிசொற்களுக்குமட்டிற் பொருளெழுதுதல் அத்துணைச் சிறப்பிற்றன்றென்று விடுத்தனம்.

சில, ஏனையவுருவகங்களினும் ஓராற்றாற் பயின்று வருதலானுஞ் சிறப்புப்பற்றி நாடகவியலென்று மெனினுமமையும். இஃதிவ்வாறாக, நாடகத்தோற்ற முதலாயின பற்றிச் சில கூறப்புகுவாம்.

நாடகத்தோற்றம்:—உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் வெளியிட்டுரைக்க வேண்டுமென்னு மவாவை மனிதரியல்பினின்றும் வேறுபடுத்தல் இயலாது. ஆகவே மனிதர் தமது எண்ணங்களையும் மனவெழுச்சிகாரங்களையும் அவிநயங்களானுஞ் சொற்களானும் அல்லது அவையிரண்டனானும் வெளிப்படுத்துகின்றனர்; இவ்வெளிப்பாட்டு முறைகளை ஆடல் பாடல்களுக்குத் தக்கவாறு இயைத்தும் வேறுபடுத்துங் கோடனெறியைப் பிறமக்கள் குழுஉவினின்றும் பற்பல அமையங்களினும் பயின்று அறிகின்றனர். குழவிப் பருவந் தொட்டுப் பிறர்செய்வன காமுஞ்செய்தல் மனிதருக்கு இயற்கையாகவே அமைந்துளது; இவ்வமைதியினன் மாந்தரனைவரும் மகிழ்ச்சியடைதலியல்பே. பிறர்போல் நடிக்குமிடத்து அவிநயமுங் குரலுமே மக்களாயினர் யாவர்க்கும் பொதுக்கருவிகளாம்; பெரும்பாலும் உடையணிகளின் உதவிகளும் இளஞ்சிறார்க்கே யன்றி மக்கள் குழாத்தின் இளமைப் பருவத்தும் இயல்வனவாம். ஆதலான் உளரும் இலருமாம் பாத்திரங்களை மேற்கொண்டாடலே நாடகத்தோற்றத்தின் முதற்படியாம்; எனினும் அது பிறிதொரு மேற்படிக்குத் துணையாருமட்டில் உதவுமன்றி வேறன்று; அன்றியும் அவிநயச்சால்பு நிகழுங்காறும் அது நாடக நிலையை யெய்திற்றிலதென்க. மனிதர் தம்மைப்போன்ற மற்ற மனிதர்களுந் தாம் உண்மைப் பொருளென நினைத்து அப்பொருள் பேராற்றலும் உடைத்தென நம்புங் கடவுள் அல்லது கடவுளருமாகிய இவர்கட்கே அவிநயம் உரித்

தெனக் கூறுப. அஃது ஏனையோரெவர்க்கும் இலக்கண வகையானன்றி நேரே உரியதெனச் சொல்லப்படுவதில்லை. அத்தகை யவிநயம் மனத்தின்கண் வேட்கை நிகழ்ச்சியினை யும் தன் காரியம் முற்றினும் முற்றுதொழியினும் அவ்வேட் கையின் உறுதிப்பாடு வேட்டதற்குரிய செயல்களைச் செய்தே தீருமென்பதனையுங் குறிப்பிக்கின்றது; இது காரணத்தினின் றுங் காரியத்திற்கு ஏதுமாற்றை விளக்குதல் காண்க. ஆத லான் அவிநயம் மனிதருக்குரிய வேட்கையானுதல் கடவுட் குரிய விருப்பினுனுதல் வெளிப்பட்டியலுவதாக மனிதர் மனத்திற்படுதல் வேண்டும். ஒரு பொருட் செய்கைபோற் செய்யப்படும் பிறிதொரு செய்கையும் உண்மைவழியான் நோக்குமிடத்து ஒருவகை நாடகமேயாம்; ஆனல் உலகத்தின் கணுள்ள சாதியாரனைவரும் ஒருங்கே இந்நிலையை எய்தினு ரல்லர்.

நாடகக்கலை:—இந்நிலை யெய்திய பின்னர் அன்னணந் தோன்றிய நாடகம் கலைநலத்தால் ஒழுங்குறல் வேண்டுவ தொன்றே எஞ்சி நிற்கின்றது. ஆகவே இன்னணம் ஒழுங் குறப் புகுந்தநாடகம் அக்கலையின் ஒரு பிரிவாகி ஒங்குகின் றது. இவ்வாறேங்கிய பின்னரே நாம் நாடகக்கலை யென்ப தைப் பற்றிப் பேசலாகும். ஆனல் இக்கலையைச் சில சாதி யாரே யடைந்திருக்கின்றனர். [இவர்களுள் நந்தமிழரும் ஒருவரென்னலாம்.] ஆயினும் ஒரு சாதியார் நாடகக் கலை யென்பதின்றி நாடகமட்டிலே உடையராயிருத்தலுங் கூடும். சிலர் நாடகக்கலையிற் பயில்வதை விடுத்த பின்னரும் நாட கத்தின் மட்டும் பயின்று கொண்டிருத்தலும் இயலும். இவ்வாறன்றி ஒரு தேசத்தாரது நாடகம் ஒருவகைக் கலை யாக வரைந்து கொள்ளப்படுவதற்கு முன்னும் பின்னும் அன்னர் அந்நாடகத்தின் இடையீடுகளான இசை, கூத்து,

அணியென்னும் உபகரணங்களுள் ஒன்றும் பலவும் மற்றையவற்றினும் மிகும்படி விடுதலுமுண்டு; அது காரணமாய் இறுதியிற் புதியனவும் அன்றி வழக்காறற்றுப் போயினவுமாகிய நாடகவினங்கள் தலைப்பட்டுக் கிளைத்தலும் இயல்பே. ஆறற் கலைகளுள் ஒன்றெனக் கருதுழி, நாடகம் தன் பாவனை வழிகளிற் பேச்சையும் ஒருறுப்பாகக் கொண்டுளது. அன்றியும் நாமுணர்ந்த பிறபாஷைச் சரித்திரங்களினும் உற்றுநோக்குழி இயற்றொடர்நிலைச் செய்யுட்களும் இசைத் தொடர்நிலைச் செய்யுட்களுமாகிய பாமுறைகளின் தொடக்கங்கள் ஒருங்கேனுந் தனித்தேனும் நாடகக்கலையின் தொடக்கங்களுக்கு முன்னரேயிருந்துள வென்பது மலையிலக்கே. இவ்விரண்டுஞ் சேர்ந்துழியே நாடகமானது நாகரிகமுள்ள நாடுகளனைத்தினுங் கலைகளுளொன்றெனக் கருதத் தக்கவாறு தோன்றி வளர்கின்றது. [இம்முறைக்கு இணங்கியே நந்தம் தமிழ்மொழியின்கண்ணும் இயற்றமிழும் இசைத்தமிழும் நாடகத்தமிழிற்கு முற்படுவனவாயின; அன்றியும் மேற்கூறியவாற்றுன் இயற்றமிழும் இசைத்தமிழுங் கூடிய வழியே நாடகத்தமிழ் பிறந்ததென்பதூஉம் பெற்றும். இது பற்றியன்றே : தமிழ் மொழியை இயலிசை நாடகமென மூப் பகுதியாக்கி முறைப்படுத்தோதியதூஉமென்க.]

நாடகக்கலை அவிநயக்கலைகளி னியைபு:—நாடகத்தை நடித்துக்காட்டுதல் அதனை இயற்றுவோர்க்கு இன்றியமையாத துணைக்கருவியாகும். இஃதொழிந்த மற்றையவற்றின் உதவி அற்றன்று, இங்ஙனம் நாடகக்கலையும் அவிநயக்கலையுமாகிய இவ்விரண்டும் உண்மையிற் பிரிபடுவனவல்லவேனும் நாடகக்கலையின் இயக்கமும் அவிநயக்கலையின் இயக்கமும் எல்லாக்காலத்தும் ஒருவழிப்படுவனவல்ல. நாடகப்புலவனது தொழில்களுட் சிலவற்றைச் சிற்சில வேளைகளில் தானே

செய்துமுடிக்க நேரினும் நடிப்போன் நாடகப் புலவன் கருத்தை அவ்வவ் வேளையில் விளக்கிக் காட்டுவோனே ஆகின்றான். இவ்வாறே நாடகப்புலவனும் நடிப்போனது விளக்கத்தை நானெறிப்படி வேண்டுவோனெனினும் வழக்கத்தில் வேண்டாதவனாகலாம். ஆயினும் இங்ஙனம் நடித்தற்கருத்தின்றி வரையப்பட்டுள நூல்கட்கு 'நாடகநூல்' என ஓரோ வழிப் பெயர்வழங்குவ துண்டெனினும் உள்ளவாறே நோக்குமிடத்து அவை நடிக்கப்படினன்றி அப்பெயரின ஆகாவாதலின் அஃது உண்மையிற் பொருத்தமில் பெயரேயாம்.

நாடகவிதிமுறை:—நாடகவிதிமுறையனைத்தும் முடிவு பெற எழுதப்படுமேயாயின் அவை அக்கலையினுக்கு உரிய பயன்களைக் கூறுவதுடனே அவற்றை அஃதடைதல் இவ்வாற்றான் இயலுமென்பதையுந் தெரிக்கும். ஆயினும் வடமொழி யொழிந்த பிறபாஷைகளில் நாடகம் காட்டினவுங் காட்டக்கூடியனவுமான வழிகளை நாடகவிதி வகுத்த பெரும் புலவர்கள் யாரும் முற்றவிளக்கினாரல்லர். நந்தமிழ் மொழியிலோ நாடகத் தமிழிலக்கணங்களெல்லாம் இறந்தனவாதலின் ஒன்றுஞ் சொல்லல் இயலாது. இதுநிற்க, நாடக விதிமுறையைப் பயனுடைத்தாமாறு செய்தற்கு நாடகப்புலவன்மாட்டுப் படைத்துரையாற்றல் அமைந்துகிடக்கின்றன்றி நாடகவிலக்கணங் கற்ற வளவில் எற்றை ஞான்றினும் நின்று நிலவத்தக்க பயனுடையதோர் நாடகமெதுவும் எக்காலத்தும் உண்டாதலில்லையென்பது அங்கையின் நெல்லியங்கனியே. இனி ஒவ்வொரு நாடகமும் முடிவு பெற்ற செயல் ஒன்றனது இன்றியமையாத பகுதிகளின் முறைகள் பலவற்றையும் அதற்கேற்ப அடைவே காட்டல் வேண்டும். அஃதாவது, இம்முடிபு முறை நாடகமியற்றும் வகை அனைத்தினுக்கும் ஆதாரமாயுளதென்பதாம்.

அவிநயக்கலை:—அவிநயக்கலை யென்பது தனிக்கலையா காது நாடகக்கலையைச் சார்ந்துள தாம்; மேலும் அஃது உயர் நிலையுற்றுழியும் அற்றேயாம்; எனினும் அதனைத் தக்கவா வழங்கலின்கண் ஒருவகைப் படைத்தியல் வன்மை உளதென் றலில் ஐயப்பாடு எட்டுணையுமில்லை. நாடகத்தின்கண் ஒரு பாத்திரவமைதி, நடிப்போன் செயல்களுக்குட்படாத சில முற்படு முறைகளால் வரைந்து சுட்டப்படுகின்றது; அதனைப் புதுமை வாய்ந்தோர் தனிக்கலை யென்றல் பிறிதினியைபு பொருளிற் பொருந்துவதாமேயன்றி வேறன்று. நடிப்போனை அவன்றன் படிப்பும் நினைப்பும் அநுபவத்துடனும் இயற்கை யினுண்டாய் அநுபவத்தான் வளர்வதுமாகிய அறிவுடனுங் கலந்து நாடகப் புலவன் தந்தனவற்றை விளக்கவும் பிணைக்க வும் கூட்டிமுடிக்கவும் வல்லனாக்குகின்றன. ஆயின் தானு ளங்கொண்ட அமைதிவன்மையினால் நடிப்போன் பாத்திர மாக மாறுகின்றான்; அங்ஙனம் மாறுதற்கண் நடிப்போனது தொழில்உண்மையிற் படைத்தியல்வன்மை வாய்ந்தோன், நடிப் போன் தன்றொழிலுக்கே உரிய நெறிகளால் தான் மேற் கொண்ட பாத்திரமே ஆகின்றானெனலினென்க. தான் நடிக் கும் பாத்திரத்திற்கு இன்றியமையாதன வென்றறிந்த அவி நயங்களை அடிப்படையாக்கி நடிப்பதனால் அதற்குத்தானளிக் கும் விளக்கமும், அவ்வடிப்படையும் அதன் விரிவுகளும் வேறுபடாதவாறு இயைத்துக்காட்டும் ஒருமைப்பாடும், அபி நயமுறைக்கும் நடிக்கப்புகுந்த பாத்திரத்தின் செயலுக்கும் ஏற்ப ஒரு நெறிப்படத் தெரிக்குந் தகுதியும் ஆகிய இன்னே ரன்னவையெல்லாம் நாடகப் புலவன் புனைந்து தந்தனவற் றின் அடியாக எழுஉம் எண்ணத்தினால் தோற்றுவனவேனும் நடிப்போனாலேயே இயல்வனவாம்.

நாடகத்தமிழ்:—தமிழ்நாடகம் முதலிலுண்டானது மத விடயமாகவே என்பது துணியப்படும். அது கடவுளர் திரு விழாக் காலங்களில் ஆடல்பாடல்க ளிரண்டையுஞ் சேர நிகழ்த்துவதினின்றும் உண்டாயிற்று. சிலகாலத்தின் பின்னர்க் கதை நடையான மனப்பாடங்களும் உடன் கூடின; அதன் மேல் முதலிற் பாடலாயுள்ள சம்பாஷணைகளும் பின்னர் வசனமாயுள்ள சம்பாஷணைகளும் அவற்றுடன் சேர்க்கப்பட்டன. பிற்பாடு நாடகத்தமிழ் வேத்தியல் பொதுவியல் என்ற இருபிரிவினதாகி அரசர்களானும் ஏனையோரானும் ஆதரித்து வளர்க்கப்பட்டது. கி. மு. மூன்று நூற்றாண்டினுதல் அல்லாக்கால் அதனினுஞ்சற்று முற்காலத்தினுதல் நாடகத்தமிழ் உயர்நிலை உற்றிருத்தல்வேண்டும், நாமுணர்ந்துள பழமையான நாடகத் தமிழ் நூல்கள் அனைத்தும் அக்காலத்தே நின்று நிலவினவாதலினென்க. ஆகவே அது குற்றங்குறைவு இல்லாது உண்டானதொரு தொழிலென்றே ஆதியின் மதிக்கப்பட்டது. இனி நாடகத்தமிழ் உயர்நிலை, வீழ்நிலை, அழிநிலை என்ற மூவகை நிலையும் அடைந்து உருக்குலைந்துபோன பின்னரே யாம் அதனைக் கண்ணுறுகின்றனம்.

"இனி இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீயம் முதலாயுள்ள தொன்னூல்களும் இறந்தன. நாடகத்தமிழ் நூலாகிய பரதம் அகத்தியம் முதலாயுள்ள தொன்னூல்களும் இறந்தன. பின்னும் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒரு சார்ச் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல்நடு இறுதிகாணுமையின் அவையும் இறந்தனபோலும்" என்று சிலப்பதிகாரத்திற்கு உரைவகுத்த அடியார்க்கு நல்லாரே கூறுதலின் அந்நூல்களைப் பற்றிய முயற்சிகளை அறவே ஒழித்துவிடலாம்.

பின்னர் அடியார்க்கு நல்லார், "இனித் தேவவிருடியாகிய குறுமுனிபாற் கேட்ட மாணக்கர் பன்னிருவருட் சிகண்டி யென்னும் அருந்தவமுனி, இடைச்சங்கத்து அநாகுலன் என்னும் தெய்வப் பாண்டியன் தேரொடு விசும்பு செல் வோன் திலோத்தமை யென்னுந் தெய்வ மகளைக் கண்டு தேரிற் கூடினவிடத்துச் சனித்தானைத் தேவரும் முனிவரும் சரியாநிற்கத் தோன்றினமையிற் சார குமாரன் என, அப் பெயர்பெற்ற குமரன் இசையறிதற்குச் செய்த இசை நுணுக்கமும், பாரசவ முனிவருள் யாமளேந்திரர் செய்த இந்திரகாளியமும், அறிவனார் செய்த பஞ்சமரபும், ஆதிவாயி லார் செய்த பரதசேனபதீயமும், கடைச்சங்கம் இரீஇய பாண்டியருட் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த முதனூல்களிலுள்ள வரைக்கூத்திற்கு மறுதலை யாகிய புகழ்க்கூத்தியன்ற மதிவாணர் நாடகத் தமிழ் நூலு மென ஐந்தும் இந்நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்க ளல்லவேனும் ஒருபுடை யொப்புமை கொண்டு முடித்தலைக் கருதிற்று இவ்வுரையெனக் கொள்க," என்றுகூறிப் புருத லின் அவர் காலத்து வழங்குவனவாயிருந்த இந்நூல்கள் காரணமாகப் பெரிதும் முயன்றக்கால் ஒருவேளை மிக்க பயன் விளையினும் விளையலாம் என்பது தோன்றுகின்றது. மேலும் தாளவகை யோத்து என்னும் இசைத்தமிழ் நூலும் கூத்தநூல், நூல் என்னும் நாடகத்தமிழ் நூல்களுமாகிய இவையிற்றினைப் பற்றிய வரலாறுகளுள் ஒன்றும் புலப்பட வில்லை.

இனி, நாட்டிய நூலானது தேவர்களாயினார்க்குக் களிப்பு விளைத்தற்பொருட்டு, நான்முகக் கடவுளாற் படைக் கப்பட்டதென்று பரத முனிவர் கூறுகின்றனர். அதன் வர லாறு:-ஒருகால் தேவர்கள் புடைசூழ வீற்றிருந்த இந்திரன்

பங்கயக் கடவுளே வேண்டி, 'காட்சிக்கு இனிதாயும் கேள்விக்கு அமுதாயும் உள்ளதோர் ஆட்டம் பொழுதுபோக்கின் நிமித்தம் படைத்து எம்போலியருக்கு ஈந்தருளுவீர்' என்று கேட்டவளவில், அம்மலர்மிசைத் தேவன், நாட்டிய வேதமென்னும் ஒரு புதுமறை படைத்து அதற்குறுப்புக்களாக, இருக்கினின்றும் பாட்டியங் (உரை) களையும், சாமத்தினின்றுங் கீதங் (இசையுருக்) களையும், யசுவினின்றும் அவிநயங்களையும், அதருவணத்தினின்றுஞ் சுவைகளையும் எடுத்து அமைத்தனன். இதற்கு முன்னுறுப்பாக நாந்தியை (பாயிரத்தை)யுஞ் சேர்த்தனன். இங்ஙனஞ் சேர்த்துச் செய்யப்பட்ட நாட்டியவேதத்தினை, இந்திரஞ்சியோர்க்கு வாணி காதலன் ஈந்தவளவிற், கடவுளரனைவருங் கழிபெருங் களியாட்டயர்ந்தனர். அப்போழ்தத்து, இந்திரவிழா வெடுக்குங் காலம் போந்தது. அவ்விழாவைச் சிறப்பிக்கும் நிமித்தம் பரதமுனிவர், பிரமன் வகுத்த நாட்டிய லக்கணத்திற் கிசைய ஒரு நாட்டியநூல் செய்து, அதனைத் தேவ சபையில் தேவராசன் முன்னர் நடித்துக்காட்டியரங்கேற்றினர். அது கண்ட புத்தேளிரெல்லாம், மிகப்பேருவகை பூத்தனர்.

இங்ஙனம், நடித்துக்காட்டப்பெற்றுத் தேவர்களுடைய அங்கீகாரமும் அடைந்த சமுத்திர மதனம் என்னும் அந்நாட்டிய நூலைச் சிவபெருமான் முன்னரும், நடித்துக்காட்ட விரும்பிக் கைலைக்குச் சென்று, அங்ஙனமே செய்தனர். அதுகண்ட கண்ணுதலார், அவ்வாறு தேவர்கள் நடித்தற்கண் புரைபல நிகழ்ந்தமை யறிந்து, உழையிருந்த நந்தியங் கடவுளை விளித்துப் பரதமுனிவர்க்கு நாட்டிய சாத்திரத்தை விளக்கி அறிவுறுத்தும்படி ஏவினர். அங்ஙனம் நந்திதேவரால் தெருட்டப்பட்ட பரதமுனிவர் திரிபுரதாகம் என்னும் நூலொன்று புனைந்து சிவபெருமான் முன்னர் நடித்துக்

காட்டி அவரைக் களிப்பித்தனர். முதலிற்செய்த சமுத்திர மதனமென்பது நாடகச்சாதியுட் சமவகாரமும், பின்னர்ச் செய்தது இடிமமுமாம். எனவே, இவ்விரண்டு சாதியுமே முதன்முதலில் ஏற்பட்டனவாமாறு காண்க. அதன் பின்னர் ஈகாமிருக சாதியும் வியாயோக சாதியும், வகுக்கப்பட்டன. இவற்றின் பின்னர், வீதி, அங்கம், பிரகசனம் பாணம், என்னுஞ் சாதிகள் தோன்றின. இவற்றிற்கும் பின்னர் முடிந்த இலக்கணமுடைய நாடகமும் பிரகரணமுந் தோன்றின. இவை மட்டிலே தச ரூபகம் என்னும் பெயரிய தனஞ்சயகவி செய்த நூலிலே கூறப்பட்டுள. உபசாதிகளைப் பற்றி முதன்முதல், அக்கினிபுராணத்தில் ஙஉ அ-ஆம் அத்தியாயத்திற் காண்கின்றும். பின்னர் விசுவநாதகவி மிகவும் விரித்து எழுதிய சாகித்திய தருப்பணத்தில் இவை யனைத்தும் நன்கு காட்டப்பட்டுள.

இதுநிற்க. இந்நூல் யாத்தற்கண் எமக்குப் பேருதவியாயிருந்த தமிழ் நூல்களும் வடநூல்களும் பின்வருவனவேயாம்.

தமிழ்நூல்கள்:—

க. தொல்காப்பியப் பொருளாதிகார நச்சினார்க்கினியம்
உ. சிலப்பதிகார வரும்பதவுரை
ங. சிலப்பதிகார வடியார்க்குநல்லாருரை
ச. வீரசோழியப் பெருந்தேவனருரை
ஞ. சுத்தாநந்தப் பிரகாசம்
ரு. அரபத்தகாவலர் பரதசாத்திரம்
எ. தண்டியலங்காரவுரை
அ. இலக்கண விளக்கவுரை

முதலியனவாம்.

வடநூல்கள்:—

க. அக்கினிபுராணம்
உ. இரசகங்காதரம்
ங. இரசமஞ்சரி
ச. இரசதரங்கிணி
ஞ. காவியாதரிசம்
ரு. சாகித்தியதருப்பணம்
ள. சாகித்தியரத்தினகரம்
அ. தசரூபகம்
கூ. தொனி
கo. பரதமுனிவர் நாட்டியசரித்திரம்
கக. பிரதாபருத்திரயசோபூடணம்
கஉ. உலோசனம்

என்பனவும் பிறவுமாம்.

ஈண்டுக்கூறிய வடநூல்களை யாம் படித்தறிதற்குப் பேருதவிபுரிந்தார் எமது கலாசாலை வடமொழித் தலைமைப் புலவர் பிரமஸ்ரீ வேதம் - வேங்கடராய சாஸ்திரியாரவர்களும், சென்னை உயர்நீதிசாலை நியாயவக்தாக்களுள் ஒருவரும் எமது நண்பருமாகிய பிரமஸ்ரீ த. ச. நாராயண சாஸ்திரியாரவர்களுமாவர். அவர்கள் செய்த நன்றியை யாம் ஒருபொழுதும் மறக்கற்பாலமைல்லேம்.

இனி ஆங்கில மொழியின்கண்ணே யாம் பார்த்துக் குறித்து மேற்கொண்ட நூல்கள் பல. அவற்றின் பெயர் முறையை எடுத்துக் கூறப்புகுமிடத்து விரிந்து பெருகுமென்று எண்ணி அங்ஙனஞ் செய்யாது விடுத்தனம்.

இந்நூலானது 1897 - ஆம் வருடத் தொடக்கத்தில் முதன் முதல் அச்சிட்டு வெளிப்போந்தது. அஃது எம்மை யடுத்துத் தமிழ்க்கலை பயிலுறாஉம் இயற்றமிழ் மாணவர்க்கு

நாடகத்தமிழும் அறிவுறுத்தல்கருதி ஒருவாறு எழுதி வெளியிடப்பட்டது. அப்பதிப்புப் பிரதிகளனைத்தும் பெரும்பாலும் தமிழ்ப் புலவர்கட்கும், தமிழபிமானிகட்கும், தமிழ் மாணாக்கருக்கும், பிறர்க்கும் அன்னர் கருத்துக்கள் இவையென அறிந்துகோடற் பொருட்டுச் செலவிடப்பட்டன. அதன்மேல் அவர்களனைவரும் எம்மைத் தூண்டியதன் நிமித்தம் இதனைச் சின்னணுமுன்னரே உரையொடும் வெளியிடவிரும்பிய யாம், இன்னுஞ் சிலவிடயங்களை விரித்தும் விளக்கியுங் காட்டியிருத்தலின் நூல் எதிர்பாராத வண்ணம் பெரிதும் விரிந்துளது. ஆகவே உரையெழுதுதற்கருத்து இப்போழ்தத்தின் அறவே யொழிக்கப்பட்டது. இந்நூலினைப் பயன்படுத்துநர் உரையின் இன்றியமையாமை காண்பரேல் அதனை எமக்கு அறிவிப்பாராக. அங்ஙனம் அன்னர் செய்வரேல் நூற்கு உரை கடிதின் எழுதி வெளிப்படுத்தத் துணிவாம்.

இனி இந்நூல் பற்பல தொழில்கள் புரியுங்கால் இடையிடைக் கிடைத்த அவகாசங்களில் எழுதியதாதலிற் பிழைகள் பல மலிந்து கிடத்தலுங் கூடும். அற்றேல் நல்லிசைப் புலவராயினர் அவையிற்றைத் திருத்தி எம்மீது அருள்புரிவாராக.

'நாடகவியல்' எனத் தலைக்குறியிட்டு ஒரு நூல் செய்வான் புகுந்த இந்நன்முயற்சியின்கண் எம்மை ஊக்கிக்கடைபோகுமட்டுந் தோன்றுத் துணையாய் உதவிபுரிந்து நின்ற எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாய நடராசப் பெருமானை மனமொழிமெய்களில் தொழுகின்றனம்.

சார்வரி ஹ மார்கழி 13உ
சென்னை.

வி. கோ. சூ.

முன்னுரை

பண்டைக் காலத்தில் இயல் இசை நாடகமென்னும் முப்பகுதித்தாய் விளங்கிய செந்தமிழின்கண் தற்காலத்தில் நாடகத் தமிழின் இலக்கிய இலக்கணங்கள் காணப்பெறுத குறையை நீக்குவான் புகுந்த ஆசிரியர் செந்தமிழிற் சீரிய சில நாடகங் குயிற்றியதேயன்றி முக்கியமான நாடக விலக்க ணங்களையும் ஒருசேரத் தொகுத்து நாடகவிய லென்னு மிவ்விலக்கண நூலினையு மியற்றித் தமிழுலகிற்கு உபகரித் தருளினர். ஆசிரியர் இந்நூலினை வகுக்குங்கால், உயர்நிலை யுற்று விளங்கும் வடமொழி நாடக விலக்கணங்களையும் பழந்தமிழ் நூல்களினும் அவற்றின் உரைகளினும் ஆங்காங் குக் காணக் கிடக்கும் தமிழ் நாடக விலக்கணங்களையும் செகப்பிரியராதியர் இயற்றிய ஆங்கில நாடகங்களின்கண் அமைந்து கிடக்கும் இலக்கணங்களையும் நுனித்தாராய்ந்து அவற்றின்கண் ஏற்பனவற்றை எடுத்துக்கொண்டு காலதேச வேற்றுமைக் கேற்ப இன்றியமையாத இலக்கணங்களையும் தமது மதிநுட்பத்தாற் கூட்டி முறைப்படுத்திச் செவ்விய திட்ப நுட்பஞ் செறிந்த சூத்திரங்களான் இயற்றியருளி னர். 1897-ம் வருடத் தொடக்கத்தில் முதன்முதல் ஆசிரி யர் தம்மாட்டுக் கல்விபயின்ற 'இயற்றமிழ் மாணவர்'க்கு நாடகத்தமிழும் அறிவுறுத்தற் பொருட்டு முக்கியமான சில இலக்கணங்களை மட்டும் தொகுத்துச் சற்றேறக் குறைய எழுபது சூத்திரங்களாக வகுத்து வெளியிட்டனர். பின்னர் இதனை முற்றிலக்கண நூலாக இயற்றக் கருதி மற்றைய நாடக இலக்கணங்களையுஞ் சேர்த்து இருநூற் றெழுபத்தி

ரண்டு சூத்திரங்களாக யாத்து இந்நூலினை 1901ஆம் அச்சிட்டு வெளிப்படுத்தினர்.

இந்நூலின் அருமை பெருமைகளை நன்குணர்ந்த சென்னைச் சருவகலாசங்கத்துத் திராவிட பாட சபையார் இதன் முதலிரண்டியல்களை 1903ஆம் பி. ஏ. பரீக்ஷைக்குப் பாடமாக ஏற்படுத்தினர்கள். ஆசிரியர்பாற் கல்விபயின்ற இயற்றமிழ் மாணவருள் ஒருவனுகிய யான் இந்நூல் முழுவதிற்குமே யோருரை யெழுதி வெளியிட அவாக்கொண்டிருந்தமையின், அதுவே தக்க சமயமென்று பாடமாக ஏற்படுத்தியுள்ள முதலிரண்டு இயல்களுக்கும் மாணவர்களுக்குப் பயன்படுமாறு ஓர் உரை வரைந்து வெளியிட்டனன். பின்னர்ப் பல காரணங்களான் பின்னிரண்டியல் கட்கும் உரையெழுத வியலவில்லை. ஆசிரியர்தங் குமாரராகிய சிரஞ்சீவி வி. சூ. சுவாமிநாதன் அவர்கள் என்னை யண்மி இந்நூல் முழுமைக்குமே யுரையெழுதி வெளியிடின் நூல் படிப்பவர்க்கு எளிதிற் புலனுமென்று கூறினமையின், யான் பின்னுள்ள இயல்கட்கும் உரையொருவாறு எழுதி முடித்தனன்.

ஆசிரியர் தமது நூலினை யச்சிட்டு முடித்த பின்னர் நூலின்கட் செய்யவேண்டுமென்று கருதியிருந்த சில திருத்தங்களையும் பாட பேதங்களையும் இப்புதுப் பதிப்பில் உரிய இடங்களில் செய்து அவற்றிற்கேற்ப உரையும் வரைந்துள்ளேன். இந்நூல் வகுத்த காலத்து ஆசிரியரோடு உடனுறைந்து அண்மிப் பழகும் பாக்கியம் பெற்றதோடன்றி இந்நூலை யவர் வாயிலாகப் பாடங் கேட்டுளேனுயினும் பல்லாண்டு கட்குப்பின்னர் உரையெழுதப் புகுந்தமையின் மறப்பெனும் பகைவன் வாரிக்கொண்டனவொழிய நெஞ்செனுந்துணைவன் நிறுத்தியனகொண்டு உரையினையொருவாறு எழுதிமுடித்த

னன். ஆதலின் புரைபல தன்னியிருத்தலுங் கூடும்; பெரி யார் பொறுத்தருள்க.

இந் நாடகவியலுக்கு உரை வரைவான் புகுந்த நன்முயற் சிக்கண் கால இடையீடுபட்டும் ஒன்றிற்கும் பற்றுத கிறியேனை யும் ஊக்கிக் கடைபோகும்மட்டும் தோன்றுத் துணையாய் உதவி புரிந்துநின்ற எல்லாம் வல்ல முழுமுதற் பெருமானுகிய நடராஜ மூர்த்தியை மனமொழி மெய்களான் வணங்கு கின்றேன்.

23—12—1934
கோயமுத்தூர்

ந. பலராம ஐயர்

நாடக வியல்

* பாயிரம்

வாழ்த்து

'தேசிகர் தம்மைச் சிவநேசர் தம்மையு, மீசனென வே
யுளத்து ளெண்,'' என்று கூறியாங்கு, கடவுள் வாழ்த்துக்
கூறுவார் தமது தேசிகர்களாகிய ஞானகுருவையும் தமிழ்
வித்தியா குருவையும் உடன் வணங்குவாராயினர். எடுத்துக்
கொண்டநூல் இடையூறு நீங்கி யினிது முடிதற்பொருட்டு
முதற்கண் விநாயகரையும், தமிழ்க்கடவுளென்னும் உரிமை
பற்றியும் விநாயகர்க் கிளவலென்பது பற்றியும் பின்னர்
முருகனையும், அவர் அருள்வழி நிற்கும் வாக்கின் துணைவி
யாதல்பற்றிப் பின்னர் நாமகளையும், நாடகலக்கணத்திற்கெல்
லாம் ஒரு காட்டாகி நிற்கு முரிமைபற்றி நடராஜரையும்
ஒருமுறைபற்றி வணங்கினரென்க. அன்றியும் விநாயகரும்
முருகரும் முகத்தாற் சிறப்பும், நாமகள் நாவாற் சிறப்பும்,
நடராஜர் தாளாற் சிறப்பு முடையராய் விளங்குதலின் அம்
முறை பற்றியே வணக்கமுறையு மேற்பட்டதென்க.

---

* பாயிரமாவது ஒருவர் தாம் செய்யப்புகுந்த நூலுக்கு
முன்னே தாம் கடவுளேவேண்டி வணங்கினமையும், அவையடக்க
மும், தாம் செய்யும் நூலாவது இதுவென்பதும், அது செய்தற்
காரணமும் முதலாயின கூறுவதாம். இதனைத் தற்சிறப்புப்
பாயிரம் என்பதுமுண்டு. ''தெய்வ வணக்கமுஞ் செயப்படு
பொருளு, மெய்த வுரைப்பது தற்சிறப்பாகும்'' என்றாதலி
னென்க.

விநாயகர் வணக்கம்

1. பூவளர் கொன்றைப் பொன்முடி விநாயகன்
சேவடித் தாமரை சென்னிசேர்த் திடுவாம்.

பூவளர் கொன்றை - அழகு மேன்மேலும் வளர்கின்ற கொன்றைப்பூ மாலையினைச் சூடிய, பொன் முடி விநாயகன் - பொன்னொளியன்ற கிரீடத்தை யணிந்த விநாயகக் கடவுளுடைய, செம்மை அடிதாமரை-சிவந்த பாததாமரைகளை, சென்னி சேர்த்திடுவாம் - (அணியாகத்) தலையிற் சூடிக்கொள்வாம்.


குறிப்பு: — தெய்வத்தன்மை வாய்ந்த கொன்றையாதலின் ஏனைய மலர்களைப்போல வாடாதென்பதைக் குறிப்பிப்பான், 'பூவளர் கொன்றை' யென்று அடைகொடுத் தோதினார். செந்நிறத்தானும் மென்மைத் தன்மையானும் பாதங் கட்குச் செந்தாமரை யுவமையாயிற்று. சேவடியினைத் தாமரையாக்கியதற்கேற்ப அதனைச் சிரத்திலணிந்தார்; அந்தணர் சூடுவதும் அரவிந்தமாத லுய்த்துணர்க. (க)

முருகக்கடவுள் வணக்கம்

2. கமழ்று வெட்சி கடம்பலர் மிலைந்தமுத்
தமிழ்முதற் குரவன் முண்மலர் பணிவாம்.

கமழ் உறு வெட்சி கடம்பு அலர் மிலைந்த - (எத்திக்கினும்) மணம் வீசுகின்ற வெட்சி மலரினையுஞ் செங்கடப்பம் பூவினையுஞ் சூடிய, மூன்று தமிழ் முதல் குரவன் - மூவகைத் தமிழினுக்கும் பரமாசிரியனுகிய முருகபிரானை, தாள் மலர் பணிவாம் - பாதகமலங்களிற் பணிந்து வணங்குவாம்.

குறிப்பு:—'கமழ்று' என்பதனைக் கடம்பிற்குங் கூட்டுக. வெட்சி, கடம்பு இரண்டும் முருகபிரானுக்கு மாலையாதலை, "செங்கால் வெட்சிச் சீறிதழ் முடையிடுபு," "இருள்படப் பொதுளிய பராரை மராஅத், துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்" என்னுந் திருமுருகாற்றுப்படை யடிகளானறிக. முத்தமிழ்: இயல், இசை, நாடகம்; இவையிற்றினிலக்கணங்களை நாடகவியலின் முகவுரையானுணர்க. முருக


சபாபதி
தோற்றந் துடியதனில் தோய்ந் திடியவற்றே
சாற்றியிடும் அங்கிதிலே சங்காரம்—ஆற்றவரம்
வைத்த மலர்ப்பதத்தே வற்றிதோ தம்முத்தி
நாடி மலர்ப்பதத்தே நன்.
(பஞ்சாக்கர சுதந்தம் அறிதற்கு, மாதவத்தில் அருவுரு)

சபாபதி

பிரான், அகத்தியன் முதலாயினர்க்கு முத்தமிழாசிரியராயிருந்தமையானும், உருத்திரசன்மராய் வந்து இறையனாரகப் பொருட்கு உரை தெளித்தமையானும், ஞானசம்பந்தராய்த் தேனினுமினிய தேவாரமீந்து முத்தமிழ்விரகர் என்று பல்லோராலுஞ் சிறப்பித்துக் கொண்டாடப் பெற்றமையானும் அறுமுகக்கடவுள் 'முத்தமிழ் முதற்குரவ' னெனப்பட்டார். "நூல் அறிபுலவ" என்று நக்கீரருரைத்ததும் இதுபற்றியன்றே? குரவன் : மேலோன். முத்தமிழினுள் ஒன்றிய நாடகத் தமிழிற்கு மாத்திரம் இலக்கணம் வகுப்பான் புகுந்த ஆசிரியர் 'முத்தமிழ்க் குரவரை' வணங்கிய தெற்றிற்கோ வெனின், இயற்றமிழும் இசைத்தமிழுங் கூடிய வழியே நாடகத்தமிழ் பிறக்குமென்பதனை யறிவுறுத்தற்கென்க. (உ)

நாமகள் வணக்கம்

3. மாணமர் ஞான வளரெழி னற்கலை
வாணியெ மம்மையை வணக்கஞ் செய்வாம்.

மாண் அமர் - மாட்சிமை பொருந்திய, ஞானம் - ஞான வுருவினளும், எழில் வளர் நன்மைகலை - அழகு வளர்கின்ற நல்ல கலையுருவினளுமாகிய, வாணி-சரஸ்வதியென்னும், எம் அம்மையை வணக்கம் செய்வாம் - எமது தாயை வணங்குவாம்.

குறிப்பு:—இனி 'ஞானம்' என்பதைக் கலையொடுங்கூட்டிப் பொருள்கூறினு மமையும். (ங)

நடராசர் வணக்கம்

4. ஆடக மன்றினு ளுடகக் கூத்தினை
நாடி யுரைக்குது நாடக வியலே.

ஆடகம் மன்றினுள் - கனக சபையில், அகம் நாடு கூத்தினை - சிந்தையால் நாடுதற்குரிய கூத்தினையுடைய நடராஜ மூர்த்தியை, நாடி - மனத்தால் வணங்கி, நாடகவியல் உரைக்குதும் - நாடகவியலினைக் கூறுவாம்.

குறிப்பு:—ஆடகம் : பொன். இனி 'நாடகக்கூத்தனே' யென்பதற்குச் சீவராசிகளனேத்தையும் உலகமாகிய அரங் கின்கண் நடிக்கும்படி செய்கின்ற கூத்தாட்டினையுடைய நட ராசப் பெருமானே யென்றும் பொருள் கூறலாம். நாடி : விரும்பி யென்றும் பொருள்படும். ஏகாரம் ஈற்றசை. இனி நாடகக் கூத்தென ஒரு பொருட் பன்மொழியாகக்கொண்டு உரைப்பினும் அமையும். (ச)

ஞானதரு வணக்கம்

5. முந்தைதரற் றவத்தி னெந்தையாய்ப் போந்துபி
னறிவுநூற் புலமை முறைபெற நிகழ்த்தி
யுரையள வமையாப் புரைசா ரூற்றத்து
மன்றலங் கழலெம் புன்றலைச் சூட்டிப்
பூவந்த கடவு ளன்ன
கோவிந்த சிவனடி குறிக்கொண் டுய்வாம்.

முந்தை நன்மைதவத்தின் - முற்பிறப்பில் யாஞ் செய்த நல்ல தவத்தின் பயனாய், எந்தையாய் போந்து - எமது தந் தையாய் அவதரித்து, பின் அறிவு நூல் புலமை முறைபெற நிகழ்த்தி - பிறகு ஞானநூல்களின் அறிவினை முறைப்படி நடாத்தி, உரை அளவு அமையா - எத்தகைய சொல்லினு மும் அளவிட்டுரைக்க வொண்ணாத, புரை சால் தோற்றத்து - உயர்வு மிகுந்த தோற்றத்தினை யுடையவரும், மன்றல் அம் கழல் - நறுமணங் கமழும் பாதகமலங்களை, எம் புன்மை தலை சூட்டி - எமது அற்பமாகிய தலையினுஞ் சூட்டி யலங் கரித்து, பூவந்த கடவுள் அன்ன - தாமரைப் பூவின்கட் டோன்றிய நான்முகக்கடவுளை யொத்தவருமாகிய, கோவிந்த சிவன் அடி குறி கொண்டு உய்வாம் - கோவிந்த சிவனுடைய அடி களைச் சிந்தித்து நற்கதியடைவோம்.

குறிப்பு:—"புரையே யுயர்வு" என்பதை யீண்டறிக. கழல்; தானியாகு பெயராய்ப் பாதங்களை யுணர்த்தி நின்றது. பூவந்த கடவுள்: நாரணன்றன் நாபிக்கமலத்துதித்தமையிற் பிரமனுக்கு இப்பெயர் போந்தது; நான்கு வேதங்களிலும்

நஞ்சிவனுர் வல்லுநரென்பதை யிவ்வுவமையால் தெரித்தார். இது சேரிசையாசிரியப்பாவாதலின் ஈற்றயலடி முச்சீர் கொண்டது. (நி)

தமிழ்விக்தியாதரு வணக்கம்

6. **மதுரைமா நகரிற் புதுமையிற் ரோன்றி**
மாவித்து வானெனப் பாவித் துலகம்
புகழ்ந்து போற்றத் திகழ்ந்து விளங்கிச்
சதுரப் பாடுறு தமிழ்க்கட லாகிய
பீடுசால் சபாபதிப் பெரியனை வாழ்த்தி
நாடக வியலினை நனியியம் புதுமே.

மதுரை மா நகரில்–, புதுமையின் தோன்றி - யாவரும் வியக்குமாறு வந்துசேர்ந்து, உலகம் மா வித்துவான் என பாவித்து புகழ்ந்து போற்ற-மகாவித்துவானென்று மேலோர் கருதித்துதித்து வணங்காநிற்க, திகழ்ந்து விளங்கி - மிக்க விளக்கத்தை யடைந்து, சதுரப்பாடு உறு தமிழ் கடல் ஆகிய - வன்மை நனிவிளங்குஞ் செந்தமிழ்க் கடலினை யொத்த, பீடு சால் சபாபதி பெரியனை - பெருமை மிகுந்த சபாபதியென்னும் பெயரினையுடைய பெரியோனை, வாழ்த்தி–, நாடகவிய லினை நனி இயம்புதும் - நாடகவியலினை இடையூறின்றி இனிது கூறி முடிப்பாம்.

குறிப்பு:—'உலகமென்ப துயர்ந்தோர் மாட்டே' யாதலின் மேலோர் எனப்பொருள் கூறினும். ஏகாரம்; ஈற்றசை. நமது நூலாசிரியர்க்குத் தமிழ்நூற் போதகாசிரியராகிய இப் புலவர்பிரான் பல நூல்கள் இயற்றி யிருக்கின்றனர். அவை திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ், மதுரை மாலை, திருப்பரங்குன்றத் தியமகவந்தாதி முதலியனவாம். இவர் ஆங்கிலமும் வடமொழியு மொருங்குணர்ந்தவர்; 1898-ஆம் ஆண்டு காலஞ் சென்றனர். (சு)

அவையடக்கம்

7. கலைஞர் நிரம்பிய கற்பகச் சோலைபுக்
கலைவது மெவனே வளிய நெஞ்சமே
கருணை மலர்ந்தெமைக் காத்த லவர்கடன்.

அளிய நெஞ்சமே - எளிய நெஞ்சமே, கலைஞர் நிரம்பிய - வித்துவான்களாகிய தருக்கள் நிறைந்த, கற்பகம் சோலை புக்கு - கற்பகச் சோலையுட் புகுந்தும், அலைவதும் எவனே - அலைதலும் யாது காரணத்தாலோ? (அலையவேண்டாம், ஏனென்றால்), கருணை மலர்ந்து - கருணை கூர்ந்து, எமை காத்தல் அவர் கடன் - எம்மைக்காத்து அருள் செய்தல் அவர்தமது கடமையாமாதலின்.

குறிப்பு:—கலைஞர்; ஞ் - பெயரிடைநிலை. புலவர்சபையினைக் கற்பகக் காவாகவும் கருணையை மலராகவு முருவகித்த தற்கேற்பக் கலைஞரைக் கற்பகத் தருக்களெனக் கொள்க. அளிய நெஞ்சம்: ஈண்டு நெஞ்சினை வண்டின்றன்மை யுடைய தாகக் குறிப்பித்த உள்ளுறை நயத்தினை யுய்த்துணர்க; அளி: வண்டு. பொன்மலர் பூக்குங் கற்பகக்காவினில் வண்டுகள் தேனினை நாடலடாதெனின், இவைகள் அத்தருவினைக் கேட்ட மாத்திரையிற்றேனினைத் தந்ததுவுமாதலின் உவமை பொருத்தமுள்ளுவமை யென்பதை நன்னரறிக. இது பற்றியன்றே 'காத்தலவர்கடன்' என்றும் பின்னர் வலியுறுத்துக் கூறினர். கற்பகம்: மந்தாரம், பாரிஜாதம், சந்தனம், அரிசந்தனம், கற்பகம் என்னு மைவகைத் தேவ தருக்களையு முணர்த்திற்றெனக் கொள்க. இனிச்சைநர் கூறும்வண்ணம் பத்துவகைக் கற்பகமெனினுமமையும். பத்துவகைக் கற்பகங்களாவன: (க) மத்தியாங்கம் (உ) தூரியாங்கம் (ங) பூஷணாங்கம் (ச) மாலியாங்கம் (ஞ) தீபாங்கம் (சு) கிருகாங்கம் (எ) சோதிரங்கம் (அ) போசனாங்கம் (கூ) பாசனாங்கம் (கo) வஸ்திராங்கம் என்பனவாம். இவை முறையே திவ்யசாரமாகிய நானவித பானங்களையும், பலவித வாத்தியங்களையும், அநேகவித ஆபரணங்களையும், பல்விதமாலைகளையும், பற்பல விதமான இரத்தின தீபங்களையும் பிரஸாத மண்டபாதிகளை

யும், மதியிரவியிளெளியையு மாய்க்கும் ஒளியினையும், பல வேறு வகைச் சுவையினவாகிய நால்வகை யுணவினையும், வேண்டிய கலங்களையும், விசித்திர வஸ்திரங்களையுங் கொடுக்க்கும் என்று சைநர்கூறுப. இதனைச் சீபுராணத்தானறிக. (எ)

இந்நூலியற்றற்காரணம்

8. ஆதியி னியன்ற வருந்தமிழ்க் கலையு
ணடகத் தமிழி னல்லிலக் கணம்பல
காணப் பெருமை கருத்தினிற் றேறி
யிந்நா ணிலைமைக் கேற்ப வடநூற்
பாற்படு மியல்பினு மேற்புலப் புலவோர்
கூறு மியல்பினுங் கொள்ளற் பாலன
கொண்டுரைத் தாமிதைக் கொள்ளுப பெரியோர்.

ஆதியின் இயன்ற - முற்காலத்து வழங்கிய, அருமை தமிழ் கலையுள் - அரிய தமிழ் நூல்களுள், நாடகம் தமிழின் நன்மை இலக்கணம் பல காண பெருமை கருத்தினில் தேறி - நாடகத் தமிழின் நல்ல இலக்கணங்கள் பலவுங் காணப்பெருத உண்மையை யுளத்திற் கிந்தித்து, இ நாள் நிலைமைக்கு ஏற்ப - இக்காலத்து நிலைமைக்குப் பொருந்த, வடநூல் பால்படும் இயல்பினும்-வடநூல் நாடகவிலக்கணங் களினும், மேற்கு புலம் புலவோர் கூறும் இயல்பினும் - மேற் றிசைப் புலவர்கள் கூற்றினும், கொள்ளல் பாலன கொண்டு உரைத்தாம் - ஏற்பனவற்றைத் தழுவியுரைத்தனம்; இதை பெரியோர் கொள்ளுப - இந்நூலை யறிவிற் சிறந்த மேலோர் கொள்ளுவார்கள்.

குறிப்பு: — முறைவல், சயந்தம், குணநூலாதிய நாடகத் தமிழ் நூல்கள் இறந்துபட்டனவா மாதலின் வரம்பின்றி யொழுகும் நாடகத் தமிழினுக்கு வரம்பு ஏற்படுத்துவான் கருதி வகுத்த இந்நூலைப் பெரியோர் ஏற்றுக்கொள்வ தொரு தலையென்னுந்துணிவுபற்றி இன்னணமுரைத்தார். புலவோர்: அறிவுடையோர்; புலம் - அறிவு. மேற்புலம்: மேற்றிசை. மேற்புலப்புலவோர்: The Western Scholars. (அ)

ஆக்கியோன் பெயர்

[ஒருவிகற்பவின்னிசைவெண்பா]

9. பாரியலும் பைந்தமிழிற் பாவாண வோதிமமே
வேரியசெந் தாமரையா மேலோ ருளமலர்த்துஞ்
சூரியநா ராயணவேள் சொன்னூ டகவியலாஞ்
சீரியதீம் பாற்கடலைச் சேர்.

பார் இயலும் - உலகில் நடைபெறும், பசுமை தமிழில் பாவாணன் ஓதிமமே - பசிய செந்தமிழ்க் கவிஞனுகிய அன்னமே, வேரிய - தேமணமுடைய, செம்மை தாமரை ஆம் மேலோர் உளம் மலர்த்தும் - மேலோருடைய இதயகமலங்களை விகசிக்கச்செய்யும், சூரிய நாராயண வேள் சொல் நாடகவியல் ஆம் - முருகவேளை நிகர்த்த சூரிய நாராயணனென்னும் பெயருடைய கவிஞர் சொற்ற நாடகவியலாகிய, சீரிய தீம் பால் கடலை சேர் - சிறப்புமிக்க இனிய பாற்கடலையடைவாயாக.

குறிப்பு:—'இயலும்' என்பதனைத் 'தமி'ழொடுங்கூட்டுக. வேரி: மணம்; தேனுமாம். 'வாழ்நன்' என்பது 'வாண' னென்றுயது என்பர் வீரசோழிய நூலுடையார். இதனை "ஐம்மூன்றதாம்" என்னுந் தொடக்கத்துக்கட்டளைக்கலித்துறையில் "மெய்ம்மாண்ப தாகவ் வினமுன் னழிந்துபின் மிக்கணவ் வாம்" என்னும் முடியானுணர்க. மேலோருடைய இதயகமலத்தை ஆசிரியனகிய சூரியன் மலர்த்தல் இயல்பாதலின் இது தன்மையணியை யங்கமாகப் பெற்ற தகுதியணியாம். முத்தமிழ்க் குரவராதலின் ஆசிரியர்க்கு முருக வேளுவமை கூறப்பட்டது. ஓதிமமன்றி வேறெதுவும் பாலி னுறசு வையுணராதாதலின் இன்னணம் அதனை விளித்துக் கூறினர். "ஆக்கியோன்பெயர்" என்பது ஓராற்றுன் உய்த்து நோக்கு மிடத்துப் பிற்காலத்துக் கூறப்படுஞ் 'சிறப்புப்பாயிரம்' என்றதன்க ணடங்கும். நூற்குச் சிறப்புப்பாயிரம் உரைத் தற்குரியார், தன்னாசிரியன், தன்னெடு கற்றோன், தன்மாணாக்கன், தகுமுரைகாரன் என்ற இந்நால்வருமே யாவார்.

அங்ஙனமாக, இந்நூலுக்கு 'ஆக்கியோன் பெயர்' என்னுஞ் சிறப்புப்பாயிரஞ் செய்தார் யாவர்? மேற் கூறிய நால்வருளொருவரோ? அல்லறிப்பிறரோ? இனி வடநூலார் வழக்குப் பற்றிப் பிரயோக விவேகம் வகுத்த சுப்பிரமணியதீக்ஷிதர் தம்மைப் பிறர்போலும் வைத்து நாந்தி கூறினுற்போல நமது நூலாசிரியரும் கூறினரோ? எவ்வாறு கொள்ளினும் அமைவுடைத்தேயாம்.

ஒருவிகற்ப வின்னிசை வெண்பாவாவது நான்கடியினும் ஒரெதுகையே யுடையதாய்த் தனிச்சீர் பெறாது முடியும் வெண்பாவாம். அகவற்பாவாவுஞ் சூத்திரப்பாவாவுமியலும் நூலினுள் வெண்பா விரவி வருதலுமுண்டு. இதனை நன்னூலிற் பொதுப் பாயிரத்திற் காண்க. (கூ)

நூ ல்

"நூல்போறலின் ஒப்பிதெனப்பெயர்" என்பர் நச்சினார்க்கினியர். நூலாவது இன்னதென்பதை, "நூலெனப்படுவது நுவலுங் காலை, முதலு முடிவு மாறுகோ ளின்றித், தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி, யுண்ணிறை யகன்ற வுரையொடு பொருந்தித், திண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தானும், "முதனடு விறுதி மறுகலிப் படாது, தொகைவகை விரியிற் றற்பொரு டோற்ற, வுரையொடு புணர்ந்த வொழுக்கிற் றாகிச், சூத்திர மோத்துப் படலம் பிண்டமென்றி, யாப்புறுத் தமைத்த வவயவத் தாகி, நடப்பது" என யாப்பருங்கல விருத்திப்பாயிரவுரையுட் கூறுமாற்றானும் அறிக. "பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச், செஞ்சொற் புலவனே சேயிழையா - வெஞ்சாத, கையேவா யாகக் கதிரே மதியாக, மையிலா நூன்முடியு மாறு" எனவும், "உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப், புரத்தின் வளமுருக்கிப் பொல்லா - மரத்தின், கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதே போன் மாந்தர், மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு" எனவும் ஆசிரியர் பவணந்தியார் கூறுமாற்றானும் உணர்க.

10. இன்பமு மறிவு மியைவுறப் பயக்கு
மகப்புறத் திணைக்க ணிகப்பின் றடங்குங்
காட்சி நூ லென்னு மாட்சி சான்ற
நாடகத் தின்னிய னயந்து கிளப்பிற்
பொதுவுஞ் சிறப்பு முறுப்பு நடிப்புமா
நால்வகை யியல்பி னடக்கு மென்ப.

இன்பமும் - (செவிப்புலனிற்கே யன்றிக் கட்புலனுக்கும்) இன்பமும், அறிவும் - (உலகவறிவேயன்றி உண்மை) அறிவும், இயைவு உற - (ஒருங்கு) பொருந்துமாறு, பயக்கும் - (ஆன்மாக்கட்கு) அளிக்குந் தன்மையதும், அகம் புறம் திணைக்கண் - அகப்புறத்திணையின்கண், இகப்பு இன்றி அடங்கும் - மாறுபாடின்றியடங்குவதும், காட்சி நூல் என்னும் மாட்சி சான்ற - காட்சிநூ லென்று யாவரானுங்கொண்டாடப்படும் பெருமை வாய்ந்ததுமாகிய, நாடகத்தின் இயல் - நாடகத்தின் இலக்கணத்தை, நயந்து கிளப்பின் - விரும்பிக் கூறுமிடத்து, (அது), பொதுவும் சிறப்பும் உறுப்பும் நடிப்பும் ஆம் நான்கு வகை இயல்பின் - பொது சிறப்பு உறுப்பு நடிப்பு ஆகிய இந்நால்வகைப் பாகுபாட்டினை யுடையதாய், நடக்கும் என்ப - உலகில் நடந்தேறி வருமென்று ஆன்றோர் கூறுவார்கள்.

குறிப்பு:—அகமும் புறமும் முற்றுற வாராமல், ஓரோவோரிடத்து அகமும் ஓரோவோரிடத்துப் புறமுமாய் விரவிவருந் தன்மையதாதலின் நாடகத்தினை அகப்புறத்திணையின்பாற் படுத்தார். இன்னும் அன்புடைக்காமம் பயின்று வருதலான் அகத்திணையின்பாலும், கைக்கிளையும் பொருந்தாக்காமமும் பயின்று வருதலாற் புறத்திணையின்பாலும் நாடகம் அடங்குதலின் மூன்றும் பயிலுங் காரணத்தாவிதனை அகப்புறத்திணையி னடக்கினார். இன்னணம் பயிலுமென்பதைப் பொதுவியல்பு உசை-ஆம் சூத்திரத்தானுணர்க. இக்காரணம் பற்றியன்றே "அறனும் வாட்கையும் ஒருதலைக் காமமும், பொதுவியல் பாடர ணயநிலைப் படலமென், றிவைக ளனைத்து மகப்புற மாகும்" என்று கூறியவாறென்ற

றிக. நயநிலைப்படலம் - நாடகம், கூத்த மார்க்கமுமாம். இனிப் 'பயக்கும்', 'அடங்கும்', 'சான்ற', என்ற மூன்றுபெய ரெச்சமும் நாடகம் என்ற சொல்லையே தழுவுதலின் முன்ன ருள்ள இரண்டனையும் முறையே 'பயந்து', 'அடங்கி', என வினையெச்சமாக்கிச் 'சான்ற' என்றதனொடு முடித்துக் கோடலுமாம். இதன்கண்ணே நாடகத்தின் பயனும் நிலை யும் இயல்பும் வகையுங் கூறியவாறு காண்க. 'நாடகத்தின் னியல்' என்ற தொடரில், 'ன்'-விரித்தல் விகாரமாம்; அன்றி 'நாடகத்து இன் இயல்' எனப்பிரித்து, 'நாடகத்தின் இனிய இலக்கணங்க' ளெனக்கூறினு மமையும். 'இகப்பின்றி' என றபாலது 'இகப்பின்று' எனப்போந்தது, "அன்றி யின்றியெ ன் வினையெஞ் சிகரம்" என்னுஞ் சூத்திரத்தின் உடம்பொடு புணர்த்தலானென்க. (க)

க. பொதுவியல்பு

11. பொதுவியல் பென்பது பொருந்தக் கூறின்
முத்திறக் கதையினு ளொருதிறக் கதைகொளீ இ
நாற்பொரு ளோடுமைஞ் சந்தியும் தழுவி
யொன்பான் சுவையு ளுரைத்தன வுடைத்தாய்
மூவகைப் பொருத்தமு முன்னுமந் நடையு
மேவிக் கவிகூற் றின்றிப் பாத்திர
வாயிலாப் பகரு மாண்புடைத் தாயிரு
வகைக்கதாந் தத்தினு ளொன்றினி தேய்ந்து
மக்க ளியல்பினை யொக்க வுணர்தற்
கேற்ற செவ்விக ளாற்ற வியைந்து
பல்வகைப் பட்ட பாத்தி ரங்களின்
சிறப்பியல் பினைத்து முறப்பொலிந் தோங்கி
முகஞ்செய்து கிடக்கு முறைகண் மலிதர
வியலு மென்ப வியல்புணர்ந் தோரே.

பொது இயல்பு என்பது பொருந்த கூறின் - பொது வியல்பு இத்தன்மையது என்று இனிது தெரிக்குமிடத்து, மூன்று திறம் கதையினுள் ஒருதிறம் கதை கொளீஇ -

மூவகைக் கதைகளின் ஒன்றைத் தன்னகத்துக் கொண்ட தாய், நான்கு பொருளோடும் - நால்வகைப்பட்ட பொருளுட னும், ஐந்து சந்தியும் தழுவி - ஐவகைப்பட்ட சந்திகளையும் உடையதாய், ஒன்பான் சுவையுள் - ஒன்பது வகைப்பட்ட சுவைகளுள், உரைத்தன உடைத்தாய் - இவ்விச்சாதிகளுக்கு இன்னின்னவென்று உரைத்தசுவைகளோடியையுடையதாய், மூன் றுவகை பொருத்தமும்-மூன்று விதமான பொருத்தங்களும், மூன்னும் - (பொருத்தத்திற் கிணங்க) நினைத்துச்செய்யப்படு கின்ற, அங்நடையும் - அந்த அளவுடைய (மூன்று விதமான) நடைகளும், மேவி - பொருந்தி, கவி கூற்று இன்றி - கவிஞன் தானுகக் கூறுங் கூற்றுக்களுள் ஒன்றுமில்லாமல், பாத்திரம் வாயிலா பகரும் மாண்பு உடைத்தாய் - நாடக பாத்திரங்களின் வாய்மொழியாகவே யெப்பொருளையுங் கூறு மியல்பிற்றாய், இரண்டு வகை கதாந்தத்தினுள் - இரண்டு வகைப்பட்ட கதைமுடிவினுள், ஒன்று இனிது எய்ந்து - யா தானும் ஒன்றினைச் செவ்வையாக வாய்க்கப்பெற்று, மக்கள் இயல்பினை ஒக்க உணர்த்தற்கு - நாடகபாத்திரங்களின் இயல் பினை நன்முக அறிந்துகாடற்கு, ஏற்ற செவ்விகள் ஆற்ற இயைந்து - தகுந்த அமயங்கள் மிகுதியும் பொருந்தி, பல வகைப்பட்ட - பலவிதமாய்ப் பகுக்கப்பட்டிருக்கும், பாத் திரங்களின் சிறப்பு இயல்பு அனைத்தும் - நாடக பாத்திரங் களின் சிறப்பியல்புகள் பாவம், உற பொலிந்து ஒங்கி-இனிது பொருந்தி நன்முக விளங்கி வளர்ந்து, முகம்செய்து கிடக்கும் முறைகள் மலிதர - தெளிவுபெற வெளிப்படையாய் முற் பட்டுக் கிடக்கும் ஒழுங்குகள்நிரம்பி, இயலும் என்ப இயல்பு உணர்ந்தோர் - நாடகத்தினியல்பினை நன்குணர்ந்த அறிஞர் கள் நடைபெறுமென்று நவில்வார்கள்.

குறிப்பு:—மேற்கூறிய முத்திறக்கதை முதலியவற்றை யினிவருஞ் சூத்திரங்களிற் கூறுப கொள்ளுக. விளக்கப்பகுதி விளையெச்சப்பொருட்டுமாறு அளபெடுத்து நிற்றலிற் சொல் விசையளபெடையாம். அங்நடை; 'அ' என்பது மூவகை யென்பதைச் சுட்டி நிற்றலின் நடையும் மூவகையாமென்பது பெற்றும். 'இனிதெய்ந்து' என்றதன் பொருளையுய்த்து கோக்

குக. இருவகைக் கதாந்தத்தினுள் முற்றிலும் ஒன்றே யாகாது ஒன்று மிகுந்தும் பிறிதொன்று குறைந்தும் ஒரே நாடகத்தினுள்ளே வரப்பெறு மென்பது பெற்றும். செவ்வி கள்: Occasions. நாடக பாத்திரங்கள்-Dramatis Personae. சிறப்பியல்பு: Individual characteristics. (க)

(க) கதை

12. கதையெனப் படுவது கழறுங் காலை
பஃறலைப் பட்ட பண்புடைத் தாகிப்
பொய்யுரை மெய்யுரை புணர்ந்துரை யெனஅ
முத்திறப் படுமென மொழிந்தனர் புலவர்.

கதை எனப்படுவது கழறுங்காலை - கதையின் இலக்க ணம் இற்றென்று குறிப்பிக்குமிடத்து, (அது) பல தலைப் பட்ட பண்பு உடைத்தாகி - பல்விதமாய்ப் பிரிந்து விரிந்து கிடக்குந் தன்மையுடையதாகி, பொய்யுரை மெய்யுரை புணர் துரை எனஅ - பொய்யுரை மெய்யுரை புணர்துரை என்று, புலவர் மூன்று திறம் படும் என மொழிந்தனர் - அறிஞர்கள் மூவிதமான பகுப்பினையுடையதென்று கூறினர்கள்.

குறிப்பு:—பல் + தலை = பஃறலை; "குறில்வழி ளைத்தவ் வணையி னுய்தம்" என்னுஞ் சூத்திரத்தா னமைக்க. எனஅ- செய்யுளிசை யளபெடை. திறம் - வகை. பஃறலைப்பட்ட பண்பு: Complicated nature. (உ)

13. அவற்றை,
ஆக்கம் பல்லோ ரறிவு கலப்பென
வுரையா நிற்ப ரொரோவழிப் புலவர்.

அவற்றை-மேற்குறித்த பொய்யுரையாதிய மூன்று பாகு பாட்டினையும், முறையே ஆக்கம் பல்லோர் அறிவு கலப்பு என - ஆக்கக் கதையென்றும் பலரறிந்திட்ட கதையென்றும் கலப்புக் கதையென்றும், ஒரோவழி புலவர் உரையா நிற்பர் - ஒரு சாராராகிய வித்துவான்கள் கூறுவார்கள்.

குறிப்பு:—'ஓரோவழிப் புலவர்' என்ற குறிப்பினானே ஆசிரியர்க்கு மேற் சூத்திரத்திற் கூறியதே மேலான பாகுபாடென்பது போதரும். இவற்றை முறையே வடநூலார் உத்பாத்தியம், பிரக்கியாதம், மிசிரம் எனக கூறுப. இச்சூத்திரத்தில் 'அவற்றை' என்பது 'கூன்' அல்லது 'சொற்சீரடி' என்று கூறப்படும். (கூ)

போலியுரை

14. பொய்யுரை யென்பது புதுவ தோர்கதை
படைத்து மொழியும் பண்பிற் றாகும்.

பொய்யுரை என்பது - புதுவது ஒன்று கதை படைத்து மொழியும் பண்பிற்று ஆகும் - (உலகத்தினிகழ்ந்திராததாய்) நாடகப் புலவன் றன்னுற்றலினுன் மெய்போற் படைத்துக் கூறப்படுந் தன்மையுடைய கதையாகும்.

குறிப்பு:—இத்தகைய கதையுடைய நாடகங்கள் 'கலாவதி,' 'ரூபாவதி' முதலியனவாம். பொய்யுரையை ஆங்கிலர் Original Plot என்பர். (சு)

மெய்யுரை

15. உண்மையா யுலகி னிகழ்ந்தியா வர்க்கும்
தெரிந்த காதை தெளிப்பது மெய்யுரை.

உண்மையாய் உலகில் நிகழ்ந்து - உண்மையாக இவ்வுலகின்கட் சம்பவித்ததாய், யாவர்க்கும் தெரிந்த காதை - அனைவர்க்குந்தெரிந்த கதையினை, தெளிப்பது மெய்யுரை-தெளிவு பொருந்த வுரைப்பது மெய்யுரைக் கதையாம்.

குறிப்பு:—இத்தகைய கதையுடைய நாடகங்கள் 'மானவிஜயம்', 'தசரதன் தவறு' முதலியனவாம். மெய்யுரையை ஆங்கிலர் Historical Plot என்பர். காதை என்ற சொல்லே மெய்யுரையென்பதை விளக்கி நிற்றல் காண்க. (டு)

புனைந்துரை

16. மெய்யுரை தன்னெடு வேற்றுமை சிறிதுறப்
பொய்யுரை கலந்து புனைந்துரைப் பதனைப்
புனைந்துரை யாகப் பொறித்தன ரான்றோர்.

மெய்யுரை தன்னெடு வேற்றுமை சிறிது உற - மெய்யுரைக் கதையினின்றுஞ் சிறிது விலகி வேறுபட்டு நிற்க, பொய்யுரை கலந்து புனைந்து உரைப்பதனை - சிறிது பொய்யுரையினைச் சேர்த்து (நாடகப்புலவர் தன்னுற்றலினால்) அழகுபெற உரைக்குங் கதையினை, ஆன்றோர் - மேலோர், புனைந்துரை ஆக பொறித்தனர்-புனைந்துரை யென்று வரைந்தனர்.

குறிப்பு:—இத்தகைய கதையுடைய நாடகங்கள், 'உஷா பரிணயம்', 'தமயந்தி' முதலியனவாம். புனைந்துரையை ஆங்கிலர் Mixed Plot என்பர் (சு)

யோனி

17. உள்ளோன் றலைவனு வுள்ள துரைத்தலு
மில்லோன் றலைவனு வில்ல திசைத்தலு
முள்ளோன் றலைவனு வில்ல துரைத்தலு
மில்லோன் றலைவனு வுள்ள தியம்பலும்
பெருமைசால் யோனிப் பெயரின வாகும்.

உள்ளோன் தலைவனு - உலகில் உண்மையாக இருந்த வொருவனைத் தலைவனுகக்கொண்டு, உள்ளது உரைத்தலும்- உலகில் நிகழ்ந்த விடயத்தினைக் கூறுதலும்; இல்லோன் தலைவனு இல்லது இசைத்தலும் - உலகிலில்லாத வொருவனைத் தலைவனுக்கொண்டு உலகில் நிகழாததொரு விடயத்தைக் கூறுதலும்; உள்ளோன் தலைவனு இல்லது உரைத்தலும் - உளனுமொருவனைத் தலைவனுகக் கொண்டு உலகினிகழாத கதையினைத் தெரிவித்தலும்; இல்லோன் தலைவனு உள்ளது இயம்பலும் - இலனும் ஒருவனைத் தலைமகனுகக் கொண்டு உண்மையாய் நிகழ்ந்த கதையினைச் செப்பலும்; பெருமை

சால் யோனி பெயரின ஆகும் - பெருமை மிகுந்த யோனி யென்னும் பெயர் பெறுவனவாம்.

குறிப்பு:—இவற்றை 'நால்வகை யோனி' யென்றலும் வழக்கு. இவ் யோனிப்பாகுபாடுகளைச் சிலப்பதிகார அரங் கேற்றுகாதை அடியார்க்கு நல்லாருரையாலு முணர்க.

'உள்ளோற் குள்ளது மில்லோற் குள்ளது
முள்ளோற் கில்லது மில்லோற் கில்லது
மெள்ளா துரைத்தல் யோனி யாகும்.'

என்பது அடியார்க்கு நல்லாருரை மேற்கோள். (எ)

18. ஒளியும் யோனியு மொருபொருட் கிளவி.

ஒளியும் யோனியும் - ஒளி, யோனி என்ற சொற்கள், ஒன்று பொருள் கிளவி - ஒருபொருளைக் குறிக்குஞ் சொற் களாம்.

குறிப்பு:—ஒளி: கதாப்பிரகாச வஸ்து. "ஒளியாவது, சத்திருதையும், அசிருதையும், சத்தியாசிருதையும், என மூன்று. அதுவே, உள்ளோன் றலைமகனுக வுள்பொருளு மிகைப்பொருளு மில்பொருளும் விரவுப்பொருளுமென்றும், இல்லோன் றலைமகனுக இலபொருளென்று மைந்துவகைப் படும்" என்று கூறுவர் வீரசோழியவுரையாசிரியர். (அ)

19. அவற்றுள்,
முன்னது மெய்யுரை பின்னது பொய்யுரை
யிறுதி யிரண்டு மிசைத்த புனைந்துரை.

அவற்றுள் - மேற்கூறிய நால்வகை யோனியுள், முன் னது மெய்யுரை - முதற்கட்கூறியது மெய்யுரையாம், பின் னது பொய்யுரை - அதன்பிறகு கூறியது பொய்யுரையாம், இறுதி இரண்டும் இசைத்த புனைந்துரை - கடையிற் கூறிய இரண்டும் புலவனிசைத்த புனைந்துரையாம்.

குறிப்பு:—நால்வகை யோனியும் முத்திறக் கதையினுள் அடங்குமாறு காட்டப்பட்டது. (கூ)

(உ) நாற்பொருள்

20. அறம்பொரு ளின்பம் வீடெனக் கூறு
மவையே யரிய நாற்பொரு ளாகும்.

அறம் பொருள் இன்பம் வீடு என கூறும் அவையே - அறம் பொருள் இன்பம் வீடு என்று பெரியோர் கூறும் அந் நான்குமே, அரிய நான்கு பொருள் ஆகும் - பெறுதற்கரிய நால்வகைப் பொருளாம்.

குறிப்பு:—இந்நான்கினையும் வடநூலார் தருமார்த்த காமமோக்ஷமென்ப. இவற்றுள் முதன்மூன்றும் நீதிநூல் களில் விரித்துக்கூறப்பட்டன. (கo)

21. அவைதாம்,
மக்கட் குறுதியா வழங்கலு முண்டே.

அவைதாம் - மேற்குறித்த நாற்பொருளும், மக்கட்கு - மாந்தர்கட்கு, உறுதியா வழங்கலும் உண்டு - உறுதிபயப் பனவாகக் கூறுதலும் வழக்காறும்.

குறிப்பு:—ஈண்டு உம்மை இறந்தது தழீஇய எச்ச வும்மையாம். 'மக்களுறுதிப்பொருள்' என்றபெயரும் இந் நாற்பொருளுக்குண்டாம். 'ரதுர்விதபுருஷார்த்தம்' என்ற வடநூல் வழக்கையுங் காண்க. ஏகாரம் ஈற்றசை. (கக)

அறம்

22. நல்லொழுக் கத்தை நனிவிரித் துரைத்தலு
நல்லொழுக் கமுளார் நன்மை யெய்தலுங்
தீயொழுக் கத்தின் றீமையைச் செப்பலுந்
தீயொழுக் கமுளார் தீதுற் றழிதலுங்
தீயார்தம் தீமையைச் சிறப்பித் துரைப்பினுஞ்
செம்மையோ ரதனைச் சினந்துரை யாடலு
மரியநாற் பொருளினு ளறத்தின் பாலவாம்.

நன்மை ஒழுக்கத்தை - நல்ல ஒழுக்கத்தை, நனி விரித்து உரைத்தலும் - மிகுதியும் விரிவாக எடுத்துக்காட்

டனும், நன்மை ஒழுக்கம் உளார்-நல்ல ஒழுக்கத்தினை யுடையவர், நன்மை எய்தனும் - நன்மையினை இறுதியில் அடைதனும், தீமை ஒழுக்கத்தின் தீமையை செப்பனும் - தீய ஒழுக்கத்தினுடைய கேட்டினைக் கூறனும், தீமை ஒழுக்கம் உளார் தீது உற்று அழிதனும் - தீய ஒழுக்கத்தினையுடையார் கேட்டினை யடைந்து அழிந்தொழிதனும், தீயர் தம் தீமையை சிறப்பித்து உரைப்பினுஞ் செம்மையோர் அதனை கினைந்து உரையாடனும் - தீயோர் தமது தீயசெயல் களையெடுத்துச் சிறப்பாக வுரைத்தவிடத்தும் நல்லகுண முடையோர் அச்சொற்செயல்களுக்காக வெருண்டு தெரிந்தனும், அரிய நான்கு பொருளினுள் - அருமையாகிய நால் வகைப் பொருளில், அறத்தின் பாலவாம் - அறத்தின் பகுதியனவாம்.

குறிப்பு:—நாமகள் சிலம்பின் இரண்டாம் பரலாகிய கலாவதியின்கண், சத்தியப்பிரியன் முதலியோர் தம்நல்லொழுக்கத்தினை கனிவிரித்துரைத்ததையும், விகடவசகன் சிதாகந்தனுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்துவதையும் உய்த்துணர்க. நாமகள் சிலம்பின் முதற்பரலாகிய ரூபாவதியிற் சற்குணவழுதி முதலிய நல்லொழுக்கமுளார் இறுதியில் நன்மையடைந்ததைக்காண்க. கலாவதியிற் சுகசரனுக்குக் கலாவதியை மணஞ்செய்து கொடுப்பதைப்பற்றி மதோகமோகினி ஆராய்வுரை, அவள்

> "மின்னனை யாளையின் வீணனுக் களித்தல்
> பொன்னெழின் மானைப் புலியின் வாயினு
> மருமையாய் வளர்ந்த வொருபெருங் கிளியைப்
> பூனையின் வாயினுந் தானே பிடித்துத்
> திணிப்பது போல்மென வெணப்படு மன்றே?"

என்று அத்தீயொழுக்கத்தின் தீமையினை யெடுத்துக் கூறியதறிக. இன்னும் அந்நூலின்கண் மதோகமோகினி சுகசரன் முதலிய தீயர் தீதுற்றழிதலையோர்ந்துணர்க. மூன்றும் பரலாகிய சரசாங்கியின்கண் அழகாநந்தனுந் துன்மதியும் வார்த்தையாடுங்கால், தீயனாகிய துன்மதி "உமது அழகிய

நேசமோயாட்டியையும் மயக்குப்படி பேச வல்லவனென்றறி யீரோ?" என்று தன்தீமையைச் சிறப்பித்துரைத்தபோழ்து அழகாகந்தன் சினந்துரையாடலையு முய்த்துணர்க. (கஉ)

பொருள்

23. அரச னீதியு மங்கத்தி னியல்பு
முரைசெயி னவையே பொருட்பகு தியவாம்.

அரசன் நீதியும் அங்கத்தின் இயல்பும் உரை செயின் - அரசனது செங்கோன் முறையையும் இராஜாங்கத்தின் தன்மையினையும் எடுத்துக்கூறின், அவையே பொருள் பகுதிய ஆம் - அவை பொருளெனும் பிரிவின்பாற் படுவனவாம்.

குறிப்பு:—கலாவதி நாடகத்திற் சுகேசன் முதலிய மன்னர்தம் நீதியையும் மேதாநிதி முதலிய அமைச்சர்தம் மியல்பினையும் எடுத்துக்கூறுதல் பொருட்பகுதியவாமாறுணர்க.
(கூ)

இன்பம்

24. கைக்கிளை யன்பி னைந்திணை பெருந்திணை
மெய்ப்படக் கிளந்த வின்ப மாகும்.

கைக்கிளை - ஒருதலைக்காமம், அன்பின் ஐந்திணை - அன்புடைக் காமம், பெருந்திணை - பொருந்தாத காமம், (என்னுமிவை) மெய் பட கிளந்த இன்பம் ஆகும் - உண்மை பொருந்தக் கூறிய இன்பத்தின் பகுதியவாம்.

குறிப்பு:—கைக்கிளை; "கையென்பது சிறுமை; கிளை யென்பது உறவு; ஆகலின், சிறுமையுறவென்பது கைக்கிளை யென்னும் பெயர்த்தாயிற்று. கைக்குடை, கைவாய்க்கால், கையரிவாள் எனவழங்கிடத்தும் சிறுமைபற்றி வருதல் காண்க. அஃதெவ்வினையெனில், ஒருதலைக் காமமென்னும் பட்டத் தலைமகன் கூற்றாய் நிகழ்தலினெனக்" என்று தஞ்சவாணன்கோவை யுரையாசிரியராகிய சோக்கப்பநாவலர் கூறுவர். எனினும் இலக்கண விளக்கநூலார் பின்வருமாறு கூறுவதையுற்று நோக்குக. "கைக்குடை, கையேடு,

கைவாய்க்கால் எனப் பெருமை யில்லாதனவற்றை வழங்கு பவாகலிற் கையென்பது சிறுமைபற்றி வந்ததோர் இடைச் சொல்லென்றுங் கிளையென்பது உறவென்றும் பொருள் கொண்டு, கைக்கிளை யென்பதற்குப் பெருமையில்லாத தலை மக்கள் கிளைமையென்று பொருள்கூறுவாருமுளர். அற்ற ன்று. மேற்கைக்கிளை யொருதலைக்காமமென்பதற்கு இயைய அதற்குயாம் ஒருமருங்குபற்றிய கேண்மையென்றே பொ ருள்கூறுதும்." இச்சூத்திரத்திற்கு,

"கைக்கிளை யைந்திணை பெருந்திணை முறையே,
ஒருதலைக் காமமும் அன்புடைக் காமமும்,
பொருந்தாக் காமமும் பொருந்துத லுடைய"

(இலக். விள. 377)

என்னும் இலக்கணவிளக்கச் சூத்திரத்திற் கிணங்கப் பொரு ளுரைத்தாம். ஐந்திணையைக்

"குறிஞ்சி பாலை முல்லை மருத
நெய்த லைந்திணைக் கெய்திய பெயரே"

(இலக். விள. 379)

என்னுஞ் சூத்திரத்தானறிக. மேற்கூறிய கைக்கிளை ஆண் பாற் கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை யென இருவகைப் படும். பெருந்திணை: எல்லாவற்றினும் பெரிதாகிய திணை யாகலிற் பெருந்திணையாயிற்று. எவ்வெ? எண்வகை மணத் தினுள்ளும் கைக்கிளை முதல் ஆறு திணையும் நான்கு மணம் பெறத் தான் ஒன்றுமே நான்கு மணம் பெற்று நடத்தலா னென்க. எண்வகை மணம் யாவெனிற் கூறுதும். அவை பிராமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தரு வம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்பனவாம். இவற் றுள் ஆசுரம் இராக்கதம் பைசாசம் என்னும் இம்மூன் றும் கைக்கிளையின்பாற்படும்; காந்தருவ மொன்றே யைந் திணையின் பாலதாம்; ஏனைய நான்கும் பெருந்திணையாகும். இம்மணங்களி னிலக்கணங்களைத் தொல்காப்பியம் இலக் கணவிளக்க முதலிய நூல்களிற் பரக்கக் காண்க. இனிக் கைக்கிளை பெருந்திணையி னியல்பினை இலக்கண விளக்கம்

589, 590-ஆஞ் சூத்திரங்களானும், தோல்காப்பியம் அகத்திணையியல் 50-57-ஆஞ் சூத்திரங்களானுமறிக. இனி யிவையிற்றினுக் கிலக்கியங் காட்டுவாம். நாமகள் சிலம்பின் நான்காம்பரலாகிய சுகுண சுகேசர் என்னும் நாடகத்தின்கண், மல்லிகை காதலின்றியிருந்தும் சுகேசன் அவள்மாட்டுக் காதல் கொண்டது ஆண்பாற் கைக்கிளையின்பாற்படும். ரூபாவதி நாடகத்துள் ரூபாவதியும் சுந்தரானந்தனுங்கொண்ட மனமொத்த காதல் அன்பினைந்திணைக் குதாரணமாம். கலாவதியிற் சிதானந்தனுங் கலாவதியுங்கொண்ட காதலும் அற்றே. நாமகள் சிலம்பின் ஏழாம்பரலாகிய சூர்ப்பணகை யென்னும் பிரகசனத்துட் சூர்ப்பணகை இராமபிரான்மேற் கொண்ட காதல் பெருந்திணையின்பாற்படும். (கச)

25. உளத்தோ டுளஞ்சென் றொன்றுங் காதலு
மைந்திணை யவற்றுளடங்குமா ராய்ந்திடின்.

உளத்தோடு உளம் சென்று ஒன்றும் காதலும் - மனத்தோடு மனம் ஒன்றாட்டி நிற்குங்காதலும், ஆராய்ந்திடின் - ஆராய்ந்து பார்க்கின், ஐந்திணை அவற்றுள் அடங்கும்-அன்புடைக் காமத்தின்பாற்படும்.

குறிப்பு:—கந்தருவ மணத்தின் பாற்படுமாதலின் இன்னணங் கூறினர். இதனை வேறு பிரித்தோதியது இதுவே மிக்க சிறப்புடைத்தெனக் கூறுதற்குப்போலும். (கநி)

வீடு

26. ஊழ்வலி யுரைத்தலு முத்தம பத்தியும்
வீட்டின் பகுதிய விளம்புங் காலே.

ஊழ்வலி உரைத்தலும் - விதியின் வலியினை யெடுத்துக் கூறுதலும், உத்தம பத்தியும் - கடவுளிடத்து மேலான அன்பு காட்டுதலும், விளம்புங்கால் - கூறுமிடத்து, வீட்டின் பகுதிய - வீட்டின் பகுதியனவாய் நிற்கும்.

குறிப்பு:—ஊழ்: முறை; ஈண்டு நல்வினை தீவினைப் பயன்கள் முறைப்படி வரும் விதியினை யுணர்த்தி நின்றது; பண்பாகு

பெயர். நாமகள் சிலம்பு ஐந்தாம்பரலாகிய தசரதன்தவற்றின் இறுதியில் தசரதன் ஊழ்வலியினை யெடுத்துரைத்தலும் ஈசன் மாட்டுள பத்தியினைத் தெரித்தலும், சுரோசனன் கடவுளைத் துதித்தலும் இவ்வீட்டின் பகுதிக் கிலக்கியமாம். (கசு)

27. ஊழ்வலி யுரைத்த லொவ்வார் சிலரே.

சிலர்—, ஊழ்வலி உரைத்தல் ஒவ்வார் - விதிவலியை யெடுத்துக் கூறுதலை வீட்டின் பகுதியாய்க் கொள்ளமாட்டார்கள்.

குறிப்பு:—இனிச் சிலர் ஊழ்வலியுரைத்தலேயே கேரி தென்று ஒப்புக்கொள்ளார் என்றுங் கூறுப. இனி இதன் கண் ஆசிரியர்தம் மெய்க்கொள்கை யின்னதென்பது அன்னர் செய்துள பாவலர் விருந்தில் எட்டாவதாகிய பட்டினக் காட்சியினைப் புலனும். ஆண்டுக் கண்டுணர்க. (கள)

வகுப்பு

28. உற்றநாற் பொருளு மொன்பான் சுவையும்
பெற்ற நாடகம் பிராமணர் வகுப்பே.

உற்ற நான்கு பொருளும் - மேற் கூறலுற்ற நான்கு பொருளும், ஒன்பான் சுவையும் - ஒன்பது சுவைகளும், பெற்ற நாடகம்—, பிராமணர் வகுப்பு - அந்தணர் வகுப்பு நாடகமாம்.

குறிப்பு:—ஏகாரம் ஈற்றசை. அறம் பொருள் இன்பம் வீடு என்னு நாற்பொருளும் ஆன்மாக்கட்கு உறுதி பயப்பப் பொருந்தினவாதலின் 'உற்ற' என்னும் அடைமொழி கொடுத்தோதினு ரென்றலுமாம். ஒன்பான் சுவையினையும் பின்னர்க் கூறியுள சுவை வகையிற் காண்க. உதாரணங் கலாவதி நாடகம். (கஅ)

29. அறம்பொரு ளின்ப மடைவினிற் காட்டி
யிழிப்புச் சமநிலை யிவையொழி சுவைத்தா
யறையப் படுவதரசர் வகுப்பாம்.

அறம் பொருள் இன்பம் அடைவினில் காட்டி - (நாற் பொருளிலும் வீடு நீங்கிய) அறம் பொருள் இன்பம் என்

னும் மூன்றையுமே முறைப்படி தெரித்து, இழிப்பு சமநிலை இவை ஒழி சுவைத்தாய் - இழிப்புச்சுவையும் சமநிலைச் சுவையுமின்றி ஏனைய சுவைகளை யுடையதாய், அறையப்படுவது - கூறப்படும் நாடகம், அரசர் வகுப்பாம் - கூத்திரியர் வகுப்பு நாடகமாம்.

குறிப்பு:—அறம் பொருள் இப்படியென்னு மூவகைப் பொருளினையேபெற்று, உவகை, பெருமிதம், நகை, வெகுளி வியப்பு, அவலம், அச்சம் என்னும் எழுவகைச் சுவையினை யுமே யுடையதாயிருது நாடகம் அரசர் வகுப்பாம். நாமகள் சிலம்பின் நான்காம் பரலாகிய சுகுண சுகேசர் என்னும் நாடகம் இவ்வகைக் குதாரணமாம். (கசு)

30. சமநிலை யொழிசுவை யமைவர மேவி
யறம்பொரு ளிவற்றைத் திறம்பெற வுரைப்பது
வணிகர் வகுப்பென வழங்க லாகும.

சமநிலை ஒழிசுவை - சமநிலை யொழிந்த ஏனைய எண்வகைச் சுவைகளும், அமைவரமேவி - நன்றாகப் பொருந்தி, அறம் பொருள் இவற்றை - அறமும் பொருளுமாகிய இரண்டு பொருள்களையே, திறம்பெற உரைப்பது - இனிது வெளிப்பட்டுத் தோன்றுமாறு கூறும் நாடகம், வணிகர் வகுப்பு என வழங்கல் ஆகும் - வணிகர் வகுப்பினைச் சார்ந்த நாடகம் என்று கூறுதற்குரியது.

குறிப்பு:—வைசிய ஜாதி நாடகமென்று கூறப்படுவதுமிதுவே. இதற்கும் இனி வரும் வேளாண் வகுப்பிற்கும் நாடகங்கள் வந்துழிக் காண்க. (உ0)

31. பெருமிதஞ் சமநிலை பேணு தாகி
மேலற முரைப்பது வேளாண் வகுப்பாம்.

பெருமிதம் சமநிலை பேணுதாகி-பெருமிதச் சுவையினையும் சமநிலைச் சுவையினையுங் கொள்ளாததாகி, மேல் அறம் உரைப்பது - மேலான அறப்பொருளையே யெடுத்துக் கூறுவது, வேளாண் வகுப்பாம் - வேளாளர் வகுப்பு நாடகமாம்.

குறிப்பு:—சூத்திர ஜாதி நாடகம் என்று கூறப்படுவது மிதுவே. (உக)

(கூ) சந்தி

32. இடைப்பொரு ளுடனே யெடுத்த கதையின்
றலைப்பொருள் சார்ந்து கழைத்து முதிர்வது
நாட்டியக் கட்டுரைச் சந்தியா மதுதான்
முகமே பிரதி முகமே கருப்பம்
விளைவு துய்த்தலோ டைவகை யாகும்.

எடுத்த கதையின் - நாடகத்திற்காக ஆசிரியன் எடுத்த கதையினுடைய, இடை பொருள் உடனே - இடையில் நிகழ்ந்த பொருள்களுடன், தலை பொருள் சார்ந்து - ஆரம் பத்திற் சம்பவித்த விடயங்கள் பொருந்தி, தழைத்து முதிர்வது - வளர்ந்து முதிர்ச்சி பெறுவது, நாட்டியம் கட் டுரை சந்தி ஆம் - நாட்டியக் கட்டுரையாகிய சந்தியென்று சொல்லப்படும். அது தான் - அச்சந்தியும், முகமே பிரதி முகமே கருப்பம் விளைவு துய்த்தலோடு ஐந்து வகை ஆகும் - முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என்று ஐவ கைப்பட்டதாகும்.

குறிப்பு:—ஏகாரம் எண்ணுப் பொருள. 'இவை ஐந்து சந்தியும் நாடகக் கட்டுரை' யென்று சிலப்பதிகாரம் அரங் கேற்று காதையுரையின்கண் அடியார்க்கு நல்லார் கூறுதலையு முற்று நோக்குக. இவை யாவற்றினுக்கும் அங்கந்தோறு மொருசந்தியைப் பெற்ற ஐவங்க நாடகங்களினின்று முதா ரண மெடுத்துக் கூறுதல் எளிதாமாதலின் அதைவிடுத்து ஏழங்க நாடகமாகிய கலாவதியினின்றுமே யுதாரண மெடுத் துக் கூறுவாம். அவற்றை வருஞ் சூத்திரங்களிற் காண்க. இனி வீரசோழிய வுரையாசிரியர் பெருந்தேவனுர் "சந்தியா வது சந்தியுஞ் சந்தியங்கமுமென விரண்டு வகைப்படும். அவற்றிற் சந்தி யைந்து வகைப்படும். அவை முகமும், பயிர் முகமும், கர்ப்பமுகமும், வைரிமுகமும், நிருவாணமுமென விவை. சந்தியங்கமாவன அறுபத்து நான்கு. அவற்றுள்

உவகேபம், பரிகரம், பரிநியாசம், விலோவணம், யுக்தி, பிராத்தி, சமாதானம், விதானம், பரிபாவனை, உச்சிரம், உற்பேதம், கரணபேத மென முகத்தி லங்கம் பன்னிரண்டு. விலாசம், பரிசர்ப்பம், விதூதம், சமம், நாபம், நமதூதி, பிரகமம், நிரோதம், பரியுபாசனம், வச்சிரம், புட்பம், உப நியாசம், வருண சங்கார மிவை பயிர்முகத்தி லங்கம் பதின் மூன்று. அபூதாரணம், மார்க்கம், உருவம், உதாயிருதி, கிரமம், சங்கிரகம், அதுமானம், தோடகம், அதிபலம், உதேகம், சம்பிரமம், ஆகேவமெனப் பன்னிரண்டுங் கர்ப்ப முகத்தின் பேதம். அபவாதம், சம்பேடம், வித்திரவம், திரவம், சத்தி, துதி, பிரசங்கம், சலனம், விவசாயம், நிரோதனம், பிரரோசனம், விசலனம், ஆதானம் இவை பதின்மூன்றும் வைரிமுகத்தின் அங்கங்கள். சந்தி, விரோ தம், கிரதனம், நிண்ணயம், பரிபாடணம், பிரசாதம், ஆனந் தம், சமயம், கிருதி, ஆபாடணம், உபகூகனம், பிரசத்தி, பிரசனம், சங்காரம் இவைபதினைஞ்சும் நிருவாணமுகத்தின் அங்கங்கள்'' என்று கூறியிருத்தலையுங் காண்க. (22)

முகம்

33. எடுத்துரை கதைதா னினிமையிற் றொடங்கி
யுழவினுற் சமைந்த பூழியு ளிடுவிதை
முளைத்துத் தோன்றுதல் போல்வது முகமே.

எடுத்து உரை கதை தான் - நாடகத்தின்கண் எடுத்துச் சொல்லப்பட்ட கதையானது, இனிமையில் தொடங்கி - செவ்விதாகத் தொடங்கப்பட்டு, உழவினுல் சமைந்த பூழியுள் இடு விதை - உழவு காரணமாக உண்டான குழை சேற்றுள் இடப்பட்ட ஒரு விதை, முளைத்து தோன்றுதல் போல்வது முகம் - முளைத்து வெளிப்படுதல் போல்வது முகம் என்று சொல்லப்படும்.

குறிப்பு:—ஏகாரம் ஈற்றசை. பின்னர் வளர்ந்து கதிரா கிய பெரும்பயனளிக்கும் முளையானது திடீரென்று உழவு தொழி லியன்ற நிலத்தின்கண் நுட்பமாய்க் காணப்படுதல்

போல, நாடகத்திற் பின்னர் நடக்கும் விடயங்கள் யாவற்றினுக்கும் உற்பத்தித்தானமா யுண்டாகி நுட்பமாய்க் காணப்படும் சம்பவமே இம்முகமாம். இன்னணம் உழுவினின்றும் போந்த உபமான முகத்தான் இவ்வைந்து சந்தியையும் விளக்கவேண்டிய தென்னையெனிற் குற்றமற்றதாய்ப் பெரும் பயன்றருவதாய் நிற்கும் தொழில் அதுவேயாதலி னென்க. இது பற்றியன்றே,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்னும் திருவள்ளுவனாரும். கலாவதி நாடகம் இரண்டாமங்கம் மூன்றாங்களத்துள், வயந்தச்சேலையின்கட் சிதாநந்தனுங் கலாவதியுஞ் சந்திக்குமாறு நேர்ந்தமைத பின்வரும் விஷயங்கள் யாவற்றினுக்கும் முளைபோல் நின்று திகழ்கின்றமையின் முகமாதல் உய்த்துணர்க. "முகமாவது உழுப்புப்புத்தினின்று முளைத்தாற்போலக் கூத்தின் முகத்தினுள்ள பொருடோன்றுவது" என்ற வீரசோழிய வுரையாசிரியர் பெருந்தேவனார் கூற்றையு மீண்டுய்த்துணர்க. இம்முகம் பன்னிரு பகுதியினை யுடையதென்று கூறுவர் வடநூலார். * முகத்தின் வகை 12: அவை உவமேகூபம் பரிகரம் முதலியனவாம். இப்பாகுபாட்டாற் பெரும்பய னின்றுதலின் நாடகவியலாசிரியர் கூறிற்றிலர் போலும். (உரு)

பிரதிமுகம்

34. முளைத்தன் முதலா வியலையும் பெற்று
நாற்றென நிற்பது பிரதி முகமே.

முளைத்தல் முதலா - முளைதோன்றியது முதல், இலையும் பெற்று - இலைகளுந் தழையப்பெற்று, நாற்று என நிற்பது - நாற்று என்று சொல்லும்படி திகழ்வது, பிரதிமுகம் - பிரதிமுகமாம்.

---

* முகத்தின் வகை 12. உவமேகூபம், பரிகரம், பரிந்யாஸம், விலோபநம், யுக்தி, ப்ராப்தி, ஸமாதானம், விதானம், பரிபாவநம், உத்பேதம், கரணம், பேதம் என்பனவாம்.

குறிப்பு:—ஏகாரம் - ஈற்றசை. முளைத்த பிறகு இலைகள் பெற்றுத் தழைத்துத் தோன்றுந் தன்மைபோல, முகமாகத் தோன்றிய விடயம் முதிர்வது பிரதிமுகமாம். முளைகளுடன் களைகளிருப்பினும் இச்சமயத்திற் கட்புலனுக்குப் புலப்படாவாதலின் அவையிற்றினை யென்றிங் குரைப்பித்திலர். கலாவதி நாடகம் மூன்று மங்கமுதல் நான்காமங்கம் முதற்களமளவும் சிருங்கார கலாவதி யிவர்களுங் காதல் முதிர்தலும், இதற்கு இடையூறுங் களைகளாகிய சுகசாரன், மனோமோகினி, குலாந்தகன் முதலியவர்கள் இருத்தும் இடையூறுகள் உண்டாகாதிருக்குந் தன்மையினையும் அறிக. இது பிரதிமுகமாம். வடநூலார் இதன்கட் பன்னிரண்டு உட்பிரிவுகள் கூறுவர். *அவை விலாசம் முதலியனவாம். இதனைப் பயிர்முகம் என்றுரைத்தலுமொன்று. "பயிர்முகமாவது முளைத்த வங்குர மோங்கி மூத்தாற்போலத் தலைமக்கள் சொன்ன பொருளைப் பொலியுமாற்றால் விரிவாற் சொல்வது" என்று வீரசோழிய வுரையாசிரியர் பெருந்தேவனர் கூறியிருத்தலையு முணர்க. (உசு)

கருப்பம்

35. நாற்று முதலாக் கருவு முதிர்ந்துழிக்
களைபல செறியக் கட்டவை யொழிதலும்
பொருணலி பொதிந்து நிற்பது போல்வது
கருப்ப மென்னக் கழறினர் பெரியோர்.

நாற்று முதலா - நாற்றாக நின்றது முதல், கருவு முதிர்ந்துழி - பீள் முதிர்ந்தவிடத்து, களை பல செறிய - (பக்கங்களிற்) களையும் பலவாகி முதிர்ந்து மிட, கட்டு – களையப் பெற்று, அவை ஒழிதலும் - அவை நீங்கலும், பொருள் நனி பொதிந்து நிற்பது போல்வது-உள்ளீடு நன்றாக வாய்ந்து நிற்பதனை யொப்பது, பெரியோர்—, கருப்பம் என்ன கழறினர் - கருப்பசந்தியாமென்று கூறினர்.

---

*பிரதிமுகத்தின் வகை 12: விலாஸம், பரிஸர்ப்பம், விதூதம், தாபநம், நர்மம், (நர்மத்யுதி), ப்ரகமநம், விரோதம், பர்யுபாஸநம், புஷ்பம், வஜ்ரம், உபந்யாஸம், வர்ண ஸம்ஹாரம் என்பனவாம்.

குறிப்பு:—பயிரினுக்கு விரோதமாகக் களைகள் தோன்றுதலும் அவைகள் களையப்பட்டொழிதலும் உள்ளீடு நன்றுகப் பொருந்துதலும் போல, விடயம் முதிர்ந்துழி இடையூறுகள் வெளிப்பட்டுத் தோன்றுதலும் அவைகள் ஒழிதலும் அதன் பின்னர் விடயத்தினின்றும் பயன் சிறிது தோன்றலுமே கருப்பமாம். இதன்கட் *பதின்மூன்று உட்பிரிவுகள் உள என்று கூறுவர் வடநூலார். இவையிற்றுற் பெரும்பய னின்றுதலின் ஆசிரியர் கூறுது மேற்சென்றார். "கருப்பமாவது களத்திற் கருவுதிரண்டோங்கிக் குடைபோகியவாறுபோல நலந்தரும் பொருளைத் திரளச் சொல்லுவது" என்ற வீரசோழியவுரையாசிரியர் பேருந்தேவனார் கூற்றையு மீண்டுக் காண்க. கலாவதிநாடகத்துள் நான்காமங்கம் இரண்டாங்கள முதல் ஆறுமங்கம் இரண்டாங்களம் அளவும் இக் கருப்ப சந்தியைக்காணலாம். குலாந்தகன் சிதாநந்தன் உடைதரித்துச் சென்றதும், சுகசீரன் ஈட்டியெடுத்துச் சிதாநந்தனைக்கொல்ல வெளிப்போந்ததும் மநோமோகினி சன்னியாசி வேடம் பூண்டு சிதாநந்தற்கு மயக்கு மருந்தைக் கொடுத்தலுமாதிய களையனைய இடையூறுகள் சம்பவிக்கின்றன. அவை ஒன்றன்பி னொன்றுய்க் களையுண்டுபோகச் சிதாநந்தன் ஒருவிதத் தீங்குமின்றி யொளிர்தல் பொருணனிபொதிந்து நிற்பது போலுமாம். இனிமேற் செல்வாம். (உரு)

விளைவு

36. முற்றி நின்ற கதிர்திரண் டிடுதலு
மிலங்குங் கதிர்கறி விலங்கு கடிந்தபின்
காய்த்துத் தாழ்வது போல்வது விளைவு.

முற்றி நின்ற கதிர் திரண்டிடுதலும் - முதிர்ந்து நின்ற கதிர்கள் செவ்விதாகவளர்ந்து மிளிர்தலும், இலங்கும் கதிர்-பிரகாசிக்கின்ற கதிர்களை, கறி விலங்கு - கடிக்குந் தன்மையனவான மிருகங்களை, கடிந்தபின் - ஓட்டித் துரத்தியபிறகு,

* கருப்பத்தின் வகை 13:—அபூதாஹரணம், மார்க்கம், ரூபம், உதாஹரணம், க்ரமம், ஸங்க்ரஹம், அநுமாநம், ப்ரார்த்தநா, சுத்தி, த்ரோடகம், அதிபலம், உத்வேகம், வித்ரவம் என்பனவாம்.

காய்த்து தாழ்வது போல்வது விளைவு - கதிர்கள் நன்முற்ப் பழுத்துத் தலைசாய்வது போல்வது விளைவாகும்.

குறிப்பு:—இதனை விமரிசம் என்று கூறுவர் வடநூலார். கதிர் பழுத்துத் தலைசாயும் அமயத்து விலங்குகள் வரு மாதலின் அவைகளைத் தடுத்தலும், கதிர்கள் அறுக்கும் பரு வத்தை யடைந்து நிற்றலும் போலக், கலாவதி சிதாநந்தர்கட் குட் காதல் முதிர்ந்து பக்குவமடைந்ததும், இருவரும் ஒரு வரை யொருவர் இறந்தனரென மருண்டு உயிர்துறப்பத் தீர் மானித்ததும், பிறரு இவ்வெதிர்பாராத துன்பமும் நீங்கி அவர்கள் மகிழ்சிறந்து நின்றதும், மதோன்மாகினி ஓடிப் போதலும், அவர்களுடைய காதல் முதிர்ந்ததை யாவரு மறி தலும் இவ்விளைவெனுஞ் சந்தியின் பாலவாம். இதன்கட் *பதின்மூன்று பாருபாடுகள்உளவென்று வடநூலார் கூறுப. "விமரிசமாவது தோடு விரித்துக் கதிர்போந்தாற் போலவு மேயது வளைத்தாற்போலவு நாடகப்பொருள் நன்குவிளிக்கப் பயன்படுவது. விமரிசமெனினும் வைரிமுகமெனினு மொக் கும்" என்ற வீரசோழியவுரையாசிரியர் பெருந்தேவனர் கூற் றையு முய்த்துணர்க. (உசு)

துய்த்தல்

37. காய்த்த கதிரினை யறுத்து நற்பொலி
செய்து கொண்டுபோ யுண்டு மகிழ்வது
போல்வது துய்த்தல் புகலுங் காலே.

காய்த்த கதிரினை அறுத்து-முற்றிய கதிர்களை யறுத்து, நன்மை பொலி செய்து - நல்ல நெற்குவைகள் செய்து, கொண்டு போய் - களத்தினின்றும் வீட்டிற்குக் கொண்டு போய், உண்டு மகிழ்வது போல்வது-தாமும் தம்மினத்தாரும் அனுபவித்து மகிழ்ச்சியடைவதுபோல விளங்குவது, புகலுங் கால் - எடுத்துச் சொல்லுமிடத்து, துய்த்தல் - துய்த்தல் என் னுஞ் சந்தியாம்.

---

* விமரிசத்தின் வகை 13:—அபவாதம், ஸம்பேடம், வ்யவ ஸாயம், த்ரவம், த்யுதி, சக்தி, ப்ரஸங்கம், கேதம், ப்ரதிச்சேதம், விரோதம், ப்ரரோசனம், ஆதானம், ஸாதனம் என்பனவாம்.

குறிப்பு:—இச்சந்தியினை நிருவகணம் என்பர் வடநூலார். "நிருவாணமாவது விளைந்த போகம் விதிவரையா லறுத்துப் படித்துவைத்துத் துகளுங்களைந்து கொண்டுண்டு மகிழ்ந்தாற்போலக் கொள்வது" என்ற வீரசோழிய வுரையாசிரியர் பெருந்தேவனார் கூற்றையுமறிக. இவ்வுவமானத்தாற் போதரும் உவமேயத்தினை யாங் கூறுமேல் யாவருமுணர்கிற்பார் எளிதாதலின். சிதாநந்தன் கலாவதியை மணந்ததும், சோழ பாண்டிய மன்னர்கள் மனமகிழ்ந்ததும், சிதாநந்தன் சோழ பாண்டிய நாடுகட்கு இறைவனுய் மகுடம்புனைந்தது மாதிய வை துய்த்தல் என்னுஞ் சந்திக் கிலக்கியமாம். இது *பதினொன்கு வகைத்தென்ப வடநூலார். (உஎ)

(ச) சுவை

38. கால வரையறைக் கட்படா தாகித்
தானே விளங்குந் தன்மைத் தாகி
யுள்ள மலர்ச்சியி னுற்றெழுஞ் சுவையே
யநுதா பத்தினஃ தறிய லாகுமற்
றதற்குயிர் போல்வது வியப்பென மொழிப
மூன்றை நூலின் முறையுணர்ந் தோரே.

காலம் வரையறைக்கண் படாதாகி - இவ்விக்காலங்களி லின்னின்ன சுவை நிகழுமென்னும் வரையறையின்கண் அகப்படாததாகி (பிறர் தாண்டலின்றி இயற்கையிலேயே ஒருவனுக்குண்டாகும் இயல்பினையுடையதாய்), உள்ளம் மலர்ச்சியின் - மனத்தினுண்டாகும் கிளர்ச்சியினால், உற்று சுவை எழும் - பொருந்திச் சுவை யுண்டாகும்; அஃது - அச்சுவை, அநுதாபத்தின் அறியல ஆகும் - பிறர்மனத்தின்கண் உடனெழு முணர்ச்சியால் வெளிப்படும்; அதற்கு உயிர் போல்வது - அச்சுவையினுக்கு உயிர்போன்றது, வியப்பு என மொழிப - வியப்பு என்று கூறுவார்கள், (யாரெ

* நிர்வகணத்தின் வகை 14:—ஸந்தி, விபோதம், க்ரதநம், நிர்ணயம், பரிபாஷணம், க்ருதி, ப்ரஸாதம், ஆநந்தம், ஸமயம், உபகூஹநம், பாஷணம், பூர்வ வாக்யம், காவ்யஸம்ஹாரம், ப்ரசஸ்தி.

னின்) முந்தை நூலின் முறை உணர்ந்தோர் - முதன்மையாகிய நூல்களே வரலாற்றுமுறையினுணர்ந்த அறிஞர்கள்.

குறிப்பு:—ஏகாரம்-ஈற்றசை. இச்சூத்திரத்தானே வியப்பினடியாகச் சுவையெழு மென்பதூஉம் அதுதாபத்தான் அது வெளிப்படு மென்பதூஉம் பெற்றும். அதுதாபம்: Sympathy. வியப்பு: Wonder. சுவையெனினுங் குறிப்பெனினு மொக்கும்; வடநூலார் ரஸமென்ப. இன்னணம் வியப்பும் அதுதாபமுங் கூடியவழியே சுவை நிகழுமென்பதை முந்தை நாடகநூலாசிரியரும் "இருவகை நிலத்தி னியல்வது சுவையே" யென்றுகூறினர். ஆசிரியர் நச்சினார்க்கினியருந் தோல்காப்பிய மெய்ப்பாட்டியலின்கண், "இனி இருவகை நிலனென்பன உய்ப்போன்செய்தது காண்போர்க்கு எய்துதலன்றே வெனின், சுவையென்பது ஒப்பினையு பெயராகலான் வேம்பு சுவைத்தவன் அறிந்த கைப்பறிவினை நாவுணர்வினுற் பிறனுணரான், இவன் கைப்புச் சுவைத்தானெனக் கண்ணுணர்வினன் அறிவதன்றி; அதுபோல அச்சத்துக்கு ஏதுவாகிய ஒருபொருள் கண்டஞ்சி யோடிவருகின்ற ஒருவனை மற்றொருவன் கண்டவழி இவன் வள்ளெயிற்றரிமா முதலியன கண்டு அஞ்சினனென்றறிவதல்லது, வள்ளெயிற்றரிமாவினைத் தான் காண்டல் வேண்டுவதன்று; தான்கண்டானுயின், அதுவுஞ்சுவையெனவேபடும். ஆகவே அஞ்சினுனைக்கண்டு நகுதலுங் கருணைசெய்தலுங் கண்டோர்க்குப் பிறப்பதன்றி அச்சம் பிறவாதாகலான் உய்ப்போன் செய்தது காண்போனுய்த்த அறிவின் பெற்றியாற் செல்லாதாகலின், இருவகை நிலமெனப் படுவன சுவைப் பொருளுஞ் சுவைத்தோனுமென இருநிலத்தும் நிகழுமென்பதே பொருளாதல் வேண்டும்" என்று கூறியதையும் ஈண்டுய்த்துணர்க. இன்னும் வீரசோழிய வுரையாசிரியர் பெருந்தேவனரும் இரதவசனஞ் சுவையாம்; "நவைதீர்ரொன்பஃ தாகு முட்பொருள், சுவைவாய்க் கிளப்பது சுவையென மொழிப" என்று கூறியதையு மிங்ஙன் உணர்க. (உஅ)

சுவைவகை

39. மனங்கிழ் பெற்றி வெளியிற் றோன்றுமா
றியலுஞ் சுவையஃ தெவகை பெருமிதம்
நகைசமம் வெகுளி வியப்பிழிப் பவல
மச்ச மென்மனு ராரியப் புலவோர்.

மனன் நிகழ் பெற்றி - மனத்தின்க ணுண்டாகுந் தன்மையாகிய உள்ள நிகழ்ச்சி, வெளியில் தோன்றுமாறு - வெளிப்பட்டுத் தோன்றும் வண்ணம், சுவை இயலும் - சுவை நடக்கும்; அஃது - அச்சுவை, உவகை—, பெருமிதம்—, நகை—, சமம் - சமநிலை, வெகுளி—, வியப்பு—, இழிப்பு—, அவலம்—, அச்சம்—, என்மனுர் - என்று கூறுவார்கள், ஆரியம் புலவோர் - வடநூற் புலவர்கள்.

குறிப்பு:—மனன்: மனம்; மொழியிறுதிப் போலி. தமிழ் நூலார் சமநிலை யொழிந்த ஏனைய எண்வகைச் சுவைகளையுமே யெடுத்துக்கொண்டிருப்ப இவ்வாசிரியர் வடநூலார் மதம்பற்றி யொன்பான் சுவைகூறவேண்டிய தென்னை யெனின், நாடகத்திற்கு ஒன்பான் சுவையும் வேண்டுமாதலி னென்க. இஃதே தொல்காப்பியனுர்க்கும் இலக்கண விளக்க முடையார்க்குங் கருத்தாத லறிக. செயிற்றியனுரு மின்னணமே யொன்பான்சுவை கூறியிருக்கின்றனர். உலகியனீங்கினுர் பெற்றித்தாஞ் சமநிலையினை யுலகவழக்குட் கூறவேண்டாவாதலின் ஏனையோர் ஓரீரியினுரெனினும், நாடகத்தின்கண் அதற்கும் விகாரமுண்மையின் ஈண்டெடுத்தாளப்பட்டதென்க. இதுபற்றி யன்றே வீரசோழிய வுரையாசிரியர் பெருந்தேவனுரும் "இனிச் சுவையானது சிருங்கார முதலாகவுடைய நாடகச் சுவை யொன்பது மெனக் கொள்க" என்று கூறியதூஉ மென்க. உவகை யென்பது காமமுதலிய மகிழ்ச்சி; பெருமிதம் என்பது வீரம்; நகை யென்பது சிரிப்பு; சமநிலை யென்பது சாந்தம்; வெகுளி யென்பது கோபம்; வியப்பு என்பது அதிசயம்; இழிப்பு என்பது இளிவரல்; அவலம் என்பது அழுகை; அச்சம் என்பது பயம். இவற்

றினை முறையே சிங்காரம், வீரம், ஆசியம், சாந்தம், ரௌத்திரம், அற்புதம், குச்சை, சோகம், பயானகம் என்பர் வடநூலார். (உசு)

உவகை

40. புலனே செல்வம் புணர்வுவிளை யாட்டே
யிளமை வனப்பிவை களனுக் காமுறுந்
தலைவனுந் தலைவியு நலப்பட் டின்புற
வுவகைச் சுவையென் றுரைத்தன ருயர்ந்தோர்.

புலனே - அறிவும், செல்வம் புணர்வு விளையாட்டே - செல்வமும் புணர்ச்சியும் விளையாட்டும், இளமை வனப்பு - இளமையும் அழகும், (ஆகிய), இவை களனு - இவை காரணமாக, காமுறும் தலைவனும் தலைவியும் - அன்புடைக்காமமுடைய தலைவனுந் தலைவியும், நலம் பட்டு இன்புறல் - நன்மை யடைந்து களித்தல், உவகை சுவை என்று—, உயர்ந்தோர் உரைத்தனர் - மேலோர் கூறினர்கள்.

குறிப்பு:—புலன்: கல்விப் பயனாகிய அறிவுடைமை. செல்வம்: இன்பதுகர்ச்சிக்கு இன்றியமையாத் துணைக்கருவியாயுள்ள பொருள்கள். புணர்வு: காமப்புணர்ச்சி முதலியன. விளையாட்டு: யாறுங் குளனுங் காவு மாடிப் பதியிகந்து வருதன் முதலாயின. இளமை: இன்ப துகர்ச்சிக்குரிய செவ்வி வாய்ந்தமைந்துடையபருவம். வனப்பு: 1 "எல்லாநலனு மினிமையிற் கலந்து, கண்டவர் மனத்தைக் கணத்திற் பிணித்திட், டெண்டகு மாசை யெளிதிற் கொளுத்தித், தன்வயப் படுக்குந் தன்மை வனப்பாம்" என்றார் பரிதிமாற்கலைஞர். 1 "இன்பஞ் செயல்வல செவ்வியுமஃதே" யாதலின் இதனையும் ஆசிரியர் உவகைச் சுவையுளடக்கினர். (cf. A thing of beauty is a joy for ever-Keats). கலாவதி நாடகம் நான்காமங்கம் முதற்களத்திற் கலாவதி சிதாநந்தன்றன் அறிவினையந்து,

1. தனிப்பாசுரத் தொகை 15.

"கலையெலா நிறைந்தென் மனமெனுங் குமுதங்
கவினின்பத் தேனினைத் துளித்து
மலர்தரப் பகைவர் நெஞ்செனுங் கமலம்
வாடிபு குவிதரத் தோன்று
மலிபிர காச மதியமே யெழுந்து
மாரனல் வருதுயர் நிசியைத்
தொலைதரச் செய்தே யென்னையாண் டருள்வாய்
தோமிலாக் காமர்நா யகனே"

என்று கீதாமிர்தம் பொழிந்தது புலன்களனு வுண்டான வுவகையாம். கலாவதி நாடகத்துள் இரண்டாமங்கம் மூன்றுங்களத்தினுட் சிதாநந்தன், கலாவதி யணிந்திருந்த வைரச் சுட்டியினை வியந்து முகத்தினை வருணித்த

"வானி றத்த வயிர மணிச்சுட்டி
தான னிந்தொளிர் தண்ணொளி யொண்முகம்
வான கத்து வயங்குறு மீனெலா
மேனி ரல்வளை வெண்மதி மானுமே"

என்னுஞ் செய்யுள் செல்வங்களனு வுதித்த வுவகை மேலீட்டாற் கூறியதாம். கலாவதி நாடகம் நான்காமங்கம் முதற் களத்துட் சிதாநந்தன் கலாவதியை நோக்கித்

"துன்பமெலா மறவெறிந்தேன் றுகையர்சி ரோமணியே
தூய நின்ற
னன்புமதி கண்டுபொங்கு மாநந்த சாகரத்தி
னுழ்ந்திட் டேனே"

என்று கூறியது புணர்வுகளனு வுதித்த வுவகையாம். கலாவதி நாடகம் நான்காமங்கம் இரண்டாங்களத்துள்

"மாரவேள் போலுமென் வள்ள லணைய
மகிழ்ச்சி யடைந்தேனடி - அம்மா
மகிழ்ச்சி யடைந்தேனடி"

என்று கலாவதிகூறியதும் புணர்வுகளனு வுதித்த வுவகையின் பாலதாம். கலாவதி நாடகம் இரண்டாமங்கம் மூன்றுங்

களத்துள், தமது பதியிகந்து யாறுங் குளனுங் காவுமாடிவந்த சிதாநந்த சத்தியப்பிரியரிருவரும், காஞ்சிமாநகரைக் கண்டுழிச் சத்தியப்பிரியன்கூறிய "கானமர் கூந்தல் வானர மகளிர்" என்றுதொடங்கும் நேரிசையாசிரியப்பா விளையாடல்களை நிகழ்ந்த வுவகையாம்.

"கன்னிய ரெல்லா
நளியார் மாடத்து நனிபந் தாடுத
லாடவ ரயனின் றகமகிழ் வுற்று
நாடிக் காணலு நல்லார் வடிக்கண்மே
லோடி யன்னவ ருரத்திற் றைத்தலும்
பாண்டியர் திலக! பரிவுடன் பாராய்"

என்றவடிகளை மேற்குறித்த விளையாட்டுவகையு ளடங்கும். கலாவதி நாடகத்துட் கலாவதி சிதாநந்தன்றன் இளமையி லீடுபட்டு

"குன்றெறுத்திடு வாகு கொண்டமா
லென்றன் னுருயி ரின்ப வள்ளரு
னின்றிங்குற லாயி னனதாற்,
றென்றற் றேருறு நீய சேறியால்"

என்று மன்மதோபாலம்பனஞ் செய்தது இளமைகளை நிகழ்ந்த வுவகையாம். அந் நாடகத்திலைய சிதாநந்தன் கலாவதியைக் கண்டவுடன் அவள் வனப்பினை வியந்து சத்தியப்பிரியனிடங் கூறும்போழ்து,

"தாமரையே னல்வதனந் தையலுக்குத் தாவுமிள
மாமரையே கண்ணிணைகள் வண்பவள மேயதரங்
காமனையும் வாட்டுகின்ற கட்டழகார் கன்னிகைசீர்க்
கோமகளிப் பெண்ணரசி கூந்தலினை யென்சொல்கேன்"

என்றது வனப்புக்களை வுண்டான வுவகையாம். களன்: களம்; மொழியிறுதிப்போலி. உவகைச் சுவையினை ஆதிரஸ மென்றுங் கூறுப. (கூ0)

41. உடனுறை யின்பம் பிரிந்துறை யின்பமென் றிருவகை யாகு மியம்பிய வுவகை.

உடன் உறை இன்பம் - உடன் உறைதலால் உண்டாகும் இன்பம், பிரிந்து உறை இன்பம் - பிரிந்துறைதலால் உண்டாகும் இன்பம், என்று இரண்டு வகை ஆகும் இயம்பிய உவகை - என்று இருவகைப்பட்டு வழங்கும் மேற் சூத்திரத்துட் கூறிய உவகைச்சுவை.

குறிப்பு:—இவையிற்றினை வடநூலார் சம்போக சிங்காரம், விப்பிரலம்ப சிங்கார மெனக்கூறுப. உடனுறையின்பமாவது தலைவனுந் தலைவியுங்கூடியவழிப் பிறக்குமின்பமாம். கலாவதிநாடகத்துள், சிதாநந்தன் கலாவதியுடனிருப்புழி,

"விதவிதமாய்க் கருப்புவிலின் மலர்க்கணைக
டொடுத் தென்னை விரைந்து வாட்டு
மதவிடனு மொருபகைவன் மறைந்தனனீ
யென்று ணையாய்வதித லானே"

என்றுகூறியது சம்போக சிங்காரமென்னும் உடனுறையின்பத்தின் பாலதாம். பிரிந்துறையின்பமாவது தலைவனுந் தலைவியும் பிரிந்துழி நேரு மின்பம். பிரிந்துழி, இன்பமும் நேருமோவென்று சிலர் ஐயுறுவார். அற்றன்று; பிரிந்தவர்கூடுவரென்னுமெண்ணத்தானிகழுங்களிப்பே யிதற்குச் சான்றாகும். வரவு காத்திருக்கையானும் நம்பிக்கையானு முண்டாகுமின்பம் இற்றென அறியாரே யையுறுவாரெனவிடுக்க. (cf. "Hope is sweeter than the reward.") கலாவதி நாடகத்துட் சிதாநந்தன் சயதுங்கனுடன் மற்போர் செய்யப்பிரிந்துழிக் கலாவதி சிதாநந்தன் செயங்கொண்டு மீண்டு தன்னை யணுகுவான் என்ற நம்பிக்கையான் மலர் மரங்களை நோக்கித் தன்னுயகற்கு அணியமலர்கள் தரவேண்டிக் கொய்தலையுற்றுநோக்குவார்க்கு இதனுண்மை வெளிப்படும்.

"என்ற னுடனிறத்தை யெய்தியதிச் சம்பகப்பூ
வென்று நுமைத்துதிக்கு மேந்தல் களிகூரத்
தன்றுமன்றற் சம்பகங்கா யேமலர் தாரீரோ!";

"வீசுமிளந் தென்றல்வளர் மென்பொழிற்க ணுற்றிலங்
வாச மிகுபவள மல்லிகைகா ளென்னருமை [கும்
நேசத் தலைவனுக்கு நீவிர்மலர் தாரீரோ!";

"தள்ளரிய முல்லைகளே சம்பங்கிப் பூங்கொடியே
கள்ளவிழு மாதவியே காதலன்சி தாநந்த
வள்ள நனக்கணிய வண்மலர்நீர் தாரீரோ!"

என்ற பாடல்கள் விப்பிரலம்பசிங்கார மென்னும் பிரிந் துறை யின்பத்தின் பாலவாம். உவகைச் சுவையின் நலப் பாடெல்லாம் பிரிந்துறை யின்பத்தானேயே. பிரிந்துறையின் பமே யுவகைச்சுவைக்கு அழகு பயப்பது. (ஈக)

42. உழுவ லன்புமா னம்பிர வாசஞ்
சோக மென்னச் சொல்லு நான்கும்
பிரிந்துறை யின்பப் பிரிவுக ளாகும்.

உழுவல் அன்பு - மிகுந்த அன்பு, மானம், - பிரவாசம்–, சோகம்–, என்ன சொல்லும் நான்கும் - என்று சொல்லப் பட்ட நான்கும், பிரிந்து உறை இன்பம் பிரிவுகள் ஆகும் - விப்பிரலம்பசிங்கார மென்னும் பிரிந்துறையின்பத்தின் பாகு பாடுகளாம்.

குறிப்பு:—உழுவலன்பு : எழுமை யெழுபிறப்புந் தொ டர்ந்துவரும் அன்பு. இதனைப்பூருவராகமென்ப வடநூலார். பூருவராகம்: முதல் அன்பு. முற்பிறப்பிற் செய்வினையின் பயனுய் இம்மையில் தலைவன்றலைவியர்தம்முள் ஒருவரை யொருவர் கனவிற்கண்டு அன்புகூர்தலும் ஒற்றர்கள் கொ ணர்ந்த படங்களைக்கண்டு நேசமீக்கூர்தலும் பிறகு ஒருவ ரையொருவர் காணவிரும்பி மனத்திலடங்காக் கவலை யடை தலும் உழுவலன்பாம். மனோன்மணீயத்தில் மனோன்மணி யும் புருடோத்தமவர்மனும் ஒருவரையொருவர் கனமாத் திரையிற்கண்டு காமுற்று வருந்தலும், கலாவதியிற் கலாவதி, சிதாநந்தனுடைய படத்தைக்கண்டு காமுற்று வருந்தி,

"வென்றி விளங்கும் வேலுறு கையாய்
குன்றுறழ் தோளாய் கோதறு செய்யாய்
மன்றினி லெல்லா மாதுடர் முன்னு
மென்றுனே மேய்ந்தா னின்புறு கேனே?";

"கையினிற் போந்தி ருந்த காமரு மணியே யென்ற
னையனே நின்னை நேரி லடியனே னென்று காண்பேன்
றுய்யனே யென்று காண்பேன் சுந்தரா வென்று காண்
[பேன்
செய்யனே யென்று காண்பேன் செல்வமே யென்று
காண்பேன்"

என்று ஆற்றுது கூறியதும் உழுவலன்பினடியா வெழுந்த பிரிந்துறையின்பமாம். இவ்வுழுவலன்பினை, மேலி, குசும்பை, மஞ்சிஷ்டையென மூவகையாகப் பிரிக்குருமுளர். அப் பாகுபாட்டினுற் பெரும்பயனின்மையான் விடுக்க. மானம்: தலைவன்றலைவியர் தம்முள் ஒருவர்க்கொருவர் கொண்ட பேரன்பின் காரணத்தானும் பொறுமை காரணத்தானும் எழுஉம் ஒருவகைச் சிறுகோபத்திற்கு மானமென்று பெயர் கூறுப. இது பிரணயமானமென்றும், இருடியமானமென் றும் இருவகைப்படும். பிரணயமானம்: காரணமின்றிப் பேரன்பின் மேலீட்டால் உண்டாகுஞ் சிறுகோபம். இஃது ஊடல் என்றும் பெயர் பெறும். இக்கோபத்தானும் உவகை யின்பம் உண்டாகுமாவெனின் உண்டாகும்;

"ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்"

என்ற வள்ளுவர் வாக்கினை யுய்த்துணர்க. இதற்குதாரண மாக ரூபாவதி நாடகம் நான்காமங்கம் ஐந்தாங் களத்திற் சுந்தரசூரபர் என்று மறுபெயர் பூண்டு மாறுவேடந் தரித் திருந்த சுந்தரானந்தனும் ரூபாவதியும் ஒருவர்க்கொருவர் விநோதமாக வாதாடியது பிரணயமானமென்னும் ஊடலின் பாலதாம். இருடியமானம்: தனது தலைவன் மற்றொரு நாய கியினிடத்தில் இச்சைகொண்டானென்று தெரிந்த போழ்

தும் அன்னணம் ஆசங்கைகொண்ட போழ்தும் உண்டாகும் பொருமையானெழுந்த கோபமாம்.

"ஒடிவி னுயகன் பரத்தைபா லொழுகுவ துணர்ந்த
வடிவி லாமகண் மனமென வெதும்பி"

என்று தாமரை நாண்மலரிற் கூறியவண்ணம் இக்காரணத்தா லெழுங் கோபமுந் துக்கமும் முன்னர்க்குறித்த பிரணய மானத்தா லுண்டாகுங் கோபத்தினும் மேம்பட்டவாம். நாமகள் சிலம்பின் நான்காம் பரலாகிய சுகுணசுகேசர் என் னும் நாடகம் நான்கா மங்கம் இரண்டாங்களத்துள், சுகே சன் மல்லிகையின்மேற் காதல்கொண்டதை யுணர்ந்த அவன் மனைவியாகிய விஜயை யென்பாள் ஆற்றாது,

"சொற்றநின்ற னுசைமொழி சுருதியென நம்பியென்ற
னுற்றவரை விட்டேகி யுனையடைந்தேன் பற்றுடைய
நற்றலைவன் கற்புடைய நங்கையர்க்குப் பற்றென்று
சற்றுமென்மீ திரக்கமிலாத் தலைவாவென் றலைவாவோ"

என்று கூறியதும், கலாவதி நாடகம் ஐந்தாமங்கம் முதற் களத்தில் விகடவசன னென்னும் விதூடகன், சிதாநந்தன் வேறிருமாதர்களை மணந்துளான் என்று கூறியதைக்கேட்ட கலாவதி யடைந்த மனவருத்தமுங் கோபமும் இருடியமான மாம். பிரவாசம்: கல்வியயிறுதல், பொருள்வயிறுதல், துணை வயிறுதல், போர்வயிறுதல் பிரிந்த தலைமகன் குறித்தகாலத்து வாராது தாழ்த்தமையான் வருந்திய தலைவியடைந்த துயர மாம். தன்னுட்கையாறெய்திடு கிளவி, கழிக்கரைப் புலம்பல், தூது ஆதியவை இதனுளடங்கும். சுகுணசுகேசர் நாடகம் மூன்றாமங்கம் நான்காங் களத்துள் தற்பிரிந்து சென்ற சுகேசனை நினைத்து விஜயை, பத்மாவதி யென்னுந் தோழியை நோக்கி,

"என்ற னிதயத்தி னின்பங் கவர்ந்தவனை
யென்றையான் காண்பலோ வென்செய்கோ தோழி!
இருதிங்க ளாயினவே யென்செய்கோ தோழி!!

எப்போதென் னுத னெணையணைப்பா னிவ்விடத்தே
தப்பாமல் வந்திடுவான் சாற்றுயென் றோழி!
தமியனேன் செல்லவிடை சாற்றுயென் றோழி!!

என்னுதன் வந்திடுவா னென்றே யிதுகாறுங்
கொன்னே யிருந்தனனே கூறுயென் றோழி!
குறுகே லவன்கணென்று கூறுயென் றோழி!!''

என்று இரங்கியதும், கலாவதி நாடகத்துள் இரண்டாமங்கம் மூன்றுங்களத்தில், வாசந்திகை யென்பாள் தற்பிரிந்து சென்ற தலைவனிடங் குயிலினைத் தூதுவிடுப்பான் கருதி அதனை நோக்கி,

''கறையொன்றிய வேற்படைக் காவலனென்
னிறைதன்னிட மேகியெ னேக்கமெலா
மறைதந்து புரந்திடெ னுருயிரைக்
குறையொன்று மிலாக்கருங் கோகிலமே''

என்று கூறியதும், பிரவாச விப்பிரலம்பமாம். சோகம்: தலைவன்றலைவியர் தம்முள் ஒருவர் மற்றொருவரை விரும்பவும் பிற்கூறியவர் முற்கூறியவரிடத்துக் காதல் கொள்ளாதிருக்கவும் மையல் மாறுபாடிற்றுழிக் காதல் புறக்கணிக்கப்பட்டவர் கொள்ளும் அளவற்ற மனத்துயரஞ் சோகமாம். சுகுண சுகேசர் நாடகத்தில் விஜயை சுகேசனை விரும்பவும் சுகேசன் அவளை விரும்பாதவனுய் மல்லிகையின்மேற் காதல்கொண்டதுமன்றி விஜயையினையே மல்லிகையினிடம் தூதனுப்பி விஜயை தனக்குக் கொடுத்த மோதிரத்தை மல்லிகையினிடங் கொடுக்கச்சொன்ன போழ்து அவள் மனமாழ்கித் துன்பமீக் கூர்ந்து,

''ஏனெவிவ் வேவ லியற்றுகிற்ப லின்னலெலாம்
யானு வனுபவிப்பா னீண்டைப் பிறந்தேனெத்
தானுகக் கோலத் தலைவற் கெடுத்துதவுங்
கானுர் கரியென்று கற்றோர் கழறுவரால்''

"கொட்டியளக் கினுமென்றுங் குறுணிபதக் காகாத
கொள்கை போல
மட்டின்றி யவன்செயலின் கொடுமையினை யுன்னியுன்னி
வருந்தி னனு
மெட்டிமரம் பழுத்திட்ட பயன்போலா மன்பினெனை
யினிப்பா ராட்டிற்
பட்டமரந் தளிர்விடுதற் பான்மையெனத் துணிவுகொடு
பகர லாமே"

என்று புலம்பியது சோகவிப்பிரலம்பமாம். (உஉ)

பெருமிதம்

43. கல்வி தறுக ணிசைகொடை யடியா
வெஞ்சா வுரனு மஞ்சா முரணும்
விஞ்சா நிற்பது வீளையும் பெருமிதம்.

கல்வி—, தறுகண் - அஞ்சாமை, இசை-புகழ்,கொடை-தானம், (இவைகளின்) அடியா - காரணமாக, எஞ்சா உரனும் - குறைவுபடாத வலிமையும், அஞ்சா முரணும் - பயப்படாத மனவுறுதியும், விஞ்சா நிற்பது - மிகுதியும்பொருந்தி நிற்பது, வீளையும் பெருமிதம் - மேன்மேலும் உண்டாகும் பெருமிதச் சுவையாம்.

குறிப்பு:—இச்சுவையினை வீரமென்றுங் கூறுப. 'வீளையும் பெருமித' மென்றதனானே காமம்பற்றியும் பெருமிதம் பிறக்கு மென்றுகொள்க.

"பல்லிருங் கூந்தன் மகளி
ரொல்லா முயக்கிடைக் குழைகவென் றூரே,"

என்பது காமம்பற்றிய பெருமிதம். (புறம். 73)

பெருமிதம்: எல்லாரோடும் ஒப்பநில்லாது பேரெல்லையாக நிற்பது. கல்வி: பன்னூல் பயின்றதனா லுண்டாகும் பேரறிவு, தவ முதலாகிய விச்சை யிவையிற்றினைக் குறித்து நிற்கும்.தறுகண்: அஞ்சத்தக்கன கண்டும்,அஞ்சாமை. இசை: இன்பமும் பொருளும் இறப்பப் பயப்பினும் பழியொடு வரு

வன செய்யாமை. கொடை: உயிரும் உடம்பும் உறுப்பும் முதலிய வெல்லாப் பொருளுங் கொடுத்தல். நாமகள் சிலம் பின் முதற்பரலாகிய சூபாவதி நாடகம் மூன்றுமங்கம் முதற் களத்துள், கல்விக்கடலாகிய வித்தியாசாகரப் புலவர் சூர சேந வர்மனிடத்துப் பரிசில்பெறச் சென்றபொழுது மன் னனை நோக்கி,

"சுகபோக சுகுணமன் மதரூப மகாராஜ சூரசேநவர்மர் சமுகத்திற்கு, அடியேம் ககன மூதண்ட வேதண்ட பிர மாண்ட மெங்கணுங் கனபுகழ் படைத்த வுரவேம், இமய முத லீழம்வரை யிவர்க்குநிக ரெவருமிலை யென்றுசொலப் பெற்றதகையேம், கவிமதக் குஞ்சரங் கல்விக்களஞ்சியம், ஆதல்பற்றி வித்தியா சாகரப் புலவரெனு மேலான வபிதான முடைய ராவேம், வந்தனந் தந்தனம் நுந்தனம் பெற் றேகவே"

என்று கூறியது கல்வியானெழுந்த பெருமிதமாம்.புலவர்கள் அரசனைக்கு எழுதுஞ் சீட்டுக் கவிகளிலும் இது காண்க. கலாவதி நாடகம் நான்காமங்கம் நான்காங்களத்துள் மல்ல யுத்தத்திற்கு வருமாறு அறைகூவிய சயதுங்க சோழனை நோக்கிச் சிதாநந்தன்,

"மல்லயுத்த மாவீர வள்ளால் சயதுங்க
வல்லவனே வண்சோழ மன்னவனே—சொல்லுதும்யா
மெப்பொழுது போர்நிகழு மென்றிருப்பே மாதலினு
னிப்பொழுதுஞ் சன்னத்த மே"

என்று கூறியது தறுகண்காரணமாக வெழுந்த பெருமிதத் தின் பாலதாம். கலாவதி நாடகம் முதலங்கம் இரண்டாங் களத்திற் சிதாநந்தன் தனது தந்தையை நோக்கி,

'அரசர்மரபிற் பிறந்தவர்களும் பிறர்க்கஞ்சுவார்களோ?'

"தீங்கரும் பீன்ற திரள்கா லுலையலரி
தேங்கமழ் நாற்ற மிழந்தா அங்—கோங்கு
முயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை"

என்று கூறியது இசையானெழுந்த பெருமிதத்தின் கண்ண தாம். மகாபாரதத்தில், முதிர்ந்த வேதியன் வடிவுகொடு தான புண்ணியத்தை யாசிப்பான் வந்த கண்ணனை நோக்கி,

"ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
யகத்ததோ புறத்ததோ வறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம் பயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையா
லோவிலா தியான்செய் புண்ணிய மனைத்து
முதவினேன் கொள்கநீ யெனக்குப்
பூவில்வா ழயனு நிகரில னென்றுற்
புண்ணிய மதனினும் பெரிதோ"

என்று கர்ணன் கூறியது கொடையாலெழுந்த வீரமாம். இனி உரையிற்கோடலென்னு முத்தியால் தயாவீரமுங் கொள்க. இதற்குதாரணம் புத்த தேவன் செயல்களிற் காண்க. (நூநூ)

நகை

44. எள்ளல் பகைமை மயக்க மடியாச்
சிரிப்பினை விளைக்குஞ் செயலுங் கிளவியு
நண்ணி நிற்பது நகையெனுஞ் சுவையே.

எள்ளல் - இகழ்ச்சி, பகைமை - விரோதம், மயக்கம் - மயங்குதல், (இவை), அடியா - காரணமாக, சிரிப்பினை விளைக்கும் செயலும் கிளவியும் - சிரிப்பினை யுண்டாக்குஞ் செய்கையுஞ் சொல்லும், நண்ணி நிற்பது - பொருந்தி யிருப்பது, நகை எனும் சுவை - நகையென்று சொல்லப் பட்ட சுவையாம்.

குறிப்பு:—ஏகாரம் - ஈற்றசை. தோல்காப்பியம் முதலாய நூல்களுள் எள்ளல் இளமை பேதைமை மடன் என்று நகைச்சுவையினைப் பாகுபடுத்தி யிருப்ப இவ்வாசிரியர் பிறி தொடுபடாஅன் றன்மதங்கொளல் என்னும் மதம்பற்றி எள் ளல் பகைமை மயக்கம் என்னும் பாகுபாடு கூறிய தெற் றிற்கோ வெனின், இளமை பேதைமை மடன் என்னும்

மூன்றும் ஒருவாறு எள்ளலின்கண் அடங்குதலானும், எள்ளல்போற் பகைமையும் மயக்கமும் நகையினுக்கு அடியாக நிற்றலானு மென்க. கலாவதி நாடகம் இரண்டாமங்கம் இரண்டாங் களத்துள் விகடவசனன், சுகசரீரனை இகழ்ந்து,

"யார்க்குமிப் பெரியர் பார்க்கப் பூனைபைப்
போலிருந் தாலுஞ் சீலமார் சுகத்தை
நாடுகிற் பதினும் பீடுசால் பூசைபைப்
போன்றவ ரென்றே யான்றே ருரைப்பார்
வீணவலி யானே விமல நற்குண
மணவியை யிழந்த மாயிருந் துயராற்
பிறனில் விழையா மயங்கி யுழல்பவர்
மறனுர் தொழில்பல மாண்புறச் செய்தவர்
அரைசர்க் குறவென் றுரைசெய் கிற்பவர்
காமக் கணிகைய ரேமமன் றறியார்
பூதரத் தினும்பெரும் புந்தி யுடையவர்
மாதரார் பழிச்சுமன் மதனுறு வடிவினர்
இவரை மணந்துறு மேந்திழைக் கெய்துந்
தவறரு மின்ப மன்றியுஞ் சாந்த
மொழியுந் தன்மைய ருத்தமச் செல்வரே"

என்று கூறியது எள்ளலா னிகழ்ந்த நகையாம். நாமகள் சிலம்பிற் பத்தாம் பரலாகிய முத்திராராட்சசம் முதல் அங்கம் முதற் களத்திற் சாணக்கியன் தன் குஞ்சியை விரித்துக் கையினுலதை யுருவிக்கொண்டு,

"நந்தர் தங்குலத் திற்குமா விடஞ்செறி நாக
நந்து கோபச்செந் தீவளர் நற்புகைக் கொடியென்
விந்தை யார்சிகை விரிந்திடல் விழைதர லின்றிப்
புந்தி யற்றுத்த னுயிரினைப் போக்குவான் யாரே"

என்று கூறியது பகைமையினுலுண்டான நகையின் பாலதாம். நாமகள் சிலம்பின் ஏழாம்பரலாகிய சூர்ப்பணகையென்னும் பிரகசனத்துள், சூர்ப்பணகை தனக்குப் பேரழகு வாய்ந்த நாயகன் கிடைப்பானேவென்று சோதிடங் கேட்க

ஒரு முனிவன்பாற் செல்ல அவன் இவளைக் கண்டு பயந் தோடிக் கீழே வீழ்ந்தபோழ்து சூர்ப்பணகை நகைத்தது மயக்கத்தினடியாப் பிறந்தது. இனிப் பித்தன் கட்குடியன் முதலியோர்க்குக் காரணமின்றித் தோன்றும் நகையும் மயக் கத்தினடியாப் பிறந்ததாம். இந்நகைச் சுவையினை ஆசிய மென்ப வடநூலார். (நூசா)

45. நகையெனப் படுவ தறுவகைத் தாமவை
புன்னகை வெளிநகை பெருநகை யிடிநகை
யழுநகை வலிநகை யாமென் றறைப.

நகை எனப்படுவது ஆறு வகைத்து ஆம் - மேற்சூத்தி ரத்திற் கூறிய நகைச்சுவை ஆறுவகைப்படும்; அவை—, புன்னகை—, வெளிநகை—, பெருநகை—, இடிநகை—, அழுநகை—, வலிநகை—, ஆம் - என்னும் பெயருடையன வாம், என்று அறைப - என்று கூறுவார்கள்.

குறிப்பு:—இவையிற்றினை வடநூலார் ஸ்மிதம், ஹசிதம் விஹசிதம், அபஹசிதம் (Abahasita), அபஹசிதம் (Apahasita) அதிஹசிதம் என்று கூறுப. இவையிற்றி னுக்குதாரணம் கலாவதி முதலான நாடகங்களுள் வந்துழி வந்துழிக் காண்க. (நூநு)

சமம்

46. புலங்களிற் பற்றறப் பொலிந்தநன் னிலையே
சமநிலைச் சுவையெனச் சாற்ற லாகும்.

புலங்களில் பற்று அற பொலிந்த நன்மை நிலையே— ஐம்புலங்களிலும் பற்றின்றி விளங்கும் நல்ல நிலைமையினையே, சமநிலை சுவை என - சமநிலைச் சுவையென்று, சாற்றல் ஆகும் - சொல்லலாம்.

குறிப்பு:—இதனைச் சாந்தரஸமென்ப வடநூலார். நாம கள் சிலம்பின் எட்டாம் பரலாகிய மானவிஜயம் என்னுமங் கத்தில் கோச்செங்கணானைச் சிறைக்கோட்டத்திடப்பட்ட

சேரமான்கணைக்காலிரும்பொறை உலக வாழ்க்கையிற் பற்றற்றவனுய்,

"என்னே யுலகம்! என்னே வாழ்க்கை!
என்னே யரசியல்! என்னே மாந்தர்!
தீமையே நன்மையாத் திரிந்து நின்றவிந்
நாமநீ ருலகின் ஞாயமு முண்டோ?
நீதியு மறமு மோதியு முணராப்
பேதை மாக்கள் பெருகிய துலகம்"

என்று கூறியது சமநிலைச்சுவை வாய்ந்ததாம். (கூசு)

47. தயைபொறை தயங்கு தன்மைத் தாதலு
மியையுமிச் சுவைக்க ணென்றலும வழக்காம்.

தயை பொறை தயங்கு தன்மைத்து ஆதலும் - தயையும் பொறுமையும் விளங்குகின்ற தன்மையுடையதாயிருத்தலும், இயையும் இ சுவைக்கண் - இச்சம நிலைச்சுவையின் பாற்படும், என்றலும் வழக்கு ஆம் - என்று கூறுதலும் வழக்கின் பாலதாம்.

குறிப்பு:—உம்மை இழிவு சிறப்பாம். சுகுணசுகேசர் நாடகத்திற் சுகேசனது வஞ்சனையையும் தீயவெண்ணத்தையும் நன்குணர்ந்த பின்னர் அவன் வேண்டச் சுகுணன் தயையுடன் பொறுத்து,

இப்பொழுதன்றே முன்னினும் பதின்மடங்கு பிரிய முள்ள நண்பனுயினுய்!

" இருநில மாந்தர்க் கெல்லா
மிறையென மிளிரு மூர்த்தி
பொருவரு வலியெண் ணுமற்
பொருதுதன் வலியி ழந்து
பெருமைசால் பரசு ராமன்
பிழைபொறுத் தருள்கென் றேங்கக்
கருநிறத் தண்ணன் மிக்க
கமையுட னருளி னனே"

என்று அருள்செய்தது இச்சூத்திரத்திற்குக் காட்டாம்.(கூஎ)

வெதுளி

48. உறுப்பறை குடிகோ ளலிகொலை யடியாச்
சினமீக் கூர்ந்து தன்னை மறந்து
குறிப்பின் றெழுந்து செய்தலுஞ் சொல்லலும்
வெகுளிச் சுவையென விளம்புதன் மரபே.

உறுப்பு அறை - அவயவங்களைக் குறைத்தலும், குடி கோள் - தாரமுஞ் சுற்றமுங் குடிப்பிறப்பும் முதலாயவற்றுக் கண் கேடுசூழ்தலும், அலி - கோல்கொண்டலித்தன் முத லாயினவும், கொலை - அறிவு புகழ் முதலியவற்றைக் கொன் றழைத்தலும், அடியா - காரணமாக, சினம் மீக்கூர்ந்து - கோபம் முதிர்ந்து, தன்னை மறந்து - தன்னிலையை மறந்து, குறிப்பு இன்று - நியதியில்லாமல், எழுந்து—, செய்தலும் சொல்லலும் - ஒருவினையினைச் செய்தலும் கடுமொழியினைப் பேசலும், வெகுளி சுவை என விளம்புதல் மரபு - வெகுளி ச்சுவையென்று விளம்புதல் வழக்காம்.

குறிப்பு:—ஏகாரம் ஈற்றசை. உறுப்பறை: கை கால் கு றைத்தலுங் கண் சூலுதலும் முதலாயின. குடிகோள்: பந்துக் கள் நண்பர்கள் மனைவி மக்கள் முதலாயினர்க்குக் கேடுசூழ் தல். அலி: மன்னன் கொடுங்கோலனுய்ப் பிரசைகளை வருத் தல். கொலை: பழிமொழிபிதற்றி ஒருவனது அறிவு புகழ் முத லியவற்றை யிழித்துரைத்தல். சூர்ப்பணகை யென்னும் பிரக சனத்தில், இலக்குமணர், சூர்ப்பணகையின் மூலை மூக்குகளை அறுத்துவிட, அவள் அதுகாரணமாகக் கோபத்துடன் முறையிட்டது உறுப்பறையான் வந்தவெகுளியாம். சுகுண சுகேசர் நாடகத்துள், சுகேசன், மல்லிகையின் கற்பினுக்குக் கேடிழைக்கத் தொடங்க அவள்,

"வெவ்வரவின் வாய்ப்பட்ட தமயந்தி மின்னுளை
மீட்ட வேட
னெவ்வுமவள் கற்பரணை யழிக்கவெணங் கொடுசெய்த
வுதவி போலும்

வெளவுதொழிற் றிருடனினின் றெணீமீட்ட கின்செயலும்
வஞ்ச னேரீ
யெவ்விதத்து மத்திருடன் றன்னினுமா கொடியனென
வியம்ப லாமே''

என்று சினந்துரையாடியதும், நண்பனுகிய தனக்குக் கேடு சூழ்ந்ததை யுணர்ந்த சுகுணன் வெகுண்டு, ''அடே பாதகா! ஏ! துரோகி! நெருங்கலே!'' என்று சுகேசன்மீது வாளோயோச் சியதும், குடிகோளினடியாப் பிறந்த வெகுளியாம். கலாவதி நாடகம் நான்காமங்கம் மூன்றுங் களத்துள், கலாவதி, மனோமோகினி தனக்குக் கேடிழைக்கத் துணிந்ததைச் சிதா நந்தன்பாற் கூறியவளவில் அவன் வெகுண்டு,

''தாதவிழ் மாமலர் தாம்புனை வாசக்
கோதை கலஞ்செறி கோமள வல்லீ!
மூதைய வன்மனொ மோகினி நாமப்
பாதகி சென்னி பறந்திடு மின்னே''

என்று கூறியதுங் குடிகோள் அடியாப் பிறந்ததாம். ரூபாவதி நாடகம் நான்காமங்கம் மூன்றுங்களத்துள் நயவசநர் என் பார், சூரசேநவர்மன் வழுதிமகளுகிய சுந்தராநந்தனைக் கொன்றுவிட்டதாகக் கூறியவளவில் மூன்றுங் கனவான் வெகுண்டு ''அப்படியா செய்தான்? இனிமேல் ஒருநிமிஷமா வது தாமதியேன்! இதோ! பாருங்கள்! அந்தப் பாதகனை நான் கொன்று விடுகின்றேன்! உங்கள் பேச்சையினிக் கேட் கவே மாட்டேன்! இந்தச் சூரசேநவர்மனைத் தொலைத்துவிட் டுத்தான் மறுவேலை பார்ப்பேன்'' என்றுரைத் தெழுந்தது அலையாளெழுந்த வெகுளியாம். கலாவதி நாடகம் நான்கா மங்கம் நான்காங்களத்துட் சுகசரீரன்,

''பாண்டிநாட்டாரெலாம் பரமதுட்டர்கள்''

என்று சிதாநந்தனைக் குறிப்பாயிகழ்ந்த வளவிற் சிதாநந்தன் சினந்து ''என்சொனாய்? தீயோய்! எம்மையின்னர் இத்தகைய ரென்று அறிகிலாது இவ்வாறு தூஷித்த வுன்றன் சிரத்தை வீரபத்திரக் கடவுள் சிவபெருமானைப் பழித்த தக்கன் றலையைக் கொய்தாங்குக் கொய்கின்றேன்! பார்!'' என்று

வாளோச்சி, அவன்மீது பாய்ந்தது கொலையா னெழுந்த வெகுளியாம். (கூ அ)

வியப்பு

49. புதுமை பெருமை சிறுமை யாக்க
மென்ற வின்னன காரண மாக
வெதிர்பா ராச்செய லெய்திய போது
முயற்சி யின்றி முன்னிய தன்றொழின்
முற்றிய போதும் விரும்பு மதற்குமேன்
மிகவுமெய் துழியுங் கருவிக ளுறுவான்
முயலுழிப் பயனே முடிந்திடு போது
நிகழுஞ் சுவையினை நீள்வியப் பென்ப.

புதுமை - புதிதாகக் கண்டனவும், பெருமை - மிகப பெரியவாயினவும், சிறுமை - இறப்பச் சிறியனவும், ஆக்கம் - ஒன்று ஒன்றாய்த் திரிந்தனவும், என்ற இன்னன காரணம் ஆக - என்று கூறப்பட்ட இவைகாரணமாக, எதிர் பாரா செயல் எய்திய போதும் - தான் எதிர்பாராத செய்கை யொன்று நடந்தேறியபொழுதும், முயற்சி இன்றி - முயற்சி யில்லாமல், முன்னிய தன் தொழில்-தான் நினைத்தகாரியம், முற்றிய போதும் - முடிந்தபொழுதும், விரும்பும் அதற்கு மேல் மிகவும் எய்துழியும் - தான் விரும்பியதற்கு அதிக மாகக்கிடைத்தபொழுதும், கருவிகள் உறுவான் முயலுழி- உபகரணங்களைப் பெறும்பொருட்டு முயற்சி செய்யும் பொழுது, பயனே முடிந்திடு போதும் - நினைத்ததொழிலின் பிரயோசனமே சித்தித்தவிடத்தும், நிகழும் சுவையினை நீள்வியப்பு என்ப - உண்டாகுஞ் சுவையினை நீண்டவியப்புச் சுவையென்று கூறுவார்கள்.

குறிப்பு:—புதுமை பெருமை சிறுமை ஆக்கம் இவை யிற்றினடியாக வியப்புண்டாவது யாவர்க்குந்தெரிந்த தாத லின் உதாரணங்கூறிற்றிலம். கலாவதி நாடகம் இரண்டா மங்கம் மூன்றாங்களத்துட் கலாவதியின் கையினின்று கீழே

விழுந்திருந்த சித்திரத்தைப்பார்த்த சிதாநந்தன், அதுதன்னு டைய உருவம்பொறித்த படமென்பதைக் கண்டபோழ்து,

"இப்படித்திரும்பி யிப்படம் யாரதென்
றுற்று நீதான் சற்றே பார்த்தி"

என்று சத்தியப்பிரியனை நோக்கிக் கூறியது எதிர்பாராச் செய லெய்தியதனுண்டான வியாப்பாம். கலாவதி நாடகம் நான்காமங்கம் முதற்களத்தில், சிதாநந்தனைப் பெறவேண்டு மென்ற விருப்பமாத்திரையிற் கொண்ட கலாவதி தற்செய லாய் நந்தவனம்வர, ஆண்டுத் துயிலும் சிதாநந்தனை நோக்கி, "யான் படத்திற் பார்த்தவண்ணமே காணப்படுகின்றனனே! இஃதென்னை யாச்சரியம்!" என்று வியந்தது முயற்சியின்றி முன்னிய தன்றெழின் முற்றியதனு னுண்டானை வியப்பாம். கலாவதி நாடகத்தில், சயதுங்கன் சிதாநந்தனைச் சாதாரண மான வீரன் என்றே மதித்துத் தன்புதல்வி கலாவதியைக் கொடுக்க ஒருப்பட்டபோழ்து, அவன் பாண்டி நாட்டிறை வன் புதல்வன் என்றும் புலப்பட்டபோழ்து அவனடைந்த வியப்பு, விரும்பு மதற்குமேன் மிகவு மெய்துழி விளைந்தது. சூர்ப்பணகை யென்னும் பிரகசனத்தில், சூர்ப்பணகை தனக் குச் சிறந்த நாயகன் கிடைப்பனென்று ஜோதிடங்கேட்ப வொருமுனிவன்பாற் செல்லுழி, ஆண்டுப் பன்னசாலையில் இராமபிராணையே கண்டபோழ்து அவள் அடைந்த வியப்பு, கருவிக ளுறுவான் முயலுழிப் பயனை முடிந்ததனு னுண்டா யது. (நகூ)

இழிப்பு

50. மூப்பே பிணியே வருத்த மடியா
வெறுப்பினை விளக்கும் வீண்செயன் மொழிகளை
வழங்கிக் காட்டுஞ் சுவையியிழிப் பாகும்.

மூப்பே - மூப்பும், பிணியே - பிணியும், வருத்தம் - வருத்தமும், அடியா - காரணமாக, வெறுப்பினை விளக்கும் வீண் செயல் மொழிகளை - வெறுப்பினையுண்டாக்கும் பய

னற்ற செயல்களையும் மொழிகளையும், வழங்கி காட்டும் சுவை இழிப்பு ஆகும்-எடுத்துரைக்குஞ் சுவை இழிப்பாகும்.

குறிப்பு:—இழிப்பு எனினும் இளிவரல் எனினும் ஒக்கும். முயற்சியும் மென்மையும் வருத்தத்தினு ளடங்குமாத லின், மென்மை யென்பதனையுந் தோல்காப்பியனார் தனியே கொண்டதற் கிணங்க நம்மாசிரியர் கூறாது விடுத்தனர். நாமகள் சிலம்பின் ஐந்தாம்பரலாகிய தசரதன் தவறு என்னும் அங்கத்தினுள், சலபோசனர்.

"பற்கழன்று கண்ணிரண்டும் பஞ்சடைய மெய்நடுங்கிச்
சொற்குழறு மூப்பிற் றுயர்நரகும் வேறுளதோ?"

என்றுகூறியது மூப்பினடியாப்பிறந்த இளிவரலாம். மணிமேகலையில் மணிமேகலாதெய்வம் வந்து தோன்றிய காதையில் சுதமதியென்பாள் உதயகுமரனுக்குத்தான் மணிமேகலையுடன் உவவனஞ்சார்ந்த காரணமுரைப்புழித் தன்பிதாவின் வயிற்றினை ஆவொன்று பாய்ந்து கிழித்ததைக் கூறுங்கால்,

"ஒருநாட் புனிற்றுப் பாய்ந்த வயிற்றுப் புண்ணினன்
கணவிரி மாலை கைக்கொண் டென்ன
நிணநீடு பெருங்குடர் கையகத் தேந்தி"

என்றுகூறியதன்கட் பிணியினடியாப்போந்த இழிப்புச்சுவை கிடத்தலை யுணர்க. தசரதன் தவறு என்னு மங்கத்தில் தசரதன் சுரோசனனைக் கொன்றதற்காக வருந்தி,

"நாடு வேண்டேன் நகர்வேண்டே
னண்ணு மாடந் தான்வேண்டேன்
றேடற் கரிய பொருள்வேண்டேன்
சிவிகை முதலா யினவேண்டே
னூடு மினிய வழகுடைய
நங்கைமாரின் பழம்வேண்டேன்
வீடு மற்றும் விழைவதொன்றும்
வேண்டேன் வேண்டேன் வேண்டேனால்"

என்று வெறுத்துக்கூறியது வருத்தத்தினடியா வுதித்த இளிவரலின் பாலதாம். (சு0)

அவலம்

51. இளிவிழ வசைவு வறுமை யடியாத்
துக்கமும் துன்பமும் தோன்றிய காலை
மிக்கநீ ருகுத்தலும் விம்மலு மேங்கலு
மரற்றலு மழுதலு மயர்ந்து வீழலு
மவலச் சுவையென் றறைந்தனர் புலவர்.

இளிவு இழவு அசைவு வறுமை அடியா - இளிவு முதலாகிய நான்கினடியாகவும், துக்கமும் - துயரமும், துன்பமும் - வருத்தமும், தோன்றிய காலை - உண்டாய விடத்து, மிக்க நீர் உகுத்தலும் - மிகுதியுங் கண்ணீர் விடுத்தலும், விம்மலும் ஏங்கலும் - விம்முதலும் ஏங்குதலும், அரற்றலும் - புலம்புதலும், அழுதலும்—, அயர்ந்து—மயங்கி, வீழலும் - தரைமிசை வீழ்தலும், புலவர் அவலம் சுவை என்று அறைந்தனர் - அறிவுடையோர் அவலச் சுவையாமென்று கூறினர்கள்.

குறிப்பு:—இளிவென்பது பிறரான் இகழப்பட்டு எளியனுதல். இழவு என்பது தந்தையுந் தாயுமுதலாகிய சுற்றத்தாரையும் இன்பம் பயக்கும் நுகர்ச்சி முதலாபவற்றையும் இழத்தல். அசைவென்பது பண்டை நிலைமை கெட்டு வேறுருவமாகி வருந்துதல். வறுமையென்பது போகந் துய்ப்பப்பெறுத பற்றுள்ளம். அவலச்சுவையினை அழுகையென்றுங்கூறுப. அழுகைக் கண்ணீர்போல உவகைக்கண்ணீர் வீழ்தலுமுண்டு. அதற்கும் இதற்கும் வேறுபாடு வருஞ் சூத்திரத்திற் காண்க. தசரதன்தவறு என்னு மங்கத்தில் சுரோசனன், தன்னைச் சபதவேதியா னெய்ய தசரதனை நோக்கி,

"உண்மைநிலை கோடா துலகம் பொதுநீக்கித்
தண்மையுட னுளுந் தகைமை யிதுவேயோ?"

என்று இகழ்ந்தது இளிவினடியாப் பிறந்த அவலமாம். தசரதன்தவறு என்னு மங்கத்தில், மகனுகிய சுரோசனனிறப்பத் தாய் சுசீலையென்பாள் ஆற்றுது,

"முன்னு ளுளுற்று முதுமா தவத்தின்
முளேயா யுதித்த கதிரே
மின்னு திடித்தோர் கருமேக மூடி-
வினேயேமி னின்று ளெளியை
யன்னே பிரித்த வதிமாய மென்கொ
லறியாம லிங்க னிருளிற்
கொன்னே யிறப்ப விதயத்தி னம்பு
குறிவைத்து விட்ட பரிசோ?"

என்று புலம்பியதும், கலாவதி நாடகத்துட் சிதாநந்தன் இறந்தானென்று கலாவதி சிறிது மாற்றுது,

"பெண்ணைப் பிறப்பா ளுடவரும்
பெரிது விரும்பும் பேரழகு
நண்ணு மெனது பெருமானே
நவையில் பாண்டிக் குலதிலகா
மண்ணும் விண்ணு மொருங்காளு
மன்னே யருமை மணுளவென்றன்
கண்ணே யனைய காதலனே
கையற் றயர்ந்தேன் காணுதியோ!"

என்று புலம்பி நைந்ததும் இழவினடியாவுதித்த அவலமாம். இவ்வவலச்சுவையினேப் பாவலர் விருந்து முதனுளின்கண் இருக்கும் கையறுநிலையிற் பெரிதுங்காணலாம். கலாவதி நாடகத்திற் சயதுங்கசோழன் றன்னிலே தவறி மநோமோகினி யென்னும் மாயக்கணிகையின் வலேயிற்சிக்குண்டு தனித் தலே யோர்ந்த அவன் மகள் கலாவதி கையற்று,

"ஆகம் பலமருவு மன்பில் பொதுமாதர்
மோகம் பிடித்தெந்தை மூதறி வெலாமிழந்தா
ரேகம்பத் தெம்மானே யென்னைவந்து காவாயோ?"

என்று இரங்கியது அசைவின் காரணமாவுண்டான அவலமாம். கலாவதி நாடகத்தில், கலாவதி யிறந்தாளென்று நினேத்த சிதாநந்தன்,

"பாடகச் சீறடிப் பாவை யேமணிச்
சூடகக் கையினாய் சுகுண நாரிநா
மூடியுங் கூடியு முற்ற வின்பெலா
நாடக மாயின நங்கை நாயகி!"

என்று அழுதிரங்கியது வறுமையடியாகத் தோன்றிய அவல மாம். சகியினை மருவப்பெறுது வருந்திய இந்திரன்,

"போந்திடு காலையிற் பூலோ மசைப்பெய
ரேந்திழை காமரோ யெரியின் றுப்பினூற்
காந்திய வுளத்தினன் கனலும் யாக்கைய
னேய்ந்தனன் றட்பமே யுளம்வைத் தேகினான்,"
(கந். பு. குமா. 33)

என்ற கவியும் அதுவாம். (சக)

52. பொருந்துறு மாசை புகுந்துள தாதலிற்
பிரிந்துறை யின்பச் சோகம்வே ரூகு
மவலச் சுவையி னடைந்தசோ கத்தின்.

பொருந்து உறும் ஆசை - இதயத்தின்கண் எக்காலத் தும் தங்கப்பெற்ற ஆசை, புகுந்து உளது ஆதலில் - பொருந் திய காரணத்தால், பிரிந்து உறை இன்பம் சோகம் - விப்பிர லம்ப சிங்காரமென்னும் பிரிந்துறையின்பத்தினுண்டாகும் சோகமானது, அவலம் சுவையின் அடைந்த சோகத்தின் - அழுகைச் சுவையினுண்டான சோகத்தினின்றும், வேறு ஆகும் - வேறுபாடுற்றதாகும்.

குறிப்பு:—உழுவலன்பு, மானம், பிரவாசம், சோகமெ ன்னும் பிரிந்துறையின்பப்பகுதி நான்களுள்ளுந் துயர்சிறிது காணப்படுமாதலின் அந்நான்கினுக்கும் அவலத்தின் பால தாய சோகத்தினுக்கு முண்டாம் வேற்றுமையினை யாசிரியர் இச்சூத்திரத்தாற் றெரித்தார். கலாவதி நாடகத்தில் வாசந் திகை பாடிய,

"ஞாலமி சைத்தமியேன்
சீலமிலா மதவே
ளாலிட ராரத்தலெமான்
பாலுரை பைங்கிளியே!"

என்ற செய்யுளின்கட் போந்த பிரிந்துறையின்பச் சோகத்தினுக்கும், தசரதன் தவறு என்னு மங்கத்தினிற் புதல்வனிறப்பத் தாயாகிய சுசீலை புலம்பிய,

"செய்யாய் நீயுன் னுளமதனிற்
சிந்தித் திருந்த தென்னைகொலோ
வையா வென்னைக் கூயிணையோ
வம்மா வென்ன விளித்தனையோ
பொய்யா மிந்தப் புவியதனிற்
பொருந்தி வாழப் பொறுக்கிலே
னையோ வினிமே லுயிர்தரியே
னரசே யரசே யரசேயோ!"

என்ற இரங்கலின்கட் போந்த அவலத்தின் பாலதாய சோகத்தினுக்கும் உற்ற வேற்றுமையினை யோர்ந்து அறிக. இன்னும் விரிப்பிற் பெருகும். (சூ)

அச்சம்

53. அணங்கே விலங்கே கள்வர்தம் மிறையே
யாதிய காரண மாகத் தம்முடை
யுயிர்க்கும் பொருட்கு முலப்பின் றேதம்
வருங்கொ லென்று பயந்து நடுங்கி
மாழ்க லச்சமா வுரைத்தனர் வல்லோர்.

அணங்கே - தெய்வமும், விலங்கே - மிருகங்களும், கள்வர் - கள்வரும், தம் இறையே - தமக்கு இறைவராயினரும், ஆதியா - காரணமாக, தம்முடை உயிர்க்கும் - தமது உயிரினுக்கும், பொருட்கும் - பொருளினுக்கும், உலப்பு இன்று ஏதம் வருங்கொல் என்று - தவறுதலின்றித் துன்பம் உண்டாகுமென்று, பயந்து நடுங்கி - மனத்திற் பயந்து உடல் நடு

ங்கி, மாழ்கல் - கலங்குதலை, வல்லோர் - அறிவான்மிக்கோர், அச்சமா வகுத்தனர் - அச்சச்சுவை யெனக்கூறினர்.

குறிப்பு:—பயானகம் என்பதும் இஃதே. அணங்கென்பன பேயும் பூதமும் பாம்பும் ஈருகிய பதினெண்கணனும் நிரயப்பாலரும் பிறரும் அணங்குதற் றொழிலாகிய சவந்தின்பெண்டிர் இடாகினி மோகினி முதலாயினரும் உருமிசைத் தொடக்கத்தனவு மெனப்படும். பாம்பினை நாகசாதியின்கட் கொண்டு அணங்கின்பாற் படுத்தாது பிற்காலத்தார் விலங்கின்பாற்படுத்துமுரைப்பர். எனினு மஃதிழுக்கன்று. விலங்கென்பன அரிமா கொடுவரி யாதிய அஞ்சத்தக்கன. கள்வர் என்பார் தீத்தொழில் புரிவார். இறையெனப் படுவார் தந்தையரும் ஆசிரியரும் அரசரும் முதலாயினர், ரூபாவதி நாடகம் இரண்டாமங்கம் முதற்களத்தில்,ரூபாவதி சுந்தரானந்தனை நினைந்து கண்ணீர்வடிப்ப அதைக்கண்ணுற்ற கநகமாலை யென்னுந் தோழி அம்புஜாட்சி யென்னும் மற்றொரு தோழியை நோக்கி "அம்புஜாட்சி! இந்தச் சோலையிலே ஒரு வனதேவதை யுண்டென்று சொல்லக் கேட்டிருக்கிறோமே! எங்கே அதுதான் ஒருவேளை யிவள் தனியாயிருக்கும்போது வந்து பயமுறுத்திவிட்டுப் போயிற்றோ? என்னவோ?" என்று கூறியது அணங்கினாலுண்டான அச்சத்தின்பாலதாம். மணிமேகலைச் சக்கரவாளக் கோட்ட முரைத்த காதையிற் சார்ங்கலனென்பான் சுடுகாட்டுக் கோட்டத்தின் வழியாவர ஆண்டுப்,

"பண்புகொள் யாக்கையின் வெண்பலி யரங்கத்து
மண்கணை முழவ மாக வாங்கோர்
கருந்தலை வாங்கிக் கையகத் தேந்தி
யிரும்பே ருவகையி னெழுந்தோர் பேய்மகள்
புயலோ குழலோ கயலோ கண்ணே
குமிழோ மூக்கோ விதழோ கவிரோ
பல்லோ முத்தோ வென்னு திரங்காது
கண்டொட் டுண்டு கவையடி பெயர்த்துத்
தண்டாக் களிப்பி னுடங் கூத்துக்

கண்டனன் வெரீஇக் கடிநகை யெய்தி
விண்டோர் திசையின் விளித்தனன் பெயர்ந்தீங்
கெம்மனை காணு மீமச் சுடலையின்
வெம்முது பேய்க்கென் னுயிர்கொடுத் தேனென''த்

தன் தாயெதிர் வீழ்ந் துயிர்துறந்தது அணங்கின் காரணமா வுதித்த அச்சத்தின்பாலதாம். தசரதன் தவறு என்னும் அங்கத்தில் தசரதனுடன் வேட்டைக்குச் சென்ற ஏமநாதன் என்பான், காட்டி-லுள்ள புலி கரடிகளி னெலியினைக் கேட்டுப் பயந்து "போதும் போதும் மகாராஜா! என்ன செய்து விட்டீர்கள்! எனக்குப் பயமாயிருக்கின்றதே! புலி கரடி வசிக்குங் கொடுங்காட்டில் என்னைக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டீர்களே! நானென்ன செய்வேன்?" என்று தசரதனை நோக்கிக் குழறியது விலங்கின்காரணமா வுண்டான அச்சத்தின் பாற்படும். ரூபாவதி நாடகம் மூன்றமங்கம் முதற்களத்திற் சூரசேநவர்மன், வித்தியாசாகரப் புலவரை நோக்கி, "ஏ! புலவரே! என்ன மடமடவென்று உம்பாட்டிற்கு அடித்துக் கொண்டு போகிறீரே!" என்று கூறிய மொழிகளைக் கேட்டவுடன் புலவர் நடுநடுங்கி வாய்குழறி "என்ன! மகாராஜா அவர்கள் உத்தரவு தெரியவில்லையே! எமது பாட்டிற்காக எம்மை அடிக்கிறதா? தெரியாது வந்துவிட்டேன்! மகாராஜாவே! மன்னிக்கவேண்டும்! மன்னிக்க வேண்டும்" என்று இரங்கியது இறையினுண்டான அச்சத்தின்பாலதாம். மேற்குறித்த ஒன்பான் சுவையினுக்குந் தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களிற் கொடுத்துள உதாரணங்களைக் கொடுத்தால் அவ்வுதாரணங்களுக்கும் உரையெழுதவேண்டிவருமாதலானும் அன்னணஞ் செய்தால் உரைமிகப் பெருகுவதனெடு வேண்டா கூறலின்பாற் படுமாதலானும், அவ்வுதாரணங்களினும் பல்வகையினுந் தெளிவுற்று விளங்கு முதாரணங்கள் பிற்காலத்துத் தோன்றிய பற்பல நாடகங்களினும் பொதுளி யிருத்தலானும், நாடகவியற் சூத்திரங்கட்கு நாடகங்களினின்றுமே யுதாரணங் கொடுத்தல் சிறப்பாமாதலானும், இன்னணம் பல நாடகங்களி னின்றுமே பெரும்பாலு முதாரணங்க ளெடுத்துரைத்தாம். (சசு)

நிலைக்கருத்து

54. நாடக நூலு ணலம்பெறக் காட்டுஞ்
செய்திறத் தானுஞ் சொற்றிறத் தானுங்
தூண்டப் படுஉம் தொடர்பின் றிண்மையாற்
றமவே போல நுகர்ச்சி நிலையிற்
போந்து காணுநர்க் கின்பம் புகட்டி
நிற்றலாற் சுவையை நிலைக்கருத் தென்ப.

நாடகம் நூலுள்—, நலம் பெற காட்டும் - நன்மை பொருந்தக் காட்டும், செய் திறத்தானும் - ஒரு வினையினைச் செய்து முடிக்குஞ் சக்தியினாலும், சொல் திறத்தானும் - சொல்லின் வன்மையானும், தூண்ட படுஉம் - மனத்தின்கண் எழுப்பப்படும், தொடர்பின் திண்மையால் - சம்பந்தத்தின் பலத்தால், தமவே போல - அவை தம்முடையன வேயென்று சொல்லும்படி, நுகர்ச்சி நிலையில் போந்து-அநுபவ நிலையின்கண் ஈடுபட்டு, காணுநர்க்கு இன்பம் புகட்டி - பார்ப்பவர்கட்கு இன்பத்தினை யளித்து, நிற்றலால் - நிற்குங் காரணத்தால், சுவையினை நிலைக்கருத்து என்ப - சுவையினை நிலைக்கருத்தென்று சொல்லுவார்கள்.

குறிப்பு:—படுஉம்: இன்னிசையளபெடை; ஈண்டுச்செய்யுளிசை நிறைக்குமாறுமுணர்க. காணுநர்: Audience. நிலைக்கருத்தினை ஸ்தாயிபாவமென்பர் வடநூலார். நிலைக்கருத்தின் காரணத்தை விபாவமெனவும், துணைக்கருவிகளினைச் சஞ்சாரிபாவமென்றுங் கூறுப. அன்றியும் இவைகளாலே யுண்டாகி இச்சுவைகளை வெளிப்படுத்தி நிற்குஞ் சில பாவங்களைச் சாத்துவிகபாவமென்று கூறுப.

விபாவம்: வடிவம், யௌவநம், யௌவநத்திலுண்டாகிய ஹாவபாவங்கள், சிலம்பு முதலிய ஆபரண மணிதல், தென்றல், சந்திரன் முதலியனவாம்.

அநுபாவம்: கண்ணேக்கம், மயிர்க்கூச்செறிதல், புருவம் வளைத்தல், முதலியன.

வியபிசாரிபாவம் : (1) வெறுப்பு, (2) பலக்குறைவு, (3) கெடுதியின் வரவை யூகித்தல், (4) பிறர்தம் மேன்மையைப் பொறுமை, (5) மது முதலியவற்றை உண்டலால் உளதாம் மயக்கம், (6) கலவி முதலியவற்றாலுண்டாஞ் சோர்வு, (7) செய்ய வேண்டுந் தொழில்களில் முயற்சியின்மை, (8) பலக்குறைவாலுண்டாம் வணக்கம், (9) இஷ்டங் கிடையாமையாலுண்டாங்கருதுதல், (10) பயம் முதலியவற்றாலுண்டாம் மதிமயக்கம், (11) முன்னநுபவித்ததை நினைத்தல், (12) இஷ்டபூர்த்தி முதலியவற்றாலுளதாம் மகிழ்ச்சி, (13) மனக்குவிவு, (14) ஆசை முதலியவற்றானேற்படும் நிலையின்மை, (15) நாயகன் வரவு முதலியவற்றாலுண்டாம் மதிவிளக்கம், (16) இஷ்டம், இஷ்டக் குறைவு இவ்விரண்டினாலுண்டாம் மனத்தின் பரபரப்பு, (17) இஷ்டம், அநிஷ்டங்களில் இவ்விதம் செய்யவேண்டுமென்ற அறிவின்மை, (18) பலம் முதலியவற்றால் பிறரை அவமானப்படுத்தித் தான் மேன்மையாக இருத்தல், (19) உபாயந் தோன்றுமையாலுண்டாம் மனமுரிவு, (20) காலவிளம்பநத்தைப் பொறுமை, (21) யாதுந் தோன்றுமை, (22) துக்க முதலியவற்றாலேற்படும் ஆவேசம், (23) அதிநித்திரை, (24) விழித்தல், (25) குற்றமுள்ளவர்களிடங் குரூரமான செய்கை, (26) ஸந்தோஷ முதலியவைகளை மறைத்தல், (27) குற்றத்தைக் கண்டு மிகக் கோபித்தல், (28) உண்மையைத் தெரிந்து பொருளைத் தீர்மானித்தல், (29) அவமான முதலியவற்றாலுண்டாம் மனவருத்தம், (30) அஃறிணையினும் உயர்திணையினும் ஒரே விதமான எண்ணங் கோடல், (31) உயிர் நீங்குவதற்குச் செய்யுந்தொழில், (32) காரணமின்றி நேரிடுகின்ற பயத்தாலுளதாம் மனக்கலக்கம், (33) ஐயத்தினாற் பலவிதமூகித்தல் என முப்பத்து மூன்று பிரிவினதாம்.

ஈண்டுக் கூறிய விபாவ அநுபாவ வியபிசாரிபாவங்களாலுண்டாம் மனச் செய்கை சுவை அல்லது ரஸமென்பர். இவை (1) ஸம்போக விஷயமான விருப்பம், (2) விகார வடிவத்தைக் காண்பது முதலியவற்றாலுண்டாம் மநோவிகாரம், (3) இஷ்டஜனப் பிரிவாற்றுமையாலுண்டாம் மனவெப்பம்,

(4) சத்துருவினற் செய்யப்படுங் குற்றத்தினுலேற்படும் மன வெப்பம், (5) மேன்மையான காரியங்களி லுறுதியான முயற்சி, (6) குரூரமானவைகளைப் பார்ப்பது முதலியவற்று லாம் கெடுதியினுகித்தல், (7) குற்றமான பொருள்களைப் பார்த்தன் முதலியவற்றுலுண்டாம் மனக்குவிவு, (8) முன் காணுத பொருள்களைக் கண்டதனுலுண்டா மனப்பெருக்கு, (9) வைராக்கியத்தினுற் சித்தம் விகாரமடையாமலிருத்தல் என்றுன்பது வகைப்படும். இவற்றை முறையே சிருங்கா ரம், ஹாஸ்யம், கருணை, ரௌத்திரம், வீரம், பயாநகம், பீபத்ஸம், அற்புதம், சாந்தம் என்று கூறுப. இவை வட நூலார் கூறும் முறை.

அநுபாவத்தினையுஞ் சாத்துவிகபாவத்தினையும் முறை யே மெய்ப்பா டென்றும் விறல் என்றுந் தமிழ் நூலார் கூறுப. இவையிற்றினிலக்கணங்களை நடிப்பியல்பின்கட் பரக் கக் காண்க. எனவே, விபாவங்களாற் றேன்றி, அநுபாவங் களால் வெளிப்பட்டுச் சஞ்சாரிபாவங்களாற் புஷ்டியடைந்து நிற்கும் ஸ்தாயிபாவம் சுவை யென்னப்படும். (சச)

சுவைத்துணை

55. உவகைச் சுவையினுக் குறுதுணை மகிழ்ச்சி
பெருமிதச் சுவைக்குப் பேசுஞ் செற்றஞ்
சமநிலைச் சுவைக்குச் சாற்றும் வெறுப்பு
மற்றைய வற்றை மதித்தனர் கொளலே.

உவகை சுவையினுக்கு—, உறு துணை - பொருந்திய சுவைத்துணையாவது, மகிழ்ச்சி - களிப்பாம்; பெருமிதம் சுவைக்கு - வீரச்சுவையினுக்கு, பேசும் செற்றம் - சிறப்பித் துச் சொல்லப்படுகின்ற சிறுமையாபமாம்; சமநிலை சுவைக்கு - சாந்தரஸத்தினுக்கு, சாற்றும் வெறுப்பு - தக்கதென்று சொல்லப்படுகின்ற வெறுப்பாம்; மற்றையவற்றை - ஏனைய சுவைகட்கு, மதித்தனர் - ஆராய்ந்து, கொளல் - எளிதிற் கண்டுகொள்க.

குறிப்பு:—ஏனைய சுவைத்துணைகளை யாராய்வார் எளிதிற் கண்டறியலாமாதலின் இன்னணங்கூறி விடுத்தார். கொளல் என்னுந்தொழிற்பெயர் ஈண்டு வியங்கோட்பொருட்டாதலறிக. (சஎ)

56. சுவையை மேன்மே லோங்கச் செய்யுந
வவிநயச் சால்பு மமைந்த களங்களுங்
காலமு மென்னைக் கட்டுரைத் தனரே.

சுவையை - சுவையினை, மேல் மேல் ஓங்க செய்யும் - மேன்மேலும் ஓங்குமாறு செய்பவைகள், அவிநயம் சால்பும் - அவிநயப் பெருமையும், அமைந்த களங்களும் - காட்சி நலஞ்சான்ற களங்களும், (அமைந்த) காலமும் - பொருந்திய காலமும், என்ன கட்டுரைத்தனர் - ஆம் என்று புலவர்கள் நிச்சயமாகக் கூறினர்கள்.

குறிப்பு:—அவிநயச்சால்பும் காலங்களங்களினமைவும் இனிது பொருந்தாவிடிற் சுவை ஓங்கிவிளங்கா தென்ப திதனானே பெறப்பட்டது. (சசு)

57. இண்டைச் சுவைசில வினைந்து மியலும்.

ஈண்டை சுவை சில இனைந்தும் இயலும் - ஈண்டுக் கூறப்பட்ட சுவைகளுட் சில சேர்ந்து மோரிடத்தில் நடக்கும்.

குறிப்பு:—சில விடங்களிற் பெருமிதமும் வெகுளியுமினைந்தும், வியப்பும் அச்சமுஞ் சேர்ந்தும், அவலமும் அச்சமுமினைந்தும், உவகையும் நகையுமினைந்தும் வருமென்றறிக. இவ்வாறே இவைபோல்வன பிறவுமெனக் கொள்க. உதாரணங்கள் வந்துழிவந்துழிக் காண்க. (நிஎ)

இரதி

58. இரதி யென்ப தன்பென லாகுங்
கடவுளர் குரவ ரிடமாத் தோன்றிற்
பத்தியா மிளமகார் பால்வெளிப் படினது
வாற்சலிய மென்ப வறிஞ ராதிய
ரிடமாக் காணி னிரக்க மெனப்படும்.

இரதி என்பது - இரதியென்று சொல்லப்படுவதனை, அன்பு எனல் ஆகும் - அன்பென்று சொல்லலாம்; (அது), கடவுளர் குரவர் இடமா தோன்றில் - தேவர்களையும் ஐங் குரவர்களையும் கண்டபோழ்துண்டாயின், பத்தியாம - பக்தியென்று சொல்லப்படும்; இளமை மகார்பால் வெளிப் படின் - இளமைத்தன்மை வாய்ந்த குழந்தைகளைக் கண்ட போழ்து உண்டாயின், அது வாற்சலியம் என்ப - அதனை வாற்சலிய மென்று கூறுவார்கள்; வறிஞர் ஆதியர் இட மா காணின் - தரித்திரர் முதலாயினோர்களைக் கண்டபொழு துண்டாயின், இரக்கம் எனப்படும் - இரக்கமென்று சொல் லப்படும்.

குறிப்பு:-ஐங்குரவர்: "அரச னுவாத்தியான் றாய் தந்தை தம்மூன்". தசரதன்தவறு என்னுமங்கத்தில், சுரோசனன், தனது தாய்தந்தை தடிப்பவங்களாது ஈசனைப்பாடியது பத்தியானெழுந்ததாம். சலபோசனருஞ் சுசீலையும் தமது புதல்வனுகிய சுரோசனனை நீர்கொண்டுவரப் போகவேண்டா மென்று தடித்துரைத்தது அவன்பா லுண்டான வாற்சலிய மாம். புதல்வனையிழந்த சலபோசனரையுஞ் சுசீலையையுங் கண்ட தசரதன் அவர்கள்பாற் கொண்ட அன்பு இரக்கத் தின் பாலதாம். (சுஅ)

சுவைப்பாதுபாடு

59. உவகையு மவலமு மோங்கிய மென்சுவை
வெகுளியு மிழிப்பும் விளைந்த வன்சுவை
நகைசமம் வியப்பு மென்சுவைப் பால
பெருமித மச்சம் வன்சுவைப் பால.

உவகையும் அவலமும் ஓங்கிய மென்மை சுவை - உவகை அவலம் என்னுமிரண்டு சுவையும் மிகுதியும் மென் மையான சுவையாம்; வெகுளியும் இழிப்பும் விளைந்தவன்மை சுவை - வெகுளியும் இழிப்பும் மிகுதியும் வன்மையான சுவையாம்; நகை சமம் வியப்பு - நகை சமநிலை வியப்பு என்னும் மூன்றும், மென்மை சுவை பால - மென்மையான

சுவையுட்சேர்க்கப்படுவனவாம்; பெருமிதம் அச்சம் - பெருமிதமும் அச்சமும், வன்மை சுவை பால - வலியசுவையுளடங்குவனவாம்.

குறிப்பு:—உவகை அவலமிரண்டும் மிகுதியும் மென்சுவையென்றும், நகை சமநிலை வியப்புச் சிறிது மென்சுவையென்றும், வெகுளியும் இழிப்பும் மிகுதியும் வன்மையான சுவையென்றும், பெருமிதமும் அச்சமுஞ் சிறிது வன்சுவையென்றுங் கூறினர். ஒங்கிய விளைந்த வென்னுஞ் சொற்கள் மிகுதிப் பொருட்கண் வந்தன. (சசு)

60. மென்சுவைப் பாலவும் வன்சுவைப் பாலவு
நடுநிலைச் சுவையென நயந்தனர் கொளலே.

மென்மை சுவை பாலவும் வன்மை சுவை பாலவும் - மென்சுவைப்பாற்படுவனவென்றும் வன்சுவைப்பாற்படுவனவென்றும் மேற்கூறப்பட்ட சுவைகளை, நடுநிலை சுவை என - நடுநிலைச்சுவையென்று, நயந்தனர் கொளல் - (அன்னணங் கூற) விரும்பியோர் கொள்வாராக.

குறிப்பு:—ஏகாரம்-ஈற்றசை. ஒரு சுவை இருவகையின் கண்ணும் பயின்று வருமாயின் அதனை நடுநிலைச்சுவையெனக்கூற விரும்புவோர் கொள்ளினிழுக்கன்று என்று கூறியமையானே, எச்சுவை எவ்வமையத்தில் எவ்வகையின் கட் பயினுமோ அவ்வமையத்தில் அச்சுவையினை அவ்வகையின் கண்ணதாக்கோடலே ஏற்புடைத்தாமென்பது ஆசிரியர்தங்கருத்தென்றறிக. (நo)

(நு) பொருத்தம்

61. பொருத்த மென்ப தொற்றுமை யுடைமையஃ
திடனுங் காலமுஞ் செயலு மெனமூ
விதப்படு மென்பர் மேற்றிசை வாணர்.

பொருத்தம் என்பது - பொருத்தம் என்று சொல்லப்படுவது யாதெனின், ஒற்றுமை உடைமை - ஒற்றுமை

பொருந்தியிருக்குந் தன்மையாம்; அஃது - அப்பொருத்தம், இடனும் - இடப்பொருத்தமும், காலமும் - காலப்பொருத்தமும், செயலும் - செயற்பொருத்தமும், என - என்று, மூன்று விதப்படும் என்பர் - மூன்றுவகைப்படும் என்று கூறுவார்கள், மேற்கு திசை வாணர் - மேற்குத் திசையினராகிய யவனர்.

குறிப்பு :—பொருத்தம்; Unity. இடப்பொருத்தம்: Unity of Place. காலப்பொருத்தம்: Unity of Time. செயற்பொருத்தம்: Unity of Action. யவனராவார் கிரேக்கர். (நிக)

இடப்பொருத்தம்

62. பயனின்று பல்காற் கதைநிகழ் விடத்தினைத்
தோற்றிய வாறெலா மாற்றுத லின்றிக்
கதையின் போக்கினைக் காண்டக வுய்த்த
லிடத்தின் பொருத்தமென் றியம்புதல் வழக்கே.

பயன் இன்று - பிரயோசன மில்லாமல், பல்கால் - பல தடவையும், கதை நிகழ்வு இடத்தினை - நாடகக்கதை நிகழ்தற் பாலதாகிய இடத்தினை, தோற்றிய ஆறு எலாம் - மனத்திற்குத்தோன்றியபடியெல்லாம், மாற்றுதல் இன்றி - மாற்றாமல், கதையின் போக்கினை - நாடகக்கதைப் போக்கின் ஒழுங்கினை, காண்தக உய்த்தல் - சிறப்புப் பொருந்தச் செலுத்துதல், இடத்தின் பொருத்தம் என்று இயம்புதல் வழக்கு - இடப்பொருத்தமென்று கூறுதல் வழக்கமாம்.

குறிப்பு: — ஏகாரம் ஈற்றசை. இன்று:

"அன்றி இன்றி யென் வினையெஞ்சுகரம்"

என்னுந் தொடக்கத்துச் சூத்திரத்து உடம்பொடு புணர்த்தலானமைக்க. ஓரிடத்தில் நடக்கும் விடயங்கள் யாவற்றினையும் ஒரு படித்தாக ஒருங்கே கூறிவிடுதல் இடப்பொருத்தமெனினும், காலப்பொருத்தம் செயற்பொருத்தம் இவற்றொடும் முரணுமாதலானும், கதைபோற்றேன்றி, நாடகத்தின்

காட்சியமைதியினைக் கெடுக்கு மாதலானும், காலப்பொருத்தம் செயற்பொருத்த மிவற்றுடன்கூடிய இடப்பொருத்தமே நன்றெனவறிக. (நிஉ)

காலப்பொருத்தம்

63. வீணே காலநீட் டித்தலு மிடையீ
டுறத்தலு மின்றி யுயர்ந்துசெல் கதையினைக்
கட்டுரைப் பதுவே காலப் பொருத்தம்.

வீணே - பயனில்லாமல், காலம் நீட்டித்தலும் - காலதாமத முண்டாக்குதலும், இடையீடு உறுத்தலும்-நடுவிற் பயனில்லாத தடைகளை யுண்டாக்குதலும், இன்றி-இல்லாமல், உயர்ந்து செல் கதையினை—,கட்டுரைப்பதுவே-இனி துரைத்தலே, காலம் பொருத்தம் - காலப்பொருத்தமாம்.

குறிப்பு:—இடப்பொருத்தம்பெற விடயத்தைக் கூறுவதனினும் காலக்கிரமப்படி கூறுதல் மேலாமாதலின், காலப்பொருத்தத்தைப் பின்னர் வைத்து, இவ்விரு பொருத்தத்திலுஞ் செயற்பொருத்தமே சிறப்புடைத்தாதலின் இவையிற்றின் பின்னர் அதனை வைத்தனர். மூவகைப்பொருத்தமும் ஒன்றோடொன்று முரணுமிடத்துச் செயற்பொருத்தத்தையே பெரிதுங் கவனித்த லேற்புடைத்தாம். (நிஙூ)

செயற்பொருத்தம்

64. காரண காரிய முறைப்பட் டியங்கி
யருவிக ளாங்காங் கடைந்து கலக்கப்
பெற்ற யாறுபோ லுற்று விரியு
வெல்லாப் பகுதியு மெடுத்துரை தொழிலினுக்
குட்பட் டொழுகலு முலக வியல்பொடு
மாறு படாமலு நம்புத லரிய
விடய முறுமலும் விளைந்து நிற்பது [தோர்.
செயலின் பொருத்தமாச் செப்பினர் தெளிந்

காரணம் காரியம் முறைபட்டு இயங்கி - காரணகாரியங்களின் கிரமப்படி நடந்து, ஆங்கு ஆங்கு - இடை யிடையில்,

அருவிகள் கலக்க பெற்ற யாறு போல் - சிற்றுறுகள் கலக்கப் பெற்ற யாற்றினைப்போல, உற்று விரியூ - விரிந்து பொருந்தி, எல்லாம் பகுதியும் - நாடகக் கதையின் எல்லாப் பாகங் களும், எடுத்து உரை தொழிலினுக்கு - முக்கியமாக எடுத்துக் கூறப்பட்ட தொழிலிற்கு, உட்பட்டு ஒழுகலும் - அடங்கிச் செல்லுதலும், உலகம் இயல்பொடு மாறுபடாமலும் - உல கத்திற் சம்பவிக்கக் கூடிய விடயங்களுக்கு விரோதப்படா மலும், நம்புதல் அரிய விடயம் உறுமலும் - நம்பத் தகாத விடயங்கள் சம்பவித்தனவாக்காமலும், விளைந்து நிற்பது - எடுத்தவிடயம் முதிர்ந்து நிற்பது, செயலின் பொருத்தமா - செயற்பொருத்தமென்று, தெளிந்தோர் செப்பினர் - அறி விற்றெளிந்த பெரியோர் கூறினர்.

குறிப்பு:—காரணம்: Cause. காரியம்: Effect. சிற்று றுகள் பல பேரியாற்றுடன் கலந்து ஒரு முகமாக அடங்கிச் சேறல்போல, நாடகக்கதையின் பல பிரிவுகளும் பிரதான மான கதைத்தொடர்ச்சியுடன் மரீஇ நடத்தல் வேண்டும். உவமையணி. 'உறுமலும்' என்ற தன்வினைக்கு 'உறுத்தா மலும்' எனப் பிறவினைப் பொருளுரைத்தாம்,"குடிபொன்றி" யென்புழிப்போல. (நிச)

(சு) நடை

65. கதையினைப் பெய்து கழறிடு மாறே
நடையா மதுதான் வாசகஞ் செய்யு
ளிசைப்பாட் டோடு மியலு மென்ப.

கதையினை - நாடகக்கதையினை, பெய்து - பொருத்தி, கழறிடும் ஆறே - கூறும் விதமே, நடை ஆம் - நடை யென்று பெயர்பெறும்; அதுதான் - அந்நடைதான், வாசகம் செய் யுள் இசைப்பாட்டோடும் இயலும் என்ப - வசனம் செய் யுள் இசைப்பாட்டென்னும் முத்திறத்தோடும் நடைபெறும் என்று கூறுவார்கள்.

குறிப்பு:—இம்முத்திறத்திற்கும் உதாரணங்கள் ஆங் காங்குக் காட்டுதும். நூல் நடக்குந் தன்மையே நடை

யாம்; ஈண்டுப் புலவன் செயலாகச் சூத்திரிக்கப்பட்டமை காண்க. (நிநி)

வாசகம்

66. பேசுந் தமிழிற் பிழையினை யொரீஇப்
பேசுநர்க் கேற்ற விகற்பஞ் செறித்துப்
பெய்துரை வசனமே வாசக மாகும்.

பேசும் தமிழில் - பாத்திரங்கள் பேசுந் தமிழின்கண், பிழையினை - குற்றத்தினை, ஒரீஇ - நீக்கி, பேசுநர்க்கு ஏற்ற விகற்பம் செறித்து - பேசுநருடைய ஏற்றத் தாழ்விற்கு இயைந்த நடை வேறுபாட்டினைப் பொருத்தி, பெய்து உரை வசனமே - விடயங்களைத் தந்துரைக்கிற வசனந்தான், வாசகம் ஆகும் - வாசகமென்று பெயர் பெறும்.

குறிப்பு:—ஏகாரம்: தேற்றம். இழிந்தோர் பாத்திரமாயிருப்பின் இழிசினர் வழக்குரையே நேரிது. வாசகத்தையுரைநடையென்றலுமாம். சுகுணசுகேசர் நாடகம் நான்காமங்கம் முதற்களமே யிதற்குப் போதுமான சான்று பகரும்.

"தம்பீ! நூறு பயண்டாலும் வரட்டும். அவுகெல்லாருக்கும் நான் ஒருத்தன்போது மில்லே" என்னும் வாக்கியம் இயற்றமிழிற் பிழைபாடுடைய தெனினும் நாடகத் தமிழில் நேரிதென்றறிக. (நிசு)

செய்யுள்

67. "பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்."

பல்வகை தாதுவின் உயிர்க்கு உடல் போல் - தோல் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை சுவேதநீர் என்னும் எழுவகைத் தாதுக்களினுள் உயிர்க்கு இடமாக இயற்றப்பட்ட உடம்புபோல, பல சொல்லால் பொருட்கு இடன் ஆக - இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்

என்னு நால்வகைச் சொற்களாற் பொருளுக்கு இடமாக, உணர்வினின் வல்லோர் அணிபெற செய்வன செய்யுள் - கல்வியறிவினுற் செய்யுள் செய்ய வல்லவர் அலங்காரம் பெறச் செய்வன செய்யுளாம்.

குறிப்பு:—இது மேற்கோட் சூத்திரம். மேற்கோளாக நன்னூலினின்றும் ஆசிரியரான் எடுத்தாளப்பட்டது. எழுத்தாலானது சொல்லாதலால் எழுத்துச் சொற்பொருள் அணியென்னும் நான்கினுலும் இயற்றப்படுவது செய்யுளாம். பொருள்: அகம் புறம் என்னும் இரண்டனையும். கலாவதி நாடகம் இரண்டாமங்கம் மூன்றங்களம்,

"திடத்தொடு செவ்வணி செறிந்து சேடியர்
கடித்திரப் பரத்தையர் காவல் புக்கபோன்
முடித்தலைச் சிவப்புற முளைக்கு மீர்ந்தளி
ரடித்தலத் தளித்ததிவ் வசோக மென்கொலோ!"

இக் கலிவிருத்தம் செவ்வணி யணிந்து சேடியை விடுத்தல் என்னும் அகப்பொருட்டுறையின் பாலதாய்த் தன்மையுவமை மயக்கங் கருத்தடை முதலிய பொருளணிகட் கிடனுய் முதலடி முற்றுமோனையும் பிறவு முடைத்தாய் வருதல் காண்க. (நிள)

68. பண்ணெடு கலந்து பாடலா னன்றே
பாடலென் றவற்றைப் பகர்ந்தனர் புலவர்.

பண்ணெடு கலந்து பாடலான் அன்றே - இராகத்துடனியைத்துப் பாடப்பெறுவதனுற்றுன், அவற்றை - அச்செய்யுட்களை, புலவர் - அறிஞர்கள், பாடல் என்று பகர்ந்தனர்- பாடல்கள் என்று பெயரிட்டழைத்தனர்.

குறிப்பு:—பாடப்பெறுங் காரணத்தாற்றுன் பாடல் என்று அறிஞர் பகர்ந்தனர் என்பது இச்சூத்திரத்தின் கருத்து. வெண்பாவிற்குச் சங்கராபரணமும், கட்டளைக் கலித்துறை விருத்தமாதியவற்றிற்கு முறையே பைரவியும் தோடியும் என்று இக்காலத்தும் சிலர் வழங்குவதனை யீண்

டறிக. இனிப் பண் என்பதற்கு நட்டபாடை சாதாரி பழம் பஞ்சரம் குறிஞ்சி இந்தளம் தக்காராகம் சீகாமரம் ஆதியபண் கள் என்றும் பொருள் கூறலாம். எனவே பாடல்களெல்லாம் நடிப்புழிப் பாடப்படல் வேண்டுமென்பது பெற்றும். (நிஅ)

செயீயுளியக்கம்

69. மிகவுந் தாழ்ந்து சென்முத னடையுஞ்
சொல்லிசை யொழுக்க முடைய வாரமுஞ்
சொல்லிசைச் செறிவுக ளுடைய கூடையுந்
துன்றி முடுகிய நடையுறு திரளு
மென்றநான் கியக்கமு மொன்றுமச் செய்யுள்.

மிகவும் தாழ்ந்து செல் முதனடையும் - மிகுதியுந் தாழ்ந்து செல்லும் இயக்கத்தினையுடைய முதனடையும், சொல் இசை ஒழுக்கம் உடைய வாரமும் - சொல்லொழுக் கமும் இசையொழுக்கமுமுடைய வாரமும், சொல் இசை செறிவுகள் உடைய கூடையும் - சொற்செறிவு இசைச் செறிவுகளையுடைய கூடையும், துன்றி மூடுகிய நடை உறு திரளும் - நெருங்கி மிக மூடுகிய செலவினையுடைய திரளும், என்ற நான்கு இயக்கமும் - என்று கூறப்பட்ட நால்வகை இயக்கமும், அ செய்யுள் ஒன்றும் - மேற்கூறிய செய்யுள் அடையும்.

குறிப்பு:—இந்நால்வகைச் செய்யுளியக்கத்தி னிலக்க ணங்களைச் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையினும் அரும்பதவுரையினுங் குறிப்பித்திருத்தலை யுற்றுநோக்குக. கலாவதி நான்காமங்கம் முதற்களம்,

"வாரார் கொங்கை மாதே கேளாய்
சோரா நின்றேன் நேரகாய் நிற்கண்
டோரார் மானே யென்னை டோர்சொற்
பேரார் தேவீ பேசாய்! பேசாய்!"

என்ற செய்யுள் முதனடைக் குதாரணமாதலை யுய்த்துணர்க. கலாவதி நாடகம் மூன்றுமங்கம் இரண்டாங்களம்:

"மிணேரு கின்ற விடையாரு மென்றன்
விமலாய்நி ஞதன் விழையு
மநொமோகி னிக்க ணிகைதான்வி ரித்த
வலையிற் கிடந்து கதறி
யுணேயே நிணேந்து மனகானி ணேந்து
முருகா வுடைந்து தனியா
யளேயேநி ஞசை மகளா யிருந்த
வடியேன் வருந்த லழகோ?"

இது வாரவியக்கத்தினுக் குதாரணமாதல் காண்க. கலாவதி நாடகம் மூன்ருமங்கம் மூன்ருங்களம்:

"இரவி தன்னெளி மிகவு மெய்திகன்
கிலகு கின்றத ணினிய சோமநின்
கரவு நின்விட குணமு மோர்ந்தனென்
கனியுமன்பொடி கனலி நாடொறும்
விரவு காதலி யெனமொ ழிந்திடும்
விமல பத்மினி தணேயி ழுத்தண
பரவு கன்னியர் நிணேயி கழ்ந்தனர்
பழியுமுற்றண யொழிக தீயனே"

என்ற செய்யுள் கூடையியக்கத்துக் குற்றவுதாரணமாம். கலாவதி நாடகம் ஐந்தாமங்கம் முதற்களம்:

"சுந்தரக லாவதியென் றாயசுகு மாரி
கந்தரமெ னுங்குழலி காமரச வல்லி
பந்திணேநி கர்த்திடு பயோதரி யியம்பா
யிந்துவத னேயென வியற்றிடுதல் வேண்டும்"

என்னுஞ் செய்யுளும், இறுதியிற் சுயம்பிரகாச முனிவர் கூறிய வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவின்கண் வரும்,

"விதுநிகர் முகனுடை விமலசு குணவள
மதுரையெ ணகர்தனில் வளர்தரு மரசனே!;
உவகையொ டதுதிந முயர்வினி நகர்வதி
பவமகிழ் புரிகுவை பரசுறு சரசனே"

என்னு மாராகங்களும் திரளியக்கத்தினுக் குதாரணங்களாம். (நிகூ)

70. கீழ்மக்க ளியல்பிற் கிளக்குஞ் சொற்செறி
பாவுமுண் டவற்றை யாவருங் கொள்ப.

கீழ் மக்கள் இயல்பில் கிளக்கும் சொல் செறி பாவும் உண்டு - இழிசினர் இயல்பாக வழங்குஞ் சொற்களினாலாய பாடல்களும் நாடகத்தின்கண் உளவாம், அவற்றை யாவரும் கொள்ப-அப்பாடல்களைப் பிழையெனக் கொள்ளாது யாவரும் அங்கீகாரஞ் செய்வார்கள்.

குறிப்பு:—ஈதிங்ஙன மாதல் இழிசினர்வழக்குரை வரையறை யென்னுநூலிற் பரக்கக்காண்க. கலாவதி நாடகம் நான்காமங்கம் முதற்களத்தில், சோமதத்த னென்னுஞ் சேவகன்.

"ராசா மகளே யிவனுங் கட்ட,
ஆசை வைச்சான்! ஐயோ! பாவம்!
மோசஞ் செய்ய முன்னே சொன்னன்,
தோசமிண்டோ சும்மா விட்டேன்"

"நோண்டிப் போட்ட துங்குக் கண்ணி
காண்டி கத்துங் களுதைப் பாட்டு
வேண்டமட்டும் பாடிக் கிட்டு
நாண்டிக் குலுக்கி நடந்துக் கிட்டே;"

"ஏச்சுக் கிட்டுத் திரியு முண்டை
பேச்சுக் கேட்டுக் கெட்டுப் போனன்
சீச்சீச் சீச்சீ யிந்தப் பாவி
பேச்சை யின்னிக் கேட்க மாட்டேன்."

என்று பாடிய பாடல்கள் நாடகத்தின்கண் அமைவுடையனவாதல் காண்க. உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மையாம். (சூ0)

இசைப்பாட்டு

71. பண்ணும் திறமும் பயின்றனவாகிக்
குழலொடும் யாழொடும் விழுமிதிற் றுவன்றித்
தாள வொத்தொடுந் தண்ணுமை முழவொடுங்
கூடிநின் றிசைக்குங் கொள்கைத் தாகிப்
பொருள்பொதி சொற்கள் பொலிய விசைப்ப
தின்னிசைப் பாட்டென வியம்பப் படுமிதைக்
கீத வுருவெனக் கிளத்தலு முண்டே.

பண்ணும் - இராகமும், திறமும் - இராகவகைகளும், பயின்றன ஆகி - தன்மாட்டுப் பொருந்தினவாய், குழலொடும் - இசைக்குழலாகிய வங்கியத்தோடும், யாழொடும் - யாழ்களினோடும், விழுமிதில் துவன்றி - மேம்பாடுறப் பொருந்தி, தாளம் ஒத்தொடும் - தாளவிகற்பங்களினோடும், தண்ணுமை முழவொடும் - மத்தளம் முழவாதிய கொட்டுங் கருவிகளொடும், கூடி நின்று - சேர்ந்துநின்று, இசைக்கும் கொள்கைத்து ஆகி - பொருத்திப் பாடப்பெறுந் தன்மையதாய், பொருள் பொதி சொற்கள் பொலிய - நற்பொருள் ஆழ்ந்து செறிந்த சொற்கள் விளங்க, இசைப்பது - பாடப்படுவது, இனிமை இசைப்பாட்டு என இயம்பப்படும்-இனிய இசைப் பாட்டென்று கூறப்படும்; இதை - இவ்விசைப் பாட்டினை, கீத உரு என கிளத்தலும் உண்டு - கீதவுருவென்று கூறுதலும் வழக்காம்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. பண்:

"பாவோ டிணைத லிசையென்றார் பண்ணென்றார்
மேவார் பெருந்தான மெட்டானும்—பாவா
யெடுத்தன் முதலா விருநான்கும் பண்ணிப்
படுத்தமையாற் பண்ணென்று பார்."

பல இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்தலால் இசையென்று பெயராம். பெருந்தான மெட்டினும் கிரியைகளெட்டானும் பண்ணிப்படுத்தலாற் பண்ணென்று பெயராயிற்று.

பெருந்தான மெட்டாவன: நெஞ்சும் மிடறும் நாக்கும் மூக்கும் அண்ணுக்கும் உதடும்பல்லும் தலையு மெனவிவை; கிரியைகள் எட்டாவன: எடுத்தல் படுத்தல் நலிதல் கம்பிதம் குடிலம் ஒலி உருட்டு தாக்கு எனவிவை. திறம்: பண்வகை. பாலை குறிஞ்சி மருதம் செவ்வழியென்னு நால்வகைப் பண்ணின் றிறங்களைக்கூறுங்கால் ஒவ்வொன்றும் புறம் அருகு பெருகு என்னு முத்திறத்ததாம். பாலைக்குப்புறம் : தேவாளி; அருகு சீர்கோடிகம் ; பெருகு - நாகராகம். குறிஞ்சிக்குப் புறம் - செந்து ; அருகு - மண்டிலம்; பெருகு - அரி. மருதத்திற்குப் புறம் - ஆகரி ; அருகு - சாயவேளாகொல்லி; பெருகு - கின்னரம். செவ்வழிக்குப் புறம் - வேளாவளி; அருகு-சீராகம்; பெருகு - சந்தி. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. குழல்: வங்கியம்; மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி கருங்காலி என்னுமைந்தானுஞ் செய்யப்படுந் தொளைக் கருவி. இதனை,

> "ஓங்கிய மூங்கி லுயர்சந்து வெண்கலமே
> பாங்குறுசெங் காலி கருங்காலி—பூங்குழலாய்
> கண்ண னுவந்த கழைக்கிவைக ளாமென்றூர்
> பண்ணமைந்த நூல்வல்லோர் பார்த்து"

மூங்கில் உத்தமம், வெண்கலம் மத்திமம், ஏனைய அதமம். இவை கொள்ளுங்கால் உயர்ந்த ஒத்த நிலத்திற் பெருகவளர்ந்து நாலுகாற்று மயங்கின் நாதமில்லையா மாதலான் மயங்காநிலத்தின்கண் இளமையும் நெடும்பிராயமுமின்றி யொரு புருடாயு புக்க பெரியமரத்தைவெட்டி ஒருபுருடாகாரமாகச் செய்து அதனை நிழலிலேயாறஇட்டுவைத்துத் திருகுதல் பிளத்தல் போழ்ந்துபடுதல் செய்கை யறிந்து ஓர் யாண்டு சென்றபின் இலக்கணவகையான் வங்கியஞ்செய்யப்படும். இதனை

> "உயர்ந்த சமதலத் தோங்கிக்கா ணன்கின்
> மயங்காமை நின்ற மரத்தின்—மயங்காமே
> முற்றி யமர்மரந் தன்னை முதறடிந்து
> குற்றமிலோ ராண்டிற் கொளல்"

என்னும்வெண்பாவானறிக. பிண்டி தொலையள வாதியவற்றி னிலக் கணங்களைச் சிலப்பாதிகார அடியார்க்கு நல்லாருரை யிற் காண்க. யாழ் நால்வகைப்படும்; அவை பேரியாழ் மகர யாழ் சகோடயாழ் செங்கோட்டியாழ் என்பன. இவை நா ன்குமே சிறப்புடையன. இதனைப்,

"பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்
சீர்பொலியுஞ் செங்கோடு செப்பினர்–தார்பொலிந்து
மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே
பின்னு முளவே பிற"

என்றுராகலின். இந்நால்வகையாழிற்கும் நரம்புகொள்ளு மிடத்துப் பேரியாழிற்கு இருபத்தொன்றும், மகரயாழிற்குப் பதினேழும் சகோடயாழிற்குப் பதினாறும், செங்கோட்டி யாழிற்கு ஏழுங்கொள்ளப்படும்.

"ஒன்று மிருபது மோரேழ்மேற் பத்துடனே
நின்றபதினேழு நேடுங்காற்—குன்றுத
நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே
மேல்வகை நூலோர் விதி"

என்னும் வெண்பாவானிதனையறிக. இதனுறுப்பமைதிகளைச் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையிற்கண்டுதெளிக. தாள வொத்து: பாணி;

"கொட்டு மசையுந் தூக்கு மளவு
மொட்டப் புணர்ப்பது பாணி யாகும்"

கொட்டாவது அமுக்குதல்; அசையாவது தாக்கியெழுதல்; தூக்காவது தாக்கித்தூக்குதால்; அளவாவது தாக்கின வோசை நேரே மூன்று மாத்திரை பெறுமளவும் வருதல்; இவையிற்றினுக்கு முறையே அரைமாத்திரை ஒருமாத்திரை இரண்டுமாத்திரை மூன்றுமாத்திரை கொள்க.

"ககரங் கொட்டே யெகர மசையே
யுகரந் தூக்கே யளவே யாய்தம்"

என்னுஞ் சூத்திரத்தா னிவையிற்றினுக்கு வடிவமுமறிக. அரைமாத்திரையுடைய ஏகதாள முதலாகப் பதினெறு மாத் திரையுடைய பார்வதிலோசனமீருகச் சொன்ன நாற்பத் தொரு தாளமும் புறக்கூத்திற்குரிய. ஆறன்மட்ட மென்பன வும் எட்டன் மட்டமென்பனவும் தாளவொரியல் என்பன வும் தனிநிலையொரியல் என்பனவும் ஒன்றன்பாணி முதலாக எண்கூத்துப்பாணி யீருகக்கிடந்த பதினெருபாணி விகற்பங் களும் முதனடைவார முதலாயினவும் அகக்கூத்திற் குரிய வென்க. இன்னும்விரிப்பிற்பெருகுமாதலின் இவையிற்றின் விரியினைச் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையிற் காண்க. தண்ணுமைத்தொழிலின்கூறு இரண்டென்ப. முழவு எழு வகைப்படும். இவ்வகையினைச் சிலப்பதிகார அடியார்க்கு நல் லாருரையினும் சுத்தாகந்தப்பிரகாசத்தினுங் காண்க. பொருள்: அகம் புறம் என்னு மிருவகையுமாம். கீதவுரு மூன்றென் பர் சுத்தாகந்தப்பிரகாசமுடையார். அவை உக்கிரம் துருவை ஆபோகம் என்பனவாம். பண்ணுந்திறமும் பயின்றனவாகி விழுமிதிற்று வன்றிக் கூடி நின்றிசைக்கும், கொள்கைத்தா யிசைப்பது இசைப்பாட்டென்று முடிக்க. தேவாரப்பாசுரங் கள் யாவும் இசைப்பாட்டின்கண் அடங்கும். இதனனே தேவாரம் இசைத்தமிழ் இலக்கியநூ லென்பதை யீண்டு ணர்க. (சுக)

72. கீர்த்தனந் தானு மிசைப்பாட் டாகும்.

கீர்த்தனம் தானும் இசைப்பாட்டு ஆகும் - கீர்த்தனங் களும் இசைப்பாட்டின்கணடங்கும்.

குறிப்பு:—கீர்த்தனம் - வடசொல். இவ்வகை பிற்காலத் தார் உண்டாக்கியது. இதனைக 'கீர்த்தனை' யென்றும் வழங்குப. (சுஉ)

கீர்த்தனம்

73. பல்லவி யோடனு பல்லவி சரணந்
தழுவி யெடுத்த தானமு முறையும்
வழுவா திராக தாளமோ டிசைய
வியற்றுந் தூக்கே யிசைக்கீர்த் தனமாம்.

பல்லவியோடு - பல்லவியுடன், அநுபல்லவி சரணம் தழுவி - அநுபல்லவியுஞ் சரணமும் பொருந்தி, எடுத்த தானமும் முறையும் - அவ்வவ்விராகத்திற்கென்று எடுத்துக் கூறப்பட்ட தானமும் பாடுமுறையும், வழுவாது - கெடாது, இராகம் தாளமோடு இசைய - இராகதாளங்களுடன் நன்கு பொருந்த, இயற்றும் தூக்கே - இன்னிசைநூல் வல்லு நரான் இயற்றப்படும் பாட்டே, இசை கீர்த்தனமாம் - இசை வாய்ந்த கீர்த்தனமாம்.

குறிப்பு:—ஏகாரம் தேற்றம். கலாவதி நாடகம் நான்கா மங்கம் முதற்களத்தில், ஆதிதாளம்பெற்ற மலயமாருத கீர்த்தனை இதற்குதாரணமாம். (சூகூ)

74. இஃதனு பல்லவி யின்றியு மியலு
மென்று வகுத்தன ரிசைநூல் வல்லோர்

இஃது - இக்கீர்த்தனம், அநுபல்லவி இன்றியும் இயலும் என்று - அநுபல்லவி பெரும்பாலும் நடக்கும் என்று, இசை நூல் வல்லோர் வகுத்தனர் - இசைநூலில் வல்லவர்கள் வகுத்துரைத்தனர்.

குறிப்பு:—ரூபாவதி நாடகம் முதலங்கம் முதற்களத்தில் இந்துஸ்தான் காபிராகத்தில் ஆதிதாளமமைந்த கீர்த்தனம் இதற்கு உதாரணமாம். (சூச)

75. வரிப்பாட் டும்மிசைப் பாட்டின் பாற்படும்.

வரிப்பாட்டும் - வரிப்பாடல்களும், இசைப்பாட்டின் பால் பாடும் - இசைப்பாட்டின்கணடங்கும். (சூஙி)

வரிப்பாட்டு

76. அகப்பொருட் கருத்தி னமைதி மேவி
மிகப்பே ரிவகைச் சுவைபுலப் படுத்துப்
பண்ணுந் திறமுஞ் செயலும் பாணியு
மொருநெறி யன்றி மயங்கிச் சொலப்படு
மெட்ட னியல்பு மாற னியல்பும்

பெறீஇத்தன் முதலு மிறுதியுங் கெட்டுமற்
றியல்பு முடமு மாக முடிந்து
கருதிய சந்தியுஞ் சார்த்தும் பெற்றும்
பெருது மியங்கித் தெய்வஞ் சுட்டியு
மக்கட் பழிச்சியு மிக்க வினிமையிற்
பாடப் படுவது வரிப்பாட் டென்ப.

அகம் பொருள் கருத்தின் அமைதி மேவி - அகப் பொருட்டிறைக் கருத்துப்பொருந்தி, மிக பெருமை உவகை சுவை புலப்படுத்து - மிகவு மதிகப்பட்ட உவகைச் சுவையி னைத் தெரித்து, பண்ணும் திறமும் செயலும் பாணியும் - இராகமும் அதனுட்பிரிவும் செயன்முறையும் தாளமும், ஒரு நெறி அன்றி - ஒரு வழிப்பட்டு நில்லாமல், மயங்கி - கலந்து, சொல்லப்படும் - கூறப்படும், எட்டன் இயல்பும் ஆறன் இயல்பும் பெறீஇ -எட்டியல்பும் ஆறியல்பும் பெற்று, தன் முதலும் இறுதியும் கெட்டும் - பாட்டின் முதலடியு மிறுதியடியுஞ் சீர்குறைந்தும், மற்று - அன்னணங்குறை யாது, இயல்பும் ஆக-இயல்பாகவெனினும், முடமும் ஆக- சீர்குறைந்த குறைபாட்டுடனெனினும், முடிந்து - நிரம்பி, கருதிய சந்தியும் - அகப்பொருளிற் கருதப்பட்ட சந்தியும், சார்த்துமு - சார்த்துக்களும், பெற்றும் - பொருத்தப்பட் டும், பெருதும் - மேற்கூறியவற்றுட் சில பெருமலும், இயங்கி - நடந்து, தெய்வம் சுட்டியும் - தெய்வத்தினைக் குறித்தும், மக்கள் பழிச்சியும் - மனிதர்களைத் துதித்தும், மிக்க இனிமையில் - மிக இனிமையுடன், பாடப்படுவது—, வரிப்பாட்டு என்ப - வரிப்பாட்டு என்று கூறுவார்கள்.

குறிப்பு:—

"அழலணங்கு தாமரையா ரருளாழி யுடையகோ
னடிக்கீழ்ச் சேர்ந்து
நிழலணங்கி முருகுயிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி
நிழற்றும் போதும்,

நிழலணங்கி முருகுயிர்த்து நிரந்தலர்ந்து தோடேந்தி
நிழற்று மாயிற் [புஞ்
ரெழுணங்கு மன்புடையார் சூழொளியும் வீழ்களிப்
சொல்லா வன்றே''

(சூளாமணி - கல்யாண - 213)

என்ற செய்யுள் தெய்வஞ்சுட்டிய வரிப்பாட்டாம். கலாவதி நாடகம் ஐந்தாமங்கம் மூன்றாங்களத்தில், கலாவதி,

"ஒளியாகி யுலகாகி யுயிராகி நிற்குமீனை,
யளியாருங் கோமானென் ருகமங்க ளறைந்திடுமே!
யளியாருங் கோமானென் ருகமங்க ளறைந்துமெனைக்
களியாரச் செய்கிற்பான் கருதாம லிருப்பதெனை?''

என்று பாடியதுந் தெய்வஞ்சுட்டிய வரிப்பாட்டாம். எட்டன் இயல்பு, ஆறன் இயல்பு: இவைதாள விகற்பங்கள்; சிலப்பதிகார உரை நோக்குக. ஏனையவற்றிற் குதாரணம் வரிப்பாட்டு வகையுட் காண்க. (சுசு)

வரிப்பாட்டு வகை

77. இழுமெனு மோதையி னெழுகுவண் ணத்திற்
றன்னுட் கையா றெய்திடு கிளவியை
யாற்றின்மேல் வைத்திசை **யாற்று வரியு**
முகமுரி கொச்சக மென்றமுப் பாற்படூஉத்
தன்கோட் செல்வன் சார்ந்தவூர் பெயரொடுஞ்
சார்த்தி யிசைக்குஞ் **சார்த்து வரியு**
மடர்ப்புறு காமநோய் கடற்கரைக் கானலின்
மிக்குழி நல்லுறுப் பொக்க நோக்குபு
காதன் மலிந்திசை **கானல் வரியு**
முகமு முரியுந் தன்னெடு முடிதர
நினைத்த பொருளே நேர்ந்துதன் னலிதர
வுருவந் திரிந்திவ ணுற்று நின்று
நிலைத்தது போல மலைத்துள மழுங்கிப்

பொருட்பெயர் பெயர்த்து மிசைக்குநிலை வரியு
மஃறிணைப் பொருள்களை யாற்றது விளித்துத்
தன்னலி யுறுப்பிவை யென்னச் சாற்றி
யுருட்டு வண்ணத் தோங்குமரி வரியு
மைந்திணை கட்கு மடைவின் வகுத்த
வுரிப்பொரு ளியல்பிசை திணைநிலை வரியுங்
கருப்பொருண் மயங்கக் காட்டி யுரிப்பொரு
டெரிக்கு மயங்கு திணைநிலை வரியு
முள்ளச் செறுவி லுயரிய காதல்
வித்தினர் பொருட்டா மிகவு மவர்தஞ்
சாயலை நினைத்திட் டோரடி மேல்வைத்
தியற்று கின்ற வெழிற்சாயல் வரியும்
மூன்றடி முதலா வேழடி யிறுவாச்
சிந்து நெடிலுஞ் சேர்ந்துஞ் சேராதும்
வந்து முகம்பெறு முகமுடை வரியும்
புள்ளொடு மாவொடும் புலம்பு மக்கட
முள்ளநோய் பிரிந்தார்க் குரைப்பான் வேண்டி
மும்முறை யடுக்கிசை முகமில் வரியு
மொன்றே யானும் பலவே யானும்
வெள்ளை யானு மாசிரிய மானுங்
கொச்சகம் பெற்றும் பெறுதும்வே ருகிய
வுறுப்பெலா முடைய படைப்பு வரியு
மின்னன பிறவு மின்னிசை நாடக
நூலோர் மிகவு மேலாக் கொள்ப.

இழும் எனும் ஓசையின் - இழும் என்னும் இனிய ஓசையுடன், ஒழுகு வண்ணத்தில் - ஒழுகுவண்ணப் பாட்டில், தன்னுள் கையாறு எய்திடு கிளவியை - தன்னுட்கையாறெய்திடுகிளவி யென்னும் அகப்பொருட் டுறையினை, யாற்றின் மேல் வைத்து இசை - யாற்றின்மேல் வைத்துப் பாடப்படும், யாற்றுவரியும்—;முகம் மூரி கொச்சகம் என்ற மூன்று பால் படூஉ - முகம் மூரி கொச்சகம் என்ற மூன்று பகுதிப்

பட்டு, தன்கோள் - தனது உள்ளக் கிடக்கையை, செல்வன்-தன்னையாட் கொண்ட தலைவன், சார்ந்த ஊர் பெயரொடும்-பொருந்திய ஊர் பெயர்களுடன், சார்த்தி இசைக்கும் - பொருத்திப் பாடப்படும், சார்த்துவரியும்—; அடர்ப்பு உறு - வருத்துகின்ற, காமம் நோய் - காம நோயானது, கடல் கரை கானலில் - கடற்கரையாகிய நெய்தனிலத்துள்ள சோலையில், மிக்குழி - மிகுந்தபொழுது, நன்மை உறப்பு ஒக்க நோக்குபு - தலைவன் றலைவியர்தமுள் ஒருவர் மற்றொருவர்தம் நல்ல அவயவங்களைப் பொருந்த நோக்கி, காதல் மலிந்து இசை - ஆசைமிக்குப் பாடப்படும், கானல் வரியும்—; முகமும் முரியும் தன்னெஞ் முடிதர - முகமும் முரியுந் தன்னுடன் முடிவு பெறநின்று, நினைத்த பொருளே நேர்ந்து - தான் மனதினினைத்த பொருளே யெதிரிற்றோன்றி, தன் நலிதர - தன்னை வருத்த, உருவம் திரிந்து - உருமாறி, இவண் உற்று நின்று நிலைத்தது போல - இவ்விடத்திற் பொருந்தி நின்று நிலைபெற்றது போல, மலைத்து உளம் அழுங்கி-மயங்கி உள்ளம் வருந்தி, பொருள் பெயர் பெயர்த்தும் இசைக்கும் - அப்பொருளினது பெயரினை மீண்டுங் கூறும், நிலைவரியும்—; அஃறினைப் பொருள்களை—, ஆற்றுது விளித்து - துன்பஞ் சகியாது அழைத்து, தன் நலி உறப்பு இவை என்ன சாற்றி - தன்னை வருத்துகின்ற பொருள்கள் இன்னவை யென்று கூறி, உருட்டி வண்ணத்து ஓங்கு முரி வரியும் - உருட்டிவண்ணப் பாவினியைந்து விளங்கிய முரி வரியும்—; ஐந்து திணைகட்கும் - (முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலையென்னும்) ஐந்து திணைகட்கும், அடைவின் வகுத்த - முறைப்படி வகுத்துக் காட்டிய, உரிப்பொருள் இயல்பு இசை - உரிப்பொருள்களின் இயல்பினைத் தெரித்துப் பாடும், திணைநிலை வரியும்—; கருப்பொருள் மயங்க காட்டி - ஐந்திணைகளின் கருப்பொருள்களும் ஒன்றோடொன்று தலைமயங்குமாறு காட்டி, உரிப்பொருள் தெரிக்கும் - உரிப்பொருளைக் காட்டும், மயங்குதிணைநிலை வரியும்—; உள்ளம் செறுவில் - மனமாகிய நிலத்தில், உயரிய காதல் - மேலான அன்புடைக் காமமாகிய விதையினை, வித்தினர்

பொருட்டா - விதைத்த தலைவர்களின் பொருட்டாக, மிகவும் அவர்தம் சாயலை நினைத்திட்டு - மிகுதியும் அன்னாருடைய பேரழகினை நினைத்து, ஒரு அடி மேல் வைத்து - ஓரடியிடைமடக்கி வருமாறு, இயற்றுகின்ற-இயற்றப்படும், எழில் சாயல் வரியும் - அழகிய சாயல் வரியும்: மூன்று அடி முதலா-மூன்றடிச் சிறுமை பெற்றதுமுதல், ஏழு அடி இறுவா - ஏழடிப் பெருமையிறுதியாக, சிந்தும் நெடிலும்-நாற்சீரிலொன்று குறைந்த சிந்தும் நாற்சீரிலொன்று மிகுந்த நெடிலும், சேர்ந்தும் சேராதும்-பொருந்தியும் பொருந்தாமலும், வந்து முகம் பெறும் - பொருந்தி முகமென்னு முறுப்புப்பெறும், முக முடை வரியும்—; புள்ளொடும் மாவொடும் - பறவைகளொடும் மிருகங்களொடும், புலம்பும் - கையற்றுப் புலம்பும், மக்கள் - தலைவன்றலைவியர், தம் உள்ளம் நோய் பிரிந்தார்க்கு உரைப்பான் வேண்டி - தமது உள்ளத்திலுள்ள நோயினைத் தம்மினின்றும் பிரிந்தவர்க்குக் கூறும்படி, மூன்று முறை அடுக்கு இசை - ஓர் அடி மூன்றுமுறை யடுக்கி வருமாறு செய்யப்பட்ட, முகமில் வரியும்—; ஒன்றேயானும் - ஒன்றுகவேனும், பலவேயானும் - பலவாகவேனும், வெள்ளையானும்-வெண்பாவினனும், ஆசிரியமானும் - ஆசிரியத்தானும், கொச்சகம் பெற்றும் பெறுதும் வேறு ஆகிய - கொச்சகத்தினைப் பெற்றும் பெறுதும் வேறுபட்டு, உறுப்பு எலாம் உடைய - பல்வித உறுப்பும் பெற்றுவரும், படைப்பு வரியும்—; இன்ன பிறவும் - இவை போல்வன பிறவும், இனிமை இசை நாடகம் நூலோர் - இனிய இசைநூலுணர்ந்த நாடகநூலறிஞர்கள், மிகவும் மேலா கொள்ப - மிக மேம்பாடுடையனவாகக் கொள்வார்கள்.

குறிப்பு:—ஒழுகு வண்ணமாவது ஓசையான் ஒழுகி நடக்கும்,

"ஒழுகு வண்ண மோசையி னெழுகும்"

(தொல். செய். 226)

என்றாராகலின். தன்னுட்கையா றெய்திடுகிளவி: தலைவனுதல் தலைவியாதல் தன்னிடத்துத் துன்பத்தைப் பிறிதொன்றன்

மேலிட்டுச் சொல்லுஞ் சொல். இதைத் தலைவி கூற்றாகவே பெரும்பாலும் அகப்பொருளாலோர் வழங்குவர். இதைத் தலைவன் கூற்றாக வழங்கின் அஃது அகத்திணைக்குப் புறத்தாம்; எனினும் நாடகம் அகப்புறத்திணைத் தாதலின் இதனைத் தலைவன் கூற்றாக வழங்குதலும் நாடகத்திலேற்புடைத்தாமாறு காண்க.

"விண்டலை யாவர்க்கும் வேந்தர்வண் டில்லைமெல் லங்கழிசூழ்
கண்டலை யேகரி யாக்கன்னிப் புன்னைக் கலந்தகள்வர்
கண்டிலை யேவரக் கங்குலெல் லாமங்குல் வாய்விளக்கு
மண்டல மேபணி யாய்தமி யேற்கொரு வாசகமே"

என்ற திருக்கோவையார்ச் செய்யுள் தலைவி தன்னுட்கையாறெய்திடு கிளவியாம்.

"போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்—தீவா
யரவகற்று மென்போல வார்கலியே மாதை
யிரவகற்றி வந்தாய்கொ லின்று"

என்ற நளவெண்பாச் செய்யுள் தலைவன் தன்னுட்கையாறெய்திடு கிளவியாம். ஐந்திணைகட்கு முரிய வுரிப்பொருள் கருப்பொருளினைத் தொல்காப்பியம், நம்பியகப்பொருளாதிய நூல்களிற் பரக்கக் காண்க. "உள்ளச்செறிவி..... பொருட்டா": ஏகதேசவுருவகவணி.

ரூபாவதி நாடகம் இரண்டாமங்கம் மூன்றாங் களம்:

"இன்ப வனப்பு மிகவுடையா
னினிது செங்கோ லதுவோச்சத்
துன்ப மொழித லுண்டுகொலோ
சொல்லாய் வாழி வையையே
துன்ப மொழித லுண்டுகொலோ
சொல்லா தொழித றடியிடையா
யன்பி லாமை யென்றன்றே
வறிவேன் வாழி வையையே."

இஃது யாற்றுவரியாமாறு காண்க. சார்த்துவரி:

"பாட்டுடைத் தலைவன் பதியொடும் பேரொடுஞ்
சார்த்திப் பாடிற் சார்த்தெனப் படுமே."

இஃது, முகச்சார்த்து, முரிச்சார்த்து, கொச்சகச் சார்த்தென மூவகைப்படும். முகம்: வரிப்பாட்டுக்கு முகமாக நிற்றலின் முகமெனப்படும்;

"நிலமுத லாகிய வுலகியல் வரிக்கு
முகமாய் நிற்றலின் முகமெனப் படுமே,"

என்றாராகலின். முகமுடைவரி மூன்றடி முதலாக ஏழடி யீறாக வரும். முகமில்வரி முகமொழிந்து ஏனையுறுப்புக்களான் வருவது. முகச்சார்த்து மூன்றடி முதல் ஆறடி யீறாக வரும்; இடை நான்கடியானும் ஐந்தடியானும் வரும். முரிச்சார்த்து: முரியாவது,

"ஏடுத்த வியலு மிசையுந் தம்மின்
முரித்துப் பாடுதன் முரியெனப் படுமே."

முரிச்சார்த்தின் கண்,

"குற்றெழுத் தியலாற் குறுகிய நடையாற்
பெற்ற வடித்தொகை மூன்று மிரண்டுங்
குற்ற மில்லெனக் கூறினர் புலவர்."

கொச்சகச்சார்த்து கொச்சகம்போன்று முடியும். முகநிலை முரிகளாற் பயந்த வேறுபடு பொருண்மை யெல்லாம் தன்னகத்தடக்கி ஒருநெறிப்படுத்தலாற் கொச்சக மெனப்படும். இது வெள்ளையானும் அகவலானும் முடியும். இவற்றின் விரிவுகளைச் சிலப்பதிகார உரைகளிற் காண்க. சிலப்பதிகாரம், கானல்வரி:

"மோது முதுதிரையான் மொத்துண்டு போந்தசைந்த
முரல்வாய்ச் சங்க
மாதர் வரிமணன்மேல் வண்டட லுழுதழிப்ப
மாழ்கி யைய

கோதை பரிந்தசைய மெல்விரலாற் கொண்டோச்சுங்
குவளே மாலைப்
போது சிறங்கணிப்பப் போவார்கண் போகாப்
புகாரே யெம்மூர்'';

இது சார்த்துவரிக் குதாரணமா மாறுகாண்க.

"துறைமேய் வலம்புரி தோய்ந்து மணலுழுத
தோற்ற மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண்டாது
போர்க்குங் கான
னிறைமதி வாண்முகத்து நேர்கயற் கண்
செய்த
வுறைமலி யுய்யாநோ யூர்சுணங்கு மென்முலையே
தீர்க்கும் போலும்'';

இது கானல்வரிக்குதாரணமாம்.

"கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகந் திங்களோ காணீர்
திங்களோ காணீர் திமில்வாழ்நர் சீறூர்க்கே
யங்கணேர் வானத் தரவஞ்சி வாழ்வதுவே'';

இது நிலவரிக்குதாரணமாம். ரூபாவதி நாடகம் இரண்டா மங்கம் மூன்றுரங்களம்:

"வனப்புடையா னின்புடையான் வழுதியர்தங் கோமான்
மனத்தினிலே நோய்விளைத்தான் மாரனே காணீர்
மாரனே காணீர் வளமதுரை யிற்றென்றற்
றேரினையே நீங்கித் திரிகின்ற காவலனே''

இதுவும் நிலவரியாம். உருட்டு வண்ணமாவது, அராகந் தொடுக்கும்;

''உருட்டு வண்ண மராகந் தொடுக்கும்''
(தொல். செய். 232)

என்றுராகலின். ரூபாவதி நாடகம் இரண்டா மங்கம் மூன்றுரங்களம்:

"ஒழுகுறு நிணமுடைய வொருதனி வேலவனு·
முழுமதி யுறழ்முகனு முகமலர் வடனுறைய
பழுதறு தமிழ்மொழியா லழுதனை பரியுமெனை
யெழிலுறு மினியவலே யெவனிடர் செய்தனையே";

இது மூரிவரியாம். சிலப்பதிகாரம். கானல்வரி:

"கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்நின் னீய
ருடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் னீயு
மிடல்புக்கடங்காத வெம்முலையோ பார
மிடர்புக் குருமின் னிடையிழவல் கண்டாய்";

இது திணைநிலைவரிக் குதாரணமாம்.

"புண்கொண்ட வேலினுயிர்ப் போக்குவா னுன்றந்தை
கண்கொண்ட வேலினுயிர் போக்குவை மன்னீயும்
பண்கொண்ட சொல்லுடையாய் பார வளகத்தா
லெண்கொண்ட நொய்ய விடையிழவல் கண்டாய்"

என்ற ரூபாவதிச் செய்யுளும் திணைநிலைவரியாம்.

"நன்னித் திலத்தின் பூணணிந்து
நலஞ்சார் பவளக் கலையுடுத்துச்
செந்நெற் பழனக் கழனிதொறுந்
திரையு லாவு கடற்சேர்ப்ப
புன்னைப் பொதும்பர் மகரத்திண்
கொடியோ னெய்த புதுப்புண்க
ளென்னைக் காணு வகைமறைத்தா
லன்னை காணி னென்செய்கோ ?"

இது மயங்குதிணைநிலைவரிக் குதாரணமாம்.

"மறந்து தம்மை மதுமயக்கான்
மள்ளப் பெண்கள் மலியசுணம்
பறந்து மகிழப் பாணிசைக்கும்
பழனஞ் சூழ்ந்த நன்னாடா

திறந்த வாத கழைவளைத்துத்
தீய மார னுடற்றுமலர்
செறிந்த புண்ணின் புழைதுழைந்து
தென்ற லோடித் திளைக்குமரோ''

என்ற ஜோதிமாலைச் செய்யுளும் மயங்குதிணைநிலைவரிக் குதாரணமாமாறு காண்க. ரூபாவதி இரண்டாமங்கம் மூன்றாங்களம்:

''சோலை தன்னிற் றனியுற் றேங்கி
மாலை வருந்திச் சென்ற னெருவன்
மாலை வருந்திச் சென்ற னவனென்
மாலு மனம்விட் டகல்வா னல்லன்'';

இது சாயல்வரியாம். சிலப்பதிகாரம், கானல்வரி:

''திங்கண் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணுய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி'';

இது முகமுடைவரியாம்.

''அடையல் குருகே யடையலெங் கானல்
அடையல் குருகே யடையலெங் கானல்
உடைதிரைநீர்ச் சேர்ப்பற் குறுநோ யுரையாய்
அடையல் குருகே யடையலெங் கானல்'';

இது முகமில்வரியாம்.

''வாரல் சகோரமே வாரலை யென்மாடம்
வாரல் சகோரமே வாரலை யென்மாடம்
வார முடையாட்கென் மைய லுரைத்திலையால்
வாரல் சகோரமே வாரலை யென்மாடம்''

என்ற ரூபாவதிச் செய்யுளும் முகமில்வரியாம். ஏனையவற் றிற்குதாரணம் வந்துழி வந்துழிக் காண்க. (சூள)

78. சிந்துமா னந்தக் களிப்புங் கும்மியும்
வந்திசைப் பாட்டென வழங்கலு முண்டு.

சிந்தும்—, ஆனந்தக்களிப்பும்—, கும்மியும்—, வந்து - நாடகத்தின்கட்பொருந்தி, இசைப்பாட்டு என - இசைப் பாட்டென்று, வழங்கலும் உண்டு—.

குறிப்பு:—நாமகள் சிலம்பின் பதினேழாம் பரலாகிய ஜோதிமாலை யென்னு நாடிகையில் வள்ளியென்னுங் குறத்தி முதலிற் பாடியது கொண்டிச் சிந்தாம்;

"அம்மேயென் சொலைக்கேட்டி - செய்ய
வருந்தமிழ்க் கடலினை யறக்குடித்த
வகத்திய முனிவாழும் - பர
மலையெங்கண் மலையென மதித்திடுவாய்."

பின்னர்ப்பாடிய,

"அம்மேயுன் செங்கையினின் - மிக
வற்புத ரேகை செறிந்திடுமா
லம்மா னிடத்துதித்த - வள்ளி
யம்மையி னல்லருள் பெற்றிடுவாய்
சோதிமாலையுன் றன்பெயரா - மிவண்
துற்ற கடுஞ்சிறை யுற்றபினர்
மாதுகாளி யாகாயவணி - யிவர்
மன்னு மருள்கொடு வாழ்ந்திருப்பாய்
வேலையொத்த விழியுடையோய் - மத
வேளரு நாணெழில் வேந்தனுக்கே
மாலைசூட்டி மகிழ்ந்துநனி - குண
வானெனு மோர்மக னீப்பெறுவாய்"

என்னும் பாடல் சிந்திற் குதாரணம். ஜோதிமாலை யென்னு நாடிகையில் அபிராமன் என்னும் விதூஷகன் பாடிய,

"மங்கல மங்கலந் தோழீ - மட
மானினி யேமகிழ் வாய்ந்திடு மங்காய் - (மங்கல);
என்னுத னென்று வருவா - னிவ
ணின்ப மளித்தெனை யேற்றருள் வானே
வென்னு மயங்கி யிணைந்த - நம்
ஏந்திழை மன்னை யிணைந்தனள் வாழி, (மங்கல)"

என்னும் பாட்டு ஆனந்தக்களிப்பாம். ஜோதிமாலை யென்னு நாடிகையில், ஜோதிமாலை,

"வருவர் கொலருள் புரிவர் கொலெனக்
கொருதி டஞ்சொல்லு சகியே!
வண்டுளருந் தண்டுளவ மாலையது தினமு
மாணடிசேர்ந் தன்பிணெடு மகிழுமன முடையான்
கொண்டலென வழங்குகையான் குவலயத்தைத் தனது
குவவுபுயத் தணிபெறக்கொள் காமகனென் னுள்ளம்
வளைதருபு மிகநலிய
மதராஜனு மெனதாவியை
மந்தாநிலத் துந்தான் செலத்
தாழாதெனைத் தானணைய - (வருவர்கொல்)

என்று பாடியாடியது கும்மியாம்.

"என்றென் றலைவனைக் காண்பலென் றேங்கிய
வேந்திழை யேயெழி லின்பவல்லீ!
நன்றிவ ணுன்றனை நாடி யடைந்தனன்
நாதன் மதிவாண நாயகனே";
"ஆகையின் மாதே யகங்கரை யேலினி
யானந்த முன்னை யடுத்ததுகாண்
தேக மிளைத்துத் தியங்க லவன்வருந்
திக்கினை நோக்கித் திகையாதே";
"ஆடன் மறந்திட் டனந்துறந் தேதமிழ்ப்
பாடன் மறந்த பணிமொழியே!
கூடல் கருதிக் குறுகினன் காணினிக்
கூட லிழைத்துக் குறையாதே";

என்ற கும்மிகள் மதிவாணன் கதையினும் வருதல் காண்க. (சூஅ)

(எ) கவிகூற்று

79. கவிகூற் றென்பது கழறப் புக்குழி
நூனவில் புலவ னுவலு நூலுட்
டன்கூற் றுச்சில சாற்ற லென்ப.

கவிகூற்று என்பது கழற புக்குழி - கவிகூற் றென்பது இன்ன தென்றுரைக்கு மிடத்து, நூல் நவில் புலவன் - ஒரு நூலைக் கூறு மாசிரியன், நுவலும் நூலுள் – தான் கூறும் நூலின்கண், தன் கூற்று - தான் கூறுவனவாக, சில சாற்றல் என்ப - சிலமொழிகளைக் கூறுதல் என்று அறிஞர் சொல்லுவார்கள்.

குறிப்பு:—இக்கவிகூற்று நாடகத்துட் பயிலாதென்பது முன்னர்க்கூறிய பொதுவியல்பு முதற்சூத்திரத்தா னறிக. எனினும் நாடகக் காப்பியத்தின்கட் பயிலுறும். (சூசூ)

நடிப்போர் குறிப்பு

80. நாடகப் புலவன் விளக்கங் கருதிக்
கதையினு ளன்றிப் புறத்துரை செய்வன
நடிப்போர் குறிப்பென நயந்து கொள்ப.

நாடகம் புலவன் - நாடக வாசிரியன், விளக்கம் கருதி– நடிப்போர்க்குக் கதை விளங்குதற் பொருட்டு நினைத்து, கதை யினுள் அன்றி - நாடகக் கதையின்கட் பெய்த லின்றி, புறத்து உரை செய்வன - கதைக்கு வெளிப்புறத்துக் கூறு வன, நடிப்போர் குறிப்பு என—, நயந்து கொள்ப–விரும்பிக் கொள்ளுவார்கள்.

குறிப்பு:—நடிப்போர் குறிப்பு: Stage directions. நடிக்கின்ற நடர்களுக்கு உதவியாகக் கூறப்படுதலின் இப் பெயர்த்தாயிற்று. (எ0)

(அ) பாத்திரம்

81. கதையி னிகழ்ச்சியிற் கலந்தவர் யாவரும்
பாத்திர மென்று பகரப் படுவர்.

கதையின் நிகழ்ச்சியில்-நாடகக் கதையின் நிகழ்ச்சியில், கலந்தவர் யாவரும்-சம்பந்தப்பட்டவர்கள் யாவரும், பாத்திரம் என்று - நாடகபாத்திரங்கள் என்று, பகரப்படுவர் - கூறப்படுவார்கள்.

குறிப்பு:—நடர்களாவார் பாத்திரங்களே மேற்கொண்டு நடிப்போராதலின் நடர்க்கும் பாத்திரங்கட்கு முள்ள வேறு பாடறிக. (எக)

82. அவர்தாம்,
அசுரர் தேவ ரரக்க ரோடு
முனிவர் யோகியர் மக்களு மாவர்.

அவர்தாம்-மேற்கூறிய நாடகபாத்திரங்கள், அசுரர் தேவர் அரக்கரோடு—, முனிவர் யோகியர் மக்களும்—, ஆவர் - ஆவார்கள். (எஉ)

தலைமக்கள்

83. பாத்திரங் கட்கெலாம் பகர்முகஞ் செய்து
வலம்புரி சூழ்ந்த சலஞ்சல மென்னக்
காணப் படுபவர் தலைமக்க ளென்ப.

பாத்திரங்கட்கு எலாம்-நாடகபாத்திரங்களுக் கெல்லாம், பகர்-சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, முகம் செய்து-பிரதானராகத்தோன்றி, வலம்புரி சூழ்ந்த சலஞ்சலம் என்ன-வலம்புரிச்சங்க மாயிரஞ் சூழ்ந்த சலஞ்சலம்போல, காணப் படுபவர் - தோன்றுபவர், தலைமக்கள் என்ப - தலைமக்கள் என்று சொல்லப்படுவார்கள்.

குறிப்பு:—இடம்புரிச்சங்கம் ஆயிரஞ்சூழ்ந்தது வலம்புரிச்சங்கமாம்; வலம்புரிச்சங்கம் ஆயிரஞ்சூழ்ந்தது சலஞ்சல

மென்னுஞ் சங்கமாம். இவற்றிற்கேற்ப உபமேயத்தின்கண் ணும் விரித்துக்கொள்க. பல மக்கள் தலைமக்களைச் சூழ்ந் திருப்பாரென்பது உவமையாற் பெற்றும். (எஉ)

84. ஒளிமிக்க பாத்திரந் தலைமக்க டாமவ
ராடவர் பெண்டிரென் றுயிரு வகையர்.

ஒளி மிக்க பாத்திரம் - நாடகபாத்திரங்களுள் முக்கிய மான பாத்திரங்கள், தலைமக்கள் தாம் - தலைமக்களேயாவர், அவர்—, ஆடவர் பெண்டிர் என்று - ஆண்மக்கள் பெண் மக்கள் என்று, ஆய் இரண்டு வகையர் - ஆராயத் தக்க இரு வகையின ராவார்கள்.

குறிப்பு:—ஆயிரு: 'அவ்விரு' என்பது தூக்கிற் சுட்டு நீண்டு யகரந்தோன்றிய தெனினும் அமையும். (எச)

தலைவர்

85. ஒளியு மலர்ச்சியு முயக்கமி லினிமையு
நிலைத்த குணனு நீண்ட வுறுதியு
மான முடைமையும் வாய்மொழி நயமு
மேதக வுடைமையு மிளிர்நலப் பண்பிவை
யோங்கி விளங்குந ருற்ற தலைவர்.

ஒளியும்-யாவர்க்கு மேம்பட்டு விளங்கும் விளக்கமும், மலர்ச்சியும்—, உயக்கம் இல் - வருத்தமற்ற, இனிமையும் - இனிமைக்குணமும், நிலைத்த குணனும் - நிலைபெற்ற தன்மை யும், நீண்ட உறுதியும் - நெடிதான மனவுறுதியும், மானம் உடைமையும் - மானத்தையுடைய தன்மையும், வாய்மொழி நயமும் - வாய்த்தமொழியின் நயமும், மேதகவு உடைமை யும் - மேன்மையுடைமையும், மிளிர் - பிரகாசிக்கின்ற, நலம் பண்பு - நன்மை வாய்ந்த குணங்களும், ஓங்கி விளங்குநர் - மிகுந்து பிரகாசிப்பவர், உற்ற தலைவர் - பொருந்திய தலைவர் களாவர்.

குறிப்பு:—ஈண்டுக்கூறிய தலைவர்கள் நாடகத் தலைவர்க ளென்க. ஒளியாவது தாமுளராயகாலத்து மிக்குத் தோன்

றுதலுடைமையாம். மானமாவது எஞ்ஞான்றும் தன்னிலை யிற்றாழாமையும், தெய்வத்தாற் சூழ்வுவக்துழி உயிர்வாழா மையுமாம். வாய்மொழி: வாயினது மொழியுமாம். (எநி)

தலைவர்வகை

86. தீரோ தாத்தன் வீர சாந்தன்
தீரோத் ததனெடு தீர லலிதனென்
றீரிரு திறத்தின ரியம்பிய தலைவர்.

தீரோதாத்தன்—, தீரசாந்தன்—, தீரோத்ததனெடு—, தீரலலிதன்—, என்று—, இயம்பிய தலைவர் - மேற்சூத்திரத் திற் கூறிய இலக்கணங்களையுடைய தலைவர், இரண்டு இரண்டு திறத்தினர் - நான்கு பிரிவினராவர். (எசு)

தீரோதாத்தன்

87. உருவு மொழுக்கமு முயர்பே ரறிவும்
வீரமுந் தீரமு மேன்மையுங் கல்வியு
மன்புட னருளு மின்பமும் புகழுந்
திகழ்தரு கிற்போன் வீரோ தாத்த
னிராம பிரானதற் கிலக்கிய மாவன்.

உருவும் - வடிவழகும், ஒழுக்கமும்—, உயர் பெருமை அறிவும் - மேலான பெருமை வாய்ந்த அறிவும், வீரமும்—, தீரமும் - தைரியமும், மேன்மையும் - பெருமையும், கல்வி யும்—, அன்புடன் அருளும் - அன்புங் கருணையும், இன்ப மும் - இன்பம் நிறைந்த மனமும், புகழும் - கீர்த்தியும், திகழ்தருகிற்போன் - விளங்குவோன், தீரோதாத்தன் - தீரோ தாத்தனுவான்; இராமபிரான் அதற்கு இலக்கியம்ஆவன் - இராமபிரான் அவ்வகையினுக்கு உதாரணமாவான்.

குறிப்பு:—கலாவதி நாடகத்திற் சிதாநந்தன் தீரோதாத்த னும். அன்பாவது தொடர்புபற்றிச் சிலர் மாட்டே யுளதா வது;

"அன்பெனப் படுவது தன்கிளை செறுமை"

யென்றார் நெய்தற்கலியினும். அருளாவது தொடர்பு பற்றுதே வருத்தமுற்றார் மேற்செல்வது. அன்பு முதிர்ந்தே யருள்தோன்றுவது.

"அருளென்னு மன்பீன் குழவி"

என்றார் திருக்குறளினும். (எஎ)

தீரசாந்தன்

88. நிலனிகர் பொறையு நின்மல குணனு
நனியமை வுற்றவன் நீர சாந்தன்
முனிவருள் வசிட்டனே முன்னிய வுதாரணம்.

நிலன் நிகர் பொறையும் - பூமியை நிகர்த்த பொறுமையும், நின்மலம் குணனும்-குற்றமற்ற குணமும், நனி அமைவு உற்றவன் - நன்றாகப் பொருந்தப் பெற்றவன், தீரசாந்தன் - தீரசாந்தனும் ; முனிவருள் வசிட்டனே - மகர்ஷிகளுக்குள் ஒருவராய வசிட்டரே, முன் இயல் உதாரணம் - இவ்வகையினுக்கு முதன்மையாக அமைந்த காட்டாவார்.

குறிப்பு:—மானவிஜயம் என்னும் அங்கத்தின் தலைவனாகிய சேரமான் கணைக்காலிரும்பொறை யிதற்குதாரணமாவன்.

"அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை"

என்னுங் குறளே யீண்டறிக.

"பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்"
என்றார் கலித்தொகையினும். (எஅ)

தீரோத்தத்தன்

89. மற்றைய குணத்தினும் வாய்ந்தபே ரறிவினு
மிக்க வெகுளியும் விளைந்த மூர்க்கமு
மொக்க வுடையவ னுற்றதீ ரோத்தத
னெவருள் வீமனே யதன்காட் டாவன்.

மற்றைய குணத்தினும் - பின் விதந்து கூறப்படுவன வொழிந்த நற்குணங்களைக் காட்டினும், வாய்ந்த பெருமை அறிவினும் - பொருந்திய பெருமை வாய்ந்த அறிவைக் காட்டினும், மிக்க வெகுளியும் - மிகுந்த கோபமும், விளைந்த - (கோபத்தினால்) விளைந்த, மூர்க்கமும் - மூர்க்க குணமும், ஒக்க உடையவன் - ஒருங்குபெற்றவன், தீரோத்ததன் - தீரோத்ததனுவான்; ஐவருள் வீமனே - பஞ்சபாண்டவர்களுள் வீமசேனனே, அதன் காட்டு ஆவான் - அவ்வகைக் குதாரணமாவான்.

குறிப்பு:— 'ஐவர்' என்னுந்தொகை, பின்னர்வரும் வீமன் என்னுங் குறிப்பாற் பாண்டவரை யுணர்த்திற்று. இருடிகளுள் விசுவாமித்திரர் இதற்குதாரணமாவர். (எசு)

தீரலலிதன்

90. உரனும் வீரமு முயர்வுட னருளு
மியைந்தவ னுயினு மெவ்வகை யானுங்
காமந் துய்த்தலே கருத்தாக் கோடல்
செறிந்த நாயகன் றீர லலித
னறிந்திடி னிந்திர னதன்றிருட் டாந்தம்.

உரனும் - வலிமையும், வீரமும்—, உயர்வுடன் அருளும் - மேன்மையுடன் கருணையும், இயைந்தவன் ஆயினும் - பொருந்தியவனுயினும், எவ்வகையானும் - எவ்விதத்தினனும், காமம் துய்த்தலே - சிற்றின்ப மனுபவித்தலேயே, கருத்தா கோடல் செறிந்த நாயகன் - தனது எண்ணத்திற் குறிப்பாய்க் கொண்ட நாயகன், தீரலலிதன் - தீரலலிதனுவான்; அறிந்திடின் - ஆராயின், இந்திரன் அதன் திருட்டாந்தம் - இந்திரன் அவ்வகைக் குதாரணமாவான்.

குறிப்பு:—சுகுண சுகேசர் நாடகத்திற் சுகேசன் ஓராற்றல் தீரலலிதநாயகனுயமைவான். (அ0)

பிறதலைவர்

91. புகன்றநாற் றலைவரு ளொருவன் போந்துழி
யுபநா யகனும் பீட மர்த்த
நாயகன் ரூனு நண்ணலு முண்டு.

புகன்ற நான்கு தலைவருள் - மேற்கூறிய நால்வகைத் தலைவருள், ஒருவன் போந்துழி - ஒருவன் நாடகத் தலைவனாக வந்தவிடத்து, உபநாயகனும்–, பீடமர்த்த நாயகனும்–, நண்ணலும் உண்டு - நாடகத்தின்கட் பொருந்துதலும் வழக்காம். (அக)

உபநாயகன்

92. உபநா யகன்ரூ னுதவித் தலைவ
னிலக்குவ னுற்ற விலக்கிய மாகும்.

உபநாயகன்தான் - உபநாயகன் யாரோவெனின், உதவித்தலைவன் - உதவித்தலைவனும் ; இலக்குவன் உற்ற இலக்கியம் ஆகும் - (இராமாயணத்தில்) இலக்குமணன் பொருந்திய உதாரணமாவான்.

குறிப்பு:—கலாவதி நாடகத்திற் சத்தியப்பிரியன் உபநாயகற் குதாரணமாவான். (அஉ)

பீடமரீத்தநாயகன்

93. இராமற் குற்ற சுக்கிரீ வன்போற்
றலைவனிற் சிறிது தாழ்ந்ததன் மையனுய்த்
தலைவனைச் சார்ந்த வினைபல வற்றினும்
வருவோன் பீட மர்த்த னென்ப.

இராமற்கு - இராமனுக்கு, உற்ற சுக்கிரீவன் போல் - பொருந்திய துணைவனுகிய சுக்கிரீவனைப் போல, தலைவனில் சிறிது தாழ்ந்த தன்மையனுய் - தலைவனைக் காட்டினுஞ் சிறிது குறைந்த பண்பினையுடையவனுய், தலைவனை சார்ந்த வினை பலவற்றினும் வருவோன் - நாயகனைச் சேர்ந்த தொழில் பல

வற்றிலும் வருபவன், பீடமர்த்தன் என்ப - பீடமர்த்தநாயகன் என்று கூறுவார்கள்.

குறிப்பு:—உதாரணம் வந்துழிக் காண்க. (அசு)

தலைவற்குற்றார்

94. தலைவற் குற்றூர் தம்மைச் சாற்றுழி
யரசாள் வினையி லுதவு மமைச்சனுங்
கலைவலா சானுங் குலகுரு முனிவரும்
விந்தைப் பேச்சுறு விதூடகன் றானும்
பணிவியல் விடனும் பற்றிய சேடனுந்
தண்டத் தலைவனுந் தூதரும் பிறருமாஞ்
சொற்றிறம் வாய்ந்து தூய்மை மேவித்
தலைவன்மாட் டன்பு தலைநின் றோரே.

தலைவற்கு உற்றூர் தம்மை - தலைவனுக்கு அங்கங்களாய்ப் பொருந்தி நிற்பவர்கள் தம்மை, சாற்றுழி - கூறுமிடத்து, (அவர்கள்) அரசு ஆள் வினையில் உதவும் அமைச்சனும் - அரசாட்சித் தொழிலில் உற்றவிடத் துதவும் மந்திரியும், கலை வல் ஆசானும் - பல கலைகளையும் மறுவற வுணர்ந்த ஆசிரியனும், குலகுரு முனிவரும் - குலத்திற்குரிய குருவாகிய முனிவரும், விந்தை பேச்சு உறு விதூடகன் தானும் - விநோதப் பேச்சினையுடைய விதூடகனும், பணிவு இயல் விடனும் - அரசனுக்குப் பணிந்து நடக்குந் தன்மையினையுடைய விடனும், பற்றிய சேடனும்-பொருந்திய சேடனும், தண்டத்தலைவனும் - சேனாபதியும் தூதரும் - தூதர்களும், பிறரும் ஆம் - பிறருமாகிய, சொல் திறம் வாய்ந்து தூய்மை மேவி - சொல்லில் திறமை பொருந்திப் பரிசுத்தமான குணம் படைத்து, தலைவன் மாட்டு அன்பு தலைநின் றோர் - தலைவனிடத்து அன்புமிகுந்து நிற்பவர்களாவார்.

குறிப்பு:— ஏகாரம்: ஈற்றசை. இன்னோரியல்பினை ஆசிரியர் பின்வருஞ் சூத்திரங்களான் நிரலே விளக்குதலை யுணர்க. (அச)

95. அரண்மனைக் காவ லாளருங் குழைமுகப்
புரிசைகா வலரும் போலிமைத் துனருங்
குறளுஞ் சிந்துங் கூனு மாகிய
மாக்களுந் தலைவனை வளைந்து நிற்ப.

அரண்மனை காவல் ஆளரும் - அரண்மனையினைக் காப்போரும், குழைமுகப் புரிசை காவலரும் - அந்தப்புரக் காவலாளரும், போலி மைத்துனரும் - வெறும் போலிகளாய மைத்துனன் முதலியவர்களும், குறளும் சிந்தும் கூனும் ஆகிய மாக்களும் - குறுகிய வுடலினரும் உறுப்பறைகளும் உடல் வளைந்தவர்களுமாகிய மாந்தர்களும், தலைவனை வளைந்து நிற்ப - தலைவனைச் சூழ்ந்து நிற்பார்கள்.

சூழ்ப்பு:—குழைமுகப்புரிசை: அந்தப்புரம்; குண்டல மணிந்த முகத்தினையுடைய மகளிர் காக்கும் அந்தப்புரம்.

சிந்தாமணி நாமகளிலம்பகம், "குழைமுகப்புரிசையுள்" என்றமையுங் காண்க. போலிமைத்துனர். Left-handed-brothers-in-law. குறள்: Dwarfs. சிந்து: Lame persons. (அரு)

விதூடகன்

96. கதைநிகழ்ச் சியினிற் பயன்படு வோனுய்த்
தராதிபர் சபையைச் சார்கன வானுய்ச்
சுதந்திர யூகமு மிதந்தரு சூழ்ச்சியும்
படைத்துரை யாற்றலும் பாரியல் பறிதலு
முடையவ னுகி யுண்மைதேர் வதன்க
ணுவமையில் லோனுய் நவநவ மாகச்
சதுர வசனஞ் சாற்று வோனுய்க்
காணும் போதெலா நகைவினைப் போனுங்
குதூகல புருடன் விதூடக னென்ப.

கதை நிகழ்ச்சியினில் - நாடகக் கதையின் நிகழ்ச்சியின் கண், பயன்படுவோன் ஆய் • இன்றியமையாத பிரயோசனத்

தைத் தருபவனுய், தராதிபர் சபையை சார் கனவான் ஆய்-அரசர் அவையினைச் சார்ந்த மேலோனுய், சுதந்திர யூகமும்-தனக்கென அமைந்த உட்புகுந்தறியும் அறிவும், இதம் தரு சூழ்ச்சியும் - நன்மையினைத் தரும் ஆலோசனையும், படைத்து உரை ஆற்றலும் - தானுகவே புனைந்துரைக்குஞ் சக்தியும், பார் இயல்பு அறிதலும் - பூமியிலுள்ள மனிதரியல்பினை அறிந்து கோடலும், உடையவனுகி—, உண்மை தேர்வதன் கண் - உண்மையினைக் கண்டு பிடிப்பதில், உவமை இல்லோனுய் - சமானமற்றோனுய், நவம் நவம் ஆக - புதிது புதிதாக, சதுர வசனம் சாற்றவோன் ஆய் - சாதுரியமொழி உரைப்போனுய், காணும் போது எலாம் - காணும்பொழுதின் எல்லாம், நகை விளைப்போன் ஆம் - சிரிப்பினை யுண்டாக்குபவனுகிய, குதூகலம் புருடன் - விநோதமுடையவன், விதூடகன் என்ப - விதூடகன் என்றுரைப்பார்கள்.

குறிப்பு:—கலாவதி நாடகத்தின்கண் வரும் விகடவசனனென்பான் இவ்விலக்கண மமைந்த விதூடகனுமாறு காண்க. (அசு)

97. வேறு பாத்திரம் விதூடகன் றொழிலே
வியப்பச் செயினு நயப்பா டெய்தும்.

வேறு பாத்திரம் - (விதூடகனைத் தவிர) வேறு நாடக பாத்திரம், விதூடகன் தொழிலே - விதூடகனது தொழிலினை, வியப்ப செயினும் - யாவரும் வியக்குமாறு இயற்றினும், நயப்பாடு எய்தும் - நயத்தினை யடையும்.

குறிப்பு:—சுகுணசுகேசர் நாடகத்தில் வரும் புஷ்பகன் என்பவன் சிற்சில விடங்களில் தன் வாய்மொழியால் விதூடகனுகவும் விளங்குதலை யறிக. (அஎ)

98. ஈண்டுக் கூறிய மாண்டகு தன்மைவி
தூடக னின்றியு நாடக மியலும்.

ஈண்டு - இவ்விடத்து, கூறிய - உரைத்த, விதூடகன் இன்றியும் - விதூடகனில்லாமலும், நாடகம் இயலும் - நாடகம் வழங்கும்.

குறிப்பு:–தசரதன் தவறு என்னுமகங்கம் விதூடகனின்றி யியலுமாறுணர்க. (அஅ)

விடன்

99. நற்கலைத் தேர்ச்சியு நயவுரை வழக்கு
மினிய நடையுடை யெய்திய வியல்பு
நுண்ணிய வறிவு நொய்ய செல்வமு
மேதக வுடைமையு மேவுநன் விடனே.

நன்மை கலை தேர்ச்சியும் - நற்கலைகளி னுணர்ச்சியும், நயம் உரை வழக்கும் - நயம் பொருந்திய சொற்களைக் கூறுந் தன்மையும், இனிய நடை உடை எய்திய இயல்பும் - (காண் போர்க்கு) இனிமையைப் பயக்கும் நடையினையும் உடை யினையும் பெற்ற தன்மையும், நுண்ணிய அறிவும் - நுட்ப மாய அறிவும், நொய்ய செல்வமும் - குறைபாடுற்ற செல்வ மும், மேதகவு உடைமையும் - மேம்பாடும், மேவுநன் - அடைந்தவன், விடன் - விடனென்னப்படுவோன்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. தசரதன் தவறு என்னுமகங் கத்தில் வரும் ஏமநாதன் என்பான் விடனுதலறிக. நற்கலை: Fine Arts. அவையாவன:–சிற்பம்,கானம் கவிதை, ஆடல், மதுரபாஷணம் முதலியனவாம். (அசு)

சேடன்

100. பன்னிய சேடன் பணிவிடைக் காரன்.

பன்னிய சேடன் - மேற்பொதுச் சூத்திரத்துட் குறித்த சேடன், பணிவிடைக்காரன் - குற்றேவல் புரிவோனுவான்.

குறிப்பு:—சுகுணசுகேசர் நாடகத்தில்வரும் பிரதாபன் என்பான் சேடனுதலறிக. (கூ0)

தலைவியர்

101. நாலேழ் நலனு மேலோங் குறீஇத்
தலைவர்க் குரைத்த தகைமையிற் றக்கன
மலைவற மேவி வனப்பு மிளமையும்
பொங்கிக் கனிந்தொளிர் நங்கையர் தலைவியர்.

நான்கு ஏழ் நலனும்-இருபத்தெட்டு நலங்களும், மேல் ஓங்குஉரீஇ - மிகுதியும் வளர்ந்து பொருந்தி, தலைவர்க்கு உரைத்த தகைமையில் தக்கன - தலைவர்களுக்குக் கூறிய நற் குணங்களில் தகுதியாயவற்றை, மலைவு அற மேவி - மாறு பாடின்றிப்பொருந்தி, வனப்பும் இளமையும்-அழகும் வாலி பமும், பொங்கி கனிந்து ஒளிர் - மிகுந்து முதிர்ந்து விளங்கு கின்ற, நங்கையர் - சிறந்த மங்கையர்கள், தலைவியர் - தலைவி யர்களாவார்.

குறிப்பு:—இவையிற்றினுக் குதாரணங்களைப் பின்னர் வருஞ்சூத்திர வுரைகளிற் காண்க. உரீஇ: சொல்லிசை யளபெடை யீண்டுச் செய்யுளிசையையும் நிறைக்குமாறு காண்க. (கூக)

நாலேழ் நலன்

102. இயற்கை நிலையு மெடுத்த நிலையு
முற்றுணர் நிலையுமா முடலியக் கத்தி
னுண்டா குநவு மொளியு மழகுந்
தேசு மினிமையுந் துணிவு முதாரமுந்
தீரமு மாகிய வியல்பெழு பண்பு
மிலீலையு மலர்ச்சியு மெளிய வுடையு
மடமு மகிழ்வுந் தன்னறி யாதெழு
காதன் மொழிகளு மூடல்விப் பிரமமே
யிலலித மதநிறை யேக்கமும் வெட்கமும்
வேற்றுமை வியப்பு நகையு நடுக்கமுங்
கேளியு மென்னு நாலேழ் நலனுந்
தலைவிய ரிடத்தி னிலகணி போலும்.

இயற்கை நிலையும் - சுபாவ நிலையும், எடுத்த நிலையும் - (இயற்கை நிலையினின்றும் சிறிது அதிகப்பட்ட) எடுத்த நிலை யும், உற்று உணர் நிலையும் - உற்றுணர் நிலையும், ஆம்-ஆகிய, உடல் இயக்கத்தின் உண்டாகுநவும்-சரீர அசைவினால் உண் டாகின்றவைகளும், ஒளியும்-, அழகும்-, தேசும்—, இனி மையும்—, துணிவும்—, உதாரமும்—, தீரமும்—, ஆகிய-,

இயல்பு எழு பண்பும்–முயற்சியின்றி யியல்பாகவே யுண்டா குங் குணங்களும், இலீலையும்–, மலர்ச்சியும்–, எளிய உடை யும்—, மடமும்—, மகிழ்வும்—, தன் அறியாது எழு காதல் மொழிகளும் – தன்னே யறியாமலெழு மாசைமொழிகளும், ஊடல்–பிரணய கலகமும், விப்பிரமம்—, இலலிதம்—, மதம்—,நிறை—, ஏக்கம்–, வெட்கம்—, வேற்றுமை–வேறு பாடும், வியப்பு—, ஈகை—, நடுக்கம்—, கேளி—, என்னும் என்று சொல்லப்பெற்ற,நான்கு ஏழ்நலனும்–இருபத்தெட்டு நலனும், தலைவியர் இடத்தின் – நாடகத் தலைவியரிடத்தில், இலகு அணிபோலும்–விளங்கும் ஆபரணங்கள் போலாம்.

குறிப்பு:–(1) இயற்கைநிலை: இதனைப் 'பாவம்' என்பவட நூலார். இதற்குமுன் சிறிதுஞ் சலனமற்ற நெஞ்சில் முதன் முதல் உண்டாகும் விகாரமே பாவமாம். (Bhava is the first alteration in a mind previously unaltered.) இயற்கையாக நெஞ்சிற்றோன்றும் மன வெழுச்சியினுற் சரீரத்திற்புலப்படுந் தோற்றமாதலின்(the slight personal indication of natural emotion) இஃது இயற்கைநிலை யென்னும் பெயர்த்தாயிற்று. (2) எடுத்த நிலை: முற்கூறிய இயற்கைநிலை முற்றியதாயின் எடுத்த நிலையாம். இதனை வட நூலார் 'ஹாவம்' என்ப. இஃது இயற்கை நிலையைக் கடந்து புருவத்தை நெறித்தல் நோக்கக் குறிப்பு முதலியவற்றுற் புணர்ச்சி விருப்பத்தினைக் குறிக்குமாயின் எடுத்த நிலையாம். Bhava, where the alteration is Slightly modified so as to show, by alterations of the eye brows or eyes etc. the desire for mutual enjoyment, is called Hava. (3) உற்றுணர் நிலை: மேற்குறித்த எடுத்த நிலையையுங் கடந்து மனவெழுச்சி வெளிப்புலப்பட்டு மிகத் தோன்றுமாயின் அஃது உற்றுணர் நிலையாம். இதனை 'ஹேளம்' என்ப வடநூலார். When the change perceived is very great it is Hela. இம்மூன்றும் உடலியக்கத்தா னிகழ்வனவாம். 4) ஒளி: இதனைச் 'சோபை' (Brilliancy) என்ப வடநூலார். அழகினாலும், யௌவனத்தாலும், மனவெழுச்சியாலும் நல்லுணவாலும்

உண்டாகும் அவயவ நலனே யொளியாம்.(5) அழகு: இதனை வடநூலார் 'காந்தி' (Loveliness) என்ப. மேற்கூறிய சோபைமிக்கு விரும்பிய தலைவியின் காமக்குறிப்பால் அவடன் அழகினை நனிவிளக்குமாயின் அழகென்னப்படும். (6) தேசு: இதனை வடநூலார் 'தீப்தி'(Radiancy) என்பார்கள். மேற்கூறிய அழகு இன்னும் நனிதிகழ்ந்து விளங்குமாயின் தேசு என்னப்படும். இது 'தேஜஸ்' என்னும் வடமொழிச்சிதைவு. (7) இனிமை: இதனை 'மாதுரியம்' (Sweetness) என்ப வடநூலார். நோய் கொண்டிருப்பினும் உடையின்றியிருப்பினும், நாட்டைவிட்டு நீக்கப்பட்டிருப்பினும் இன்னும் எத்தகைய நிலையினும் இன்பந்தரும் நலனே, இனிமையாம். (8) துணிவு: இதனைப் 'பிரகல்பதி' (Boldness) என்பர் வடநூலார். பயமற்றிருக்கும் நிலையே யிதுவாம். (9) உதாரம்: இதனை வடநூலார் 'ஔதார்யம்' (Meekness)என்று கூறுவர். எல்லாக் காலத்தும் பொறுமை பூண்டிருப்பதே யிங்ஙனும்.(10)தீரம்:இதனை வடநூலார் 'தைரியம்' (Constancy) என்ப. தற்புகழ்ச்சியின்றி யிலகும் மனவுறுதிப்பாட்டினையே யீண்டுத் தீரம் என்ப. நான்காவது முதல் இதுகாறுங் கூறிய ஏழும் முயற்சியின்றித் தாமாகவே யெழுவனவாம். எனவே பின்னர்க்கூறும் ஈரொன்பான் வகைக்கும் முயற்சி காரணமென்றறிக. (11) இலீலை: இதனை வடநூலார் 'லீலை' (Fun) என்ப. அன்பின்மேலீட்டாற் றலைவன் பேசிய காதன் மொழிகளையும் செய்த செய்கைகளையும் தான் அவன்பாற் பயில்வதுடன் அவன்போல் உடையுடுத்தலும் அணியணிதலும் இலீலையாம். (12) மலர்ச்சி: இதனை வடநூலார் 'விலாசம்' (Flutter of delight) என்று கூறுப. தான் விரும்பிய தலைவனைக்கண்டக்கால் தலைவியினது நிற்குநிலையினும் இருக்குநிலையினும் உண்டாகுஞ் செவ்விய தோற்றமும் மந்தகாசமும் மதர்த்தபார்வையும் மலர்ச்சியாம்.(13)எளியவுடை: இதனை வடநூலார் 'விச்சித்தி' (Simplicity in dress) என்ப. ஆடம்பரமின்றிச் சாதாரண உடையுடுத்தல் எளியவுடையாம். இதனை லியற்கையழகின் தன்மை வெளிப்பட்டுநயப்படுமென்றறிக.(14)மடம்: இதனை 'விவ்வோகம்' (Affectation

of indifference) என்ப வடநூலார். இஃது அகங்கார மேலீட்டால் தான் விரும்பிய தலைவன்மாட்டும் அன்பு இல்லாததுபோல் நடித்து வரம்புகடந்து ஒழுகலாம். (15)மகிழ்வு: இதனை வடநூலார் 'ஹிகிஞ்சிதம்' (Hysterical delight) என்ப. தனது இன்னுளங் கொள்ளை கொண்ட தலைவன் எதிர்ப்பட்ட ஞான்று தலைவியின்பால் உண்டாகும் புன்னகையுடன் சேர்ந்த கண்ணீர்வாராப் பொய்யழுகையும், வெளிநகையும், அச்சமும், கோபமும், சோகமும் இவைபோற் களிப்பான் மிகும் வேறு பலவும் மகிழ்வின்பாலவாம். (16) தன்னறியாதெழுகாதன்மொழிகள்: இவையிற்றினை வடநூலார் 'மோட்டாயிதம்' (The mute involuntary expression of affection) என்ப. தனது நாயகனைப்பற்றி யாரேனும் பேசுங்கால் ஆசைமிகுதியாற் றன்னையு மறந்து தலையினை அல்லது காதினைச் சொறிதல் ஆதியவற்றோ டியல்பானே யெழுமாசைமொழிகளாம் சண்டிக்கூறியநலன். (17) ஊடல்: இதனை வடநூலார் 'குட்டமிதம்' (The affected repulse of a lover's endearments) என்ப. இதனையே பிரணயகலகமென்றுங் கூறுப. நாயகன்மேற் பொய்யாகக் கோபங்கொள்ளலும் அவன் இதஞ் செய்துழி நாணத்தால் அவையிற்றினையேலாது மறுத்தலும் வேண்டுகோட்கிணங்காது தலையசைத்தலானுங் கைவிதிர்த்தலானும் பொய்க்கோபம் பாராட்டுதலும் ஊடலாம். இஃதே காமவின்பத்தை மிகுப்பதாம்.

"ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்"

என்றார் திருவள்ளுவனாரும். (18) விப்பிரமம். (Fluster) தான் விரும்பிய நாயகன்றன் வரவு எதிர்பாராம னேர்ந்த பொழுது உண்டாகும் வியப்பினாலும் காணவேண்டிய அவாவினாலும் உடைகளை மாறியுடுத்தலும் அணிகளை அலங்கோலமாக அணிதலும் விப்பிரமத்தின் பாலவாம். (19) இலலிதம்: (Voluptuous gracefulness) தன்வயப்படுத்த வல்லதோர் காமக்குறிப்புடைய இனிமை பயக்கும்மென்மையுடன்சாயல் வாய்ந்த அவயவநலனே இலலிதமாம். (20) மதம்: (Arr-

ogance) செல்வம் இளமை யாதிய காரணமாக உண்டா கும் அகங்காரமே மதமென்னப்படும். இதற்கு அடி இரா ஜச குணமென்க. (21) நிறை: இதனை வடநூலார் 'விகிருதம்' (The suppression of the sentiments of the heart through bashfulness) என்ப. தலைவி தன் மனத்தடக் கிய அரிய இரகசியங்களை நாணத்தால் வெளியிடாது உள் ளடக்கல் நிறையென்னப்படும்.

"நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை"

என்னும் கலித்தொகையினும். (22) ஏக்கம்: இதனை வட நூலார் 'தபனம்' (Pining) என்ப. இது தன்னின்னுயிர் நாயகன் தணந்தஞான்று காதன்மிக்குக் கையற்றுப் பிரிவாற் றாது ஏங்கலாம். (23) வெட்கம்: இதனை வடநூலார் 'மௌக்கியம்'(Simplicity verging on silliness)என்ப. தான் நன்றாக இனிதறிந்த விடயமொன்றினை அறியாள் போன்று தன் தலைவனை 'இஃதியாது ? எத்தன்மைத்து?' எனப்பலவினாதல் இந்நலனும். (24) வேற்றுமை: இதனை வடநூலார் 'விக்ஷேபம்' (Distractedness) என்ப. தனது காதலன் அருகிருக்கும் போழ்து ஏதேனும் ஒருகாரணம் பற்றித் தலைவி தன்னுடையணியாதியவை புனைந்தும் புனையா மல் நிற்றலும் நாற்புறமும் மருண்டு நோக்கலும் அகத்துட் பொதிந்த இரகசியங்களைச் சிறிது வெளிப்படுத்தலும் வேற் றுமையாம். (25) வியப்பு: இதனை வடநூலார் 'குதூகலம்' (Impetuous curiosity) என்ப. காட்சிக்கினிமை பயக்கும் பொருளை தனையுங் காணப்பேரவாக் கொள்ளல் வியப்பு என னும் நலனும். (26) நகை: இதனை 'ஹசிதம்' (Geggling) என்ப வடநூலார். இளமை காரணமாக ஒரு பயனுமின்றி யுண்டாவது இந்நகை நலன் என்க. (27) நடுக்கம் இதனைச் 'சகிதம்' (Trepidation)என்ப வடநூலார். இஃது ஏதேனு மொரு காரணத்தானுந் தனது காதலன் முன்னிலையிற் பயத் தால் உண்டாகும் கம்பம் நடுக்கம் என்னும் நலனும். (28) கேளி: (Sportiveness) தனது இன்னுயிர்த் தலைவனுடன் றலைவி உலாவரும்போழ்தே விளையாடுதலாம் இந்நலன். (கூ)

தலைவியர் வகை

103. தலைவியர் தாமுஞ் சுகுணை சாந்தை
யரக்கிகா மினியென் றந்நால் வகையர்.

தலைவியர்தாமும் - மேலைச்சூத்திரத்துட் கூறிய தலைவியர்களும், சுகுணை சாந்தை அரக்கி காமினி என்று—, அந்நான்கு வகையர்-(தலைவர்களைப்போல்) அவ்விதமான நான்கு பகுப்பினை யுடையவர்களாவர்.

குறிப்பு:—'தாமும்' என்றதன்கணுள்ள இறந்ததுதழீஇய எச்சவும்மையாலும் 'அ' என்னுஞ் சுட்டினாலும், 'தலைவரைப்போல்' என்பது பெற்றும். (கூஉ)

சுகுணை

104. சற்குணஞ் சான்ற தகைமைய ளாகி
யெல்லா விதத்தினும் தீரோ தாத்தனை
யியையும் தலைவியே யியம்பிய சுகுணை.

சற்குணம் சானற - நற்குணம் மிகுதியும் பொருந்திய, தகைமையள் ஆகி - தன்மையினை யுடையவளாய், எல்லாவிதத்தினும் - எவ்விதத்தினும், தீரோதாத்தனை இயையும் தலைவியே இயம்பிய சுகுணை - தீரோதாத்தனை யொத்திருக்கும் தலைவியே மேலைச்சூத்திரத்து முதற்கட்கூறிய சுகுணை நாயகியாம்.

குறிப்பு:—கலாவதி நாடகத்தின் தலைவியாகிய கலாவதி சுகுணை நாயகிக் கிலக்கியமாவாள். (கூச)

சாந்தை

105. பொறுமை சான்ற பூவையே சாந்தையெத்
திறத்தினும் தீர சாந்தனை நிகர்ப்பாள்.

பொறுமை சான்ற - பொறுமை மிகுதியுங் கொண்ட, பூவையே - மங்கையே, சாந்தை - சாந்தையாவாள், (அவள்) எ திறத்தினும் - எல்லாவிதத்தினும், தீரசாந்தனை—, நிகர்ப்பாள் - ஒப்பாள்.

குறிப்பு:—வசிட்டர் மனைவியாகிய அருந்ததி யிவ்வகைக் குதாரணமாவாள். (கூடு)

அரக்கி

106. ஓவா மூர்க்க மொழியாப் போரொடு
கோவமார் தையலே குறித்திடு மரக்கி
யியம்புதீ ரோத்ததற் கிசைந்தா ளவளே.

ஓவா - குறைவுபடாத, மூர்க்கம் - மூர்க்க குணமும், ஒழியா போரொடு - நீங்காத யுத்தத்தோடு, கோவம் ஆர் தையலே - கோபம் மிகுந்த பெண்ணே, குறித்திடும் அரக்கி - மேற்கூறிய அரக்கியாம்; இயம்பு தீரோத்ததற்கு - முற் சூத் திரத்திற் கூறிய தீரோத்ததனை, இசைந்தாள் அவளே - ஒத்தவள் அவளே.

குறிப்பு:—ஏகாரம் : தேற்றம். சூர்ப்பணகை யென்னும் பிரகசனத்தின் றலைவியாகிய சூர்ப்பணகை யிதனுக் குதாரண மாவாள். (கூசு)

காமினி

107. எத்தகை யோரையு நித்தமும் தோய்தரூஉம்
பரதம் பயிலுறு பாவைமார் போலச்
சுரத லீலையே விரதமாக் கொண்டவள்
காமினி யென்னு நாமம் பெறுவாள்.

எ தகையோரையும் - எத்திறத்தாரையும், நித்தமும் - நாடோறும், தோய்தரூஉம் - புணர்தரும், பரதம் பயிலுறும் - பரதசாஸ்திரப் பயிற்சி செய்யும், பாவைமார் போல - பொது மகளிரைப் போன்று, சுரதம் லீலையே - காம விளையாட்டி னையே, விரதமா கொண்டவள் - நோன்பாகக் கொண்டிருப் பவள், காமினி என்னும் நாமம் பெறுவாள் - காமினியென் னும் பெயருடையளாவாள்.

குறிப்பு:—அந்தோனிகிளியோபாத்திரையர் என்னும் ஆங் கில நாடகத்துத் தலைவியாய கிளியோபாத்திரை யிதற்குதா

ரணமாவாள். தமிழின்கண் வந்துழி வந்துழிக் காண்க. தாரா சசாங்கமென்ற வடநூலினுட் போதருந் தாரையைக் காமினியாக் கூறுதலும் ஓராற்றான் ஒக்கும்.

மேற்கூறிய சுகுணை சாந்தை அரக்கி காமினி யென்ற நால்வகைத் தலைவியரும் முன்னர்ப் போந்த தீரோதாத்தன் தீரசாந்தன் தீரோத்ததன் தீரலலிதன் என்ற நால்வகைத் தலைவரையும் முறையே யொப்பர் என்ற துணையோனே, முற் கூறிய நால்வகைத் தலைவியரும் பிற்கூறிய நால்வகைத் தலை வர்க்கும் முறையே மனைவியரென்றவாறு, பிற்கூறிய நால்வ கைத் தலைவரும் முற்கூறிய நால்வகைத் தலைவியர்க்கும் முறையே கணவரென்றவாறு எண்ணற்க. தலைவர்களுள் நால் வகை கொண்டாற்போலத் தலைவியருள்ளும் நால்வகை கொண்டதேயன்றி வேறன்று. ஆதலின் நால்வகைத் தலைவ ருந் தலைவியரும் தத்தமக்கியைந்த வாழ்க்கைத் துணைகளைப் பெற்றாலும் பெறலாம், பெறாமற் போயினும் போகலாம்; தத்தமக்கியைந்த வாழ்க்கைத் துணைகளைப் பெறுதலுமுண்டு. இதனை மாணாக்கராயினர் உற்றுநோக்கக் கடவர். (கூஎ)

வேறு தலைவியர்வகை

108. மடந்தை தெரிவை யாட்டி யென்னுந்
தமக்குரி யோரு மனைமக ளாகிய
பிறர்க்குரி யோருஞ் சேரிப் பரத்தையர்
சிற்பரத் தையருமாம் பொதுமக ளிருமெனப்
புகலுந் தலைவியர் மூன்றிரண் டிரண்டா
வெடுத்துக் கூறு மிடனுமா ருண்டே.

மடந்தை தெரிவை ஆட்டி என்னும் தமக்கு உரியோ ரும் - தமக்குரியராய மடந்தை தெரிவை ஆட்டி யென் னும் மூவகையினரும், மனை மகள் ஆகிய பிறர்க்கு உரி யோரும் - பிறர்க்குரியவராய பிறன் மனைவி புதல்வியாகிய இருவரும், சேரி பரத்தையர் இல்பரத்தையரும் ஆம் பொ து மகளிரும்-பொதுமகளிராகிய சேரிப்பரத்தையர் இற்பரத் தையர் என்னும் இருவரும், என புகலும் தலைவியர்- என்று

சொல்லப்படும் தலைவியர், மூன்று இரண்டு இரண்டா-எழு வகையாக, எடுத்து கூறும் இடனும் - எடுத்துக் கூறப்படும் இடங்களும், உண்டு - சிறுபான்மையுள்ளனவாம்.

குறிப்பு:—ஆர் - அசைநிலை. ஏகாரம் - ஈற்றசை. இச் சூத்திரத்தானே தமக்குரியோர் மூவரெனவும் பிறர்க்குரியோ ரிருவரெனவும் பொதுமகளிர் இருவரெனவும் நிரலே கொள்க. தமக்குரியோரைச் சுவகீயை யென்றும், பிறர்க் குரி யோரைப் பரகீயை யென்றும், பொதுமகளிரைச் சாமா னியை யென்றும் வடநூலார் கூறுப. சுவகீயை யென்பாள் மானம் மெய்ம்மையாதிய நற்குணங்கட்கிருப்பிடனுய் இல் லின்கண் ஊக்கமுடையளாங் கற்பினளாவள். மடந்தை, தெரிவை, ஆட்டி யென்பாரை முத்தை, மத்தியை, பிரகல்பை என்று கூறுப வடநூலார். இவர்களினிலக்கணத்தைப் பின் வருவனவற்று லினிதுணர்க.

"ஆவல்கூர் சுவீயைபர கீயைசா மானியையென்
றறிவிக் கின்ற
மூவரா நாயகிக ளவர்தமில்வேட் டவனிடத்தே
முழுது மன்பா
யேவல்கோ ணுதவற்காற் றிடல்சீலம் பொறுமைவஞ்ச
மின்மை யின்ன
மேவவாழ் கற்புடைய மெல்லியலே சுவீயைமற்றும்
விரிப்பா மன்றே."

"மணம்புரிந்து கொண்டவனே மறந்துபர புருடர்களே
மனத்தே வேண்டி
யிணங்குகின்ற குடிலநடை யேந்திழையே பரகீயை
யிவர்போ லாது
பணங்கவர்ந்து சுகந்தகுந்த படிபலர்க்குங் காட்டிமுறை
யற்று நீதி
தணந்திருந்த பொதுமடந்தை தானேசா மானியையாஞ்
சாற்றுங் காலே."

"எடுத்துரைத்த சுவீயைமுத்தை மத்தியைநற் பிரகற்பை
யெனமுப் பேதம்
அடுத்துநிற்கு முத்தைபுதி தாகவரும்
யவ்வனத்தாள்."

"கலவிதனிற் பிரியமும்வெட் கமுஞ்சமமா கப்படைத்த
கன்னி தானே நலனுயர் மத்தியை."

"தவனுருகக் கலவிசெயுஞ் சமர்த்திபிர
கற்பையெனத் தக்கபெண்."

இனி யிவையிற்றின் விரிவினை மாம்பழக்கவிச்சிங்கநாவல ரியற்றிய சிங்காரரசமஞ்சரி யென்னு நூலுட்காண்க. (கூஅ)

கதாந்தம்

109. எடுத்துரை கதையி னீறே கதாந்தம்.

எடுத்து உரை கதையின் - எடுத்துச் சொல்லப்பட்ட கதையினது, ஈறே - முடிவே, கதாந்தம்-கதாந்த மென்னும் பெயரினதாம்.

குறிப்பு:—இற்றைநாட் புலவருட் பல்லோர் இக்கதாந் தத்தின் சிறப்பைக் கொண்டே நாடகத்திற்குஞ் சிறப்புக் கூறுவர். இதனை 'Denouement' என்பர் ஆங்கில நூலோர். (கூகூ)

110. அதுதான்,
நற்பொரு ளிறுதி தீப்பொரு ளிறுதியென்
றிருவகைத் தாமென் றியம்பினர் மேலோர்.

அதுதான்-மேற்கூறிய கதாந்தம், நன்மை பொருள் இறுதி தீமை பொருள் இறுதி என்று - நற்பொருளிறுதி தீப்பொருளிறுதி என்ற, இரண்டு வகைத்து ஆம் என்று - இருவகையாமென்று, இயம்பினர் மேலோர்-மேற்புலப் புல வர் கூறினர்.

குறிப்பு:—இவையிற்றினைப் பின்வரும் இரண்டு சூத்திரங்களான் உணர்க. (கoo)

நற்பொருளிறுதி

111. நாடகத் தலைவ னன்மணம் புணர்தலு
மாடக மணிமுடி யணிதலு மின்னன
பிறவு மாமிவை திறமுற முடிவது
நற்பொரு ளிறுதியா நயந்தனர் புலவர்.

நாடகம் தலைவன் நன்மை மணம் புணர்தலும்-நாடகத்தலைவன் தனக்கேற்ற தலைவியை மணஞ்செய்து கோடலும், ஆடகம் மணி முடி அணிதலும் - பொன்னுலும் மணியானும் செய்யப்பட்ட கிரீடத்தைத் தரித்தலும், இன்னன பிறவும்ஆம் இவை திறம்உற முடிவது - இவைபோல்வன பிறவுமாகிய அணித்தையுங் கொண்டு நன்கு முடிவதை, நன்மை பொருள் இறுதியா நயந்தனர் புலவர் - நற்பொருளிறுதி நாடகமெனக் கூறினர் கற்றறிந்தார்.

குறிப்பு:—கலாவதி ரூபாவதி முதலிய நாடகங்கள் இவ்விறுதியனவாம். காணுமற்போன மக்களைக் காண்டலும், அளவற்ற செல்வம்பேறு முதலாயினவும் இதன்பாற்படுமாதலான் 'இன்னன பிறவுமாம்' என்றார். நற்பொருளிறுதி நாடகம்: Comedy. (கஅக)

தீப்பொருளிறுதி

112. தீப்பொரு ளிறுதி செப்புங் காலை
நாடகத் தலைவ னவிலருந் தீமை
யடைத லன்றி யாருயி ரிழத்தலு
மறைவதென் றுரைத்தன ராங்கில மொழியோர்.

தீமை பொருள் இறுதி செப்பும் காலை - தீப்பொருளிறுதி நாடகம் இன்னதென்பதைக் கூறுமிடத்து, நாடகம் தலைவன் - நாடகத்தின்றலைவன், நவில் அருமை தீமை - சொல்லுதற்கும் அச்சத்தைத் தரும்படியாய தீமையினை, அடைதல் அன்றி - அடைவதல்லாமல், அருமை உயிர் இழத்தலும் - அருமையான உயிரை யிழத்தலும், அறை

வது-சொல்லுவதாம், என்று உரைத்தனர் ஆங்கிலம் மொழியோர் - என்று ஆங்கிலமொழியில் வல்லுநர் கூறினர்கள்.

குறிப்பு:—சொல்லுதற்கும் அச்சத்தைத்தர வல்லதாதலின் 'நவிலரும்' என்றார். தசரதன் தவறு இவ்வகைக்குதாரணமாம். தீப்பொருளிறுதி நாடகம்: Tragedy. இம்முடிபுடைய நாடகங்கள் வடநூலார்க்கு ஒப்பமுடிந்தன வல்லவென்பதும், ஆங்கில நூலார் கொள்கையின்படி தமிழ் மொழியினுந் தழுவிக் கொள்ளப்பட்டன வென்பதும் இச்சூத்திரத்தான் அறியலாம். (கo உ)

பதாகைநிலை

113. நாடகத் தெங்கணு நண்ணி வருவதாய்
நினைத்தெதிர் பார்த்த பொருளி னிடத்தி
லனைத்தகைப் பிறிதெதிர் பாரா வண்ணமாய்ப்
போதரச் செய்வது பதாகை நிலையே.

நாடகத்து எங்கணும் நண்ணி வருவதாய் - நாடகத்தின்கண் எவ்விடத்தும் பொருந்தி வருவதாய், நினைத்து - ஆலோசித்து, எதிர்பார்த்த பொருளின் இடத்தில் தாம் எதிர்பார்த்த ஒரு விடயத்தில், அனைத்தகை பிறிது - அத்தன்மையான வேறொன்று, எதிர்பாரா வண்ணமாய் - எதிர்பாராத விதமாய், போதர செய்வது - வருமாறு இயற்றுவது, பதாகை நிலையே - பதாகைநிலை யென்று சொல்லப்படும்.

குறிப்பு:—ஈண்டுக்கூறிய பதாகைநிலை நாடக பாத்திரங்களின்பா னிகழு மென்றறிக. பின்னர் வரும் பதாகைநிலை வகையின்கண் உதாரணங் காட்டுதும். நாடகக் கதைப் பொருத்தங்கள் நிகழுமிடத்தும் ஆசி கூறுமிடத்தும் இப் பதாகை நிலையினைக் காணலாம். நாடகவாசிரியன் வன்மைக் கேற்றபடி இஃது பல்வகைப்படு மென்பதறிக. (கo ஊ)

பதாகைநிலைவகை

114. எதிர்பா ராவண மெண்ணிய பிறிதெணங்
திருந்திய வழியிற் பொருந்து முறையும்

பல்பொருட் சொற்றொடர் மல்கப் பெற்றுப்
பல்லடை மொழிகள் புல்லிய பண்பும்
பிறிதுபொருள் பற்றிய பிறர்தஞ் சொற்களைத்
தன்கருத் தின்பொருட் கேற்பக் கோடலுஞ்
செவ்விக் கேற்ற செம்பொரு ளொன்று
முடிவு சுட்டு முன்ன மொன்றுமாந்
கருதிய கவர்படு கிளவி யுடைமையும்
பதாகை நிலையின் பகுப்பென மொழிப.

எதிர்பாரா வணம் - எதிர்பாராத விதமாய், எண்ணிய பிறிது எண்ணம்-தாம் நினைத்த வேறோர் எண்ணம், திருந்திய வழியில் பொருந்தும் முறையும் - செவ்விய வகையாக வுண்டாகும் முறைமையும், பல்பொருள் சொல்தொடர் மல்க பெற்று - பல பொருளினையுடைய சொற்றொடர்கள் நிரம்பப் பெற்று, பல் அடைமொழிகள் புல்லிய பண்பும் - பல அடை மொழிகள் பொருந்திய தன்மையும், பிறிது பொருள் பற்றிய பிறர் தம் சொற்களை - வேறு பொருள் கொண்ட மற்றவருடைய மொழிகளை, தன் கருத்தின் பொருட்கு ஏற்ப கோடலும் - தனது எண்ணத்திற் பொதிந்து கிடக்கும் விடயத்தினுக்குப் பொருந்தப் பொருள்செய்து கொள்ளுதலும், செவ்விக்கு ஏற்ற செம்மை பொருள் ஒன்றும் - சமயத்தினுக்குப் பொருந்திய செவ்விய பொருள் ஒன்றும், முடிவு சுட்டும் முன்னம் ஒன்றுமா - இறுதியில் நடக்கும் விடயத்தினைச் சுட்டிக் குறிப்பிக்கும்பொருள் ஒன்றுமாக, கருதிய கவர்படு கிளவி உடைமையும் - நாடகப்புலவனுற் கருதிச் செய்யப்பட்ட பலபொருள்தந்து ஐயத்தினை விலக்குஞ் சொற்களுடைமையும், பதாகை நிலையின் பகுப்பு என மொழிப - பதாகை நிலையின் பாகுபாடு என்று கூறுவார்கள்.

குறிப்பு.—கலாவதி நாடகம் இரண்டாமங்கம் மூன்றாங்களத்திற் சிதாநந்தனுஞ் சத்தியப் பிரியனுஞ் சோணாட்டிற்குப் போத லொண்ணுதென்று வருமிடத்து எதிர்பாராவணமாய்ச் சோணாட்டின் தலைநகராகிய காஞ்சியினை யடைதலும் ஆண்டு,

"விருந்தும் வென்றியும்
முருந்து முறுவலார் திருந்து போகமும்"

அவர்கட்குத் திருந்திய வழியில் அவை பொருந்திய முறையினைக்காண்க. இஃதே பதாகைநிலையின் முதல்வகைக் குதாரணமாம். கலாவதி நாடகம் இரண்டாமங்கம் இரண்டாங்களத்தில் விகடவசனன் சுகசரீரனைப்பற்றிக் கூறிய, "யார்க்குமிப் பெரியர் பார்க்கப் பூனையைப்,போலிருந் தாலும்" என்னுந் தொடக்கத்த செய்யுள் பதாகைநிலையி னிரண்டாம் வகைக் குதாரணமாம். இச்செய்யுளை 44-ஆஞ் சூத்திர வுரையுட் கண்டுகொள்க. ஜோதிமாலை யென்னும் நாடிகையுட் பங்கஜம் என்பாள் ஜோதிமாலை கையிலுள்ள மாலையினைச் சுட்டி "இந்த மாலை மகாராஜாவுக்குத்தான் தகுதி! நன்ரு யமைந்திருக்கின்றது!மகாராஜாபார்த்தால்விடவேமாட்டார், உடனே கைக்கொள்வாரென்பதற்குச் சிறிதுஞ் சந்தேகம் இல்லை," என்று கூறியபோது ஜயபாலமன்னன் தன்கருத்திற் கேற்பப் பொருள்செய்து கொண்டது பதாகைநிலையின் மூன்ரும்வகைக் குதாரணமாம். கலாவதி நாடகம் மூன்ரு மங்கம் இரண்டாங்களத்தில் மநோமோகினி யென்பாள் கலாவதியின்மீது கோபங் கொண்டு,

"கோவை வசப்படுத்திக் கொண்டமநோ மோகினியின்
ஞவை யறுத்தபினர் நன்குனக்குச் சொல்லுகிற்பாள்
பாவையவள் வல்லமையைப் பார்"

என்று கூறிய பாவில் 'மநோமோகினியாகிய பாவை சொல்லுகிற்பாள்' என்றும், 'மநோமோகினியே! கலாவதியாகிய பாவை சொல்லுகிற்பாள்' என்றும் இருபொருள்பட்டு நிற்ற லறிக. இன்னும் இதுபோலக் கலாவதி நாடகம் ஐந்தாமங்கம் ஐந்தாங்களத்திற் காளி பூசாரியின்மீது வெளிப்பட்டுக் குறி சொல்லும்பொழுது

"உனது நாயகன் உந்தை வென்று
வாகைசூடி வருவான்"

என்று கூறியதன்கண்ணும் இருபொருளுண்மை காண்க. இவ்விதம் வருவன பதாகைநிலையின் நான்காம் வகையாம்.

பாத்திரச்சிறப்பியல்பு

115. பாத்திரச் சிறப்பியல் பனைத்துந் தம்முண்
முன்பின் மலையாப் பண்புந் தனிப்படு
பெற்றியு மேற்கோள் வெற்றியு நன்ன
ருடையன வாகு நடையின வென்ப.

பாத்திரம் சிறப்பு இயல்பு அனைத்தும் - பாத்திரங்களின் சிறப்பியல்பு யாவையும், தம்முள் - தமக்குள், முன்பின் மலையா பண்பும் - முன்னெடுபின் மாறுபடாத தன்மையும், தனிப்படு பெற்றியும் - தத்தமக் குரியதெனக் கொண்டதன்மையும், மேற்கோள் வெற்றியும் - நாடகப்புலவன் எவ்விதமான பண்பைப் பாத்திர வாயிலாக்கொண்டனனே அவ்விதமானபண்பின் இனியமுடிவும், நன்னர் உடையன ஆகும் நடையின என்ப - தெளிவு பொருந்தக்கொண்டதன்மையினவாகும் என்று கூறுவார்கள்.

குறிப்பு:—எனவே இம்மூன்றும் பற்றியே நாடகபாத்திரங்களின் சிறப்பியல்புகள் விளங்குவனவாம். முன்பின் மலையாப்பண்பாவது ஒரு பாத்திரத்தை முதற்கண் ஒருவிதமாகப் புனைந்து, பின்னர் மறுவியானுதல் வேறெவ்வாற்றானுதல் வேறுபடப் புனைந்துவிடாது, ஒருதிறப்படவே புனைந்துவிடு மியல்பாம், இதனை Consistency என்பர் ஆங்கிலநூலோர். தனிப்படுபெற்றியாவது ஒவ்வொரு பாத்திரமுந்தனக்கென வொரு சிறப்புத்தன்மை யுடையவ ஞகுமாறு புனையு மியல்பாம். இதனை Individuality என்பர் மேற்புலவாணர். மேற்கோள்வெற்றியாவது நாடக பாத்திரமாகப்புகுந்து நடிப்பான் தான் மேற்கொண்டன கைகூடுமாறு நடிப்பதாகப் புனையு மியல்பாம். (கo நி)

நாடகமியற்றமிழாறு

116. உற்று நோக்குழிச் சொற்ற நாடகம்
"ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினு
முரையும் பாடையும் விரவியும் வருஉம்"

உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுளென்
றன்றே ரறிஞவரு மன்பினிற் கொள்ப.

உற்று நோக்குழி - உற்றுப்பார்க்கு மிடத்து, சொற்ற நாடகம் - மேலோச் சூத்திரங்களான் இனிது விளக்கிய நாடகம், ஒரு திறம் பாட்டினும் - ஒருவகைத்தாய பாட்டினும், பல திறம் பாட்டினும்-பலவகைத்தாய பாட்டினும், உரையும் பாடையும் - வசனமும் வேறுபாடைகளின் வாக்கியங்களும், விரவியும் - பொருந்தியும், வரூஉம் - வரும், உரை இடை இட்ட பாட்டு உடை செய்யுள்-வசனம் இடையிடை வரப்பெற்ற செய்யுணூல், என்று ஆன்றோர் அறிஞவரும் அன்பினில் கொள்ப - என்று மேலோர் யாவரும் அன்புடன் கொள்ளுவார்கள்.

குறிப்பு:—

'ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினும்
உரையும் பாடையும் விரவியும் வருமே'

என்பது தண்டியலங்காரச் சூத்திரம். ஈண்டு மேற்கோளாக வெடுத்தாளப்பட்டது. வசனம் நாடகங்களுட் பயிலுதல் யாவர்க்கு மெளிது புலப்படும். வேறுபாடை தமிழ் நாடகத்துட் பயிலுமோவெனிற் பயிலும்; ரூபாவதி நாடகம் மூன்றாமங்கம் ஏழாங்களத்துள் ஞானதீப முனிவர் கடவுளைத் துதித்துப் பாடிய,

"அதுலஸித் யாகந்த ஜயநாத பவரகித
சுகுணஸிர் மலசுசீ லப்ரபாவ
அத்புத சலக்ஷண மநோஹர சுகந்தமய
ப்ரம்மாதி தேவவந் திதசித்பத
மதுரம்ருது வசநகவி தாப்ரசங் கப்ரிய
மகாமேரு கைலாஸ சைலாஸந
மங்களா காரபரம சுத்தஸாத் குண்யசிவ
மஹிபால குருஸ்ரேஷ்ட வரபாஹிமாம்,"

என்னு மடிகள் வடமொழியி லியன்றமை காண்க. இனி

'உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள்'

என்பது வசனத்தினிடையிடை யமைந்த பாக்களாலயா நூல் என்றும் பொருள்படுமாறறிக. (கoசு)

பொதுவியல்பு புறனடை

117. சிறந்தன சில்பொருள் செப்பில மெனினவை
யறைந்தன வற்று ளடக்கிக் கொளலே

சிறந்தன சில் பொருள் - சிறப்புடையனவாய சிலபொருள்களே, செப்பிலம் எனின் - ஈண்டுக்கூறுமல் விடுத்திருப்போமாயின், அவை - அவையிற்றினே, அறைந்தனவற்றுள் அடக்கி கொளலே - மேற்கூறிய சூத்திரங்களில் அடக்கியமைத்துக்கொள்க.

குறிப்பு:—சிறந்த பொருள்கள் எவையேனுங் கூறுமல் விடப்பட்டிருப்பின் அவையிற்றினே முற்கூறிய சூத்திரங்களில் உத்தியானும் உபலக்கணத்தானு மமைத்துக் கொள்ளுமாறு விதிக்கப்பட்டது இச்சூத்திரம். (கoஎ)

பொதுவியல்பு முற்றிற்று

*

உ. சிறப்பியல்பு

118. சிறப்பியல் பமைதி யுறப்புகல் கிற்புழிப்
பாடுறு நாலெழு நாடகச் சாதியின்
பெயர்முறை கிளந்து மயர்வற வவைதாந்
தமக்கெனக் கொண்ட சிறப்பிலக் கணங்களின்
பண்புக ளெல்லா மெண்பெற வாய்ந்து
கூறுத லென்ப குறிப்புணர்ந் தோரே.

சிறப்பு இயல்பு அமைதி உறபுகல்கிற்புழி - சிறப்பியல்பினது இலக்கணத்தினை இற்றென்று தெளிவு பொருந்தக் கூறுமிடத்து, பாடு உறு - மேன்மைபொருந்திய, நான்கு எழு நாடகம் சாதியின் - இருபத்தெட்டு நாடகவகைகளின், பெயர் முறை கிளந்து - பெயர்களை முறைப்படி கூறி, அவை தாம் - அந்நாடகவகைகள்தாம், தமக்கு என மயர்வு அற கொண்ட - தத்தமக்கென்று ஒன்றொடொன்று தலைமயங்காமற்கொண்ட, சிறப்பு இலக்கணங்களின் -, பண்புகள் எல்லாம் - தன்மைகள் யாவற்றினையும், எண் பெற - மனத்தின்கட் பொருந்துமாறு, ஆய்ந்து - ஆராய்ந்து, கூறுதல் என்ப - கூறுவது என்றுரைப்பார்கள், குறிப்பு உணர்ந்தோர் - நாடகவியலின் குறிப்பினையுணர்ந்த பெரியோர்கள்.

குறிப்பு:—நாடகச் சாதிவகை பத்தும் உபசாதிவகையொன்பானிரட்டியுஞ் சேர்ந்துநாலெழ்வகையாதலைப் பின்னர் வருஞ் சூத்திரங்களானுணர்க. சிறப்பிலக்கணம்: பலவற்றிற்கும் பொதுவன்றித் தமக்கென்று சிறப்பாயுள்ளன. (க)

(க) சாதி

119. சாதி யென்பது நாடக வகையிவை
யுருவக மென்ன வுரைக்கவும் படுமே.

சாதி என்பது - சாதியென்று நாடக விலக்கணங்களுட் கூறப்படுவது, நாடகம் வகை - நாடகவகைகளாம்; இவை - இந் நாடகவகைகள், உருவகம் என்ன உரைக்கவும் படும் - உருவகம் என்றும் கூறப்படும்.

குறிப்பு:—உருவகம்: ரூபகம் என்னும் வடசொற் றிரிபு. (உ)

120. "உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றன மாட்டு முருவகம்" போல
நடிக்குந ரிடத்துப் பாத்திர வியல்பை
யேற்றி மொழிதலி னிப்பெயர்த் தாகும்.

உவமையும் - உபமானத்திற்கும், பொருளும் - உபமேயத்திற்கும், வேற்றுமை ஒழிவித்து - (உள்ள) வேறுபாட்டினை நீக்கி, ஒன்று அன்ன மாட்டும் - ஒன்றின் தன்மையினை யாரோபிக்கும், உருவகம் போல - உருவகவணியினைப் போல், நடிக்குநர் இடத்து பாத்திரம் இயல்பை - நடிப்போர் பால் நாடகபாத்திரங்களின் தன்மையினை, ஏற்றி மொழிதலின் - ஆரோபித்துக்கூறுந் தன்மையதாதலின், இ பெயர்த்து ஆகும் - (சாதி) உருவகமென்னும் இப்பெயர் பெற்றது.

குறிப்பு:—

'உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றன மாட்டினஃ திருவகமாகும்'

என்பது தண்டியலங்கார சூத்திரம். ஈண்டுமேற்கோளாகஎடுத்தாளப்பட்டது. நடிக்குநர்: கு சாரியை, ந் பெயரிடைநிலை. அரங்கினிடை நடிக்குநரைப் பாத்திரங்களாகக்கருது மியல்பினல் நடிக்குநர் வேறு பாத்திரங்கள் வேறு என்றெண்ணுது அபேதமாகக் கருதுவதனல் இப்பெயர்த் தாயிற்றென்றனர். (ரு)

121. அன்றியும்,
நாடக நடிப்பி னூடகத் தெய்து
மாடுந ரெல்லா மன்பிற் பிறருருக்
கோடலி னுருவகப் பெயர்கொடுத் தனரே.

அன்றியும் - மேற்கூறிய காரணமல்லாமலும், நாடகம்-நாடகத்தினை, நடிப்பின் ஊடு அகத்து - நடித்துக் காட்டு

மிடத்து இடையே, எய்தும் - (அரங்கின்கட்) போதரும், ஆடுநர் எல்லாம் - நடித்துக் காட்டுபவர் யாவரும், அன்பின் - அன்புடன், பிறர் உரு கோடலின் - மற்றையோர் உருவங்களைத் தாம் மேற்கொள்வதனால், உருவகம் பெயர் கொடுத்தனர் - உருவகமென்னும் பெயரினை ஆன்றோர் கொடுத்தனர்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. உருவினைக் கோடலின் உருவகம் என்றார். 'அன்றியும்' என்றதனால் மேலைச்சூத்திரத்துட்கூறப்பட்ட காரணமேயன்றி யீண்டுக்குறித்ததும் ஆன்றோர் வழக்கென்பது பெறப்பட்டது. (சு)

சாதிவகை

122. அவைதாம்,
நாடகம் பிரக ரணமே பாணம்
வியாயோ கம்மே சமவ கார
மிடிம மீகா மிருக மங்கம்
வீதி பிரக சனமெனப் பத்தாம்.

அவை தாம் - மேற்கூறிய நாடகச்சாதி வகைகள், நாடகம்–, பிரகரணம்–, பாணம்–, வியாயோகம்–, சமவகாரம்–, இடிமம்–, ஈகாமிருகம்–, அங்கம்–, வீதி–, பிரகசனம்–, என பத்தாம் - என்று பத்து வகைப்படும்.

குறிப்பு:—ஈண்டுக் குறித்த சாதி வகைகளினியல்புகளைப் பின்னர்வருஞ் சூத்திரங்களான் ஆசிரியர் நிரலே விளக்குதலை யுணர்க. (நி)

நாடகம்

123. ஐந்திற் குறையா வங்க முடைத்தா
யொன்பான் சுவையு மொருங்குடைத் தாயினு
மின்ப மாதல் பெருமித மாதல்
செவ்விதிற் றெரிக்குஞ் சீரிற் ருகி
வியப்புச் சுவையி னிறுவது நாடகம்.

ஐந்தில் குறையா - ஐந்து என்னும் தொகையுட் குறைவு படாது, அங்கம் உடைத்தாய் - அங்கம் என்னும் பிரிவுகளை

யுடையதாய், ஒன்பான் சுவையும் - ஒன்பது சுவைகளும், ஒருங்கு உடைத்து ஆயினும் - முழுவதுந் தன்னகத்துடைய தாயினும்; இன்பம் ஆதல் - உவகைச் சுவையினையாவது, பெருமிதம் ஆதல் - வீரச்சுவையினையாவது, செவ்விதில் தெரிக்கும் - செவ்வையாகத் தெரிவிக்கும், சீரிற்று ஆகி-சிறப் பினையுடையதாகி, வியப்பு சுவையின் - வியப்புச்சுவையோடு, இறுவது - முற்றுப்பெறுவது, நாடகம் - நாடகமென்று சொல்லப்படும்.

குறிப்பு:—உவகைச் சுவையும் பெருமிதச் சுவையும் பெரிது விளங்க இடையிடையே யேனைய சுவைகளும் விர வப்பெற்று இறுதியில் வியப்புச் சுவையினைக் கொண்டுமுடிந்த ஏழங்க நாடகமாகிய கலாவதி நாடகம் இதற்குதாரணமா தல் காண்க. உவகை பெருமிதம் வியப்பாதிய சுவைகளைப் பொதுவியலிற் கண்டுதெளிக. அங்கம்:

"நாடகப் பேருறுப் பங்க மதுதான்
பலகள முடைத்தாய்ப் பண்புறு முடிவுகொண்
டிலகுறு வதுவா மிசைக்குங் காலே"

என்னும் இந்நூல் உறுப்பியல்பு 14-ஆம் சூத்திரத்தானுணர்க. இச்சூத்திரத்தானே நாடகத்துள் ஒன்பான் சுவையும் பயின்று வருமென்பது புலப்பட்டது. (சு)

124. ஒன்பான் சுவையு முடைய துயர்வே
சிலகுறைந் தியலினுஞ் சீர்குன் றுவே.

ஒன்பான் சுவையும் உடையது உயர்வு - ஒன்பது சுவை களையுமுடையது உயர்ந்த சாதி நாடகமாம்; சில குறைந்து இயலினும் - சில சுவைகள் வரப்பெறாது வழங்கப்படினும், சீர் குன்று - (நாடகங்கள்) தமது சிறப்பிற் குறையாவாம்.

குறிப்பு:—இது மேலைச் சூத்திரத்திற்குப் புறனடை யாம். 'சில குறைந்தியலினும்' என்ற விடத்து உவகை பெரு மிதம் வியப்பு நீங்கிய ஏனைய சுவைகளுட் சிலவென்று கொள்க. ஏனெனில் அம்மூன்று சுவையும் நாடகத்தின்

கட் பயின்றே வரல்வேண்டுமென்ப தொருதலையாதலின். ஏகாரம்: ஈற்றசை. (எ)

பிரகரணம்

125. அந்தணன் வணிக னமைச்ச னிவர்தமு
ளொருவன் றலைவனுக் கற்பின ளாதல்
பரத்தை யாத லிருவரு மாத
றலைவிய ராக முதற்சாதி யளவி
னவைதீ ருவகைச் சுவையினி துரைக்கும்
பெற்றித் தாகும் பிரக ரணமே.

அந்தணன் வணிகன் அமைச்சன் இவர்தமுள் ஒரு வன் - பிராமணன் வைசியன் மந்திரி என்னு மூவகையினரு ளொருவன், தலைவனு - நாடகத் தலைவனுக்குப் பொருந்த, கற் பினள் ஆதல் - கற்புடையவளாவது, பரத்தை ஆதல் - பரத் தையாவது, இருவரும் ஆதல் - கற்பினள் பரத்தை யென்னு மிருவருமாவது, தலைவியர் ஆக - தலைவிகளாய்ப் பொருந்த, முதல் சாதி அளவில் - ஐந்திற்குறையாத அங்கமுடைய தன்மையில் நாடகமாகிய முதற்சாதியின் அளவினைக் கொண்டு, நவை தீர் - குற்றமற்ற, உவகை சுவை - உவகைச் சுவையினை, இனிது உரைக்கும் - நன்றுகப் புலப்படுத்தும், பெற்றித்து ஆகும் - தன்மையினை யுடையதாகும், பிரக ரணம் - பிரகரணம் என்னும் நாடகச்சாதி

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. கற்பினள்: சுவகீயை. பரத்தை: சாமானியை. இவர் தம்மியல்பினை 108-ஆஞ் சூத் திரவுரையுட் கண்டுகொள்க. அந்தணன் தலைவனுகவும் கற் பினள் பரத்தையாகிய இருவரும் தலைவியராகவும் வரப் பெற்ற மிருச்சகடிகை என்னும் வடநூலும் அதன் தமிழ் மொழி பெயர்ப்பாகிய மண்ணியல் சிறுதேரும், அமைச்சன் தலைவனுக வரப்பெற்ற மாலதீ மாதவமும், வணிகன் தலைவ னும் கற்பினள் தலைவியுமாக வரப்பெற்ற புஷ்பபூஷிதம் என்பதும், பரத்தையினைத் தலைவியாகக் கொண்ட அரங்க

தத்தம் என்னும் நூலும் பிரகரணசாதிக் குதாரணங்களாதல் காண்க. (அ)

பாணம்

126. ஓரங்க மேவி யோங்கிய காமமு
முயர்ந்த வீரமு முறக்காட் டுவதா
யொரேபாத் திரந்தா னுற்ற நுகர்ச்சியும்
பிறர்த நுகர்வும் பெரிதும் பேசிப்
பாடியா டுவதே பாண மாகும்.

ஒன்று அங்கம் மேவி - ஒரேயங்கத்தினை யுடையதாய், ஓங்கிய காமமும் - மிக்க காமத்தினையும், உயர்ந்த வீரமும் - மேலான வீரத்தினையும், உற காட்டுவதாய் - நன்கு பொருந்தக் காட்டுந் தன்மையதாய், ஒரே பாத்திரம் - ஒரே நாடக பாத்திரம், தான் உற்ற நுகர்ச்சியும் - தான் அனுபவித்த இன்பத்தையும், பிறர் தம் நுகர்வும் - மற்றையோருடைய அனுபவ வின்பத்தையும், பெரிதும் பேசி - மிகவுங் கூறி, பாடி ஆடுவதே - பாடுதலோடு ஆடலுமுடையதே, பாணம் ஆகும் - பாணம் என்னும் சாதியாம்.

குறிப்பு:—இதன்கட் பெரிதும் பயின்று வருவன உவகைச் சுவையும் பெருமிதச் சுவையு மெனவறிக. லீலாமதுகரம் என்னும் வடமொழி நூலும் ஆமோதமோகனன் என்னும் தமிழ் நூலும் பாணத்திற் குதாரணங்களாம். ஏகாரம் தேற்றம். (கூ)

வியாயோகம்

127. உவகையு நகையு முயர்சம நிலையு
மொழிந்த சுவைத்தா யோரங் கத்தினுண்
மகளிர்கா ரணமலா வன்போர் தெரிப்பது
வியாயோக மென்ன விளம்பினர் புலவர்.

உவகையும் - உவகைச் சுவையும், நகையும் - நகைநிலைச் சுவையும், உயர் சமநிலையும் - மேலான சமநிலைச் சுவையும், ஒழிந்த சுவைத்து ஆய் - நீங்கிய சுவைகளையுடையதாய், ஒரு

அங்கத்தினுள் - ஒரே யங்கத்தில், மகளிர் காரணம் அலா - ஸ்திரீகள் காரணமாக உண்டாகாத, வன்மை போர் தெரிப் பது - வலிய போரினைத் தெரிவிப்பது, வியாயோகம் என்ன புலவர் விளம்பினர் - வியாயோகசாதி என்று வடமொழிப் புலவர் கூறினர்கள்.

குறிப்பு:—'புலங்களிற் பற்றறப் பொலிந்த நன்னிலை'யாத லானும், 'தயைபொறை தயங்கு தன்மைத்தாத' லானுஞ் சமநிலைக்கு உயர் என்னும் அடைமொழி கொடுத்தார். சேளகந்திகாகரணம் என்னும் வடமொழிநூல் இதற்குதா ரணமாதல் காண்க. புலவர்: ஈண்டு வடமொழிப் புலவராத லுணர்க. (கo)

சமவகார்ரம்

128. தனித்தனி வேறெணத் தலைவியர் பலர்கொண் டனைத்துச் சுவையு மடைவினிற் காட்டி
வீரச் சுவையினை மிகுத்துத் தெரித்து
மூவங்க மூற்று முதற்கட் காம
வின்பமும் பின்ன ரறத்தி னின்பமும்
பொருளி னின்பமும் பொலிவுறு வதுவே
சமவ காரமாச் சாற்றப் படுமே.

தனி தனி - தனித்தனியாக, வேறு எணம் - வேறுபட்ட எண்ணங்களையுடைய, தலைவியர் பலர் கொண்டு - பலவகைத் தலைவியர்களைத் தன்னகத்துக் கொண்டு, அனைத்து சுவை யும் - எல்லாச் சுவையினையும், அடைவினில் காட்டி-முறைப் படி தெரித்து, வீரம் சுவையினை மிகுத்து தெரித்து - (அவ் வொன்பான் சுவையுள்ளும்) பெருமிதச் சுவையினையே பெரிதுந் தெரிவித்து, மூன்று அங்கம் உற்று - மூன்று அங் கங்களை யுடையதாய், முதற்கண் காமம் இன்பமும் - முதல் அங்கத்தில் காமப்பகுதியி னின்பமும், பின்னர் - பின்னர்க் கூறும் இரண்டங்கங்களினும் (முறையே), அறத்தின் இன்ப மும் - அறத்தின் பகுதியாலாய இன்பமும், பொருளின் இன்பமும் - பொருட் பகுதியாலாய இன்பமும், பொலிவுறு

வதுமே - இனிது விளங்குவதே, சமவகாரமா சாற்றப்படும் - சமவகாரசாதி யென்று கூறப்படும்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. வெவ்வேறுவித எண்ணங்களைத் தனித்தனியுடைய தலைவியர் பலரையுடைய தென்பது இதன்கருத்து. அனைத்துச்சுவை: உவகையாதிய வொன்பான்சுவைகள். இச்சாதியிற் பெருமிதச்சுவையே பெரிதும் பயின்றுவரு மென்பது 'வீரச் சுவையினை மிகுத்துத்தெரித்து' என்னும் அடியாற்போதரும். இச்சூத்திரத்தானே யிச்சாதியில் வீட்டின் பகுதியை விளம்புமாறில்லை யென்பது மலையிலக்கே. இதற்கு உதாரணம் சமுத்திரமதனம் என்ப வடநூலார். (கக)

இடிமம்

129. அங்கநான் கிற்றாய்ப் பொங்குவெகு ளித்தா
யிந்திர சாலமுந் தந்திர மாயையும்
வன்சினப் போரு மாபெருங் கலாமு
முற்பா தங்களும் பற்பல வியைந்து
பண்ணவ ரசுரர் பாத்திர மாக
வின்ப நகைசம மிவையொழி சுவைத்தா
யிசைக்கப் படுவ திடிம மென்ப.

அங்கம் நான்கிற்று ஆய் - நான்கு அங்கங்களையுடைய தாய், பொங்கு வெகுளித்து ஆய் - மிக்குத் தோன்றும் வெகுளிச் சுவையினையுடையதாய், இந்திரசாலமும் - இந்திர ஜால விஞ்சையும், தந்திரம் மாயையும் - பற்பல தந்திரங்கட்கிடனுய மாயவிஞ்சையும், வன்மை சினம் போரும் - வலிமிக்க கோபத்தினையுடைய போரும், மா பெருமை கலாமும் - மிகப்பெருங் கலகங்களும், உற்பாதங்களும் - தீநிமித்தங்களும், பற்பல இயைந்து - பலபலபொருந்தி, பண்ணவர் - தேவர்கள், அசுரர்—, (ஆகிய இவர்கள்) பாத்திரம் ஆக - நாடகபாத்திரங்களாக, இன்பம் நகை சமம் இவை ஒழி சுவைத்து ஆய் - உவகை நகை சமநிலையாகிய இம் மூன்றும் நீங்கிய ஏனைய சுவைகளையுடையதாய், இசைக்கப்படுவது -

(கற்றுவல்லோராற்) கூறப்படுவது, இடிமம் என்ப - இடிம சாதி யென்பார்கள் ஆன்றோர்.

குறிப்பு:—உவகை நகை சமநிலையென்னும் மூன்று நீங்கிய ஏனைய சுவைகள் பயின்று வருமேனும் இச்சாதிக்கட் பெரிதும் பயின்றுவருதல் வெகுளிச்சுவையாதலறிக. ஒன்றையொன்றுக மருட்டிக்காட்டுதலாதிய இந்திரசாலவித்தையும் மாலிகாஞ்சனமாதிய மாயவித்தைகளும் இதனுட் பொருந்துமென்றறிக. உற்பாதம்: பூமியதிரல், ஆகாயமிடித்தல், அரத்தமழைபொழிதல், சூரியசந்திரர் தம் ஒளிமழுங்குதல், தேர்க்கூம்பு முதலிய விடத்துப பாம்பு வாசஞ்செய்தல், ஆடவர்க்கு இடக்கணுதியவைகளும் மகளிர்க்கு வலக்கணுதியவைகளும் துடித்தல் முதலியனவாம். இவ்விடிம சாதிக்குதாரணம் திரிபுராதாகம் என்ப வடநூலார். (கஉ)

ஈகாமிருகம்

130. மானென மருளு மடவர லாகிய
விருப்பங் கொள்ளா வீட்புல மாதினைக்
கவர்ந்து சென்றமை காட்டிப் பெரும்போர்த்
தொடக்க வினைபல தொடர்ந்து முற்றுரு
தின்பச் சுவையி னிழிவுபுலப் படுத்துத்
தம்மின் முரணிய தலைவர்க ளிருவ
ரேய்ந்துநா லங்கம் வாய்ந்த சாதி
யீகா மிருகமென் றியம்ப லாகும்.

(ஒருவன்), விருப்பம் கொளா - தன்மேல் விருப்பங் கொள்ளாத, மான் என மருளும் மடவரல் ஆகிய விண்புலம் மாதினை - மான் என்று சொல்லும்படி மருட்சியினையுடைய விண்ணுலகப் பெண்ணெருத்தியை கவர்ந்து சென்றமை காட்டிய - வலியக்கவர்ந்தேதினை தன்மையினைத் தெரித்து, பெருமை போர் தொடக்கம் வினை - பெரியபோரைச் செய்வதற்குத் தொடக்கத்திற் செய்யற்பால தொழில்கள், பல தொடர்ந்து - பல ஒன்றன்பின் ஒன்றுகத் தொடர்ந்து சம்பவித்து, முற்று உருது - அவைகளுளொன்றும் முற்றுப்

பெருமல்,இன்பம் சுவையின் இழிவு புலப்படுத்து (இருபுடையுமொவ்வாக் காமத்தாலுண்டாய) உவகைச் சுவையின் இழிதகவினை அறிவுறுத்தி. தம்மின் முரணிய தலைவர்கள் இருவர் ஏய்ந்து - தமக்குள் மாறுபட்ட தலைவர்கள் இருவரைப் பெற்று, நான்கு அங்கம் வாய்ந்த சாதி - நான்கு அங்கம் பெற்ற நாடகச்சாதி, ஈகாமிருகம் என்று இயம்பல் ஆகும் - ஈகாமிருகமென்று கூறப்படும்.

குறிப்பு:—'மானெனமருளும்' என்றதனால் அச்சமே தலையெடுத்த குணமாக்கொண்ட மடவரலென்றறிக. 'இழிவு' என்றதனால் அன்புடைக் காமமற்ற ஏனையவையென்பது பெறப்பட்டது. இதற்குதாரணம் சுசுமசேகரவிஜயம் என்னும் வடநூலாம். (கசு)

அங்கம்

131. அவலச் சுவைத்தா யங்கமொன் றுடைத்தாய்க்
கவலைகொண் மகளிர் கசிந்துள மழுங்க
வண்மினர் வாய்விடுத் தரற்றுமாண் பிற்றாய்
வாதம் விளைத்து வாய்ப்போர் காட்டி
மக்கள்பாத் திரமா வயங்குறு வதுவே
யங்க மென்ன வறிதல் வேண்டும்.

அவலம் சுவைத்து ஆய் - அவலச்சுவை யொன்றனையே பெரிதுந்தெரிப்பதாய், அங்கம் ஒன்று உடைத்து ஆய் - ஓரங்கத்தையுடையதாய, கவலை கொள் மகளிர் கசிந்து உளம் அழுங்க - உள்ளத்திற் பலவிதக் கவலைகளைக் கொண்ட ஸ்திரீகள் மனமிரங்கி வருந்த, அண்மினர் வாய் விடுத்து அரற்றும் மாண்பிற்று ஆய் - சமீபத்திலிருப்பவர்கள் வாய்விட்டுக் கதறுந் தன்மையினையுடையதாய், வாதம் விளைத்து - வாக்குவாதம் நடக்கப்பெற்று, வாய் போர் காட்டி - (அதனால்) சொற்போரைத்தெரிவித்து, மக்கள் பாத்திரமா - மானுடமக்கள் நாடக பாத்திரங்களாக, வயங்குறுவதுவே - விளங்குவதே, அங்கம் என்ன அறிதல் வேண்டும் - அங்கம் என்னும் நாடகச்சாதியென அறிதல் வேண்டும்.

குறிப்பு:—பெரும்பாலும் அவலச்சுவை பயின்றுவரும் எனவே சிறுபான்மை ஏனையசுவைகளுட் சில வோரோ வொருவழி பயிலப்பெறுமென் றுணர்க. கைப்போரென் னுது வாய்ப்போரென்றமையின் விற்போரும் மற்போரு மின்றிச் சொற்போரே யிருத்தல்வேண்டுமென்றறிக. அவ தாரங்களையும் மக்களென நாடகநூலார் கருதுவாராதலின் அவர்களும் பயின்றுவரல் சாலுமென்க. நாமகள் சிலம் பின் ஐந்தாம் பரலாகிய தசரதன் தவறும், எட்டாம் பரலா கிய மானவிஜயமும் இச்சாதிக் குதாரணங்களாம். (கச)

132. உறுப்பி னின்றும் வேற்றுமை காணச்
சிறப்பங் கம்மெனச் செப்பலு முண்டே.

உறுப்பின் நின்றும் வேற்றுமை காண - நாடகப் பேருறுப்பாகிய அங்கத்தினின்றும் வேற்றுமையை யாவரு மினிதினுணர, சிறப்பு அங்கம் என செப்பலும் உண்டு-சிறப் பங்கம் என்று இச்சாதியினைச் சொல்லுதலும் வழக்காம்.

குறிப்பு:—

"நாடகப் பேருறுப் பங்க மதுதான்
பலகள முடைத்தாய்ப் பண்புறு முடிவுகொண்
டிலகுறு வதுவா மிசைக்குங் காலே"

என்னுஞ் சூத்திரத்தை யீண்டுணர்க. (கரு)

வீதி

133. ஒருபாத் திரமே யோரங் கத்தினுட்
கைசிகி விருத்தி மெய்திகழ் வுறுத்தி
யின்பச் சுவைநன் கியைய வீறும்பூ
தோங்கு மொழிபல வுவந்து பேசலும்
விட்புலக் கூற்று மேயது வீதி.

ஒன்று பாத்திரமே - ஒரே நாடக பாத்திரம், ஒன்று அங்கத்தினுள் - ஒரேயங்கத்துள், கைசிகி விருத்தி - கைசிகி யென்னும் விருத்தியினை, மெய் திகழ்வு உறுத்தி - உண்மை

யர்க விளங்குமாறு காட்டி, இன்பம் சுவை நன்கு இயைய - உவகைச்சுவை நன்முகப் பொருந்த, இறும்பூது ஓங்கும் மொழி பல உவந்து பேசலும் - ஆச்சரியம் மிக்க மொழிகள் பலவற்றைக் களிப்புடன் பேசலும், விண் புலம் கூற்றும் - அசரீரி வாக்கும், மேயது - பொருந்தியது, வீதி - வீதியென்னும் நாடகச்சாதியாம்.

குறிப்பு:—நாடகத்திற்கு அழகினைத்தரும் தாய் போன்றும், உண்மையான உறுதிபயக்கும் பொருளினை இஃதென்று உணர்த்தி, இன்னர் தலைவரென்று தெரித்து, பற்பல சுவைகளின் அமைதியினை வெளிப்படுத்தும் சொற்றொடர்கள் பொருந்தியும் நிற்பதனை விருத்தியென்று கூறுவார்கள். இதனைப் பின்னர் வரும் 167-ஆம் சூத்திரத்தானுணர்க. நால்வகை விருத்தியு ளொன்றுகிய கைசிகியின் இலக்கணத்தை 171-ஆம் சூத்திரத்தா லுய்த்துணர்க. விட்புலக் கூற்று: ஆகாயவாணியின் கூறறு;

"கட்புல னின்றச ரீரி விண்ணின்றே
யொட்பமொ டுரைப்பது விட்புலக் கூற்றே".

(சூத். 198)

வடநூலார் மாளவிகை யென்னும் நூலினை யுதாரணமாக வீண்டுக் காட்டுப. (கசு)

பிரகசனம்

134. முனிவர் தேவர் முதுமறை யந்தண
ரெனுமிவ ரிடைவர விழிவு நிந்தையும்
பெறவெறும் போலிக ளுறுதலை மக்களாச்
சாத்து வதியே கைசிகி தந்து
நகைச்சுவை தன்னை மிகுத்துக் காட்டி
யொன்றே யாத லிரண்டே யாத
லங்கங் கொண்ட தரும்பிர கசனம்

முனிவர் - மகர்ஷிகளும், தேவர் - தேவதைகளும், முதுமை மறை அந்தணர்-பழமையான வேதங்களையுணர்ந்த

வேதியர்களும், எனும் இவர் - என்று சொல்லப்பட்ட இவர்கள், இடை வர - நாடகபாத்திரங்களிடையிற் ருமு மொருவராக வர, இழிவும் நிந்தையும்-இழிதகவும் பழியும், பெற-பெற்றுநிற்க, வெறுமை போலிகள்-பயனற்ற மக்கட்ப தடிகள், உறு - பொருந்திய, தலைமக்களா - தலைமக்களாக வும், சாத்துவதியே - சாத்துவதியும், கைசிகி தந்து - கைசி கியும் ஆகிய இவ் விருத்திகளைக் காட்டி, நகை சுவை தன்னை மிகுத்து காட்டி - நகைச்சுவையினைப் பெரிதும் பொருந்தத் தெரித்து, ஒன்றே ஆதல் இரண்டே ஆதல் அங்கம் கொண் டது - ஒன்றல்லது இரண்டு என்னும் எண்ணுடைய அங் கம்பெற்றது, அருமை பிரகசனம் - எடுத்துரைப்பதற்கரிய பிரகசனம் என்னும் நாடகச்சாதியாம்.

குறிப்பு:—முனிவர் : கடவுளைத் தியானிப்பவர். அந்த ணர் : வேதாந்தத்தினையே யணவுபவர் ; பார்ப்பார். பெரிதும் நகைச்சுவையே பெற்றுவரத் தொடுத்த லருமையாதலின் 'அரும்பிரகசனம்' என்று கூறினர். இனிக் காணுகராற் சிரி யாமற் பார்த்த லருமையிற் கூறினர் எனலுமாம். இச்சா திக்கு உதாரணமாக விளங்குவது நாமகள் சிலம்பின் ஏழாம் பரலாகிய சூர்ப்பணகை யென்னும் நூலாம். சாத்துவதி கைசிகி யென்னும் விருத்திகளி னிலக்கணங்களை 169, 171-ம் சூத்திரங்களாலுணர்க. (கள)

சாதியின் பிறிதுவகை

135. சாதி வகையினு மோது மிடத்து
வீரங் கூச்ச மர்ப்பா யம்பேய்க்
காரம் வியோகம் பாணஞ்சல் லாபம்
வீழிணி யோடுத் தார மடங்கம்
பிராசன மென்னப் பிரிப்ப சிலரே.

சாதி வகை இனும் ஒதும் இடத்து - சாதி வகையினைப் பற்றி யின்னுஞ் சொல்லுமிடத்து, வீரம்–, கூச்சம்–, அர்ப் பாயம்–, பேய்க்காரம்–, வியோகம்–, பாணம்–, சல்லாபம்–,

வீழிணி–, உத்தாரமடங்கம்–, பிராசனம்–, என்ன சிலர் பிரிப்ப - என்று சிலர் பிரிப்பார்கள்.

குறிப்பு:—ஈண்டுக் கூறிய பத்துவகையினைப் பெற்ற நாடகங்கள் காணப்பெறுமையானும் இவையிற்றின் இலக்கணங்களினும் முன்னர்க்கூறிய தசரூபங்களின் இலக்கணங்கள் செவ்வியுடைத்தா மாதலானும், சில முன்னியவற்றுளடங்குதலானும், வழக்காறற் றொழிந்த இவ்வகைகளை முற்றும் விளக்கிக் கூறுதலியலாமையானும் முன்னர்க்கூறிய தசரூபகங்களையே யாவரு மெடுத்தாள வேண்டுமென்பது நமது ஆசிரியர் கருத்தாமாதலானும் இவைகளைப்பற்றி விரித்துரையாது வாளாவிடுத்தனர். இனி யிவையிற்றி னிலக்கணங்களை வீரசோழியவுரையாசிரியர் பெருந்தேவனர், "புகட்சி பரவல்" என்னுந் தொடக்கத்த கலித்துறையுரையின்கட் குறித்தவா றுரைக்குதும்.

"வீரமாவது, அங்க மிரண்டு முதலா வாறிரண்டு மெய்தப்பெற்றுச் சந்தியைந்து முடைத்தாய் வாரங்கண்டம் பெற்றும் பெருதுந் தலைமகனெருவனுவது. கூச்சமாவது, தலைவிருவரை யிடையிட்டுப் பேசப்பட்டு வாரத்தோடிருக்கும். அர்ப்பாயமாவது, அருளில்லாதோர் தலைமக்களாய்ப் பெண்ணுடைத்தாய் வாரம் போலியாவது. அர்ப்பீடமெனினும் ஒக்கும். பேய்க்காரமாவது, தலைமக்கள் தேவ காந்தர்வ பைசாசாதிய பதினறுவராய்ப் பெண்ணுடைத்தாய் முன்பின் மூன்றினு மொன்றின் பொருள் பெறுதலு மங்கமொன்றுதலுங் கண்ட மொன்றுதலுமாம். வியோகமாவது, தலைமக்களொருவரைத்தான் பலரைத்தான் உடைத்தாய்ச் சந்தியைந்து முடைத்தாய்த் தலைமைக் கண்ட மொருகண்டம் பெறும். பாணமாவது, தார்த்தனுதல் தலைவனுதல் தானுஞ் சொல்லி நின்றூர் சொல்லியு மனுவதித்துச்சொல்லிய ஐவகைச் சந்தியுள்ளும் கடைக்கண் சந்தியங்கமொன்றுவது. சல்லாபமாவது, ஒரு பொருண்மேற் பேசுவார் தலைமக்களிருவரா யோரங்கமாய் நிருபணைச் சந்தியொன்றுது நின்ற சந்தி நான்குடைத்தாவது. வீழி

ணியாவது கூத்தன் றலைமகனுய்த் தன்மடந்தைக்கு விடாய் கண்டவாறும் மன்னகரங் கண்டவாறுஞ் சொல்லுதலாய் அங்கமொன்றுய் ஐவகைச்சந்தியுள்ளுங் கடைச்சந்தியணையு மாறு சொல்லுவது. உத்தாரமடங்கமாவது மக்கள் பலரைத் தலைவராகப் பெற்றுப் பெரும் பொல்லாத போருடைத்தாய்ப் பெண்களா லாற்றப்பட்டுச் சந்தியைந்து முடையது. பிராசனச் சாதியாவது சுத்தமுஞ் சங்கீரணமுமென விரண்டாம். சுத்தமாவது தக்காரை யிகழ்ந்துவருவது. சங்கீரணமாவது பாஷண்டன் தலைமகனுய்த் தோழியரே கணிகையரே தூதரே யலிகளே பேடியரே யென்றிவரை யுடைத்தாய்க் கடைக்கட் சந்தியின்றியங்கமொன்றுவது. இனியிதனை வடநூலார் சுத்த வைகிருத சங்கீரணமென மூவகைப்படுத்துப''. பின்னர்க்கூறிய விரண்டும் ஏனையவற்றைப்போலாது ஒன்பான் சுவையும் ஒருங்கே வரல்வேண்டி மாதலான் ஆசிரியர் இடையே யொடுக்கொடுத்துப் பிரித்தார். (கஅ)

(உ) உபசாதி

136. உபசாதி யாகிய நாடகந் தாமு
முண்டவை யொன்பா னிரட்டி யாகும்.

உபசாதி ஆகிய நாடகம் தாமும் உண்டு–உபசாதியென் பனவாகிய நாடகங்களும் உள; அவை ஒன்பான் இரட்டி ஆகும் – அவை பதினெண்வகைப் படுவனவாம்.

குறிப்பு:—உபசாதி: சாதிபோல் அத்துணைச் சிறப்பின்றி ஓரோவோரிடங்களிற் குறைந்து வருமாதலானும் அவைகளைப் போன்றும் பலவிடத்தும் பயின்றுவரு மாதலானும் உபசாதியென்னும் பெயரினவாயின. (கக)

உபசாதிவகை

137. நாடிகை துரோடகங் கோட்டி சட்டக
நாட்டிய ராசகம் பிரத்தா னத்தொடு
மூல்லாப் பியமே காவியம் பிரேங்கண
மிராசகஞ் சமூலா பகந்திருக் கதிதஞ்

சிற்பகம் விலாசிகை துன்மல் லிகையே
பிரக ரணியல் லீசம் பாணிகை
யென்பன வாகு மவற்றின் பெயர்முறை.

அவற்றின் பெயர்முறை - அவ்வுபசாதிகளின் பெயர் வரிசை, நாடிகை-, துமோடகம்-, கோட்டி—, சட்டகம்-, நாட்டியராசகம்—, பிரத்தானம்—, உல்லாப்பியம்—, காவியம்-, பிரேங்கணம்—, இராசகம்—, சமூலாபகம்—, திருக்கதிதம்-, சிற்பகம்—, விலாசிகை—, துன்மல்லிகை—, பிரகரணி—, அல்லீசம்-, பாணிகை-, என்பன ஆகும் - என்று கூறப்படுவனவாம்.

குறிப்பு:—பின்னர்க்கூறியவற்றினும் முன்னர்க்கூறியன சிறப்புடைய வென்பார் இடையே யொடுக்கொடுத்துப் பிரித்தார். இவ்வுபசாதிகளின் இலக்கணத்தைப் பின்னர்வருஞ் சூத்திரங்களா னுணர்க. நிரலே விளக்குதலறிக. (20)

நாடிகை

138. கைசிகி விருத்தி காட்டுவ தாகி
நாலங் கத்தி னுரியர் பலர்கொண்
டரசன் றலைவனு வன்னு னஞ்சு
மரசி யொருத்தியு மவன்கா தலிக்கு
மரசி யாட்சிக் கடங்கின ளாகு
மழகின ளொருத்தியு மாவிரு தலைவிய
ருடைய தாகி நாட்டிய மிசையொடு
நடைபெறு வதுவே நாடிகை யென்ப.

கைசிகி விருத்தி காட்டுவது ஆகி—கைசிகி விருத்தியினைத் தெளிவுபெறத் தெரிப்பதாகி, நான்கு அங்கத்தின் - நான்கு அங்கத்தினையுடையதாய், நாரியர் பலர் கொண்டு-, அரசன் தலைவனு – அரசன் நாடகத்தலைவனுக, அன்னன் அஞ்சும் அரசி ஒருத்தியும்—அவ்வரசன் பயப்படும் அரசியொருத்தியும், அவன் காதலிக்கும்-அவ்வரசன் விரும்பும், அரசி ஆட்சிக்கு அடங்கினள் ஆகும்அழகினள் ஒருத்தியும்-

அரசியின் ஆளுகைக்குட்டபட்டவளாகும் பேரழகினையுடையாள் ஒருத்தியும், ஆ இரண்டு தலைவியர் உடையது ஆகி-ஆக இரண்டு தலைவியர்களை உடையதாகி, நாட்டியம் இசையொடு நடைபெறுவதுவே - நாட்டியம் இசை இவைகளொடு நடத்தலைப் பெற்றிருப்பதே, நாடிகை என்ப - நாடிகையென்று கூறுவர் ஆன்றோர்.

குறிப்பு:—கைசிகி விருத்தியி னிலக்கணத்தைப் பின்னர் வரும் 171-ஆம் சூத்திரத்தானுணர்க. நாட்டியம்: பரதம். இசை: சங்கீதம். இவ்வுபசாதிக்கு ஜோதிமாலை யென்னும் நாமகள் சிலம்பின் பதினேழாம்பரல், தக்க உதாரணமாம். வடநூலார் இரத்திநாவளி, பிரியதர்சிகை யென்பனவற்றை யுதாரணமாகக்காட்டுப. நாரியர் - மகளிர். (உக)

துரோடகம்

139. ஒவ்வொன் றின்கணும் விதூடகன் வருமா
ருன்பதே யெட்டே யேழே யாத
லைந்தே யாத லங்க முடைத்தாய்
மக்க டேவர் தொக்கபாத் திரமா
வுவகைச் சுவையி னேங்கும் துரோடகம்.

ஒன்பதே எட்டே ஏழே ஆதல் - ஒன்பது எட்டு அல்லது ஏழாவது, (அன்றி), ஐந்தே ஆதல் - ஐந்தாவது, அங்கம் உடைத்து ஆய் - அங்கங்களையுடையதாய், ஒன்று ஒன்றின்கணும் விதூடகன் வருமாறு - ஒவ்வோரங்கத்தினும் விதூடகன் வந்தியலும்படி, மக்கள் தேவர் தொக்க பாத்திரமா - மானுடர் தேவர்கள் இவர்கள் கூடிய நாடக பாத்திரங்களாக, உவகை சுவையின் - உவகைச்சுவையினனே, ஓங்கும் - சிறப்புற்று நிற்கும், துரோடகம் - துரோடகம் என்னும் உபசாதி.

குறிப்பு:—இச்சூத்திரத்தானே ஒன்பானங்கமுடைய துரோடகமே சிறப்புடையதென்பதும், குறைந்தவளவு ஐயங்கமேயென்பதும் போதரும். இவ்வுபசாதிக்கு உவகைச் சுவையே பெரிதும் பயின்றுவரல் வேண்டுமெனலறிக. விக்கிர

மோர்வசியம் என்னும் வடமொழி நாடகம் இவ்வகையினுக் குற்ற வுதாரணமாமாறுகாண்க. இஃது ஐயங்கமுடைய தாம். (உஉ)

கோட்டி

140. அங்க மொன்றனு ளநேகசா மானியப்
புருடரும் பெண்டிரும் போதரக் கைசிகி
காம வின்பங் கட்டுரைப் பதுவே
கோட்டி யென்ன நாட்டப் படுமே.

அங்கம் ஒன்றனுள்-ஒரேயங்கத்தில், அநேக சாமானிய புருடரும் பெண்டிரும் போதர - பல சாதாரண ஆடவரும் மகளிரும் நாடகபாத்திரங்களாப் போந்து நிற்ப, கைசிகி காமம் இன்பம்-கைசிகி விருத்தியினையும் அன்புடைக்காமத் தாலாகிய உவகைச் சுவையினையும், கட்டுரைப்பதுவே-எடுத் துக் கூறும் உபசாதியே, கோட்டி என்ன நாட்டப்படும் - கோட்டி யென்று நாடகநூலாரா லுலகில் நாட்டப்படுவது.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. கைசிகி காமவின்பம்: உம் மைத்தொகை. இவ்வகையினுக் குதாரணம் இரைவதமதனி கை என்னும் வடநூலாம். (உந)

சட்டகம்

141. சவனிகைப் பெயரிய வங்க நான்கனுள்
வியப்புச் சுவையினை மிகுத்துக் காட்டி
யிழிசினர் மொழியி னியற்றப் பெற்று
மற்றைய வெல்லாஞ் சொற்றநா டிகைபோற்
பெட்டிசைக் கப்படுஞ் சட்டக மென்ப.

சவனிகை பெயரிய அங்கம் நான்கனுள்—ஜவனிகை யென்னும் பெயர் வாய்ந்த அங்கம் நான்கு பெற்று அவை யிற்றினுள், வியப்பு சுவையினை மிகுத்து காட்டி - வியப்புச் சுவையினைப் பெரிதுந்தெரித்து, இழிசினர் மொழியின் இயற்ற பெற்று - தாழ்ந்தோர்தம் மொழியினு னியற்றப் பட்டு, மற்றைய எல்லாம் - ஏனைய தன்மைகளிலெல்லாம்,

சொற்ற நாடிகைபோல் - முன்னர்க்கூறிய நாடிகையென்னும் உபசாதியினைப்போல், பெட்டு இசைக்கப்படும் - விரும்பிப் புலவராற் கூறப்படும், சட்டகம் என்ப - சட்டகம் என்று நாடகவாசிரியர் கூறுவர்.

குறிப்பு:— சட்டகம் இசைக்கப்படும் என்ப என்று முடிபு கூறுக. சவனிகை: திரை. ஒருமுறை சுருட்டப் பட்ட திரை மறுமுறை வீழுமுன் இச்சட்டகத்திலுள்ள ஓவ்வோரங்கமும் முற்றுப்பெறுதலின் 'ஜவனிகை' யென் பது அங்கத்திற்கே பெயராயிற்று. இழிசினர்: கீழ்மக்கள். இழிசினர் மொழியின தியல்பை இழிசினர் வழக்குரைவரை யறை யென்னும் நூலிற் பரக்கக்காண்க. 'மற்றைய' வென்ப தென்னையோவெனின் கைசிகிவிருத்தியினும் தலைவன் தலைவி யர் தம்மியல்பினு மென்றறிக. இவ்வகையினுக்கு உதாரணம் கற்பூரமஞ்சரி யென்ப வடநூலார். (உசு)

நாட்டியராசகம்

142. இன்னிசைப் பாட்டு மன்னிய தாகி
யழகினு முடையினு மன்புறு தலைவியுந்
தீரோ தாத்தச் செவ்விய தலைவனும்
பீட மர்த்தநா யகனுப நாயக
னிவர்களு முடைத்தா யின்பமு நகையுங்
கொண்ட சுவைத்தாய்க் கோலமீ ரைந்துங்
காட்டியியல்வது நாட்டிய ராசகம்.

இனிமை இசை பாட்டு மன்னியது ஆகி - இனிய இசைப்பாட்டுக்கள் பொருந்தியதாகி, அழகினும் உடையி னும் அன்பு உறு தலைவியும் - அழகு செய்துகொள்வதினும் நல்லுடை தரிப்பதினும் அன்பினையுடைய தலைவியும், தீரோ தாத்தன் செவ்விய தலைவனும் - தீரோதாத்தனின் தன்மை வாய்ந்த தலைவனும், பீடமர்த்தநாயகன் உபநாயகன் இவர்க ளும் உடைத்து ஆய் - பீடமர்த்தநாயகன் உபநாயகன் என் னும் இவர்களையும் உடையதாய், இன்பமும் நகையுங் கொண்ட சுவைத்தாஆய் - உவகைச்சுவையும் நகைச்சுவை

யும் பொருந்தியதாய், கோலம் இரண்டு ஐந்தும் காட்டி இயல்வது - பதின்வகைக் கோலங்களையும் காட்டி நடப்பது, நாட்டியராசகம் - நாட்டியராசகமென்னும் உபசாதியாம்.

குறிப்பு:—அழகு: ஈண்டித் தான் அழகுசெய்துகொள்வதும், அழகுள்ளவிடத்து ஆர்வமுண்டாதலுமாம். அழகையும், உடையையுங் கூறினமையால், அணியையு முபலக்கணத்தாற் கொள்க. தீரோதாத்தன், உபநாயகன், பீடமர்த்த நாயகன் இவர்களின் இலக்கணத்தைப் பொதுவியல்பிற் கண்டு கொள்க. இவ்வுபசாதிக்கு ஏற்ற சுவைகள் உவகையும் நகையுமாம். ஈரைங்கோலம் :

"இருந்திசைக் கோலம் நின்றிசைக் கோலம்
வெறுங்கோ லம்மே யாப்பிசைக் கோலம்
வெறுப்பிசைக் கோலங் கரந்தாடு கோலம்
ஏங்கிசைக் கோல மிரட்டிசைக் கோலஞ்
சிறந்திசைக் கோல மிணங்கிசைக் கோல
மென்னக் கோல மீரைந் தாகும்;"
"இவற்றை யிலாசியமென்று முரைப்ப"

என்னுஞ் சூத்திரங்களானறிக. இருந்திசைக்கோலம்: இருக்கையில் வீற்றிருந்தவண்ணம் யாழினின்னிசைக் கிணங்கப் பாடுதலாம். நின்றிசைக்கோலம்: நின்றவண்ணமிசைத்தலாம். வெறுங்கோலம்: துக்க மேலீட்டால் அணியாதியவற்றைக் களைந்து துசைக்கருவிகளுமின்றி யோரிடத்திருந்து இரங்கியிசைத்தலாம். யாப்பிசைக்கோலம்: இசைக் கருவிகளின் ஒலிக்கிணங்க இசைகூட்டிப் பற்பலயாப்பின் விகற்பங்களைத் தெரிப்ப இசைத்து ஆடவரும் பெண்டிருந் தத்தம் இயற்கைக்குமாறாய் நடத்தலாம். வெறுப்பிசைக்கோலம்: தலைவன் மற்றொருத்திபால் விருப்புற்றன னென்றுணர்ந்த தலைவி தலைவன்பாற் றான்கொண்ட அன்பினை வெறுத்தவளாய் யாழிசைக் கிணங்க இன்குரலெழுப்பி பிரங்கிப்பாடுதலாம். கரந்தாடுகோலம்: ஆடவர் பெண்டிர்தம் உடைபுனைந்து கரந்து நின்றெழுகுதலாம். இக்கோலத்திற்குச் செவ்வியவுதாரணஞ் ஜோதிமாலை யென்னும் நாடிகையில் மன்னன் ஜயபாலன்

மாறுவேடம் புனைதலாம். ஏங்கிசைக்கோலம்: ஓரிடத்துக் குறித்தநேரத்துத் தலைவன் வாராது காலநீட்டித்தமையின் தலைவி யின்னிசைப்பண்ணை யினிதெழுப்பி யிரங்கியிசைத்த லாம். இரட்டிசைக் கோலம்: வாதஞ்செய்ந் நிலையுடன் மனவெழுச்சியையுங் கவர்ச்சியையுமுடைய இனிய பாடல் களை யிசைத்தலாம். சிறந்திசைக்கோலம்: இன்னிசை பொருந்திய வரிப்பாடல்களை வெகுளிச் சுவையாலாதல் இன்பச் சுவையாலாதல் ஆழ்ந்த கருத்துடனும் பற்பல இசை வேறுபாட்டுடனும் எடுத்த நிலையும் உற்றுணர் நிலையுமாகிய இருநிலன் விளங்க இசைத்தலாம். இணங்கிசைக்கோலம்: உல்லாசத்தொடு கூடிப் போலிக் கண்டனங்களும் இசைந்து பாட்டினிசைக்கப்படும் சம்பாஷணையாம். இவ்வீரைந்துகால மும் பெரும்பாலும் மகளிர்க்கென்றுணர்க. இவையிற்றினுக் குதாரணங்கள் வந்துழிவந்துழிக்காண்க. நாமகள் நிலம்பின் ஒன்பதாம் பரலாகிய உஷாபரிணயம் இவ்வகையினுக்குதா ரணமாம். இனி நருமவதி, விலாசவதி என்பவற்றை யுதாரண மாகக் காட்டுப வடநூலார். (உரு)

பிரத்தானம்

143. பல்வகைப் பட்ட பாடலா டற்றாய்ப்
பாரதி விருத்தி யேருறக் காட்டித்
தலைவனுந் தலைவியு மடிமைய ராக
வுதவித் தலைவனு முற்றீ ரங்கத்
தோங்குகட் குடியிற் றாங்கொள் கருத்தைப்
பாங்குற முடிப்பது பகர்பிரத் தானம்.

பல்வகைப்பட்ட - பல் வேறுவிதமான, பாடல் ஆடற்று ஆய் - பாடல் ஆடல்களையுடையதாய், பாரதி விருத்தி - பாரதி என்னும் விருத்தியினை, ஏர் உற காட்டி - அழகு பொருந்தத் தெரித்து, தலைவனும் தலைவியும்—, அடிமையர் ஆக - அடிமைத்தொழில் செய்யும் மக்களாகி, உதவி தலை வனும் உற்று - உபகாயகனையும் பெற்று, இரண்டு அங்கத்து - இரண்டு அங்கங்களையுடையதாய், ஓங்கு கள் குடியில் தாம்

கொள் கருத்தை - மிக்க கட்குடியின்கண் நாடகபாத்திரங் கள் தாம்கொண்ட கருத்தினை, பாங்கு உற முடிப்பது - செவ்விவாய்ப்ப முடிப்பது, பகர் பிரத்தானம் - நாடகவாசிரியராற் கூறப்பெற்ற பிரத்தானம் என்னும் உபசாதியாம்.

குறிப்பு:—பாரதிவிருத்தி: இவ்விருத்தியின் இலக்கணத்தை 171-ஆம் சூத்திரத்தானுணர்க தலைவனும் தலைவியும் அடிமையர் எனவே அவர்தம் மொழியும் இழிசினர் வழக்குரையுமாமென்று துணிக. சிங்காரதிலகம் என்னும் வடநூல் இவ்வகைத்தாம் (உசு)

உல்லாப்பியம்

144. தலைவன் றீரோ தாத்தனுத் தலைவியர்
நால்வரா வுவகை நகையவ லச்சுவை
மேவப் பெற்று மூவகை யிசைப்பாட்
டுடைத்தாப் போர்செறி நடைத்தா வங்க
மொன்றனு ளியலு முல்லாப் பியமே.

தலைவன் தீரோதாத்தனு - தலைவன் தீரோதாத்தனுகவும், தலைவியர் - தலைவியர்கள், நால்வரா - நான்கு பேர்களாகவும், உவகை நகை அவலம் சுவை மேவ பெற்று - உவகை நகை அவலமென்னுஞ் சுவைகள் பொருந்தப் பெற்று, மூன்றுவகை இசைப்பாட்டு உடைத்தா - மூன்று வகைப் பட்ட இசைப்பாட்டினைப் பெற்றதாய், போர் செறி நடைத்தா - போரினைத் தெரிக்கும் ஒழுக்கத்தினையுடையதாய், அங்கம் ஒன்றனுள் - ஓரங்கத்தினுள், இயலும் - நடை பெறும், உல்லாப்பியம் - உல்லாப்பியமென்னும் உபசாதி.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. மூவகை இசைப்பாட்டு: கீதவுரு, கீர்த்தனம், வரிப்பாட்டு. இனிச் சிந்து, ஆனந்தக் களிப்பு, கும்மியென்றுரைப்பாருமுளர். இவ்வுபசாதிக்குதாரணம் தேவீமகாதேவம் என்ப வடநூலார். (உஎ)

145. நால்வர் தலைவியர் நயந்துபோர் களிகொளு
மூவங் கத்ததா மொழிநரு முளரே.

நால்வர்தலைவியர் நயந்து - நான்கு தலைவியர்களையுடைய தாய், போர் களி கொளும் - போரினையுங் கட்களிப்பினையுங் கொண்டு, மூன்று அங்கத்ததா - மூன்று அங்கத்தினையுடைய தாக, மொழிநரும் - கூறும் நாடகவாசிரியரும், உளர் - சிலர் உளர்.

குறிப்பு:—ஏகாரம் : ஈற்றசை. மொழிநர் : ந் பெயரிடை நிலை. உம்மை : இழிவு சிறப்பும்மையாம். (உஅ)

காவியம்

146. சுகுணை தலைவியு மகிணன் றீரோ
தாத்தனு மாகி மீத்தகை யின்ப
நுகர்ச்சி பற்றிய பகர்ச்சி மலிதர
விசைவழாப் பாட்டு நசைவரக் காட்டி
நகைச்சுவை நிறைந்து நடப்பது காவியம்.

சுகுணை தலைவியும் - சுகுணைநாயகி தலைவியும், மகி ணன் - தலைவன், றீரோதாத்தனும் ஆகி - றீரோதாத் தனுமாகப் பொருந்தி, மீ தகை இன்பம் நுகர்ச்சி பற்றிய - மேலான இன்ப அநுபவத்தைக் குறித்த, பகர்ச்சி - சொற் கள், மலிதர - மிக்குத்தோன்ற, இசை வழா பாட்டு - இன் னிசையின்கட் குறைவுதோன்றாப் பாடல்களை, நசை வர காட்டி - அன்புபொருந்தத் தெரித்து, நகை சுவை நிறைந்து - நகைச்சுவை மிகுதியும் பொருந்தி, நடப்பது காவியம் - ஒழு குவது காவியம் என்னு முபசாதியாம்.

குறிப்பு:—சுகுணை றீரோதாத்தன் இவர்தம் மிலக்கணங் களைப் பொதுவியல்பிற் கண்டுகொள்க. மகிணன்: மகிழ்நன்; "மெய்ம்மாண்ப நாநவ் வரின்முன் னழிந்துபின் மிக்கணவ் வாம்"—(வீரசோழியம் - சந்திப்படலம்.) இவ்வகையினுக்கு யாதவோதயம் என்னும் வடநூல் உதாரணமாம். (உக)

பிரேங்கணம்

147. மற்போர் விற்போர் பொற்புறக் காட்டி
நால்வகை விருத்தியு மேல்வகை தெரித்து

முன்னுரை கூத்து நண்ணல தாகி
யிழிந்தபாத் திரமே மொழிந்த தலைவனு
நயந்தோ ரங்கத் தியைந்தது பிரேங்கணம்.

மல்போர் வில்போர் பொற்பு உற காட்டி - மல்ல யுத்தம் கதாயுத்தம் இவையிற்றினைச் செவ்விதிற் றெரித்து, நான்கு வகை விருத்தியும் - சாத்துவதி ஆரபடி கைசிகி பாரதி என்னும் நால்வகைப்பட்ட விருத்தியினையும், மேன்மை வகை தெரித்து - மேலான விதமாகக் காட்டி, முன்னுரை கூத்து நண்ணலது ஆகி - முன்னுரையும் கூத்தும் பொருந்தாததாகி, இழிந்த பாத்திரமே - இழிதகவுடைய நாடக பாத்திரமே, மொழிந்த தலைவனு - நாடக நூலாசிரியராற் றெரிக்கப்பெற்ற தலைவனுக, நயந்து - விரும்பி, ஒன்று அங்கத்து இயைந்தது - ஓரேயங்கத்திற் பொருந்தி யொழுகுவது, பிரேங்கணம் - பிரேங்கணம் என்னும் உபசாதியாம்.

குறிப்பு:—"எல்வகை" யெனப் பிரித்துப் பொருந்து மாற்றல் என்று பொருளுரைத்தலுமாம். முன்னுரை: பிரஸ்தாவனை; இதனிலக்கணத்தினை

"முற்படக் கிளத்து முன்னுரை யதுதான்
சூத்திரதாரன் சூழ்சபை வணங்கித்
துணைவரை விளித்தவர் தம்மொடுங் கூடி
நாடகப் புலவ னல்லிய னவின்று
கதைதங்கழ் பருவ காலம் புனைதந்
திதமுறு பாடலி னியம்புவித் தின்புறுத்
தெடுத்த நாடகந் தொடங்குமு னிசைப்பதாம்."

என்னுஞ் சூத்திரத்தானுணர்க. கூத்து:

"குதித்தா டுறுவது கூத்தெனப் படுமதிற்
பரத நாட்டியங் குரவை கைவரி
முதலிடை கடையென விதமே ழாகும்."

இவையிற்றின் விரிவினை 201, 202 ஆதிய உறுப்பியல்புச் சூத்திரங்களாலறிக. 'நயத்தல்' நாடக நூலாசிரியர்தந் தொழி

லெனக் கொள்க. இதற்கு வாலிவதம் என்பது உதாரண மென்ப வடநூலார் (சூ0)

இராசகம்

148. ஐந்தே பாத்திர மமையப் பெற்று
மொழிவலர் வழக்கு மிழிசினர் வழக்குஞ்
சாரநற் சூத்திர தார னின்றிப்
பாரதி கைசிகி பண்புறத் தெரித்து
தலீவியுள் ளாளாத் தலீவன் மூர்க்கனு
வுயர்சுவைப் புனீவு நயமுறப் பெறீஇ
யொன்றே யங்க மொன்றுவ திராசகம்.

ஐந்தே பாத்திரம் அமைய பெற்று - ஐந்து நாடகபாத்திரங்களே பொருந்தப்பெற்று, மொழிவலர் வழக்கும் இழிசினர் வழக்கும் சார - கற்றவல்லார்தம் மொழிவழக்கும் இழிசினர்தம் வழக்குரையும் பொருந்தி நிற்ப, நன்மை சூத்திரதாரன் இன்றி - நாடகத்தின்கண் நன்மையே பயக்கும் சூத்திரதாரனின்றியும், பாரதி கைசிகி பண்பு உற தெரித்து - பாரதி கைசிகி யென்னும் விருத்திகளே நன்கு பொருந்த விளக்கி, தலீவி உள்ளாளா தலீவன் மூர்க்கனு - தலீவி படைத்திட்டுக் கூறப்படாது நிஜமானவளாகவும் தலீவன் மூர்க்கனுகவும் பொருந்த, உயர் சுவை புனீவு நயம் உற பெறீஇ - ஒன்பான் சுவையினீயும் உயர்வாகப் புனீயுந் தன்மை இனிது பொருந்தப்பெற்று, ஒன்றே அங்கம் ஒன்றுவது இராசகம் - ஒரே யங்கத்தினீப் பொருந்துவது இராசகம் என்னும் உபசாதியாம்.

குறிப்பு:—

"பாவைக் கூத்தினுட் சூத்திர மிழுப்போன்
போலவிந் நாடகத் தின்கணு மெதற்கு
முதல்வனுய் நின்று வினீமுடிப் பவனே
சூத்திர தாரனுஞ் சொல்லுங் காலே"

என்னும் உறுப்பியல்புச் சூத்திரத்தை யீண்டுணர்க. பாரதி கைசிகி யென்னும் விருத்திகளினிலக்கணத்தைப் பின்னர்க்

காண்க. பெறீஇ: பெற்று; சொல்லிசையளபெடை செய்யுளிசையையும் நிறைத்தது. இவ்வுபசாதியினுக்குதாரணம் மேனகாகிதம் என்னும் வடநூலாம். (நூக)

சமுலாபகம்

149. அவல மோகை யல்லாச் சுவைத்தா
யுழிஞைப் போரறை போக்கு வஞ்சக
மறங்காட்ட லின்றிப் புறங்காட்டி யோட
லிவையெடுத் தியம்பு மியல்புடைத் தாகி
யார படிசாத் துவதியு மடைந்து
பாடமை தலைவன் பாண்ட மகனு
நான்கே மூன்றே நண்ணுமங் கத்ததாம்
பான்மையி னியல்வது பகர்சமு லாபகம்.

அவலம் ஓகை அல்லா சுவைத்தா - அவலச்சுவையும் உவகைச்சுவையும் நீங்கிய வேனைய சுவைகளை யுடையதாய், உழிஞை போர் - மதிலினை முற்றுகைசெய்து செய்யும்போரும், அறை போக்கு - நிலவறைவழியாய்த் தப்பியோடுதலும், வஞ்சகம் - போர்வயின் வஞ்சகமும், மறம் காட்டல் இன்றி புறம் காட்டி ஓடல் - வீரத்தைக் காட்டுதலில்லாமற் புறங்காட்டி யோடுதலும், (ஆகிய) இவை எடுத்து இயம்பும் இயல்பிற்று ஆகி - இவையிற்றினை எடுத்துக்கூறும் இயல்பினையுடைத்தாய், ஆரபடி சாத்துவதியும் அடைந்து - ஆரபடி சாத்துவதியென்னும் விருத்திகளைப்பெற்று, பாடு அமை தலைவன் - பெருமை பொருந்திய நாடகத்தலைவன், பாடண்டன் மகனு-பாஷண்ட மகனுக, நான்கே மூன்றே நண்ணும் அங்கத்தது ஆம் - நான்கு அல்லது மூன்று என்னும் எண் பொருந்திய அங்கத்தினை யுடையதாகும், பான்மையின் இயல்வது - தன்மையோடுநடப்பது, பகர் சமுலாபகம்-நாடக வாசிரியரால் கூறப்பட்ட சமுலாபகம் என்னும்உபசாதியாம்.

குறிப்பு:—உழிஞைப்போர்: உழிஞை மாலையைச் சூடிச் செய்யும்போர்; அதாவது மதில்வளைத்துப் போர் புரிதலாம். அதனைப் பின்வரும் கலிவெண்பாவா னுணர்க.

"வெட்சி நிரைகவர்தன் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம்–உட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்த லெஞ்சி
யதுவளைத்த லாகு முழிஞை—யதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்தின் மிக்கோர்
செருவென் றதுவாகை யாம்" பிங்கல நிகண்டு.

அறை: ஈண்டு நிலவறையாம்; அறைபோக்கு: கீழறுக்கப்படுதல் அல்லது மித்திரபேதஞ் செய்யப்படுதலாம் எனவும் உரைக்க. புறம்: முதுகு; புறங்காட்டி யோடல்: தோற்றோடல். ஆரபடி சாத்துவதி என்னு மிருவிருத்தியின தியல்பை 169, 170–ஆம் சூத்திரங்களானறிக. பாடண்ட மகன்; ஜாதியொழுக்கங் கெட்ட வோர் போலி மனிதன். இவ்வகைக்குதாரணம் மாயாகாபாலிகை யென்னும் வட நூலாம். (கூ)

திருக்கதிதம்

150. கதைமெய் யுரையாக் கழறியோ ரங்கத்
துயர்ந்தோர் தலைவனுந் தலைவியு மாகப்
பாரதி விருத்தி பரிவிற் றொடுத்துச்
செந்தா மரைக்கட் டிருமகள் போந்து
நந்தா வின்ப நறும்பாட் டிசைப்ப
வழங்குறு வதுவே வளர்திருக் கதிதம்.

கதை மெய்யுரையா கழறி - நாடகக் கதையினை மெய் யுரைக் கதையதாகக் கூறி, ஒன்று அங்கத்து - ஒரேயங்கத் தில், உயர்ந்தோர் தலைவனும் தலைவியுமாக - உயர்ந்த சாதி யோர் தலைவனும் தலைவியுமாகப் பொருந்திநிற்ப, பாரதி விருத்தி பரிவில் தொடுத்து - பாரதிவிருத்தியினை யன்புடன் சேர்த்து, செம்மை தாமரைக்கண் திருமகள்-செய்ய தாமரை யில் வதியும் இலக்குமி, போந்து - எதிர்வந்து, நந்தா இன் பம் நறும் பாட்டு இசைப்ப வழங்குறுவதுவே - கேடிலாத இன்பமுடைய இனிய பாடல்களைப் பாடுமாறு நடைபெறக்

கூறுவதே, வளர் திருக்கதிதம்-மேன்மேலும் சுவை வளர்ச்சி யினையுடைய திருக்கதிதம் என்னும் உபசாதியாம்.

குறிப்பு:—மெய்யுரைக்கதையி னிலக்கணத்தை முன்னர்ப்பொதுவியல்பிற் காண்க. பரிவு: ஈண்டைத் தக்கவாறியைத்தலாம். செந்தாமரை: பிறிதினியைபு நீக்கிய விசேடணம். (நூ)

151. திருமொழி யெடுத்து மருவுறப் பெரிதுந்
தொடுப்பது வேயெனத் துணிநரு முளரே.

திருமொழி எடுத்து மருவு உற பெரிதும் தொடுப்பதே-'திரு' என்ற அச்சொல்லையே பலகாலும் பொருந்தச் சேர்த்திசைப்பதே, என - (அத் திருக்கதிதம் என்னுமுபசாதி) யென, துணிநரும் உளர் - துணிந்து கூறுபவரும் உளர்.

குறிப்பு:—இவ்வாறு கூறுதல் நகைச்சுவைமட்டில் விளக்கத்தக்கதேயன்றி வேறு பொருணலஞ் சிறந்து பொலிவுபெறுமையின் இழிவுசிறப்பும்மையாற் றழீஇயினர். முற்சூத்திரத்திற்கும் இச்சூத்திரத்திற்கும் உள்ள வேற்றுமை யென்னையோவெனின், முன்னர்ச் சூத்திரப்படி யமைந்த சாதியுள் இலக்குமி யுருக்கொடு தோன்றிப் பாடுவதும் பேசுவதுமாக, இதன்படி யமைந்தசாதியுள் அன்னணமின்றித் 'திரு' என்ற அவ்வொருமொழியையே பலகாலும் பலவேறு சொற்களோடும் எடுத்து மொழிதல் எனக்கொள்க. இதனை, 'ஸ்ரீகதிதம்' என்ப வடநூலார். திருமொழி: இருபெயரொட்டுப் பண்புத் தொகை. கிரீடாரஸாதலம் என்னும் வடநூல் இவ்வுபசாதிக்குதாரணமாம். (நூ)

சிற்பகம்

152. சமகிலே நகையிவை தவிர்ந்த சுவைத்தா
யந்தணன் றலைவனு வங்கநான் கிற்றூ
யுபநா யகனு மூடன்கொளப் பெற்று
நன்காட்டு நிலையை நன்கு புனைந்து
தெரித்து நிற்பது சிற்பக மென்ப.

சமநிலை நகை இவை தவிர்ந்த சுவைத்து ஆய் - சமநிலை நகையென்னுஞ் சுவைகள் நீங்கிய ஏனைய சுவைகளைப்பெற்ற தாய், அந்தணன் தலைவனை - பார்ப்பான் தலைமகனுக, அங்கம் நான்கிற்ரு - நான்கு அங்கங்களைப்பெற்றதாய், உபநாயகனும் உடன் கொள பெற்று - உயநாயகனையுந் தன்னகத்துப் பொருந்தக்கொண்டு, நன்காட்டு நிலையை நன்கு புனைந்து தெரித்து நிற்பது, இடு காட்டினது நிலைமையை நன்முக விளக்கியுரைத்து நிற்பது, சிற்பகம் என்ப - சிற்பகம் என்று சொல்லுவார்கள் வடமொழி நாடக நூலோர்.

குறிப்பு:—நன்காடு: மயானம். உபநாயகன்றன் இலக்கணத்தை முன்னர்ப் பொதுவியல்பிற் கண்டு கொள்க. இவ்வுபசாதிக்குக் கனகவதீமாதவம் என்பதை யுதாரணமாகக் காட்டுப வடநூலார். (கூறு)

விலாசிகை

153. இன்பச் சுவைமுழு தினிது புனைந்து
பதின்வகைக் கோலமும் பண்புறக் காட்டி
யங்கமொன் றிற்களி பொங்குறு விடனும்
பீட மர்த்தனும் பேண்விதூ டகனு
மிழிதக வுடைய வெழின்மிகு தலைவியும்
வளர்நலஞ் சான்ற களநிலைப் பொலிவுங்
குலாவி யொளிர்வது விலாசிகை யாகும்.

இன்பம் சுவை முழுது இனிது புனைந்து - உவகைச் சுவை முழுவதையுஞ் செவ்விதாகப் புனைந்து கூறி, பதின்வகை கோலமும் பண்பு உற காட்டி – பத்துவகைப்பட்ட கோலங்களையுஞ் செவ்வனே யெடுத்துக்காட்டி, அங்கம் ஒன்றில் - ஒரேயங்கத்தில், களி பொங்குறு விடனும் – களிப்பு மிக்க விடனும், பீடமர்த்தனும்-பீடமர்த்தநாயகனும், பேண் விதூடகனும் - யாவராலும் விரும்பப்படும் விதூடகனும், இழி தகவு உடைய - இழிந்த தன்மையினையுடைய, எழில் மிகு தலைவியும் - அழகு மிக்க தலைவியும், வளர் நலம் சான்ற - மேன்மேலும் வளர்ச்சியினையுடைய நன்மை மிக்க, களம்

நிலை பொலிவும் - களங்களிற் பலவகையான நிலைபெற்ற காட்சியின் விளக்கமும், குலாவி – பொருந்தி, ஒளிர்வது-இனிது விளங்குவது, விலாசிகை ஆகும் – விலாசிகை யென்னும் உபசாதியாம்.

குறிப்பு:—பதின்வகைக் கோலம் இன்னவென முன்னர் 142–ஆஞ் சூத்திரவுரையுட் கூறினும். விடன் பீடமர்த்தன் விதூடகன் என்பவர்தம் இயல்பினை முன்னர்ப்பொதுவியல்பிற் காண்க. பேண் விதூடகன்: தலைமக்கடம்மாற் பேணப்பெற்ற விதூடகன் எனக்கூறினுமமையும். களம் :

"பகருமோ ரிடத்தினே நிகழ்ந்திடு காட்சியைக்
களமென மொழிப மிளிர்மேற் றிசையோர்."

இதனிலக்கணத்தை 191-ஆஞ் சூத்திர முதலியவற்றுட் காண்க. நாமகள் சிலம்பின் இருபதாம் பரலாகிய 'மஞ்சு பாஷிணி' என்பது இவ்வுபசாதிக் குதாரணமாம். (சூசு)

துன்மல்லிகை

154. விடன்ற னிலீலை விளம்புமுத லங்கமும்
விதூடகன் வினைசொலு மிரண்டா மங்கமும்
பீட மர்த்தன் பெருஞ்செயல் பேசு
மூன்ரு மங்கமு மிழிதலை வன்ரெழி
லாடல்கள் சொல்லு நான்கா மங்கமு
மேவிக் காமுக ராவலிற் போதரக்
கைசிகி பாரதி காட்டு நெறித்தாத்
தொடுத்துப் புனைவது துன்மல் லிகையே.

விடன்தன் இலீலை விளம்பு முதல் அங்கமும் - விடனுடைய விளையாட்டினை யெடுத்துக்கூறும் முதல் அங்கமும், விதூடகன் வினை சொலும் இரண்டாம் அங்கமும் - விதூடகனுடைய செயலினைக்கூறும் இரண்டாமங்கமும், பீடமர்த்தன் பெருமை செயல் பேசும் மூன்றும் அங்கமும் - பீடமர்த்த நாயகனது பெருமை வாய்ந்த செய்கையினை யெடுத்துரைக்கும் மூன்றும் அங்கமும், இழி தலை

வன் தொழில் ஆடல்கள் சொல்லும் நான்காம் அங்கமும் - இழிதகவினையுடைய தலைவனது தொழில்களையும் விளையாடல்களையு மெடுத்துக்கூறும் நான்காம் அங்கமும், மேவி-பொருந்தி, காமுகர் - விரகிகள், ஆவலில் போதர - மிக்க ஆவலினையுடையராய் நடைபெற, கைசிகி பாரதி காட்டும் நெறித்தா - கைசிகி பாரதி யென்னும் விருத்திகளைக் காட்டும் நெறியினை யுடையதாய், தொடுத்து புனைவது தன்மல்லிகை-நாடக வாசிரியராற் தொடுக்கப்பெற்று விளங்குவது தன் மல்லிகை யென்னும் உபசாதியாகும்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. இச்சூத்திரத்தானே யிச்சாதி நாலங்கமுடைத்தென்பது பெறப்படும். இதற்கு விந்துமதி என்பதை யுதாரணமாகக் காட்டுப. முன்னர் விடவிதூடகரிவர்களது செயல்களும் பின்னர் இழிதலைவன் தொழில் முதலியனவுங்கூறுதலின் நடுவட் 'பெருஞ்செயல்' என்பது மிகைபட்ட செயல் என்பதாம். (கூஎ)

பிரகரணி

155. நாட கத்தி னொடிகை வேறு
படுமள வாகப் பிரக ரணத்திற்
றான்வேறு படூஉத் தலைவனுந் தலைவியும்
வணிகர்க ளாக மற்றைய வெல்லா
நாடிகை போற்பொலி வதுபிர கரணி.

நாடகத்தின் - நாடகத்தினின்றும், நாடிகை வேறுபடும் அளவாக - நாடிகை யெத்துணை வேறுபாடுறுமோ அத்துணை, பிரகரணத்தில் - பிரகரணத்தினின்றும், தான் வேறுபடூஉ - தான் வேறுபட்டு, தலைவனும் தலைவியும் வணிகர்களாக—, மற்றைய எல்லாம் - ஏனையவாவும், நாடிகைபோல் பொலிவது - நாடிகையினைப் போல விளங்குவது பிரகரணி - பிரகரணியென்னு முபசாதியாம்.

குறிப்பு:—படூஉ: சொல்லிசை யளபெடை பிண்டைச் செய்யுளிசையையும் நிறைத்தது. இச்சாதிக்குதாரணம்

காமகள் சிலம்பின் 19-ஆம் பரலாகிய குழுதமாலினி என்ப தாம். (சுஅ)

அல்லீசம்

156. தொழில்பிறி தாக மொழிவகை தன்னிற்
றீரோ தாத்த வோராத் தலைவனு
மேழே யெட்டே பத்தே யென்னு
மெண்ணுடை மகளிரு நண்ணி யின்னிசைப்
பாட்டுப் பற்பல தீட்டப் பெறீஇ
விருத்தி கைசிகி யருத்தியிற் காட்டு
மங்க மொன்றுறு மறைந்தவல் லீசம்.

தொழில் பிறிது ஆக - (தீரோதாத்தனுடைய) தொழில் மாத்திரையின் வேறுபட்டுநின்று, மொழி வகை தன்னில் - பேச்சு விகற்பங்களில் எல்லாம், தீரோதாத்தன் - தீரோதாத் தனது தன்மை வாய்ந்த, ஓரா தலைவனும் - ஆராய்ந்தறிதல் இல்லாத தலைமகனும், ஏழே எட்டே பத்தே என்னும் எண் ணுடை மகளிரும் - ஏழு எட்டு அல்லது பத்து என்னும் அளவினையுடைய மகளிரும், நண்ணி - பொருந்தி, இனிமை இசை பாட்டு பற்பல தீட்ட பெறீஇ - இனிய இசை வாய்ந்த பாடல்கள் பல எழுதப்பெற்று, கைசிகி விருத்தி அருத்தி யில் காட்டும் - கைசிகி யென்னும் விருத்தியினை அன்புறத் தெரிக்கும், அங்கம் ஒன்று உறும் - அங்கம் ஒன்றினைப் பொருந்தி நிற்கும், அறைந்த அல்லீசம் - ஈரொன்பான் உப சாதியுள் ஒன்றெனக் கூறிய அல்லீசம் என்னும் உபசாதி.

குறிப்பு:—'ஏழே எட்டே பத்தே' யென்றமையால் இடையிலுள்ள ஒன்பதினையுங் கொள்க வென்பாருமுளர். பெறீஇ - சொல்லிசையளபெடை யீண்டுச் செய்யுளிசையை யும் நிறைத்தது. இவ்வகையினுக்குக் கேளீரைவதகம் என் பதை யுதாரணமாகக் காட்டுப வடநூலார். (சுசு)

பாணிகை

157. தகவறு தலிவனுஞ் சுகுணைத் தலிவியு
முற்றுடை நலமினி தொளிரக் காட்டிப்
பாரதி கைசிகி யாரப் புணைந்தோ
ரங்கத் தியல்வ தரும்பா ணிகையே.

தகவு அறு தலிவனும் - தகுதிக்குணம் அற்றதலிவனும், சுகுணை தலிவியும் - சுகுணையாகிய தலிவியும், உற்று - பொருந்தி, உடை நலம் இனிது ஒளிர காட்டி - உடையினது நயம் நன்கு விளங்கத் தெரித்து, பாரதி கைசிகி ஆர புணைந்து - பாரதி கைசிகியென்னும் விருத்திகளைப் பொருந்துமாறு கொண்டு, ஒன்று அங்கத்து இயல்வது - ஒரே யங்கத்தில் நடைபெறுவது, அருமை பாணிகை - காணுநரால் மன வெழுச்சியின்றிப் பார்த்தற்கரிய பாணிகையென்னும் உபசாதியாம்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. உடைநலன் காட்டலாவது : பற்பலவிதமான உடைகளைத் தத்தஞ்செவ்வி தோன்ற உடுத்து நின்றியங்குதலாம். உடையைக் கூறினமையால் ஒற்றுமைபற்றி அணியினையுங் கொள்க. இவ்வகைக்குதாரணம் காமதத்தையென்று வடநூலார் கூறுப. (சம)

சாதிப்புறனடை

158. பகர்ந்த சாதியுட் படாஅ தளவு
மொருவகைச் சாதியின் மருவு மிலக்கணம்
பிறிது சாதியி னுறுமிய லோடு
கலந்து வருநவும் வலந்த வியல்புகள்
குறைந்துஞ் சிறிது கூடியும் வருநவும்
பொதுப்பட நாடக மென்று புகலுப.

பகர்ந்த சாதியுள் படாஅதனவும், மேற்கூறிய சாதி உபசாதி வகைகளுள் அகப்படாதனவும், ஒன்று வகை சாதியின் மருவும் இலக்கணம் - ஒருவகைச் சாதியின்கட்

பொருந்துமிலக்கணம், பிறிது சாதியின் உறும் இயலோடு - மற்றைச் சாதியின்கட் பொருந்துமிலக்கணத்துடன், கலந்து வருநவும் - சேர்ந்து வருவனவும், வலந்த இயல்புகள் குறைந்தும் - சொல்லியவிலக்கணங்களுட் சில குறைந்தும், சிறிது கூடியும் - சிலவியல்புகள் சேர்ந்தும், வருநவும் - வருவனவும், நாடகம் என்று - நாடகமென்னும் பெயர்பட, பொதுப்பட புகலுப - யாவற்றிற்கும் பொதுவாகப் புகலுவார்கள்.

குறிப்பு:—படாஅதன : செய்யுளிசையளபெடை. மேற் குறித்த பலசாதி உபசாதிகளுட் படாதனவற்றையும், ஒரு சாதியினிலக்கணம் மற்றைய சாதியினிலக்கணத்துடன் கலந்து வருவனவற்றையும், ஒன்றன்கண்ணேயே சில வியல்புகள் குறைந்தும் சில வியல்புகள் மிக்கும் வருவனவற்றையும், நாடகமென்று பொதுவகாச் சொல்லுவார்கள் என்பதே யிதன் கருத்தாம். இவ்வாறு புறனடையான் அமைக்க வேண்டிய நாடகங்கள் பலவுளவாதல் கண்டு இன்னணஞ் சூத்திரம் வகுத்தார்போலும். (சக)

(ஈ) ஒழிபு

நயநிலைப்படலம்

159. பெரியோர் தலைவரா மெய்ப்பொருள் பற்றிச் செயலுறு நாடக நயநிலைப் படலம்.

பெரியோர் தலைவரா - ஆன்றோர் நாடகத் தலைவராகப் (போந்து), மெய்ம்மை பொருள் பற்றி - உண்மைப் பொருளைத் தெரிக்குமாறு, செயல் உறு நாடகம் - செய்யப்பெறு நாடகம், நயநிலைப்படலம் - நயநிலைப்படலமாகும்.

குறிப்பு:—"நயநிலைப்படலமாவது நாடகம்;கூத்தமார்க்க மென்பதுமது; அது பெரியோரைத் தலைமக்கள் மேவச் செய்யப்பட்ட மெய்ப்பொருள் பற்றிவருதல்" என்ற வீர சோழிய வுரையாசிரியர் பெருந்தேவனார் கூற்றினையு மீண்டுய்த் துணர்க. மெய்ப்பொருள்பற்றி வருதலாவது மெய்யுரைக் கதைத்தாக வருதலெனப் பொருள்கூறுதலும் எற்புடைத் தாம். (சஉ)

உண்ணாடகம்

160. ஒருநா டகத்தி னுள்ளே மற்றொரு
நாடகம் போந்து நண்ணலு முண்டஃ
துண்ணா டகமென வுரைக்கப் படுமே.

ஒன்று நாடகத்தின் உள்ளே மற்று ஒன்று நாடகம் போந்து நண்ணலும் உண்டு - ஒரு நாடகத்தி னுட்புறத் தேயே மற்றொரு நாடகம் பொருந்தி நிற்றலுமுண்டு, அஃது உண்ணாடகம் என உரைக்கப்படும் - அஃது உண்ணாடக மென்று சொல்லப்படும்.

குறிப்பு :—உள் + நாடகம்: உண்ணாடகம். இதற்குச் சேகப்பிரியரா லியற்றப்பெற்ற ஆங்கில நாடகமாகிய ஹாம் லேத் (Hamlet), நடுவேனிற்கனவு (Midsummer Night's Dream) என்னு நூல்களும் உண்ணாடகம் பொருந்தி நிற்றலை யுதாரணமாகக் கொள்க. பவபூதியா லியற்றப்பெற்ற உத்தர ராம சரித்திரத்தி னிறுதியின் ஏழாமங்கம் உண்ணாடகமாத லறிக. இதனை 'அந்தர் நாடகம்' என்பர் வடநூலார். (சஙூ)

மாநாடகம்

161. நால்வகைப் பதாகை நிலைகளு நயந்து
நாடகச் சிறப்பு முழுவது நண்ணி
யுவகை பெருமித வுயர்வு தெரித்துப்
பத்தங் கத்திற் பண்புற வியல்வது
மாநா டகமா வகுத்தனர்
மேனுட் புலவ ரீனோர்க் கெனவே.

நான்கு வகை பதாகை நிலைகளும் - நான்கு விதமான பதாகைநிலைகளும், நயந்து - நன்குபொருந்தி, நாடகம் சிறப்பு முழுவதும் நண்ணி - நாடகத்திற்கு வேண்டிய சிறப்புக்கள் முழுவதும் பொருந்தி, உவகை பெருமிதம் உயர்வு தெரித்து- உவகைச்சுவை வீரச்சுவை யென்னுமிவையிற்றின் மேம் பாட்டினைக் காட்டி, பத்து அங்கத்தின் பண்பு உற இ யல்வது - பத்து அங்கத்துடன் அழகுபொருந்த நடைபெறு

வது, மாநாடகம் என - மாநாடகமென்று, மேல் நாள் புல வர் - முற்காலத்து நாடக நூற்புலமையோர் ஈரேர்க்கு என - இவ்வுலகத்துள்ளவர்க்கென்று, வகுத்தனர் - வகுத் துக்கூறினர்

குறிப்பு :—நால்வகைப் பதாகைநிலைகளை முன்னர் 114-ஆஞ் சூத்திரத்துட் காண்க. உவகை பெருமித வுபர்வு தெரித்தலாவது: உவகைபெருமிதமென்னு மிச்சுவைகளைப் பெரிதும் பொருந்தக் கூறல். இதற்குப் பாலராமாயணம் என் னும் வடநூல் உதாரணமென்ப. (சசு)

முந்நாடகம்

162. ஒருபெரு விடயத் துற்றிடு நல்ல
முதலிடை கடையெனு மூன்று பகுதியுந்
தனித்தனி மூன்று நாடக மாகக்
கோவைப் படுத்துக் கூறலு முண்டதை
முந்நா டகமென மொழிந்தனர் மேலையோர்.

ஒன்று பெருமை விடயத்து - ஒரு பெரிய விடயத்தின் கண், உற்றிடும் - பொருந்தும், முதல் இடை கடை எனும் - ஆதி மத்தியம் அந்தமென்று சொல்லப்படும், மூன்று நல்ல பகுதியும் - மூன்று நன்முய்த் தெளிவுபொருந்திய பாகங்களை யும், தனி தனி மூன்று நாடகம் ஆக - தனித்தனியாக மூன்று நாடகங்களாக முடித்து, கோவை படுத்து - அவற்றை ஒரு தொடர்ச்சியாகச் சேர்த்து, கூறலும் உண்டு - நாடகப்புலவர் சொல்லுதலும் வழக்காம், அதை மேலையோர் முந்நாடகம் என மொழிந்தனர் - அதனை மேலைத்திக்கிலுள்ள நாடக வாசிரியர் முந்நாடகமென்று கூறினர்.

குறிப்பு:—முந்நாடகம்: Trilogy. இனி 'மேலையோர்' என்பதற்கு வேறுபடப் பொருள்கோடலுமாம். சேகப்பிரியர் தம் நாடகத்துள் ஒன்றுகிய ஹென்றி ஆறுவன் (Henry VI) இவ்வகைக்கு உதாரணமாம். உரோம கிரேக்க நாடகங்களுட் பல இவ்வகைக் குதாரணமாம். (சஙு)

நாடகநூல்

163. நடித்துக் காட்டு நலமில வாகுந
நாடக நூலென ஞாலத் தியலும்.

நடித்து காட்டும் நலம் இல ஆகுந - (நாடகத்திற்குரிய இயல்புகள் யாவும் பொருந்தி நிற்பினும்) நடித்துக் காட்டுந் தன்மை நீங்கியவை, நாடகம் நூல் என ஞாலத்து இயலும் - நாடகநூலென்று உலகின்கண் வழங்கப்பெறும்.

குறிப்பு:—இதற்கு மஞ்ஞைன்மணீயம் உதாரணமாமாறு காண்க. இக்கருத்தே ஆங்கில நூலார்க்கும் ஒப்பமுடிந்த தாமாறு தெளிக. (சசு)

நாடகக்காப்பியம்

164. புலவன் கூற்றிற் பொலிவ தாகி
நல்லிசைப் பாவொடு நாடக வுறுப்பிடை
நண்ணி நடப்பது நாடகக் காப்பியம்.

புலவன் கூற்றில் பொலிவது ஆகி - நூலாசிரியனது கூற்றுகவே விளங்குவதாய், நன்மை இசை பாவொடு - நல்லிசை வாய்ந்த பாடல்களோடு, நாடகம் உறுப்பு இடை நண்ணி நடப்பது - நாடகத்திற்கு வேண்டிய இலக்கணங்களுட் சில இடையிடையே பொருந்தி நடப்பது, நாடகக் காப்பியம் - நாடகக் காப்பியம் என்னும் பெயரினையுடையதாம்.

குறிப்பு:—உறுப்பு: அவயவம். ஐம்பெருங்காப்பியங் களுளொன்றுகிய சிலப்பதிகாரம் இதற்குதாரணமாம். கோவைகளெல்லாம் நாடகக் காப்பியங்களாமாறு காண்க. இதுவே சொக்கப்பநாவலர் கருத்துமா மென்பதறிக. (சள)

கூத்து நூல்

165. கவிகூற் றிடையே கவிலப் பெறீஇ
யிழிசினர் நடிக்கு மியல்பிற் றுகிக்
கூத்தும் பாட்டுங் கொண்டியல் வதனைக்
கூத்துநூ லென்னக் கோடுங் குறித்தே.

கவி கூற்று - கவிஞனது கூற்று, இடையே - நடுவில், நவில பெறீஇ - சொல்லப்பெற்று, இழிசினர் நடிக்கும் இயல் பிற்று ஆகி - கீழ்மக்கள் நடித்துக்காட்டும் தன்மையினை யுடையதாய், கூத்தர் பாட்டும் கொண்டு இயல்வதனை - கூத்தும் பாட்டும் தன்னகத்துப் பொருந்தி நடப்பதனை, கூத்து நூல் என்ன குறித்து கோடும் - கூத்துநூல் என்று ஆய்ந்து கொள்ளுவாம்.

குறிப்பு:—கவிகூற்று: நூலாசிரியர் தங்கூற்று. இச்சாதி நூற்கு இராமநாடகம் ஏற்ற உதாரணமாம். (சஅ)

166. குறமும் பள்ளுங் கூத்து நூல்களாம்.

குறமும் பள்ளும் கூத்து நூல்கள் ஆம் - குறமும் பள்ளும் கூத்து நூல்களுள் அடங்கும்.

குறிப்பு:—குறம்: மீனாட்சியம்மை குறம், குற்றாலக்குற வஞ்சி முதலிய தக்கவுதாரணங்களாம். பள்: முக்கூடற்பள், பாரி விநாயகர்பள் முதலிய ஏற்றவுதாரணங்களாம். (சகூ)

விருத்தி

167. நாடகத் திற்கெழி னல்குந் தாயா
யுறுதிப் பொருடா னிஃதென வுரைத்துந்
தலைவ ராவா ரிவரெனச் சாற்றியுஞ்
சுவையி னமைதி தெரிக்குஞ் சொற்றொடை
மேவியு நிற்பது விருத்தி யாகும்.

நாடகத்திற்கு எழில் நல்கும் தாய் ஆய் - நாடகத்தி னுக்கு அழகினைத்தரும் தாய்போன்றதாய், உறுதி பொருள் தான் இஃது என உரைத்தும் - உண்மைப் பொருள் இன் னதுதான் என்று தெளிவு பொருந்தக் கூறியும், தலைவர் ஆவார் இவர் என சாற்றியும் - தலைவர் ஆகியவர் இன்னர் என்று கூறியும், சுவையின் அமைதி தெரிக்கும் சொல் தொடை - சுவையினது பொருத்தத்தினைத் தெரிவிக்குஞ் சொற்றொடர்கள், மேவியும் நிற்பது விருத்தி ஆகும்-பொருந் தியுமிருப்பது விருத்தியாகும்.

குறிப்பு:—உருவகவணி. வடமொழியில் விருத்திக்கு இலக்கணங்கூறிய ஆசிரியர் பலருடைய கருத்துக்களையும் நம் நாடகத் தமிழாசிரியர் இதன்கண் ஒருங்கு தொகுத்துக் கூறுமாறு காண்க. (நிo)

விருத்திவகை

168. அவைதாம்,
சாத்து வதியே யார படியே
கைசிகி பாரதி யெனநான் கென்ப.

அவைதாம்—, சாத்துவதியே—, ஆரபடியே—, கைசிகி—, பாரதி—, என - என்று, நான்கு என்ப - நான்காம் என்று சொல்லுவார்கள்.

குறிப்பு:—இவையிற்றினை முறையே பின்னர் விளக்கியிருத்தல் காண்க. (நிக)

சாத்துவதி

169. அறம்பொரு ளாக வரிய கடவுளர்
தலைவ ராகச் சற்று மென்பொருள் [புச்
பிறங்குசொற் றொடைத்தாய்ப் பெருமித வியப்
சுவைத்தாய் வருவது சொற்றசாத் துவதி.

அறம் பொருள்ஆக - அறம் பொருந்திய பொருளாக, அரிய கடவுளர் - அருமையான கடவுளர்கள், தலைவர்ஆக - நாடகத் தலைவராகவும், சற்று மென்மை பொருள் பிறங்கு சொல் தொடைத்து ஆய் - சிறிது மெல்லிய பொருள் விளங்குகின்ற சொற்றொடைகளையுடையதாய், பெருமிதம் வியப்பு சுவைத்து ஆய் - வீரம் வியப்பு என்னுஞ் சுவைகளையுடையதாய், வருவது - வந்து பொருந்துவது, சொற்ற சாத்துவதி - நான்களுள் ஒன்றெனக்கூறிய சாத்துவதி யென்னும் விருத்தியாம்.

குறிப்பு:—மென்பொருள்: மிருதுவானவிடயம். இதன்கண் வீரம், சௌரியம், கருணை, தயை, பெருமையாதிய

குணங்கள் பொருந்தி நிற்குமேயொழிய காமச்சுவை சிறிதும் பயிலாதாம். எனினும் களிப்புமிக்கதே. சிறிதும் துக்கமற்ற தாயினும் பயப்பின்பாலதாம். இதனை வடநூலார் உத்தாபகம், சாங்காத்தியம், சல்லாபம், பரிவர்த்தகம் என நான்காகப் பிரித்திருக்கின்றனர், பகைவனை வீராவேசங்கொள்ளுமாறியற்றுங்கூற்று உத்தாபகமாம். செவியறிவுறாஉவினுதல் செல்வத்தினுதல் அதிர்ஷ்டத்தினுதல் நட்பிற்கிடையூறுவினாத்தல் சாங்காத்திய மென்னப்படும். பல்விதமான உணர்ச்சிகளையும் தன்னகத்துக்கொண்டு இயலும் மேம்பாடுற்ற சம்பாஷணை சல்லாபம் என்னப்படும். செய்யவெண்ணித் தொடங்கிய கருமத்தினை விடுத்துப் பிறிதொன்றினைச் செய்தல் பரிவர்த்தகம் என்னும் பெயரினையுடையதாம். இவைகட்குதாரணங்கள் நாடகங்களுட் பயின்றுவருதலையாங்காங்குக் காண்க. (நூ)

ஆரபடி

170. பொருள்பொரு ளாகப் பொங்கிய வீரர்
தலைவ ராக வன்பொருண் மிகவு
மேவுசொற் றொடைத்தாய் வெகுளிச் சுவையினி
தடைந்து வருவ தார படியே.

பொருள் பொருள் ஆக- பொருளே பொருந்திய பொருளாக, பொங்கிய வீரர் தலைவர் ஆக - மேலோங்குகின்ற வீரத்தன்மையுடைய சூரர் நாடகத்தலைவராக, வன்மை பொருள் மிகவும் மேவு சொல் தொடைத்து ஆய் - வலிய பொருள் மிகுதியும்பொதிந்த சொற்றொடைகளையுடையதாய், வெகுளி சுவை இனிது அடைந்து வருவது - கோபச்சுவை செவ்வனே பொருந்தி வருவது, ஆரபடி - ஆரபடியென்னும் விருத்தியாம்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. இவ்வாரபடி விருத்தியின் கண் இந்திரசாலம் மந்திரவாதம், சண்டை, வெகுளி, அவலம், சிறைப்படல், கொலை முதலிய செயல்கள் பொருந்தி நிற்கும். இவ்வாரபடி விருத்தியும் வஸ்துஸ்தாபனம், சம்

பேடம், சம்க்ஷிப்தி, அவபாதனம் என நான்கு வகைப்படும். இந்திரசால மகேந்திரசால மந்திரவாதவிஞ்சைகளாற் பற்பல தோற்ற முண்டாவதற்கு வஸ்துத்தாபனம் என்பது பெயர். மிக்க கோபமுடையாருங் கலக்கமுடையாரு மொருவரை யொருவர் சந்திக்குமாறு நேரின் அது சம்பேடமாம். யுக்தி யாணுதல் தந்திரத்தினாலாதல் சிலவிடயங்களைச் சுருக்கமாய் ஒழுங்குபடுத்தலும் ஒன்று தன்னிலையிற் பிறழ்ந்து நீங்க மற்றொன்றினை அந்நிலையிற் பொருத்தலும் சம்க்ஷிப்தி யென்னப்படும். வஞ்சகம், பயம், உடன்போக்கு, களிப்பு, தப்பியோடுதலாதியவற்றின் கலப்பினாலாய குழப்பத்தினை அவபாதனம் என்ப. உதாரணங்கள் வந்துழிக் காண்க. (நிகூ)

கைசிகீ

171. ஆடல் பாட லணியுடை மேவிக்
காமம் பொருளாக் கழிபெருங் காமுகர்
தலைவ ராக மென்பொரு டீனத்தவ
வுரைசொற் றொடைத்தா யுவகைச் சுவையி
னினிமை பூத்துநன் கெழிலன் பரும்பிக்
காதன் மலர்ந்து கரவினிற் கோடல்
காட்டி நிற்பது கைசிகி யாகும்.

ஆடல் பாடல் அணி உடை மேவி - ஆடுதலும் பாடு தலும் ஆபரணங்களும் நல்லுடைகளும் பொருந்தி, காமம் பொருளா - காமப்பொருளே தன்னகத்துக் கூறும் பொரு ளாகக் கொண்டு, கழி பெருமை காமுகர் - மிக்க காமத்தினை யுடையோர், தலைவர் ஆக - தலைவராய்ப் பொருந்தி நிற்க, மென்மை பொருள் தீன தவ உரை சொல் தொடைத்து ஆய் - மெல்லிய பொருளை மிகுதியுங்கூறுஞ் சொற்றொடை களை யுடையதாய், உவகை சுவையின் இனிமை பூத்து - உவகைச் சுவையின் இன்பம் பொருந்தி, நன்கு - நன்றாக, எழில் அன்பு அரும்பி-அழகும் அன்பும் பொருந்தி, காதல் மலர்ந்து - காதலானது இனிதுவிளங்கத் தோன்றி, கரவி னில் கோடல் காட்டி - களவு வழியாகக் காமந் துய்த்துக்

கோடலே யினிது தெரித்து, நிற்பது - பொருந்தியிருப்பது, கைசிகியாகும்—.

குறிப்பு:—தவ: உரிச்சொல், மிகுதிப் பொருளைக் காட்டுவது. எழில் அன்பு: அழகிய அன்பு என்று கூறலுமுமாம். கோடல்: முதனீண்ட தொழிற்பெயர். இதுவும் நருமம், நருமஸ்பஞ்சம், நருமஸ்போடம், நருமகருப்பம் என நால் வகைப்படும். காதலியின் மனத்தை வசீகரிக்கும்படி அசதியாடிப் பேசுதல் நருமமெனப்படும். இதுவும் விநோத வார்த்தையென்றும், சாதுரிய வாசைமொழியென்றும், சாதுரிய பயமொழியென்றும் மூவகைப்படும். முதலிற் களிப்பினையும் பின்னர்ப் பயத்தினையுந் தரற்பாலதாய அன்புடைத்தலைவன் றலைவியராகிய இருவர்தம் முதற்கலப்பினை நருமஸ்பஞ்சம் அல்லது நர்மஸ்பூர்ஜம் என்று சொல்ப. காமக்குறிகள் சிறிது புலப்பட்டுத் தோன்ற நிற்றல் நருமஸ்போடம் என்னப்படும். காமமிக்க தலைவன் கரவினிற் பலதொழில் புரிதல் நருமகருப்பம். இவையிற்றினுக் குதாரணங்கள் நாடகங்களுள் ஆங்காங்கு வந்துழிக்காண்க. உருவகவணி. (நிச)

பாரதி

172. முன்னை மூன்றும் போலா தாகி
முன்னுரைக் கண்ணே முதன்மையி னியன்று
கூத்தன் றலைவனு நடிநடர் பொருளாக்
காட்டியு முரைத்துஞ் சற்று வன்பொரு
ளெய்துசொற் றொடைத்தா யிழிப்பு மச்சமும்
பரந்து வருவது பாரதி யென்ப.

முன்னை மூன்றும் போலாதாகி - முதற்குறித்த மூன்றினையும் போலாததாகி, முன்னுரைக் கண்ணே - முன்னுரையின்கண், முதன்மையின் இயன்று - முதன்மைத் தன்மை பெற நடைபெற்று, கூத்தன் தலைவனு - கூத்தன் நாடகத் தலைவனுக, நடி நடர் பொருளா - நடியும் நடர்களும் கூறப்படும் பொருள்களாக, காட்டியும் - குறிப்பாகக் காட்டியும், உரைத்தும் - வெளிப்படையாக எடுத்துக் கூறியும், சற்று

வன்மை பொருள் எய்து - சிறிது வலிய பொருள் பொருந்திய, சொல் தொடைத்து ஆய் - சொற்றொடையினை யுடைய தாய், இழிப்பும் அச்சமும் பரந்து வருவது - இழிப்புச் சுவையும் அச்சச் சுவையும் நிரம்பி வருவது, பாரதி என்ப - பாரதி விருத்தி யென்று சொல்லுவார்கள் நாடகநூ லுணர்ந்தோர்.

குறிப்பு:—முன்னை மூன்று: ஆரபடி, சாத்துவதி, கைசிகி. முன்னுரை: பிரஸ்தாவனை; இதனிலக்கணத்தினை 147 ஆஞ் சூத்திரவுரையிலுரைத்தாம். மேற்குறித்த சூத்திரங்களானே ஆரபடி மிக வன்பொருளுடைத்தென்பதும், பாரதி சற்று வன்பொருளுடைய தென்பதும், கைசிகி மிக மென்பொருள் உடைத்தென்பதும் இனிது புலப்படும். (நிநி)

சிறப்பியல்புபுறனடை

173. ஈதித னியல்பென் றோதுபு முற்றும்
விதிப்பள வின்மையின் மதிப்புல வாணர்
கூறின கொண்டு கூறு கொளலே.

ஈது இதன் இயல்பு என்று ஓதுபு முற்றும் விதிப்பு - இஃது இன்னதன் இயல்பு என்றுகூறி முழுதையும் விதி கூறி விளக்குதற்கு, அளவின்மையின் - (நாடக நூலின் இலக்கணங்களுள்) வரையறையின்மையால், மதி புலம் வாணர் - ஆராய்ந்தறியும் அறிவினையுடைய ஆன்றோர், கூறின கொண்டு - கூறின விடயங்களைக்கொண்டு, கூறு கொளல் - கூறுதவற்றைச் சேர்த்தியைத்துக் கொள்ளுக.

குறிப்பு:—ஓதுபு: வினையெச்சம். விதிப்பு: தொழிற்பெயர். மதி: முதனிலைத் தொழிற்பெயர். கூறின, கூறு: வினையாலணையும் பெயர்கள். ஏகாரம்: ஈற்றசை. (நிசு)

சிறப்பியல்பு முற்றிற்று

கூ. உறுப்பியல்பு

174. உறுப்பியல் பென்ப துணர்த்துங் காலைச்
சிறப்புறு நாடகஞ் செறிந்த பகுதியின்
றன்மையா மவைதாம் வாழ்த்து நடாத்துநர்
முன்னுரை குறிப்பங் கங்களங் கூற்றுக்
கூத்துக் குணநவில் பின்னுரை யின்னன
பிறவுமா மென்னப் பேசினர் பெரியோர்.

உறுப்பு இயல்பு என்பது உணர்த்தும் காலை சிறப்பு உறு நாடகம் செறிந்த பகுதியின் தன்மையாம் - உறுப்பியல்பு இன்னதென்பதைக் கூறுமிடத்து அஃது சிறப்பு வாய்ந்த நாடகத்தின்கட் பொருந்திய பகுதிகளின் பண்பாம். அவைதாம் - அப்பகுதிகள், வாழ்த்து—, நடாத்துநர்—, முன்னுரை—, குறிப்பு—, அங்கம்—, களம்—, கூற்று—, கூத்து—, குணம் நவில் பின்னுரை - நாடகத்தின் நீதியாதிய குணங்களை யெடுத்துக் கூறும் பின்னுரை, இன்னன பிறவும் ஆம் - இவைபோன்ற பிறவும் ஆகும், என்ன பேசினர் பெரியோர் - என்று நாடக விலக்கணமுணர்ந்த அறிவான் மிக்கோர் கூறினர்.

குறிப்பு:—மேற்கூறிய வாழ்த்து முதலிய பகுதிகளின் இலக்கணத்தைப் பின்னர் வருஞ் சூத்திரங்களான் ஆசிரியர் நிரலே விளக்குதலை யுணர்க. 'குணம் நவில்' என விசேடித்தமையான் பின்னுரையின்கண் பரதவாக்கியமும் அடங்குமெனலை யுய்த்துணரவைத்தனர். (க)

(க) வாழ்த்து

175. எல்லாந் தானை யிலகு மிறைவனை
வணங்கிடு முகத்தா னிணங்கிய நாடகத்
தலைமக்க டம்மையு நலமுற வணங்குதல்
வாழ்த்தென வகுத்தனர் வடமொழி வல்லுநர்.

எல்லாம் தானுய் இலகும் இறைவனை வணங்கிடும் முகத்தான் - எப்பொருளுந் தானுக விளங்கும் கடவுளை

வணங்குமுகமாக, இணங்கிய நாடகம் தலைமக்கள் தம்மை யும் - எடுத்துக்கொண்ட நாடகத்திற் பொருந்திய தலைவன் தலைவியராகிய தலைமக்களையும், நலம் உற வணங்குதல்-நன்மை பொருந்த வணங்குதல், வாழ்த்து என - வாழ்த்து என்று, வடமொழி வல்லுநர் - வடமொழி நாடக விலக்கணம் நன் குணர்ந்தோர், வருத்தனர் - கூறினர்.

குறிப்பு:-இறைவன்-எல்லாப் பொருளிலும் தங்குபவன்; இறுத்தல் - தங்குதல். இவ்வாழ்த்தினை வடநூலார் 'நாந்தி' என்ப. நாந்தி அரங்க வழிபாடாகும். இஃது அரங்கத்தின் அதிதேவதையாகிய நந்திதேவரைப்பற்றி நிகழ்தலின் நாந்தி யென்னும் பெயர்த்தாயது. படைப்புக் காலத்தில் இறைவன் அருட்கூத்து நிகழ்த்துங்கால் அப்பெருமானது சங்கற்ப மாத்திரையால் நந்திதேவர் அரங்கமாந் தன்மை யெய்தின ரென்ப. ஆதலின் அரங்கவழிபாடு நாந்தியென வழங்கலா யிற்று. இக்காரணம்பற்றி முற்காலத்திய நாடக அரங்கங் களில் நந்திதேவரின் உருவமைத்து வைப்பதும் நாடக நடிக் கத் தொடங்குமுன் சூத்திரதாரன் முதலியோர் அதற்கு வழி பாடு செய்தலும் மரபாய் நிகழ்ந்துவந்தன. சுத்தானந்தப் பிர காச முடையார் நாடக அரங்கின் இலக்கணங் கூறுமிடத்து,

"அரங்கி னுயரமு மகலமு நீளமும்
பொருந்த நாடி யுரைக்குங் காலைப்
பூதரை யெழுதி மேனிலை வைத்து
நந்தி யென்னுந் தெய்வமு மமைத்து....." எனக்

கூறியது ஈண்டறியற்பாலது. வல்லுநர் - ந் பெயரீடை நிலை. ஆசிரியர் தமது கலாவதி நாடகத்தில்,

"மலர்மணம் போலெங்கு முறுபவனீ மாவின்ப
வாரிபுடை சூழுமுத்தி
யுலகினைப் பொதுநீக்கி யரசாளு மொருகோவை
யொளிர்சுயஞ் சோதிதன்னீ
யிலகுறு கலாவதி பராசத்தி யொடுமிளிரு
மீசனீ யிறைஞ்சிவாழ்வாம்

அலகிறிரு வீளையாட லயர்சிதா நந்தனையெ
மையணைப் பன்முறையுமே,''

என்னும் வாழ்த்துச் செய்யுளிற் கடவுளே வணங்குமுகத் தானே நாடகத் தலைமக்களாகிய கலாவதி சிதாநந்தரையு நல முறக் குறிப்பான் வணங்குதல் காண்க. (உ)

176. வாழ்த்துக் கூறுவோன் சூத்திர தாரனே.

வாழ்த்து கூறுவோன் சூத்திரதாரனே – மேற்கூறிய நாந்தியாகிய வாழ்த்தினை யாங்கிற் சொல்லுபவன் சூத்திர தாரனுவன்.

குறிப்பு:—'சூத்திரதாரனே' எனத் தேற்றேகாரங் கொடுத்தமையின் அன்னேன் கூறுதல் மரபாமென்பது போதரும். (ங)

(உ) நடாத்துநர்

177. நாடகந் தன்னை நடித்துக் காட்டுதற்
கேதுவாய் நிற்போ ரியம்பிய நடாத்துநர்.

நாடகம் தன்னை நடித்துக் காட்டுதற்கு - நாடகத்தினை யாங்கின்கண் நடித்துக் காட்டுதற்கு, ஏதுவாய் நிற்போர் – காரணமாய் இருப்பவர், இயம்பிய நடாத்துநர் - மேற்கூறிய நடாத்துந ரென்னும் பெயரினையுடையோராவர்.

குறிப்பு:—நாடாத்துநராவர் இவர் என்பதை வருஞ் சூத்திரத்தி லோதுவார். (ச)

178. அவர்தாஞ் சூத்திர தாரனு மவனைச்
சார்ந்தமாந் தருமெனச் சாற்றிட லாமே.

உரை:—அவர் தாம் – அந்நடாத்துநர், சூத்திரதார னும்—, அவனை சார்ந்த மாந்தரும் என சாற்றிடல் ஆமே– அச் சூத்திரதாரனைச் சேர்ந்த மக்களுமாவார் எனக்கூறுதல் பொருந்தும்.

குறிப்பு:—'சார்ந்த மாந்த'ரை வருஞ் சூத்திரத்திற் காண்க. (நி)

179. நடியு நடனு நண்ணிய துணைவர்.

நடியும் நடனும் நண்ணிய துணைவர் - நடி நடன் எனப் படுபவர் சூத்திரதாரனுக்குப் பொருந்திய துணைவராவார்.

குறிப்பு:—நடி யின்னனென்பதை 182-ஞ் சூத்திரத்தா லறிக. நடன்: சூத்திரதாரதன் மாட்டு நட்புரிமை வாய்ந்த வனுய் அவனியற்றும் வினைக்குத் துணைபுரிபவனுவன். 'நண் ணிய' என்று விசேடித்தமையால் இவரே யன்றி விதூட கனும் ஓரோவிடங்களிற் சூத்திரதாரற்குத் துணைவனுயமை வன் என்பதாயிற்று. (சு)

சூத்திரதாரன்

180. பாவைக் கூத்தினுட் சூத்திர மிழுப்போன்
போலவிந் நாடகத் தின்கணு மெதற்கு
முதல்வனுய் நின்று வினைமுடிப் பவனே
சூத்திர தாரனுஞ் சொல்லுங் காலே.

பாவை கூத்தினுள் – அரங்கிற் பாவைகளைவைத்து ஆட் டும் கூத்தின்கண், சூத்திரம் இழுப்போன் போல – பாவை களிற் பிணித்துள்ள கயிறுகளைக் கையிற்பற்றி யிழுத்து அவைகளை ஆட்டுபவன் போல, இ நாடகத்தின்கணும் - மக் கள் நடர்களாக நடிக்கும் இந்த நாடகத்திலும், எதற்கும் முதல்வன் ஆய்நின்று வினை முடிப்பவனே-எல்லாத் தொழிற் கும் தலைவனுக அமைந்து நாடகத் தொழிலினை முற்றச் செய்பவனே, சொல்லுங்கால் - அவன் இலக்கணத்தைச் சொல்லுமிடத்து, சூத்திரதாரன் ஆம் - சூத்திரதாரனுவான்.

குறிப்பு:—பாவைக்கூத்து: அறிவகைப்பட்ட விநோதக் கூத்தினுள் ஒன்று; இஃது தோல் முதலியவற்றுனியன்ற பாவைகளை நாடக அரங்கில் நிறுத்தி அவையிற்றிற் பிணித் துள்ள கயிறுகளைப் பற்றித் திரையின் பின்நின்று இழுத்து இயக்குவித்து ஆட்டுவிக்கும் கூத்தாம். சூத்திரம் - கயிறு;

தாரன் - தரிப்பவன் ; பற்றியிருப்பவன். இப்பாவைக் கூத்தில் சூத்திரம் பற்றிநின்று பாவைகளை யியக்குநன்போல நாடகத்தில் நடர்களைத் தத்தம் தொழின்மேல் இயக்குவிக்குந் தலைவற்கும் இப்பெயர் அமைந்து நின்றது. ஏகாரம்: முறையே தேற்றமும் ஈற்றசையுமாம். (எ)

181. நாடகந் தன்னை நன்னிலை நிறுவலிற்
ரூபக னென்னச் சாற்றவும் படுவன்.

நாடகம் தன்னை நன்மை நிலை நிறுவலில் - நாடகத்தினை நன்கு நடித்து நல்ல நிலையில் நிற்கச் செய்யும் காரணத்தால், தாபகன் என்ன சாற்றவும் படுவன - ஸ்தாபகன் என்னும் பெயரானும் அவன் அழைக்கப்படுவன்.

குறிப்பு:—சூத்திரதாரனுக்கு ஸ்தாபகன் என்னும் பெயருண்மையும் அப்பெயர்க் காரணமும் இச் சூத்திரத்தான் விளக்கினர். (அ)

நடி

182. சொற்ற நடியே சூத்திர தாரன்
கற்றறி வுடைய காதலி யாகும்.

சொற்ற நடியே - முற்கூறப்பட்ட நடியென்பாள், சூத்திரதாரன் கற்று அறிவு உடைய காதலி ஆகும் - சூத்திரதாரனுடைய கல்வி அறிவிற்சிறந்த மனைவியாவள்.

குறிப்பு:—இதனானே நடி கல்வியறிவிற் சிறந்தவளாகவும் தலைவன் விழையும் அவன்மாட்டன்புடைய தலைவியாகவும் இருத்தல் வேண்டுமென்பது பெற்றும். (கூ)

(கூ) முன்னுரை

183. முற்படக் கிளத்து முன்னுரை யதுதான்
சூத்திர தாரன் சூழ்சபை வணங்கித்
துணைவரை விளித்தவர் தம்மொடுங் கூடி
நாடகப் புலவ னல்லிய னவின்று
கதைநிகழ் பருவ காலம் புனைதற்

திகழுறு பாடலி னியம்புவித் தின்புறுத்
தெடுத்த நாடகந் தொடங்குமு னிசைப்பதாம்.

முன் பட நிளத்தும் முன்னுரை அதுதான் - நாடகத் தினை நடிக்கப்புகும் முன்னர்க் கூறப்படும் முன்னுரை, சூத் திரதாரன் சூழ் சபை வணங்கி - சூத்திரதாரன் அரங்கிற் சுற்றிலும் அமர்ந்துள்ள சபையோரை வணங்கி, துணைவரை விளித்து - தனது துணைவரை அழைத்து, அவர்தம்மொ டும் கூடி - அவர்களோடு சேர்ந்து, நாடகம் புலவன் நன்மை இயல் நவின்று - நாடக வாசிரியனது நல்ல பண்புகளை யெடுத் துக்கூறி, கதை நிகழ் பருவம் காலம் புனைதந்து - நாடகக் கதை நிகழும் பருவகாலத்தை வருணித்து, இதம் உறு பாட லின் இயம்புவித்து-இனிய பாடலானே கூறச்செய்து, இன்பு உறுத்து - சபையோர்க்குக் களிப்பினையுண்டாக்கி, எடுத்த நாடகம் தொடங்கும் முன் இசைப்பது ஆம் - நடிப்பதற்கு எடுத்துக்கொண்ட நாடகம் தொடங்குதற்கு முன்பு கூறப் படுவதாம்.

குறிப்பு: — முன்னர்க் கூறப்படுதலின் முன்னுரையா யிற்று. இதனை ஆமுகம் எனவும், பிரஸ்தாவனை எனவும் வடநூலார் கூறுவர்; ஆங்கிலத்தில் Prologue என்பதும் இதுவே. சூழ்சபை: நாடகவரங்கிய சூழவிருக்கும் சபை யோர், என்றது காணுநரை. துணைவர்: நடி நடன் விதூட கன்; 179 - ஞ் சூத்திரம் நோக்குக. நல்லியல்: நாடக வாசிரியனது ஊர், பெயர், குலம், கோத்திரம், கல்வி, நலன் ஆதிய பண்புகள். நூன்முகத்தில் ஆக்கியோன் பெயர் முதலியன கூறுதல் ஒரு தலையாய் வேண்டப்படுவதுபோல, நாடகவாசிரியனது பண்புகளை நாடக நடிக்கப்படு முன் னர்க் கூறுவது இன்றியமையாது வேண்டற்பாலதொன்றும். கலாவதி நாடகப் பிரஸ்தாவனையில் ஆசிரியரைப்பற்றி,

"பாண்டியன் றென்மதுரைப்
பேரியன் மாநக ரான்சாம வேதியன் பீடியருஞ்
சூரிய நாரா யணசூரி சொற்ற கலாவதியே"

என்றும்; மத்தவிலாசப்பிரகசனப் பிரஸ்தாவனையில் அதன் ஆசிரியனைப்பற்றி, "பல்லவராஜ குலமாகிய பூமண்டலத்தில் மேருபர்வதம்போல் விளங்குபவனும் எல்லாக் குறுநில மனனரையும் நீதியால் வென்றவனும் பலபராக்கிரமத்தில் இந்திரனையும், செல்வத்திற் குபேரனையும் வென்றோனுமான ஸ்ரீ விம்ம விஷ்ணு வர்ம மகாராஜாவின் புதல்வன்; காம க்ரோத லோபமோக மத மாத்ஸர்யமென்னும் அறுபகையை அறுபகையாக்கினவன்; பரோபகாரத்திற் சிறந்தவன்; மகா ராஜ ராஜபூஜித ஸ்ரீ மகேந்திர விக்கிரம வர்மனே இந்த நாட கத்தை இயற்றினவன்.

உலகினின் உயிர்கள் யாவும் ஒருவனை இறுதிக் காலத்
தலிகில வணுகு மாபோ லருளறம் பெருமை யீகை
குலவிய காந்தி வீரம் குசலம் ஸத்திய முன்னை
அலகிலாக் குணங்க ளெல்லா மவனிடைப் புகுந்த வம்மா.

பொருளி னுன்மிளிர் மணிநிகர் பதங்களைப் பொழியுந்
திருவி னிடைச் செல்வம்வேட் டணுகிய புலவர்
மருவு சொற்பொருண் மாட்சியிற் குறைபவ ரெனினும்
தருநி கர்த்தவன் தருபொருள் பொறுத்துமீள் குவரால்."

என்றும், மண்ணியல் சிறுதேர் (மிருச்சகடிகம்) நாடகப் பிரஸ்தாவனையில் அதன் ஆசிரியனுகிய சூத்திரகனைப்பற்றி,

"தந்தியி னடையுஞ் சகோரநேர் விழியும்
இந்துநேர் வதனமும் எழில்நிறை யாக்கையும்
புலமையும் புகழும் அலகிலா வன்மையும்
இகலெறு மூக்கமும் பகர்சோர் வின்மையும்
மறையுணர் திறனும் நிறைதவப் பொருளும்
நேரலர் களிறெலாம் போரி னடக்குஞ்
செய்கையின் மிக்க கைவன் மையும்
உடையவ னிருக்கோ டடைதரு சாமமும்
எண்ணும் இன்பமுந் திண்ணிய வேழமும்
பற்றிய கலைகளும் முற்ற வுணர்ந்தோன்
அரனரு ளாலே யிருளகன் றொளிரும்
நாட்டமும் பெற்றோ னீட்டு பல்பொருட்

பரிமகம் புரிந்து பார்முழு தாண்டோன்
அரசர்தங் குலத்து விரசு சூடாமணி
உரிமையி னரசுதன் னெருமகற் கீந்துபின்
ஒருபது நாளுட னேங்கு நூறுண்டு
மருவியிவ் வுலகில் வாழ்ந்துமா வேள்வியிற்
பூத்தரு மங்கியிற் புகுந்த
சூத்திர கன்னென வேத்துமன் னவனே,''

என்றுங் கூறியுள்ளமை காண்க.

கலாவதி நாடகப் பிரஸ்தாவனையில், "இது வசந்தகால மன்றே? இனி இக்காலத்தைத் தவிர வேறெக்காலம் உலகத்திலுள்ள ஆன்மகோடிகளுக்கு ஆநந்தம் விளைக்கப் போகின்றது? இக்காலந்தானே மன்மதனுக்கு மிகவுந் துணை செய்யுங் காலம்! இதோ பார்!

'தேமா வெதிர்கொண்டு நிற்பச்
சிறுகுயில் போற்றிசைப்பத்
தூமா ணிளங்கொடி தந்தளிர்க்
கையாற் றொழுதசைய
வாமான் மகிழ மலர்மணம் வீச
வசந்த னெனுங்
கோமா னணைந்தனன் காணுதி
யென்றன் குலக்கொடியே!'

'காணுறு பூவின் ஞிமிறிசை பாடக் கடிகமழத்
தேனமர் மூல்லை நகைத்திடத் தென்றலஞ் சேடியொடும்
வானுறு மாலங் கவரி யசைதர வந்தனனல்
வேனி லெனப்பகர் கிற்கும் வனப்புறு மெல்லியலே!'

'பூந்தளிர்க் குழையும் செய்ய
பொன்மலர்க் கலனும் பூண்டு
மாந்துகட் பருகிப் பின்சேர்
வண்டராம் பாண ரோடு
மாந்தர்தாங் கண்டு சால
மகிழ்தர வாடுகிற்பான்

போந்தனள் வசந்த மென்னும்
பொற்புறு மாத ராளே!'

என்று கூறியது, 'கதைதிகழ் பருவகாலம் புனைதந் திதமுறு பாடலி னியம்' பியதாகும். (கo)

(ச) குறிப்பு

184. கதையினை யாதல் கழறுவித் தாத
லாதியிற் றொடங்கு மருவினை யாதல்
நலமீக் கிலங்குந் தலைமக்க டமது
வரவினை யாதல் வருமு னெவ்வகைக்
குறிப்பினு லேனுங் கூறுதல் குறிப்பே.

கதையினை ஆதல் - நாடகக் கதையினையாவது, கழறு வித்து ஆதல் - மேற் பொதுவியலின்கண் கூறப்பட்ட விதை யினையாவது, ஆதியில் தொடங்கும் அருமை வினை ஆதல் - நாடகத்தின் முதலிற் றொடங்கும் அரிய தொழிலினையா வது, நலம் மிக்கு இலங்கு தலைமக்கள் தமது வரவினை ஆதல்- நற்பண்புகள் மிகுந்து விளங்கும் நாடகத் தலைவன் தலைவிய ரது வருகையினையாவது, வரும் முன் - அவை நிகழு முன்பு, எ வகை குறிப்பினுல் ஏனும்-எவ்விதக் குறிப்புக்களினுலே னும், கூறுதல்-வெளியிட்டுணர்த்தல், குறிப்பு - குறிப்பாகும்.

குறிப்பு:—'விந்து' எனவும் பாடம்; விந்து - 'பிந்து' என் னும் வடசொல்லின் றிரிபு; 'விந்து' எனினும் 'விதை' யெனி னும் ஒக்கும் 'கலம் மிக்கு இலங்கும் தலைமக்கள்' என்ப தூஉம் பாடம்; கலம் - பாத்திரம் ; நாடக பாத்திரங்களுண் மிக்கு விளங்கும் தலைமக்கள் என்பது பொருளாம். இனிக் 'கலம் மிக்கு இலங்கும்' என்பதற்கு அணிகலன்களால் எழின்மிக்கு இலங்கும் என்பதும் ஆம். ஏனும் - எனினும் என்பதன் மரூஉ. 'எவ்வகைக் குறிப்பினுலேனும்' என்றத னுல், குறிப்பு மொழிகளேயன்றி அவிநயக் குறிப்பானும் இம்முறைமையும் என்பது பெறப்படும். கலாவதி நாடகப் பிரஸ் தாவனை பிறுதியில்,

"காம
விந்தை சேர்மகோ மோகினி வலையினில் வீழ்ந்து
புந்தி மாழ்கிய சயதுங்க சோழனைப் போன்றோ,"

என்றது கதையினைக் குறிப்பித்தவாறுதல் காண்க. தசரதன் தவறு என்னும் நாடகத்தின் பாயிரத்தில்,

"உலகெலா நின்படைப் புயிரெலா நின்படைப்
புவைசெயுந் தொழில்களெல்லா
மூழ்வினைப் பயனென வுருத்துவந் துறுமென்ற
வுண்மையுரை யென்றுணர்ந்தேம்
அலகிலாக் கலைதேர்ந்து பலதுறைக ளிற்பயின்
றறிவுநிறை யோர்ப் பினுடனே
யருங்கடைப் பிடிமேவு மரசருஞ் சிலவேளை
யையபிழை போவர்"

என்றது 'கழறு வித்'தினைக் குறிப்பித்ததாகும். முத்திரா ராட்சச நாடகப் பிரஸ்தாவனையில், பிறைத்திங்களைத் துஷ்டக்கிரகமாகிய கேது முற்றிலுங் கிரகணஞ் செய்ய முயற்சிப்பதாகிய சந்திரக் கிரகணத்தை வருணிப்பது போலச் சமீபகாலத்தில் மன்னனுக வெளிப்போந்த சந்திரகுப்தனை மலயகேது பற்ற முயற்சிக்கும் அருவினையினைக் குறிக்குமாறு கூறிய,

"சூழ்மதிப் பிறையதாய்ச் சுடருஞ் சந்திரற்
கீழ்மைய கொடியகோட் கேதுவோ டுறீஇத்
தாழ்மைய வலிகொடு தாக்குவோ னெவன்"

என்ற அடிகள் ஆதியிற்றொடங்கும் அருவினையினைக் குறிப்பனவாகும். மத்தவிலாசப் பிரகசனப் பிரஸ்தாவனை யிறுதியில்,

"கவிதை யேபொரு ளெனக்கருது காட்சியினிலிக்
கவிஞ ரேறனையன் காதையினி லீடுபடுவேன்
யுவதி யோடுகையி லோடுபொரு ளாகவருமிவ்
யோகி கள்ளுணலி னுள்ளழிவு கொள்ளுமதுபோல்,"

என்றது நலமிக்கிலங்குந் தலைமக்கடமது வரவினைக் கூறியதாகும். (கக)

185. தோற்றுவாய் செய்தலாச் சொல்லலு முண்டு.

தோற்றுவாய் செய்து அலா சொல்லலும் உண்டு - நாடகக் குறிப்பு முன்னர்த் தோன்றுமல் நாடகத்தைச் சொல்லலும் உண்டு.

குறிப்பு:—நாடகக் குறிப்பு முன்னர்க் கூறப்படாமல் கதை யாரம்பிக்கப்படுவது வடமொழி மகா நாடகத்திற் காண்க. (கஉ)

186. வாழ்த்து நடாத்துநர் முன்னுரை குறிப்பெனப்
பாத்துரை விகற்பம் பயிலா சிலவுள.

வாழ்த்து—, நடாத்துநர்—, முன்னுரை—,

என பாத்து உரை விகற்பம் பயிலா சில உள - என்று பகுத்து உரைக்கப்பட்ட வேறுபாடுகள் பொருந்தாத நாடகங்களும் சில வுண்டு.

குறிப்பு:—'வல்லீபரிணயம்' முதலிய தமிழ் நாடகங்களும் 'வெனிஸ்வணிகன்' முதலிய ஆங்கில நாடகங்களும் இவற்றிற்குதாரணமாம். (கங)

(ரு) அங்கம்

187. நாடகப் பேருறுப் பங்க மதுதான்
பலகள முடைத்தாய்ப் பண்புறு முடிவுகொண்
டிலகுறு வதுவா மிசைக்குங் காலே.

நாடகம் பெருமை உறுப்பு அங்கம் - நாடகத்தின் பெரும்பகுதி அங்கம் என்னப்படும்; அதுதான் - அவ்வங்கம், இசைக்கும்கால் இலக்கணம் சொல்லுமிடத்து, பலகளம் உடைத்து ஆய் - பலகளங்களைத் தன்னகத்துடையதாகி, பண்பு உறு முடிவு கொண்டு இலகுறுவது ஆம் - செவ்விதாகப் புலப்படும் முடிவினைப் பெற்று விளங்குவதாகும்.

குறிப்பு:—காவியங்களில் பெரும்பகுதிகளைக் காண்டமென்று வழங்குவதுபோல நாடகங்களில் பெரும்பகுதிகளை அங்கமென்பர். அங்கம் : உறுப்பு. ஒவ்வோரங்கமும் தனித்

தனி யொருபகுதியின் முடிவுடன் நிற்கும் என்பதிதனைற் பெறப்பட்டது. ஏகாரம்: ஈற்றசை. ஆங்கிலத்தில் அங்கத்தினை Act என்ப. (கச)

கதைநிறைகளம்

188. அங்கந் தொடங்குமு னரியப் புலவோர்
சிற்சில விடத்துக் கதைநிறை களமென
விழிபாத் திரங்க ளெய்தும் பொருளை
மொழிபாக் குறுத்தலு முன்னர்க் கொள்ப.

ஆரியம் புலவர் - வடமொழி நாடகப் புலவர்கள், அங்கம் தொடங்கும் முன் - நாடகப் பேருறுப்பாகிய அங்கத்தினை யாரம்பிப்பதற்கு முன், சில சில இடத்து - சிலவிடங்களில், இழி பாத்திரங்கள் - நீச பாத்திரங்கள், எய்தும் பொருளை - நாடகத்தை விளக்குதற்கு இன்றியமையாது பொருந்தும் விடயத்தினை, மொழிபாக்கு – எடுத்துக்கூறுமாறு, கதை நிறை களம் என - கதைநிறை களம் என்னும் பெயரினையுடையதாக, உறுத்தலும் - அமைத்தலையும், முன்னர் கொள்ப - முதலில் மேற்கொள்வர்.

குறிப்பு:—அங்கந் தொடங்குமுன் கதா சந்தர்ப்பம் விளங்குதற்கு இன்றியமையாத விடயங்களை நீசபாத்திரங்கள் வாயிலாக வெளியிட்டுக் கூறும் பகுதிக்குக் கதைநிறைகள மெனப் பெயராம். இதனை வடமொழி நாடக விலக்கண வாசிரியர்கள் விஷ்கம்பம், பிரவேசம் என்பர். (கரு)

189. ஒன்று முதலாப் பத்துக் காறு
மங்க மடைந்திடு மரிய நாடகம்.

ஒன்று முதல் ஆ பத்து காறும் அங்கம் அடைந்திடும் அரிய நாடகம் - கூறற்கரிய இலக்கணம் அமைந்த நாடகம் ஓரங்க முதல் பத்தங்கம் அளவும் பெறும்.

குறிப்பு:—அங்கம், பாணம் முதலிய நாடகச் சாதிகள் ஓரங்க நாடகங்களாம். மாலதீமாதவம் முதலிய பத்தங்கங்களையுடையன. பத்தங்கத்தினியன்ற நாடகத்தினை மாநாடக மென்பர்.

"பத்தங் கத்திற் பண்புற வியல்வது
மாநா டகமா வகுத்தனர்" (சூத். 161)

என ஆசிரியர் முன்னர்க் கூறிப் போந்தது காண்க. 'அரிய நாடகம்' என விசேடித்தமையால் பத்தங்கங்கட்கு மேலும் சில மா நாடகம் பெறும் என்பது போதரும். ஈறுமாந் நாடக மாகிய மகாநாடகம் பதினென்குஅங்கங்கள் பெற்றுளது.(கசு)

190. இதனை,

நாடகச் சாதியி னவையறு மிலக்கணங்
கூறுழி விரித்துக் கூறினங் காண்க.

இதனை - நாடகங்கள் ஒன்று முதற் பத்தங்கமளவும் பெறுமியல்பினை, நாடகம் சாதியின் நவை அறும் இலக் கணம் கூறுழி - நாடகத்தின் சாதி உபசாதி வகைகளின் குற்றமற்ற இலக்கணம் கூறுமிடத்து, விரித்து கூறினம் காண்க - எடுத்துப் பரக்கக் கூறியுள்ளாம் ஆண்டு நோக்குக.

குறிப்பு:—நாடகச்சாதியி னிலக்கணம். இந்நூற் சிறப் பியல்பிற் கூறியுள்ளது. (களை)

(சு) களம்

191. பகருமோ ரிடத்தினே நிகழ்ந்திடு காட்சியைக்
களமென மொழிப மிளிர்மேற் றிசையோர்.

பகரும் ஒரு இடத்தினே - கதை நிகழிடமாகச் சொல் லப்பட்ட ஓரிடத்தின்கண்ணே, நிகழ்ந்திடு காட்சியை-காணக் கிடக்குமாறு நிகழும் காட்சியினை, மிளிர் மேற்கு திசை யோர் விளங்குதலுற்ற மேற்றிசைப் புலவர்கள், களம் என மொழிப - களமென்று கூறுவர்.

குறிப்பு:—இதனுனே களத்தினைக் காட்சி யென்றும் வழங்குதல் பெறப்படும். ஆங்கிலத்தில் இதனை Scene எனக் கூறுவர். மேற்றிசையோர் அங்கத்தின் உட்பகுப்பாகிய இக்களத்தினைச் செவ்விதில் வகுத்துக் காட்டுந் திறமுடைய ராதலின் 'மிளிர் மேற்றிசையோர்' என விசேடிக்கப்பட்ட னர். (கஅ)

192. களவிறு தியினெலாங் கவின்ற திரைவிழும்.

களம் இறுதியின் எலாம் - களம் முடிவுபெறும் இடங் களெங்கும், கவின்ற திரை விழும் - நாடக அரங்கில் அழகு டன் விளங்கும் கரந்துவரலெழினியாகிய திரைவிழும்.

குறிப்பு:-'விழும்' என்றமையால் மேலே கட்டுண்டிருந்து கீழே விழுந்திரை யென்பது பெறப்படும். இதனைக் கரந்து வரலெழினி யென்பது

'மேலசைத் திழிந்து நாலுறுந் திரையாங்
கரந்து வரலெழினி' (சூத். 267)

என்பதனுன் விளங்கும். 'திரைவிழுதல்' ஔபசாரிகத்தான் 'திரையான் மறைத்தலைக் குறித்தலின், ஏனைய உருவுதிரை யாகிய 'ஒரு முகவெழினி' 'பொருமுகவெழினி' மறைத்தலை யும் கொள்க. (கசு)

193. ஒரேதொடைப் பட்ட காட்சிக டாமே
யடுத்தடுத் துரைக்கப் படாவென் றறைகுப.

ஒரே தொடைப்பட்ட காட்சிகள் தாமே - ஓரிடத்தின் கண்ணேயே நிகழ்வனவாகத் தொடுக்கப்பட்ட காட்சிகள், அடுத்து அடுத்து உரைக்கப்படா என்று அறைகுப - ஒன்றை யொன்றடுத்து வருவனவாகக் கூறப்படுவனவாகா என்று நாடகப் புலவர் கூறுவர்.

குறிப்பு:—ஒரே யிடத்தில் நிகழ்ச்சிபெறுந் தொடர் புடைய வெனினும் வெவ்வேறமயங்களில் நிகழ்வன வாத லின் வெவ்வேறு களங்களாக அமையவேண்டியவற்றை நாட கக்கதை நன்கு புலனுமாறு தொழிற்பொருத்தஞ்செறிய உரிய இடங்களில் அமைக்காமல் அடுத்து அடுத்து வைப்பின் கதைத் தொடர்ச்சி யழிந்து சிதையுமாதலின் அங்ஙனம் உரைக்கப்படா என்றனர். மேலும் அங்ஙனம் அடுத்துக் கூறின் களவிறுதியி லெழினிவீழ்ச்சியாற் பயனின்றுதலுங் காண்க. (உ0)

(எ) கூற்று

194. கூற்றெனப் படுவது கூறுங் காலைத்
தற்கூற் றுப்புறக் கூற்று முன்னிலைக்
கூற்று விட்புலக் கூற்றென நான்காம்.

கூறும் காலை - எடுத்துக் கூறுமிடத்து, கூற்று எனப்படுவது - கூறப்படும் பேச்சு என்று சொல்லப்படுவது, தற் கூற்று—, புறக்கூற்று—, முன்னிலைக் கூற்று—, விட்புலக் கூற்று—, என நான்கு ஆம் - என நான்கு வகைப்படுவதாகும்.

குறிப்பு:—கூறப்படுவது கூற்று. இந்நான்கு வகைகளின் இலக்கணங்களை ஆசிரியர் நிரலே மேற்கூறுவர். (உக)

தற்கூற்று

195. தானே தனக்குரை செய்யுந் தனிமொழி
தற்கூற் றுமெனச் சாற்றினர் புலவர்.

தானே தனக்கு உரை செய்யும் தனிமை மொழி – நாடக பாத்திரருள் ஒருவன் அரங்கின்கண் தானே தனக்குள்ளாகப் பேசிக்கொள்ளும் தனிமொழி, தன் கூற்று ஆம் என சாற்றினர் புலவர்–தற்கூற்றெனப் பெயர்பெறுமென்று புலவர் கூறினர்.

குறிப்பு:—தற்கூற்று - கேட்பாரின்றித் தனக்குள்ளே பேசிக்கொள்ளும் பேச்சாம்; ஆதலின் 'தனிமொழி' என்றும் பெயர்பெறும். இதனை வடநூலார் ஸ்வகதம் என்றும் ஆத்மகதம் என்றுங் கூறுப. ஆங்கிலத்தில் Soliloquy என்பது இஃதாம். (உஉ)

புறக்கூற்று

196. புறக்கூற் றென்றது புகலப் புகினெரு
களத்துறு பலருட் சிலர்தமக் குள்ளே
பிறரறி யாவணம் பேசுத லென்ப.

புறம் கூற்று என்றது புகல புகின் - புறக்கூற்று இன்ன தென்பதை கூறப்புகுமிடத்து, ஒன்று களத்து உறு பலருள்- நாடக வுறுப்பாகிய களம் ஒன்றன்கட் பொருந்திய நாடக பாத்திரங்கள் பலருள்ளும், சிலர் தமக்கு உள்ளே - சிலர் தமக்குள்ளாகவே, பிறர் அறியா வணம் - ஏனையோர் கேளா விதமாக, பேசுதல் என்ப - பேசிக்கொள்வது என்று கூறுவர்.

குறிப்பு:-இப்புறக்கூற்றுக் குறைந்தது இருவர்க்குள்ளே னும் இருத்தல் வேண்டும். இதனை வடநூலார் அபவாரிதம் என்ப. இதை ஆங்கிலத்தில் Aside Speech எனப்படும். கீழ்க்கூறிய தற்கூற்றும் புறக்கூற்றும் முறையே ஒருவன் தனக்குள்ளும் ஒரு சிலர் தமக்குள்ளும் பேசிக்கொள்வதாயி னும் நாடகங்காணுநர்க்குச் செவிப்புலனுதல் வேண்டுவ தொருதலை. (உங)

முன்னிலைக்கூற்று

197. களத்துறு பலரு மறியுமா கழறன்
முன்னிலைக் கூற்றென முன்னப் படுமே.

களத்து உறு பலரும் அறியும் ஆ கழறல்-களத்தின்கட் பொருந்திய நாடகபாத்திரங்கள் அனைவரும் கேட்கும் வித மாகப் பேசுதல், முன்னிலை கூற்று என முன்னப்படும் - முன்னிலைக்கூற்றென்று கருதப்படும்.

குறிப்பு:—'ஆறு' 'ஆ' வெனக்குறைந்து நின்றது. நாடக பாத்திரங்களுள் ஒருவன் மற்றொருவனை முன்னிலைப்படுத்திப் பேசுவதாயினும் அக்கூற்றுக் களத்தில் உற்றூர் பலருக்குஞ் செவிப் புலனுதல் வேண்டுமென்பதை வலியுறுத்த ஆசிரியர் 'கூற்றும்' என்னுது 'கூற்றென முன்னப்படு' மென்றனர். இதனைப் பிரகாசம் என்ப வடநூலார். ஆங்கிலத்தில் Open Speech என்ப. (உச)

விட்புலக்கூற்று

198. கட்புல னின்றச ரீரிவின் ணின்றே
யொட்பமொ டுரைப்பது விட்புலக் கூற்றே.

கண் புலன் இன்று - கண்ணுக்குப் புலனுகாமல், அசரீரி விண் நின்று - மெய்யும் உருவமு மில்லாததோர் தெய்வம் ஆகாயத்தின்கணிருந்து, ஒட்பமொடு உரைப்பது விண் புலம் கூற்று - யாவர்க்குந் தெளிவாய்த் தெரியக் கூறுவது விட் புலக்கூற்றுகும்.

குறிப்பு:—'இன்றி' என்னும் வினையெச்சம் 'இன்று' எனத் திரிந்து நின்றது. இவ்வசரீரியை யாகாயவாணி என்றும் வழங்குவர். வடநூலார் விட்புலக்கூற்றினை ஆகாச பாஷிதம் என்று கூறுப. (உரி)

சொல்வகை

199. வியப்பு மொழிநிலை நகைமொழி நிலையென
நயப்படு சொல்வகை நாட்டுது மிரண்டே.

நயம் படு சொல் வகை - பொருளழகு செறிந்த சொல் வகை, வியப்பு மொழி நிலை—, நகை மொழி நிலை—, என - என்று, இரண்டே நாட்டுதும் - இரண்டு வகையாகவே தாபிப் போம்.

குறிப்பு:—சொல்வகை : சொல்லின் கூறுபாடு. ஆசிரியர் தொல்காப்பியனுர் மெய்ப்பாட்டியலிற் குறித்த 'பண்ணைத் தோன்றிய எண்ணுன்கு பொரு'ளாகிய, முடியுடை வேந்தரும் குறுநில மன்னரு முதலாயினோர் நாடக மகளிர் ஆடலும் பாடலுங் கண்டுங் கேட்டுங் காமமதுகரும் இன்ப விளையாட்டினுட்டோன்றிய முப்பத்திரண்டு பொருட்கும் இன்றியமையாத விளையாட்டுப் பொருட்டாகிய நகைச் சுவை மொழிநிலை யொன்றுகவும், எல்லாச் சுவைகட்கும் அடிப்படையாய் உயிர்போன்ற வியப்புச்சுவை மொழிநிலை யொன்றுகவும் சொல்வகை யிரண்டாயடங்குதலின், ஆசிரியர் இவ்விரு வகையினையே 'நயப்படு சொல்வகை'யாகக் கொண்டனர். சுவையின் இலக்கணங் கூறப்புகுந்த ஆசிரியர்,

"மற்
றுதற்குயிர் போல்வது வியப்பென மொழிப
மூன்தை நூலின் மொழியுணர்ந் தோரே," [சூத். 38]

என்றுரைத்ததனை யீண்டு நோக்குக. இப் பெருமைபற்றியே வியப்பு மொழி நிலையினை முன்வைத் தோதியதூஉ மென்க. சிலப்பதிகார வுரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார், "சொல்வகை நான்கு வகைப்படும்:—சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம் என. சுண்ணம் : நான்கடியான் வருவது; சுரிதகம் : எட்டடியான் வருவது; வண்ணம் : நாலுன் கடியான் வருவது; வரிதகம் : முப்பத்திரண்டடியாய் வருவது. என்னை ?

'சுண்ண நான்கடி சுரிதக மெட்டடி
வண்ண நாலுன்கு வரிதக மெண்ணுன்கென்
றெண்ணிய வடித்தொகை யெய்தவும் பெறுமே,'

என்றாராகலின்," என்று கூறியுள்ளார். எனினும், இக் கூறிய சொல்வகையினும் சூத்திரத்திற் குறித்த வகையே சிறப்புடைத்தாமாதலின், ஆசிரியர் பிறிதொடு படாஅன் றன்மதங் கோட லென்னு மிலக்கணத்திறம் புதியன புகுதலாக இங்ஙன மமைத்தன ராதலின், 'நாட்டுது மிரண்டே' எனத் தேற்றேகாரத்தொடு வலியுற ஆணைதந்தோதினு ரென்பதறிக. (உசு)

(அ) கூத்து

200. குதித்தா டுறுவது கூத்தெனப் படுமதிற்
பரத நாட்டியங் குரவை நகைவரி
முதலிடை கடையென விதமே ழாகும்.

குதித்து ஆடுறுவது கூத்து எனப்படும் - ஒருவன் தாளச் சதிக்கேற்பக் குறித்து ஆடும் ஆட்டம் கூத்து என்று சொல்லப்படும்; அதில் - அதன்கண், பரத நாட்டியம்—, குரவை—, நகை—, வரி—, முதல் - முதற்கூத்து, இடை - இடைக்கூத்து, கடை - கடைக்கூத்து, என - என்று சொல்லப்பட்ட, ஏழ் விதம் ஆகும் - ஏழு விதங்கள் உண்டு.

குறிப்பு:—குதித்தாடுதலிற் கூத்தெனப்படும் என்று பெயர்க்காரணங் கூறியவாறும். பரத நாட்டியம் முதலியவற்

றின் இலக்கணத்தைப் பின்னர்வருஞ் சூத்திரங்களான் நிரலே கூறுப. கூத்து இருவகைத்தென்றும், அவை வசைக்கூத்து, புகழ்க்கூத்து; வேத்தியல், பொதுவியல்; வரிக்கூத்து, வரிச் சாந்திக் கூத்து; சாந்திக் கூத்து, விநோதக் கூத்து; ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து; இயல்புக் கூத்து, தேசிக் கூத்து என்று பலவகையாகப் பிரித்துக் கூறுவாருமுளர் என்றும், அவை யிற்றினை விரிந்த நூல்களிற் காண்க என்றும் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையிற் கூறியது ஈண்டு நோக்கற்பாலது. கதை தழுவிவரும் நாடகத்திற்கேற்றனவாகிய கூத்துக் களேயே யீண்டு ஆசிரியர் மேற்கொண்டனர். (உஎ)

பரதநாட்டியம்

201. பாவனை சான்ற பல்வகை யாடலு
மிராகஞ் சான்ற வினிய பாடலுங்
காண்போர் நெஞ்சங் கவர்ந்திடு வனப்புமா
மூன்றனு ளொன்றுங் குறைவின் றிலங்குங்
கரவுறு காமக் கணிகைய ராட்டமே
பரதநாட் டியமெனப் பகர்ந்தனர் புலவர்.

பாவனை சான்ற பல வகை ஆடலும் - உள்ளக்குறிப்பு வெளியிட்டுத் தோன்றுமாறு அபிநயம் அமைந்த பலவகை யான ஆடல்களும், இராகம் சான்ற இனிய பாடலும் - இராகம் நன்கமைந்த கேட்போர்க்கு இன்பத்தைத் தரும் பாடல்களும், காண்போர் நெஞ்சம் கவர்ந்திடும் வனப்பும் ஆம் - பார்ப்போர் மனத்தினைக் கவரும் அழகும் ஆகிய, மூன்றனுள் ஒன்றும் குறைவு இன்றி இலங்கும் - முப்பகுதி யுள்ளும் ஒரு சிறிதுங் குறைபாடின்றி விளங்கும், கரவு உறு காமம் கணிகையர் ஆட்டமே - வஞ்சகம் பொருந்திய பரத்தை மாதரின் நடனமே, பரத நாட்டியம்—, என - என்று, புலவர் பகர்ந்தனர் - நாடகவறிஞர் கூறினர்.

குறிப்பு:—மனத்தின்கட் டோன்றுஞ் சுவையும், சுவை யதன்கட் டோன்றுவதாய குறிப்பும், அக்குறிப்பின்கண் நிகழ்கின்ற நிகழ்ச்சியாகிய சத்துவமும், அச்சத்துவத்தை

வெளிப்படுத்தும் அவிநயமும் ஆகிய இவை யாவும் அமைந்த ஆடல் என்பார், 'பாவனை சான்ற ஆடல்' என்றனர். இராகம்-இசை. ஆடல் பாடல் வனப்பு ஆகிய மூன்றும் இன்றியமையாதன என்பதை வலியுறுத்த இம்'மூன்றனு ளொன்றுங் குறைவின்றிலங்கும்' எனக் கூறினர். சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை 'இலைப்பூங் கோதை யியல்பினின் வழா அது' என்ற அடிக்கு 'இம்மாதவியுடைய கூத்துக்கும் பாட்டுக்கும் அழகுக்கும் தக்கபடி' என்று அரும்பதவுரைகாரரும், 'இம்மாதவியுடைய கூத்துக்கும் பாட்டுக்கும் அழகுக்குமேற்ற முறைமையினுல் ஒன்றும் வழுவாமல்' என்று அடியார்க்கு நல்லாரும் கூறிய உரை மேற்கூறியதனை வலியுறுத்தும். 'கரவுறு காமக்கணிகையர்' - இயைபின்மை நீக்கிய விசேடணம். காமக்கணிகையர் - காமத்தை யுண்டாக்குங் கணிகையர்; காமம் - விருப்பம். பரத நாட்டியம் - பரத முனிவர் கூறிய நாட்டிய சாத்திர இலக்கண மமைந்த கூத்து. 'பரதம்' எனப் பெயரிய பண்டைய தமிழ் நாடக விலக்கண நூலொன்றிருந்ததாகச் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை கூறும். (உ அ)

தூரவைக்கூத்து

202. எழுவரே யெண்மரே யொன்ப தின்மரே
யென்றெணு மெழிலுடை மாதரா ரிணைந்து
காமமும் வென்றியுங் கட்டுரை பாட
லேமம் விளைக்குமா றினிமையிற் பாடிக்
கைகோத் தாடுதல் கருதுங் தூரவையே.

எழுவரே எண்மரே ஒன்பதின்மரே என்று எணும் எழில் உடை மாதரார் – எழுவர் எண்மர் ஒன்பதின்மர் என்ற எண்ணிக்கைகொண்ட அழகுடைய மாதர்கள், இணைந்து–ஒருவர் பக்கலிலொருவராகச்சேர்ந்து, காமமும் வென்றியும் கட்டுரை பாடல் – இன்பமும் வெற்றியும் பொதிந்த பொருளாகப் பாடும் பாடல்களை, ஏமம் விளைக்கும் ஆறு – கேட்போர்க்கு இன்பம் பயக்கும் விதமாக, இனிமையில் பாடி – இனிய ஸங்கீதத்தோடு பாடி, கைகோத்து ஆடுதல் – ஒருவர் கையினை யொருவர் கோத்துப் பற்றி நின்று

சுற்றி யாடுதல், கருதும் குரவையே – நயமுடையதாகப்புலவ ராற் கருதப்பட்ட குரவைக்கூத்தாம்.

குறிப்பு:—எழுவர்க்குக் குறையினும் ஒன்பதின்மர்க்கு அதிகப்படினும் கூத்து நலம் பயவாதாதலின் இங்ஙனம் எண்ணிக்கைகூறினர். இக்குரவைக் கூத்து விநோதக் கூத்து அறுவகைகளுளொன்றென்ப. என்னை ?

"பரவிய சாந்தி யன்றியும் பரதம்
விரவிய விநோதம் விரிக்குங் காலைக்
குரவை கலிநடங் குடக்கூத் தொன்றிய
கரண நோக்குத் தோற்பா வைக்கூத்
தென்றிவை யாறு நகைத்திறச் சுவையும்
வென்றியும் விநோதக் கூத்தென விசைப்ப"

என்ற சூத்திரத்தானுணர்க.

'குரவை யென்பது கூறுங்காலைச்,
செய்தோர் செய்த காமமும் விறலும்,
எய்தவுரைக்கு மியல்பிற்றென்ப';

'குரவை யென்ப தெழுவர் மங்கையர்
செங்கீலை மண்டலக் கடகக் கைகோத்
தங்கீலைக் கொட்பநின் றூட லாகும்';

'குரவைக் கூத்தே கைகோத்தாடல்

என்ற பழைய சூத்திரங்களும், 'காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச்செய்யுள் பாட்டாக எழுவரேனும் சண்மரேனும் ஒன்பதின்மரேனுங் கைபிணைந்தாடுவது' என்ற சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரைப்பகுதியும் காண்டு நோக்கற்பாலன. (உசு)

நகைக்கூத்து

203. எவரை யேனு மிசைபட வாயினும்
வசைபட வாயினும் வகுப்பான் வேண்டி
விதூடக னரச வவைக்கண் மிகுந்த
நகைத்திறம் விளைத்தா டுதனகைக் கூத்து.

எவரை ஏனும் - யாவராயினு மொருவரை, இசை பட ஆயினும் - புகழ்ச்சி பொருந்தவேனும், வசை பட ஆயினும் - இகழ்ச்சி பொருந்தவேனும், வகுப்பான் வேண்டி - வகுத்துக் கூறுதற்கு விரும்பி, விதூடகன் - விதூஷகன், அரச அவைக் கண் - இராஜ சபையினிடத்து, மிகுந்த நகை திறம் விளைத்து ஆடுதல் - மிக்க நகைச்சுவை தோன்ற ஆடுதல், நகைக்கூத்து - நகைக் கூத்தெனப் பெயர்பெறும்.

குறிப்பு:—இதனை விதூடகக்கூத்தென்றுங் கூறுப. இசைபட ஆடும் நகைக்கூத்தினை வென்றிக்கூத் தென்பாரு முளர்.

'வென்றி வசையே விநோத மாகும்';
'அவற்றுள்,
மாற்ரு ஞெடுக்கமும் மன்ன னுயர்ச்சியும்
மேற்படக் கூறும் வென்றிக் கூத்தே';
'பல்வகை யுருவமும் பழித்துக் காட்ட
வல்லவ ஞதல் வசையெனப் படுமே;'

என்ற சூத்திரங்களினுல் 'இசைபடவாயினும் வசைபடவா யினும்' ஆடு நகைகூத்தி னியல்பு விளங்கும். சூளாமணிக் காப்பியம் சுயம்வரச் சருக்கத்திற்கூறப்பட்ட திவிட்டராஜன் முன்பு விதூடகன் ஆடிய கூத்து இந் நகைக்கூத்தின் பாலதாம்.

"காதுபெய் குழையுஞ் செம்பொற் சுருளையும் கலந்துமின்னப்
போதலர் குஞ்சி யாங்கோர் பூந்துணர் வடத்தின் வீக்கி
யோதிய மருங்குறன்மே லொருகைவைத் தொருகை தன்னுன்
மீதியல் வடகம் பற்றி வெண்ணகை நக்குநின்ருன்."

"மூடிய புகழி ஞற்கு முகிழ்நகை பயந்து காட்டுங்
கோடிய நிலையின் முன்ஞற் குஞ்சித்த வடிவ ஞகிப்
பாடிய சாதிப் பாடல் பாணியோ டிலயங் கொள்ள
வாடிய லெடுத்துக் கொண்டாங் கந்தண ஞடுகின்ருன்."

"பாடு பாணி யிலயம்பல தோற்றி
யாடி யாடி யசதித்தொழில் செய்ய

நாடி நாடி நனிநன்றென நக்கா
னீடு நீடு முடியா னெடியானே.''

என்ற செய்யுட்களான் நகைக்கூத்தாடிய விதூடகன தியல்பு நன்கு புலனும். (கூ0)

204. தாள வியல்பொடு தழுவி நின்றுங்
குயிலுவர் முதலோர் தம்மொடு கூடியு
மியலுமிக் கூத்தென் றியம்பினர் புலவர்.

தாளம் இயல்பொடு தழுவி நின்றும் - உரிய தாளங் களின் இயல்பொடு பொருந்தி நின்றும், குயிலுவர் முத லோர் தம்மொடு கூடியும் - இடக்கை தண்ணுமையா தியகருவிகளை வாசிப்போர் முதலியவரோடு சேர்ந்தும், இ கூத்து இயலும் - இந்நகைக் கூத்து நடைபெறும், என்று புலவர் இயம்பினர் - என்று நாடக விலக்கண வறிஞர் கூறினர்.

குறிப்பு:—தாள வியல்பின் வகைகளை யிந்நூல் 71-ஞ் சூத்திர வுரையிற் கூறினேம்; ஆண்டுக் காண்க. குயிலுவர் - தோற் கருவி, தொளைக் கருவி, நரப்புக் கருவி, கஞ்சக்கருவி யென்னும் வாத்தியங்களை வாசிப்பவர். 'முதலோர்' என்ற மையான் 'வாரம் பாடுந் தோரிய மடந்தை'யரும் ஓரோ விடங்களிற் பொருந்தி நிற்றலுமாம் என்பது பெறப்படும். வென்றிக் கூத்தும் வசைக் கூத்தும் தாள இயல்புடையன.

''எனவிவை தாளத்தி னியல்பின வாகும்''

என்னும் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை மேற்கோட் சூத்திரத்தானும் இஃதுணரப்படும். நின்றுங் கூடியும் இயலும் என்ற உம்மையான் இக்கூத்துச் சில வமயங்களில் இவையின் றியும் நடை பெறுதலுங் கூடும் என்பதும் பெறப்படும்.(கூக)

வரிக்கூத்து

205. வரியெனப் படுவது தெரிவுறக் கிளப்பி
னவரவர் தாந்தா மன்பின்மேற் கொண்ட
கோலக் கேற்ற குறிப்புந் தொழிலுந்
தோன்ற நடிக்கும் விறைதக் கூத்தாம்.

வரி எனப்படுவது - வரிக் கூத்து என்று சொல்லப்படுவது இன்னதென்று, தெரிவு உற இளப்பின் - நன்கு விளங்கக் கூறுமிடத்து, அவர் அவர் தாம் தாம் அன்பின் மேல் கொண்ட - நாடக நடிக்கும் அவ்வவர் தாந்தாம் விரும்பி நடித்தற்கு மேற்கொண்டுள்ள, கோலக்கு ஏற்ற - கோலத்திற்குப் பொருந்தும், குறிப்பும் தொழிலும் - மனோபாவமும் செய்வினையும், தோன்ற - காணுநர்க்குப் புலனாக, நடிக்கும் விநோதம் கூத்து ஆம் - ஆடும் விநோதக் கூத்தாகும்.

குறிப்பு:—இதனனே வரிக்கூத்துக்களும் விநோதக் கூத்தின்பாற்படு மென்பதாயிற்று. கோலக்கு - நான்கனுருபு அத்துச் சாரியை பெறாது வந்தது.

"வரியெனப் படுவது வகுக்குங் காலைப்
பிறந்த நிலனுஞ் சிறந்த தொழிலும்
அறியக் கூறி யாற்றுழி வழங்கல்"

என்னுஞ் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை மேற்கோட் சூத்திரமும் 'அவரவர் பிறந்த நிலத்தன்மையும் பிறப்பிற் கேற்ற தொழிற்றன்மையுந் தோன்ற நடித்தல்' என்ற உரைப் பகுதியும் ஈண்டு நோக்கற்பாலன. (கூ)

வரிவகை

206. கண்கூடு வரியே காண்வரி யுள்வரி
புறவரி இளர்வரி தேர்ச்சி வரியொடு
காட்சி வரியே யெடுத்துக் கோள்வரி
யெனவெண் வகைப்படு மியம்பிய வரியே.

கண்கூடுவரி—, காண்வரி—, உள்வரி—, புறவரி—, இளர்வரி—, தேர்ச்சிவரி—, காட்சிவரி—, எடுத்துக்கோள்வரி—, என இயம்பிய வரி எட்டு வகைப்படும் - என்று, மேல் எடுத்துக் கூறிய வரிக் கூத்து எட்டு வகைப்படும்.

குறிப்பு:—எண்ணேகாரத்தை ஏனைய விடங்களிலுங் கூட்டுக. கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புறவரி, இளர்வரி என்னு மைந்தும் ஒருவாறு உடனுறையின்பத்தின் பாலவா

யும், தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரி என்னு மூன்றும் பிரிந்துறை யின்பத்தின்பாலவாயும் அமைந்து நிற்றலின் 'ஒடு' விணைப்பிரித்து 'கிளர்வரி' யென்பதனோடுகூட்டுக. இதுவே முதனூலார்க்குங் கருத்தாதலைப் பின்னர் வருஞ் சூத்திரத்தானுணர்க.

"கண்கூடு காண்வரி யுள்வரி புறவரி
கிளர்வரி யைந்தோ டொன்ற வுரைப்பிற்
காட்சி தேர்ச்சி யெடுத்துக் கோளென
மாட்சியின் வரூஉ மெண்வகை நெறித்தே"

(சிலப். அரங். அடியார். உரை மேற்கோள்). மேலும் ஆசிரியர்,

"கண்கூடு வரியே காண்வரி யுள்வரி
புறவரி கிளர்வரி யொடுதேர்ச்சி வரியே
காட்சிவரி யெடுத்துக் கோள்வரி யென்ன
வெண்வகைப் படுமா லியம்பிய வரியே,"

என்ற பாடமும் மோதியுள்ளார். இவ்வெண்வகை வரிக் கூத்தி னிலக்கணங்களைப் பின்வருஞ் சூத்திரங்களா னிரலே கூறுப. இறுதி யேகார மீற்றசை. (கூகூ)

கண்கூடுவரி

207. காதலிற் றோன்றுங் கண்கூடு வரியே
யொருவர் கூட்ட மருவ வாராது
தான்றனி வந்து தலைப்பெய்து நிற்குந்
தன்மைத் தென்னச் சாற்றினர் புலவர்.

காதலில் தோன்றும் கண்கூடுவரியே - தலைவன் தலைவி யர்க் கிடையுள்ள அன்பினடியாக உண்டாகும் கண்கூடுவரி என்பது, ஒருவர் கூட்ட மருவ வாராது - ஒருவர் நடு நின்று கூட்டுவிக்க வொருவரை யொருவர் பொருந்த வராமல், தான் தனி வந்து தலைப்பெய்து நிற்கும் தன்மைத்து - தலை வன் றலைவியருள் ஒருவர் தாமே தனியாக மற்றொருவர் பாற் போய்க் கூடிநிற்கும் தன்மையை யுடையது, என்ன புலவர் சாற்றினர் - என்று நாடக இலக்கண அறிஞர் கூறினர்.

குறிப்பு:—ஏகாரம்: பிரிநிலை. "கண்கூடு என்பது பிரிய தரிசனம். அஃதாவது காட்சி; அஃது ஒருவர் கூட்டவன்றித் தானே வந்து நிற்கு நிலைமை. என்னை?

"கண்கூடென்பது கருதுங்காலை
யிசைப்ப வாராது தானே வந்து
தலைப்பெய்து நிற்குந் தன்மைத் தென்ப,"

என்பது சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை. ஒருவர் முன் ஒருவர் எதிர்முகமாக நின்று இருவர் கண்ணுங் கூடுதலிற் இஃது கண்கூடாயிற்று. (சூசை)

காண்வரி

208. வருகென வந்து போகெனப் போமியற்
காண்வரிக் கூத்து மாண்புறக் கூறி
னுற்ற பின்ன ருளமகிழ் வுறுப்பன
முற்றத் தந்தொழி மொய்ம்பிற் றாகும்.

வருக என வந்து போக என போம் இயல் காண்வரி கூத்து - ஒருவர் வருக என அழைப்ப வந்து போவெனப் போகுந் தன்மையுடைய காண்வரிக்கூத்தி னிலக்கணத்தை, மாண்பு உற கூறின்-சிறப்புப் பொருந்தக் கூறுமிடத்து, உற்ற பின்னர் - தலைவன் தலைவியர் தம்முள் ஒருவரை யொருவர் அண்மிய பிறகு, உளம் மகிழ்வு உறுப்பன முற்ற - அவர் மனம் மகிழத்தக்கன யாவற்றையும், தந்து ஒழி மொய்ம்பிற்று ஆகும் - கொடுத்து நீங்கும் வன்மையை உடையதாகும்.

குறிப்பு:—வருகென, போகென: தொகுத்தல் விகாரம். இயல்-இலக்கணம். வருகென வந்து போகெனப் போவது இதன் இலக்கணமாதலின் ஈது ஒருவர் கூட்டக் கூடியதாயிற்று.

"காண்வரி யென்பது காணுங் காலை
வந்த பின்னர் மனமகிழ் வுறுப்பன
தந்து நீங்குந் தன்மைய தாகும்"

என்பது சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை மேற்கோள்.

உள்வரி

209. அரச மரபின ராகு மக்க
ளூற்றெழு மன்பின் வேற்றுருக் கொண்டுங்
கொள்ளாது மாடு மெள்ளாத கூத்தே
யுள்வரி யென்ப வுணர்ந்திசி னோரே.

அரசர் மரபினர் ஆகும் மக்கள் - அரச குலத்தினராகிய தலைமக்கள், ஊற்று எழும் அன்பின் - உள்ளிருந்து ஊற்றுப் புறப்படுவதுபோல வெளிப்படும் அன்பினடியாக, வேறு உரு கொண்டும் - மாறு வேடம் பூண்டும், கொள்ளாதும் - மாறு வேடம் புனையாதும், ஆடும எள்ளாத கூத்தே - நடிக்கும் இகழ்ச்சியற்ற கூத்தே, உணர்ந்திசினோர் - நாடக நூலறிஞர், உள்வரி என்ப - உள்வரிக் கூத்தென்று கூறுப.

குறிப்பு:—'அரச மரபினராகும்' என விசேடித்தமை யால் இவ்வுள்வரிக்கூத்துப் பெரும்பாலும் அன்னோர்க்குரிய தெனக் கூறியதாயிற்று. உள்வரி - வடிவு மறைத்தல், வேற் றுருக்கொண்டு நடித்தல். 'உள்வரியாவது பாண்டவர் விராட நகரத்துப் பிறிதுருவங் கொண்டாற் போல்வது' என்று சிலப்பதிகார அடியார்க்கு நல்லாரும், 'கிருத்திரிமவேடம்' என்று அரும்பதவுரைகாரரும் கூறுவர்.

"உறையுட் குடிகை யுள்வரிக் கொண்ட;"
"தோட்டலர் குழலி யுள்வரி நீங்கி;"
"உள்வரிக் கொண்டவ் வுரவோன் பெயர்நாள்"
(மணிமேகலை.)
"உள்வரிக் கோலத் துறுதுணை தேடி"
(சிலப். 8. 89).

"உள்வரி யென்பது துணர்த்துங் காலை
மண்டல மாக்கள் பிறிதோ ருருவங்,
கொண்டுங் கொள்ளாது மாடுதற் குரித்தே,"

என்பது அடியார்க்கு நல்லாருரை மேற்கோள். மண்டல மாக்கள் - அரசர். (நூசு)

புறவரி

210. இசைப்பப் போதந் தின்புற வேட்குந்
தலைமக்க ளணையார் தாம்புற நின்று
விளையா டுறுவது விளம்பும் புறவரி.

இசைப்ப போதந்து - வருகவென்று கூறப்போந்து, இன்பு உற வேட்கும் தலைமக்கள்-இன்பம் பொருந்த விரும்பும் தலைமக்கள், அணையார் தாம் புறம் நின்று விளையாடு உறுவது - தலைவனுடனணையாது புறத்து நின்று விளையாடுவது, விளம்பும் புறவரி - மேற்கூறப்பட்ட புறவரிக்கூத்தாம்.

குறிப்பு:—

"புறவரி யென்பது புணர்க்குங் காலை
யிசைப்ப வந்து தலைவன்முற் படாது,
புறத்துநின் றூடி விடைபெறு வதுவே"

என்பது அடியார்க்கு நல்லாருரை மேற்கோள். (கூஎ)

கிளர்வரி

211. ஒருவ ருய்ப்ப மருவித் தோன்றி
நாப்ப ணிருவர் நாப்பணி சொற்கள்
கேட்டிரு புறமொழிப் பொருளாக் கொண்டு
கிளர்ந்துவே றூகுங் கிளர்வரிக் கூத்தே.

ஒருவர் உய்ப்ப - ஒருவர் உடன்கொண்டு செலுத்த, மருவி தோன்றி - அவரொடு பொருந்தித்தோன்றி, நாப்பண் இருவர் நா பணி சொற்கள் - நடுவிற் சந்துபேசும் இருவர் தம்முடைய நாவினூற் கூறுஞ் சொற்களை, கேட்டு - சொல்லக் கேட்டு, இரண்டு புறம் மொழி பொருள் ஆ கொண்டு - உபயார்த்த வாசகப் பொருளாகக் கிரகித்துக்கொண்டு, கிளர்ந்து வேறு ஆகும் கிளர்வரி கூத்து - புலந்துபோகும் மனக் கிளர்ச்சியோடு பிரிந்துபோவதாகும் கிளர்வரிக் கூத்தென்பது.

குறிப்பு:—"கிளர்வரியென்றது நடுநின்றார் இருவருக்கும் சந்து சொல்லக் கேட்டு நிற்பது: என்னை?

'கிளர்வரி யென்பது கிளக்குங் காலை,
யொரு வருப்பத் தோன்றி யவர்வா
யிருபுற மொழிப்பொருள் கேட்டு நிற்பதுவே,'
என்றுராகலின்.''

என்னும் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரைப் பகுதி யீண்டொப்பு நோக்குதற்பாலது. நாப்பண் - நடுவிடம். 'இருவர்' என்றது இருபாலார்க்கும் நடுநின்று சந்து செய்விப்பார் தம்மை அவர். தம் நாவினைப் பணிகொண்டமையின் அவர்தங் கூற்று நாப்பணி சொற்களாயின. இருபுறமொழிப் பொருள் - இருபாற்பட்ட மொழியின் கவர்படு பொருள். கிளர்தல் - கோபித்தெழுதல்; ஈண்டுப் புலத்தல். கிளர்ந்து வேறுதலின் இஃதிப் பெயர்த்தாயிற்று. (ஈஅ)

தேர்ச்சிவரி

212. பிரிந்துறை போழ்தில் பரிந்தாற் றுது
வருந்துறு மக்கள் பொருந்திய தந்துயர்
தம்பிரிந் தோர்கிளை தமைக்கண் டவர்க்குப்
பட்டது மூற்றதும் படர்ந்து தம்முளந்
தேர்ந்துரைத் தாடுத றேர்ச்சி வரியே.

பிரிந்து உறை போழ்தில் - தலைவரை விட்டுப் பிரிந்துறையுங் காலத்தில், பரிந்து - வருந்தி, ஆற்றுது - பிரிவாற்றாது, வருந்து உறும் மக்கள் - வருத்தமுற்ற தலைவியர், தம் பிரிந்தோர் கிளைதமை கண்டு - தம்மைப்பிரிந்த தலைவர்தம் சுற்றத்தாரைக்கண்டு, அவர்க்கு - அச்சுற்றத்தார்க்கு, பொருந்திய - தம்பாலுற்ற, தம் துயர் - தமது துன்பத்தை, பட்டதும் - உண்டானதும், உற்றதும் - நேர்ந்ததும், படர்ந்து - நினைந்து, தம் உளம் தேர்ந்து உரைத்து ஆடுதல் - தமது உள்ளத்தால் ஆராய்ந்து தேடித் தேடிக் கூறியாடுதல், தேர்ச்சி வரியாம்.

குறிப்பு:—ஏகாரம்: ஈற்றசை. பட்டதும் உற்றதுமாகிய தம் துயரினை உளத்தாற் படர்ந்து தேர்ந்து உரைத்து ஆடுதல் எனக் கூட்டுக.

"தேர்ச்சி வரியாவது நாயகனுடைய கிளைகட்குத் தனது துன்பங்களைத் தேடித் தேடிச் சொல்லுதல். என்னை ?

'தேர்ச்சி யென்பது தெரியுங் காலைக்
கெட்ட மக்கள் கிளைகண் டவர்முன்
பட்டது முற்றது நினைஇ யிருந்து
தேர்ச்சியோ டுரைப்பது தேர்ச்சிவரி யாகும்,'

என்றாராகலின்," என்பது அடியார்க்கு நல்லாருரை. இனிப் 'பட்டதும்'—தலைவன் முன் தலைப்பட்டதும், 'உற்றதும்'—அங்ஙனம் தலைப்படலால் நேர்ந்ததும், எனப் பொருளுரைத்தலுமாம். படர்தல் - நினைத்தல். உளம் தேர்ந்து-உள்ளத்தாற் றேர்ந்து. (கூ)

காட்சிவரி

213. அன்புகா ரணமாத் துன்புறு மக்கள்
கிளைஞர்க் காணுபு விளைவுறு தந்துயர்
பலருங் கண்டு பரியுமா றுடுதல்
காட்சி வரியெனு மாட்சித் தாகும்.

அன்பு காரணம் ஆ - தலைவர்மாட்டுள்ள அன்பு காரணமாக, துன்பு உறும் மக்கள்-துன்பத்தையடையும் தலைவியர், கிளைஞர் காணுபு - தலைவருடைய சுற்றத்தாரைக் கண்டு, விளைவு உறு தம் துயர் - உண்டாகிய தமது துன்பத்தினை, பலரும் கண்டு பரியும் ஆறு - கண்டோரெவரும் பார்த்து வருந்தும் வண்ணம், ஆடுதல் - அவர்க்குக்கூறி யாடுதல், காட்சிவரி எனும் மாட்சித்து ஆகும் - காட்சிவரி என்னும் பெருமையுடைய கூத்தாகும்.

குறிப்பு:—ஆடுதல் - இரட்டுறமொழிதலான் ஆடுதலோடு சொல்லாடுதலையும் உடன்கொள்க. கிளைஞர் எனப் பொதுப்படக் கூறினமையான், தம்தமர் தலைவர்தமர் ஆகிய இருதிறத்தினரையும் உளப்படுத்தியதாக் கோடலுமாம்.

"காட்சிவரி யென்பது தன் வருத்தத்தைப் பலருங் காணும்படி நடித்தல். என்னை ?

'காட்சிவரி யென்பது கருதுங்காலைக்
கெட்ட மாக்கள் கிளைகண் டவர்முனர்ப்
பட்டது கூறிப் பரிந்துநிற் பதுவே' என்றுராகலின்,"

என்பது அடியார்க்கு நல்லாருரை: காட்சிவரி : தன் வருத்தம் பலருங் காணும்படி நடித்தல். (சு0)

எடுத்துக்கோள்வரி

214. கையா றெய்துபு மெய்யா வீழ்ந்தனர்
போல வீழ்ந்து புறத்துள பிறர்தா
மேலப் போந்துத மெடுத்துக் கொண்மார்
நடித்துக் காட்டுத லெடுத்துக் கோள்வரி.

கையாறு எய்துபு மெய் ஆ வீழ்ந்தனர் போல வீழ்ந்து - கையறவு அடைந்து உண்மையாகக் கீழே வீழ்ந்தனர்போல விழுந்து, புறத்து உள பிறர்தாம் - (கிளைஞரல்லாத) புறம்பே யுள்ள அயலவர், ஏல போந்து - பொருந்தச் சார்ந்து, தம் எடுத்துக்கொண்மார் - தம்மை எடுத்துக்கொள்ளும்படி, நடித்து காட்டுதல் - ஆடுதலேப்புரிதல், எடுத்துக்கோள் வரி - எடுத்துக்கோள்வரிக் கூத்தாம்.

குறிப்பு:—கையாறு - கையறவு; செயலறுகை. புறத்துள பிறர்: மேலே கிளைஞர் என்றமையான் அவர் புறம்பாய பிறர், எனவே அயலோர் என்பதாயிற்று. எய்துபு - எய்தி;, கொண்மார் - கொள்ள. வீழ்ந்தனர் போல - விழுந்தனர் என்று சொல்லும்படி.

"எடுத்துக்கோள்வரி யென்றது தான் கையற வெய்தி வீழ்ந்தாளாக வீழ்ந்து பிறர் எடுத்துக் கொள்ளும்படி நடித்தல்; என்னை?

"எடுத்துக் கோளை யிசைக்குங் காலை
அடுத்தடுத் தழிந்து மாழ்கி யயலவ
ரெடுத்துக்கோள் புரிந்த தெடுத்துக் கோளே"

என்றுராகலின்," என்பது சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை. மேற்கூறிய வரிக்கூத்து வகைகள் யாவும் பெரும்

பாலுந் தலைவிக்கே யுரியவாமாறு அவற்றி னிலக்கணங்க ளானே விளங்கும். வரிப்பாட்டு வகைகளோத் தலைவிக்கே யன்றித் தலைவற்கும் அகப்புறத் திணைத்தாகிய நாடகத்தின் பாற் கோடல் அமைவுடைத் தாதல்போல, இவ் வரிக்கூத்து வகைகளையும் ஏற்பனவறிந்து தலைவற்குங் கோடல் பொருந் தும். இவ்வரிக்கூத்து வகைகட்கு இலக்கியம் நாடகங்களில் வந்துழி வந்துழிக்காண்க. நாடகக் காப்பியமாகியசி லப்பதி காரத்தில் வேனிற்காதைக்கண் மாதவியாடியவாகக் கூறும் எண்வகை வரிக்கூத்தும் இவைகட் கிலக்கியமாக் கோடல் பொருந்தும்.

"திலகமு மளகமு சிறுகருஞ் சிலையுங்
குவளையுங் குமிழுங் கொவ்வையுங் கொண்ட
மாதர் வாண்முகத்து மதைஇய நோக்கமொடு
காதலிற் றுன்றிய கண்கூடு வரியும்
புயல்சுமந்து வருந்திப் பொழிகதிர் மதியத்துக்
கயலுலாய்த் திரிதருங் காமர் செவ்வியிற்
பாகுபொதி பவளந் திறந்துநிலா வுதவிய
நாகிள முத்தி னகைநலங் காட்டி
வருகென வந்து போகெனப் போகிய
கருநெடுங் கண்ணி காண்வரிக் கோலமு
மந்தி மாலை வந்ததற் கிரங்கிச்
சிந்தைநோய் கூருமென் சிறுமை நோக்கிக்
கிளிபுரை கிளவியு மடவன நடையுங்
களிமயிற் சாயலுங் கரந்தன ளாகிச்
செருவே னெடுங்கட் சிலதியர் கோலத்
தொருதனி வந்த வுள்வரி யாடலுஞ்
சிலம்புவாய் புலம்பவு மேகலை யார்ப்பவுங்
கலம்பெரு நுசுப்பினள் காத லேக்கமொடு
திறத்துவே றுயவென் சிறுமை நோக்கியும்
புறத்துநின் றுடிய புன்புற வரியுங்
கோதையுங் குழலுந் தாதுசே ரளகமு
மொருகாழ் முத்தமுந் திருமுலைத் தடமு
மின்னிடை வருத்த நன்னுத றுன்றிச்

சிறுகுறுந் தொழிலியர் மறுமொழி யுய்ப்பப்
புணர்ச்சியுட் பொதிந்த கலாந்தரு கிளவியி
னிருபுற மொழிப்பொருள் கேட்டன ளாகித்
தளர்ந்த சாயற் றகைமென் கூந்தல்
கிளர்ந்து வேறுகிய கிளர்வரிக் கோலமும்
பிரிந்துறை காலத்துப் பரிந்தன ளாகி
யென்னுறு கிளைகட்குத் தன்னுறு துயரந்
தேர்ந்துதேர்ந் துரைத்த தேர்ச்சிவரி யன்றியும்
வண்டலர் கோதை மாலையுண் மயங்கிக்
கண்டவர்க் குரைத்த காட்சி வரியு
மடித்தடித் தவர்முன் மயங்கிய மயக்க
மெடுத்தவர் தீர்த்த வெடுத்துக்கோள் வரியும்.''

என்ற சிலப்பதிகார வேனிற்காதையடிகள் இவ் வரிக்கூத்து வகைகளி னியல்பை விளக்குதல் காண்க. (சக)

முதலிடைகடைக்கூத்துக்கள்

215. முதலிடை கடையெனு மூவகைக் கூத்துங்
காலந் தேயங் கரும மென்ற
முத்திறம் புணர்ந்து மொழிவா னமைந்த
மூவரு ளொருவர் முனைந்து மேனின்
றேன்ற நீதிக ளின்னிசைப் பாட்டி
னெடுத்து வகுக்கு மியல்பின வாகும்.

முதல் இடை கடை எனும் மூன்று வகை கூத்தும் - முதற்கூத்து இடைக்கூத்து கடைக்கூத்தென்று சொல்லப் படும் மூன்று பகுதியவாய கூத்துக்களும், காலம்-, தேயம் - இடம், கருமம் - தொழில், என்ற-, முத்திறம் - மூன்றன் றன்மைகளையும், புணர்ந்து மொழிவான் அமைந்த-வருணித்துக் கூறும் வன்மை பொருந்திய, மூவருள் ஒருவர் - மூவர் தம்முள் ஒருவர், முனைந்து - முன்வந்து, மேல் நின்று - அரங் கத்தினிடம் நின்று, ஏன்ற நீதிகள் - எடுத்துக்கொண்ட நாடகத்திற்கூற அமைந்த நீதிகளை, இனிமை இசை பாட் டின் - இனிய இசைப்பாடல்களான், எடுத்து வகுக்கும்

இயல்பின ஆகும் - செவ்விதிற் புலனுக விரித்து வகுத்துக் கூறும் இயல்பினை யுடையனவாகும்.

குறிப்பு:—நாடகத்தின் முதல் இடை கடை என்னும் மூன்றிடத்தும் இவை நிகழ்த்தப்படுதலின் இப்பெயர் பெற்றன. நாடகக்கதை நிகழுங் காலத்தினையாதல் இடத்தினையாதல் அன்றிச் செயலினையாதல் கூத்து முகத்தாற் புனைந்து கூற அமைந்த மூவருள் ஒருவர் நாடகத்தின் முதல் இடை கடை யென்னு மூவயின் ஓரிடத்து, அமயத்துக் கேற்ற நீதிகளை இனிய இசைப் பாடல்களின் வாயிலாகப் பாடியாடல் இவற்றின் றன்மையென்பது விளங்கும். நாடகக் காப்பிய மாகிய சிலப்பதிகாரத்து முதற்கண் மங்கல வாழ்த்துப் பாடலும், இடைக்கண் குன்றக் குரவையும் ஆய்ச்சியர் குரவையும், கடைக்கண் வாழ்த்துக் காதையும் முறையே முதலிடை கடைக் கூத்துக்களாய் ஓராற்றான் அமைதல் உற்று நோக்குநர்க்குப் புலனும். ஷேக்ஸ்பியராதிய மேற்புல ஆசிரியர்தம் நாடகங்கள் சிலவற்றுள் இவையிற்றினுக்கு இலக்கியங் காணலாம். இம்மூவகைக் கூத்தும் ஒரே நாடகத்தின்கண் அமைதல் வேண்டுமென்னும் நியதியின்றி ஒன்றே இரண்டோ வருதலுமுண்டு. இலக்கியம் வந்துழிக் காண்க. (சஉ)

216. கூத்துக் கூறு நாடகஞ் சிலவே.

கூத்து கூறு நாடகம் சிலவே - எவ்வகைக் கூத்தும் நிகழாத நாடகங்களுஞ் சிலவுள.

குறிப்பு:—ஏகாரம் : ஈற்றசை. தசரதன் றவறு கூத்தின்றி யமைந்ததற் குதாரணமாம். (சஙூ)

(கூ) பின்னுரை

217. நாடக நீதியை நனிபுலப் படுத்து
நாடக விறுதியிற் பாடுபெற் றோங்கும்
பாத்திர மொருவ னுத்திறம் விளங்கப்
பகர்ந்து கடவுளைப் பண்ணுற வினிது
பாடி யவைக்குப் பரிந்து முகமன்
கூறிப் போவது குறித்த பின்னுரை.

நாடகம் நீதியை நனி புலப்படுத்து - நாடகத்தினுற் புலப்படும் நீதியை நன்கு எடுத்துக் காட்டி, நாடகம் இறுதியில் - நாடகத்தின் முடிவில், பாடு பெற்று ஓங்கும் பாத்திரம் ஒருவன் - நாடக பாத்திரங்களுட் பெருமையுற்று விளங்கும் தலைமக்களுள் ஒருவன், நா திறம் விளங்க - சொல்வன்மை திகழ, பகர்ந்து - பேசி, கடவுளை - தெய்வத்தை, பண் உற இனிது பாடி - இராகம் பொருந்த இனிமையாகப் பாடி, அவைக்கு பரிந்து முகமன் கூறி - சபையோர்க்கு அன்பு பாராட்டி உபசார வார்த்தை சொல்லி, போவது - அரங்கினின்று நீங்கிப் போவது, குறித்த பின்னுரை - உறுப்பியல்பு முதற் சூத்திரத்தின்கட் 'குணநவில்' என்று விசேடித்துக் குறித்த பின்னுரையாகும்.

குறிப்பு:—நாடகத் தலைவன் நாடகநீதியை யினிது எடுத்தியம்பிச் சபையோர்க்கு முகமன் கூறிக் கடவுளை வணங்கிப் போவது பின்னுரையின் இலக்கணமாமென்றவாறு. ஆங்கிலத்தில் இதனை Epilogue என்று கூறுவர். சேகப்பிரியர் நாடகங்களில் ஒன்றுகிய 'நீ விரும்பிய விதமே' (As you like it) என்பது இத்தகைய பின்னுரை பெற்றுள்ளது காண்க. மாலதீமாதவ நாடகத்தினிறுதியில் மாதவன் கூறியது பின்னுரைக் குதாரணமாம். கலாவதி நாடக விறுதியாகிய ஏழாமங்கம் நான்காங்களமே பின்னுரையாய் நிற்றலுணரற்பாலது. தசரதன்றவறு நாடகத்தில் இறுதிக் கூற்றுகத் தசரதன் பேசியது பின்னுரையின்பாற்படும். கடவுளை வாழ்த்துதல் கூறலை, அறுமுறை வாழ்த்துக் கூறலும் பெறப்பட்டது (சச)

218. சூத்திரதாரனுஞ் சொல்லும் பின்னுரை.

சூத்திரதாரனும் சொல்லும் பின்னுரை - சில நாடகங்களிற் சூத்திரதாரனும் பின்னுரை கூறுவன்.

குறிப்பு:—தலைவனேயன்றிச் சூத்திரதாரன் பின்னுரை கூறுதல் இதனுனே அமைக்கப்பட்டது. சூத்திரதாரனும்: உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. உதாரணம்வந்துழிக் காண்க. (சஞ)

219. பின்னுரை யெடுத்துப் பன்னல வாகு
நாடகஞ் சிலவுள நாடுங் காலே.

பின்னுரை எடுத்து பன்னல ஆகும் நாடகம் - பின்னுரை என்னும் நாடகப் பகுதியினை அமைத்துக் கூறுத நாடகங்கள், நாடுங்கால் - ஆராய்ந்து பார்க்குமிடத்து, சில உள - சில உண்டு.

குறிப்பு:—ஆங்கிலத்தில் 'ஒதேல்லோ' முதலிய நாடகங்களும் தமிழில் மனோன்மணீயம் முதலிய நாடகங்களும் பின்னுரை பெறுதன. (சசு)

பரதவாக்கியம்

220. நாடக முடிவி னண்ணித் தலைவ
னூலையு நூலா சிரியன் றன்னையு
மவற்கறி வுறுத்த வாசான் றனையுந்
தமிழ்மொழி யினையுந் தமிழ்ப்புல வோரையும்
பாட்டினில் வாழ்த்துதல் பரதவாக் கியமே.

நாடகம் முடிவில் - நாடகத்தின் இறுதியில், தலைவன் நண்ணி - நாடகத் தலைவன் அரங்கிற்போந்து, நூலையும் - எடுத்துக்கொண்ட நாடக நூலினையும், நூல் ஆசிரியன் தன்னையும் - அந்நாடக நூலினை உண்டாக்கிய ஆசிரியனையும், அவற்கு அறிவுத்த ஆசான் தன்னையும் - அவனுக்குக் கல்வியறிவு கொளுத்திய ஆசிரியனையும், தமிழ் மொழியினையும், தமிழ் புலவோரையும் - தமிழ் வித்துவான்களையும், பாட்டினில் வாழ்த்துதல் - பாட்டால் வாழ்த்துக்கூறுதல், பரதவாக்கியமே - பரதவாக்கிய மென்று சொல்லபடும்.

குறிப்பு:—பின்னுரையிற் கூறவேண்டிய கடவுள் வாழ்த்து அறுமுறைவாழ்த்து முதலியவற்றை யிப் பரதவாக்கியத்துள் அமைத்துஞ் சிலவாசிரியர் கூறுவர். தசரதன்றவறு நாடகத்தின் இறுதியிலுள்ள,

"பனவர்குல முப்பொழுதும் பரவா நிற்பப்
பன்னரிய நாடகத்தென் கலிவி ரித்தென்

மனமெனுமம் புயமலர்த்தி மகிழ்ந்து கற்கு
மாணைக்க ருளத்தினில்வா னமுதம் வாக்குங்
கனைகழற்சூ ரியநாரா யணனெ னும்பேர்க்
காமர்தமிழ் முகிலுலகில் வாழ்க நாளும்
புனைவுறுமிவ் வங்கமுநற் றமிழும் போற்றும்
புலவர்களும் பொலிந்தினிது வாழ்க மாதோ''

என்ற செய்யுள் பரதவாக்கியத்திற் குதாரணமாம். மத்த விலாசப் பிரகசனத்தின் ஈற்றிலுள்ள,

"மன்னுயிர்கள் மகிழ்சிறக்க வழிவ ழாது
வன்னியவி யேற்றிடுக வந்த ணாளர்
பன்னுமறை யொலிபயில்க பசுக்கள் மல்கிப்
பல்குகவிவ் வுலகுபிறப் பொழுக்க மேவித்
துன்னுகநன் முயற்சிசகி யுடுக்க ளுள்ள
துணையுமிடர் தவிர்கபகை யடக்கி நாளும்
நன்னரர சாட்சிபுரி சத்ரு மல்லன்
நலங்குலவிப் புகழ்நிலவி வாழ்க மாதோ;''

என்னுங் கவி பரதவாக்கியத்துள் அறுமுறைவாழ்த்து மடக்கிக் கூறியதற் குதாரணமாம்.

"வான்முகில்கள் காலமுறப் பொழிக பைங்கூழ்
வளம்பெருக்கி நிலஞ்சிறக்க வழாது தீம்பால்
ஆனினங்க ணனிசுரக்க வுயிர்கள் யாவும்
அன்புடைய வாயுவகை யடைக வென்றும்
மேன்மைதரும் அந்தணர்க ணல்லோ ராக
வீசுகமென் காலின்ப மிகுவித் தெங்கும்
பான்மைதரு திருவினெடு தருமம் பற்றிப்
பகைமையொழித் தரசர்நிலம் பரித்து வாழ்க,'

என்பது மண்ணியல் சிறுதேர்ப் பரதவாக்கியம். (சள)

(கo) ஒழிபு

பெயரீடு

221. தலைமக்க டமது நலமிக்க பெயரினுங்
கதையினிற் பாற்கடற் சுதையெனச் சிறந்த
விடயத் தினும்பெய ரிடலுயர் வென்க.

தலைமக்கள் தமது நலம் மிக்க பெயரினும் - தலைமக்களுடைய சிறப்பு மிகுந்த பெயரினாலும், கதையினில் - நாடகக் கதையின்கண், பால் கடல் சுதை என சிறந்த - திருப்பாற்கடலினுண்டான அமிர்தம் போலச் சிறப்புவாய்ந்த, விடயத்தினும் - விஷயத்தினாலும், பெயர் இடல் உயர்வு என்க - நாடக நூற்குப் பெயரிடுதல் சிறந்த தென்று கூறுக.

குறிப்பு:—கலாவதி, ஹாம்லெத், மனோன்மணீயம் இவை தலைமக்களாற் பெயரமைந்தன. தலைமக்கள் எனப் பொதுப்படக் கூறினமையால் தலைவன் தலைவிய ரிருவர் பெயராலும் நாடகத்திற்குப் பெயரமைதலுண்டு; விக்கிரமோர்வசீயம், மாலதீ மாதவம் முதலியன உதாரணங்களாம். 'பாற்கடற் சுதையென' என்ற உவமையால் நாடகக் கதைக்குத் திருப்பாற்கடலும், அதனுட் சிறந்த விடயத்திற்கு அமுதமும் உபமானமாகி நின்றன. தசரதன்றவறு, மண்ணியல் சிறுதேர், முத்திராராட்சசம் இவை விடயத்தாற் பெயரமைந்தன. தலைமக்கடம்மாலும் விடயத்தாலும் நாடகத்திற்குப் பெயரிடல் 'உயர் வென்க' என்றமையானே வேறு விதமாகப் பெயரமைதல் அத்துணைச் சிறப்பின்மை யறிக. வடமொழி அநர்க்கராகவ நாடகத்திற்கு முராரி நாடக மென்று ஆசிரியராற் பெயரமைந்ததும், நகைச் சுவையே பெரிதும் விளங்கும் வடமொழி நாடக மொன்றினுக்கு ஹாஸ்யார்ணவம் என்று சுவையாற் பெயர் பெற்றதும் இவைபோல்வன பிறவும் பிறகாரணங்களாற் பெயரமைந்தனவாம். (சஅ)

புனைவுமுறை

222. இம்மையிற் பாத்திர மியற்றிடு வினைகட்
கேற்ப நன்மையு மின்னுத் தீமையும்
பாற்பட் டுறுவான் கதையினைப் பகர்தல்
புனைவு முறையாம் புகலுங் காலே.

இம்மையில் - இப்பிறப்பின்கண், பாத்திரம் - பாத்திரங்களுள் ஒருவன், இயற்றிடு வினைகட்கு ஏற்ப - செய்யுஞ் செயலுக்குப் பொருந்த, நன்மையும் - நல்லன செய்யின்

நன்மையும், இன்ன தீமையும் - தீயனபுரியின் வெறுக்கத் தக்க தீங்கும், பால் பட்டு உறுவான் - பகுதிப்பட்டுப் பொருந்துமாறு, கதையினை பகர்தல் - நாடகக் கதையினைக் கூறுதல், புகலுங்கால் - எடுத்துச் சொல்லுமிடத்து, புனைவு முறை ஆம் - நாடகத்தைப் புனையும் முறைமையாகும்.

குறிப்பு:—நல்லொழுக்கம் உளார் நன்மை யெய்தலும் தீயொழுக்கம் உளார் தீமை யெய்தலும் அறமாதலின் (பொதுவியல் சூத்.- 12 நோக்குக), அவரவர் இயற்றிடு வினை கட்கு ஏற்ப நன்மையுந் தீமையும் பாற்பட்டுறுமாறு கதை யினைக் கூறல் புனைவுமுறை யாயிற்று. இங்ஙன முறுதலை Poetic Justice என்று ஆங்கிலத்திற் கூறுப. இயற்றும் வினைக்குத் தக்கவாறு நற்பயனும் தீப்பயனும் அடைய அமைத்தலின் அருமை தோன்றப் 'புகலுங்காலே' என்றனர். ஏகாரம்: ஈற்றசை. (சகூ)

உறுப்பியல்பு புறனடை

223. குறையுற வெளியேங் கூறின மெனினு
மறிவுடை யோரதை யகற்றுதல் கடனே

எளியேம் - அறிவிற் சிறியேமாகிய யாம், குறை உற கூறினம் எனினும் - முன்னர்க் கூறிய இலக்கணங்களுட் குறைபாடுண்டாகக் கூறியுள்ளேமாயினும், அறிவு உடை யோர் அதை அகற்றுதல் கடனே - நாடகவிலக்கண அறி ஞர்கள் அக்குறைபாட்டினை நீக்கி நிறைந்த இலக்கணங்களை உரிய இடங்களிற் றந்துரைத்துக் கோடல் அறிவானமைந் தார்க்குக் கடமையாம்.

குறிப்பு:—குற்றங்கணீக்கிக் குறைபெய்து கொள்ளுதல் கற்றறிந்த மாந்தர் கடனுதலின் இங்ஙனம் புறனடையமைத் தார். ஏகாரம்: ஈற்றசை. (நo)

உறுப்பியல்பு முற்றிற்று

(ச) நடிப்பியல்பு

224. காண்போர் மனத்தைக் களிப்பிக் குந்தகை
நடிப்பியல் பதனை நாட்டுறுங் காலை
மெய்ப்பாட் டின்னியன் மேதக விளக்கி
விறல்புலப் படுத்திட் டொற்றுமை மேவிச்
சாற்று மவிநயம் போற்றுஞ் சுவைக்குத்
தக்க சால்புட னெக்கக் காட்டி
யறுவகை நிலையு மறுவறத் தெரித்து
நாடக சாலையை நண்ணுவித் தழகொடு
நாடும் பாவனை யோடு நடித்தலே.

காண்போர் மனத்தை - நாடகம் பார்ப்பவர் மனத்திற்கு, களிப்பிக்கும் தகை - மகிழ்வினையளிக்கும் தகைமையினையுடைய, நடிப்பு இயல்பு அதனை நாட்டுறும் காலை - நடிப்பு இயல்பு இன்னதென்பதனை எடுத்துக் கூறுமிடத்து, மெய்ப்பாடு இனிமை இயல் - மெய்ப்பாடுகளின் இனிய இயல்பு, மேதக விளக்கி - நன்கு புலப்படுமாறுசெய்து, விறல் புலப்படுத்திட்டு - விறல் காண்போர்க்குப் புலனுமாறு காட்டி, ஒற்றுமை மேவி - நடிப்பான் மேற்கொண்ட நாடக பாத்திரத்தோடு தான் ஒன்றுபடுதலைப் பொருந்தி, சாற்றும் அவிநயம் போற்றும் சுவைக்கு தக்க சால்புடன் ஒக்க காட்டி- சுவைக்குத் தக்கனவாகச் சொல்லப்படும் அபிநயங்களை அமையுமாறு பொருந்தத் தெரித்து, ஆறு வகை நிலையும் மறு அற தெரித்து - அறுவகைப்பட்ட நிலைகளையும் குற்ற மற விளங்கக்காட்டி, நாடக சாலையை அழகொடு நண்ணுவித்து - நாடகசாலையினை அழகு பொருந்தச் செய்து, நாடும் பாவனையோடு நடித்தல் - ஆராயத்தக்க பாவனைகளோடு நடித்தலாகும்.

குறிப்பு:—நாடகம் காட்சி நூலாதலானும், காணுநர் மனங்களிப்படைவது நடிக்குநர் வன்மையாலுதலானும், நடிப்பியல்பின் சிறப்பானே நாடகஞ் சிறப்படையுமாதலானும், 'காண்போர் மனத்தைக் களிப்பிக்குந்தகை'மையினை

'நடிப்பியல்' பிற்குச் சிறப்படையாகக் கூறினர். நாட்டுதல்: ஈண்டு எடுத்துக் கூறுதல், நாடகவிலக்கணமாய்குநர் மனத்தில் நன்கு பதியச்செய்வது அதுவாதலின். மெய்ப்பாடு, விறல், அவிநயம் இவற்றின் இலக்கணங்களைப் பின்னர் விளக்கிக் கூறுவர். அறுவகைநிலை:

'நிற்ற லியங்க லிருத்தல் கிடத்தல்
வருதல் போதலென் றிருமூ வகைத்தாம்'

என மேற்கூறுவர். நிலையினிலக்கணமும் வகையும் இவ் வியல்பு ஐந்தாவது பகுதியான் விளங்கும். அணிபெற வமைத்த நாடகசாலையும் நடிப்பியல்பு சிறவாதேல் அழகு பெறுதொழிவதும் அது சிறக்குமேல் அழகுற்றெளிர்வதும் உண்மையாதலின்,

'நாடக சாலையை நண்ணுவித் தழகொடு'

எனக்கூறினர். இலக்கணஞ் சான்ற பாவனையினை யாய்கு பவனே நடிப்போன் குறிப்பினை அறிபவனுதலின் 'நாடும் பாவனை' என விசேடித்தனர். ஏகாரம்: ஈற்றசை. (க)

(க) மெய்ப்பாடு

225. மெய்க்கட் பட்டு விளங்கிய தோற்றமு
முய்த்துணர் வின்றித் தலைவரு பொருளின்
மெய்ப்பொரு ணேரிற் கண்டது போலத்
தோன்றுங் கருத்துஞ் சொற்றமெய்ப் பாடாம்.

மெய்க்கண் பட்டு தோன்றிய தோற்றமும் - உடம்பினிடத்துண்டாகிக் காண்போர்க்குப் புலனுக வெளிப்பட்டுத் தோன்றிய தோற்றமும், உய்த்து உணர்வு இன்றி - செலுத்திக் காணும் அறிவில்லாமலே, தலைவரு பொருளின் -எதிர்ப்பட்ட பொருளின் தன்மையாலே, மெய்ம்மை பொருள் நேரில் கண்டது போல தோன்றும் கருத்தும் - உள்ள பொருளினைக் கண்ணுக்கு எதிரிற் பார்த்ததுபோலத் தோன்றும் கருத்தும், சொற்ற மெய்ப்பாடு ஆம் - மேற்சூத்திரத்திற் கூறிய மெய்ப்பாடாகும்.

குறிப்பு:—மெய்ப்பாடு - மெய்யின்கட்படுவது, உடம் பிற் றோன்றுவது. மெய்க்கட் பட்டு விளங்கிய தோற்ற மென்றது கண்ணீரரும்பல் மெய்ம்மயிர் சிலிர்த்தல் முதலாக உடம்பின்க ணுண்டாகும் வேறுபாடுகளே. பாம்புக் காட்டிற் சென்றொருவன் ஆண்டுக்கிடந்த பழுதையைக் கண்டு அஞ்சியோடினான்; ஆண்டுக் கிடந்த பழுதை தலைவரு பொரு ளாயிற்று; அதனை யுய்த்துணர்வின்றி மெய்யான அரா வெனக் கருதியது 'உய்த்துணர்வின்றித் தலைவருபொருளின் மெய்ப்பொரு ணேரிற கண்டதுபோலத் தோன்றுங் கருத்' தாயிற்று. வேம்பு சுவைத்த ஒருவனை மற்றொருவன் கண் டான்; வேம்பு சுவைத்தவன் அறிந்த கைப்புணர்வினை நாவு ணர்வினனே அம்மற்றையோன் உணரானெனினும், இவன் கைப்புச் சுவைத்தான் எனக் கண்ணுணர்வானே யறிதலும், அச்சத்துக் கேதுவாகிய ஒருபொருள் கண்டு அஞ்சியோடி வருகின்ற ஒருவனை மற்றொருவன் கண்டவழி இவன் வள்ளெயிற் றரிமா வாள்வரி வேங்கை முள்ளெயிற் றரவே முழங்கழற் செந்தீ முதலாய அஞ்சுதக்கன கண்டஞ்சினன் என்றறிவதும் இதன்பாற்படும். (உ)

226. அதுதான்,
நிலையும் பொதுவுமென் றிருவகைத் தாகும்.

அதுதான் - அம் மெய்ப்பாடுதான், நிலையும் பொது வும் என்று இரண்டு வகைத்து ஆகும்-நிலைமெய்ப்பாடு பொது மெய்ப்பாடு என்னும் இரண்டு வகையினை யுடையதாகும்.

குறிப்பு:—நிலை பொது என்றவற்றின் பெயர்க் காரணம் பின்னர் வருஞ் சூத்திரங்களானே விளக்குவர். (ஊ)

நிலைமெய்ப்பாடு

227. நுகர்ச்சியுள் ளளவு நிலைத்திருப் பதனை
லொன்பான் சுவையு முறுமுத லாக
நிகழுங வெல்லா நிலைமெய்ப் பாடாம்.

நுகர்ச்சி உள்ள அளவும் - சுவைகளின் அநுபவம் பொருந்தியிருக்கும் அளவும், நிலைத்து இருப்பதனால் - நிலை

பெற்று இருக்குந் தன்மையானே, ஒன்பான் சுவையும் உறும் முதல் ஆ - ஒன்பதுவகைச் சுவையும் பொருந்திய அடிப் படையாக, நிகழுந எல்லாம் - உண்டாகும் மெய்ப்பாடுகள் யாவும், நிலைமெய்ப்பாடு ஆம்- நிலைமெய்ப்பாடு என்று சொல் லப்படும்.

குறிப்பு:—ஒன்பான் சுவை: உவகை பெருமிதம் நகை சமம் வெகுளி வியப்பு இழிப்பு அவலம் அச்சம் என்பன வாம். இவற்றினிலக்கணங்களை யிந்நூல் 40 முதல் 53 வரை யுள்ள சூத்திரங்களானறிக. 'நுகர்ச்சி' என்றது ஈண்டுச்சுவை யின் அநுபவத்தினை. முதல் - முதற் காரணம். சுவையினை அடிப்படையாகக் கொண்டு தோன்றி அச்சுவையின் அநுப வம் பொருந்தி நிற்குமளவும் நிலைபெற நிகழும் மெய்ப்பாடு கள் யாவும் நிலைமெய்ப்பாடென்னப்படும். ஒவ்வொரு சுவைக்குந் தனித்தனியாக அஃததனுக்கென்றே நிகழ்பவை யிம்மெய்ப்பாடா மென்பதிதனானே போதரும். ஸ்தாயீபாவ மென வடநூலார் கூறுவதும் இதுபற்றியேயாம். (ச)

பொதுமெய்ப்பாடு

228. பல்வகைச் சுவையினும் பரந்து நிற்குந
பொதுமெய்ப் பாடெனப் புகன்றனர் புலவர்.

பல வகை சுவையினும் பரந்து நிற்குந-ஒரு சுவைக்கே யுரியன வாதலின்றிப் பலவகைப்பட்ட சுவைகளின்கண்ணும் பொருந்தி நிற்கும் பண்புடைய மெய்ப்பாடுகள், பொது மெய்ப்பாடு என புகன்றனர் புலவர் - பொது மெய்ப்பாடா குமென்று நாடகநூலறிஞர் கூறினர்.

குறிப்பு:—பல சுவைக்கும் பொதுவாய் நிற்றலின் இவை யிற்றிற்கு இப்பெயர் வாய்ந்தது. மடித்தவாயும் கடித்த விதழும் சிவந்த கண்ணும் வெகுளிச் சுவைக்கே யன்றி பெரு மிதச் சுவைக்கும் வருதலின் இவை பொதுமெய்ப்பாடாம்.

(உ) விறல்

229. நுகரத் தகுவ பொருள்பல நுகர்ந்த
பொறியுணர் வாகிய சுவைகா ரணமா

வுளத்தி னிகழுங் குறிப்புப் பற்றி
யிச்சையி னன்றித் தாமே யெழுந்து
புறத்திற் ரோன்றுஞ் சத்துவ மேவிறல்.

நகர தகுவ பொருள் பல நுகர்ந்த - அநுபவ யோக்கியமான பல பொருள்களை அநுபவித்த, பொறி உணர்வு ஆகிய சுவை காரணம் ஆ - இந்திரிய உணர்ச்சியாகிய சுவை யினடியாக, உளத்தில் நிகழும் - மனத்தின்கணுண்டாகும், குறிப்பு பற்றி - குறிப்பினை யாதாரமாகக் கொண்டு, இச்சையின் அன்றி - வெளிப்படுத்த வேண்டும் என்னும் விருப்பம் இல்லாமலே, தாமே எழுந்து புறத்தில் தோன்றும் சத்துவமே விறல் - தாமாகவே உண்டாகிப் புறம்பே வெளிப்பட்டுத் தோன்றும் சத்துவமே விறலாகும்.

குறிப்பு:—விறல் சத்துவம் என்பன ஒரு பொருட் கிளவிகள். குறிப்பென்பது கைப்பின் சுவை யுணர்வு பிறந்த வழி வெறுப்பு முதலாயின உள்ள நிகழ்ச்சி போல அஞ்சுதக்கன கண்ட வழி அதனை நோக்காது வெறுக்கும் உள்ள நிகழ்ச்சி. விற லென்பன, அவ்வுள்ள நிகழ்ச்சி பிறந்த வழி வேம்பு தின்றார்க்குத் தலை நடுங்குவது போலத் தாமே தோன்றும் நடுக்க முதலாயினவாம். எனவே, குறிப்பாவது சுவை யின்கட் டோன்றுவதாம். ஸத்துவமாவது அக்குறிப்பின் கண் நிகழ்கின்ற நிகழ்ச்சியாகும். தகுவ - தகுவன. சுவைக் கப்படும் பொருளும் அதனை நுகர்ந்த பொறி யுணர்வும் அது மனத்துப்பட்ட வழி உள்ளத்து நிகழுங் குறிப்பும் குறிப்புக்கள் பிறந்த உள்ளத்தாற் கண்ணீ ரரும்பலும் மெய்ம் மயிர் சிலிர்த்தலுமாதிய உடம்பின்கண்வரும் வேறுபாடாகிய சத்துவங்களும் வேற்றுமை நயங்கருதிய வழி வெவ்வேறு யிருப்பவும், வேம்பு முதலாயின பொருளும் அதனைநு நாமுதலாயின பொறியும் வேறுவேறு நின்றவழிச் சுவையென்று சொல்வதே பிறவாமையானும் அவ்விரண்டும் கூடியவழிச் சுவையென்பது பிறத்தலானும் ஒற்றுமை நயம் பற்றி 'பொறியுணர்வாகிய சுவை' என்று கூறினர். இச்சையா னெழுவது Voluntary Action என்றும், இச்சை யினன்றி யெழுவது Involuntary Action என்றும் ஆங்கி

லத்திற் கூறுப. "சத்துவமாவது - குறிப்பு வரையறை; ஆவது, சுத்தச்சுவையாகின்ற ஒன்பதினும் பாவிக்கும் அத்துணையே மெய்ம்மைத்தாய் வருவதெனக் கொள்க. என்னை? வேம் பென்று காட்டப்புக்கால் அவ்வேம்பின் இரதங் காட்டாதே அதுதான் இறைவனுக்கு மெய்யின்கண் வருவது. கருணை யென்றுற் பாவித்துக் காட்டுவதன்றி மெய்யாகக் கண்ணீர் வந்தழுவது. அல்லாத சுவைகளும் வந்த சத்துவமும் இப்படி ஒட்டிக் கண்டுகொள்க. அவைதாம் அச்சுவைகளில் எண் ணம் வந்தால் தோற்று முடம்பில்; உடம்பின்மிகத் தோற் றும்முகத்து; முகத்தின் மிகத்தோற்றும் கண்ணில்; கண்ணின் மிகத்தோற்றும் கண்ணின் கடையகத் தென்றவாறு" என் னும் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை ஈண்டு நோக்கற் பாலது. (சு)

விறல்வகை

230. அதுதான்,

மெய்ம்மயிர் சிலிர்த்தல் விழிநீர் வார்த
னடுக்க மடுத்தல் வியர்த்த றேற்றங்
களித்தல் விழித்தல் வெதும்பல்சாக் காடு
குரற்சிதை வென்னக் கொள்பதின் வகைத்தே.

அதுதான் - அவ்விறலெனப்படுவதுதான், மெய் மயிர் சிலிர்த்தல் - ரோமாஞ்சிதங்கொள்ளல், விழி நீர் வார்தல் - கண்ணீர் சொரிதல், நடுக்கம் அடுத்தல் - நடுக்கம் உண்டா தல், வியர்த்தல் - வியர்வை தோன்றல், தேற்றம் - தெளிதல், களித்தல் - மகிழ்தல், விழித்தல் - விழித்து நோக்குதல், வெதும்பல் - மனம் புழுங்கல், சாக்காடு - உணர்வின்மை, குரல் சிதைவு - குரல் கம்முதல், என்ன கொள் பத்து வகைத்து - என்று ஆன்றோரான் ஏற்றுக்கொள்ளப்பட்ட பத்து வகையினையுடையதாகும்.

குறிப்பு:—சாக்காடு - இறந்து படுதல்; ஈண்டு உணர்வின் மைமேனின்றது; சாக்காடென்பதற்கு மடலேறுதலும் வரை பாய்தலும் போல்வன கூறல் என்று,

"வேட்கை யொருதலை யுள்ளுதல்"
என்னும் தொல்காப்பியக் களவியற் சூத்திரவுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியதும் இதனை வலியுறுத்தும். நாடகம் அகப்புறத் திணைத்தாதலின் சாக்காடென்பதற்கு மரணமென்று பொருள் கோடலுமாம். "அச் சத்துவந் தான் பத்துவகைப்படும். என்னை? மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண்ணீர் வார்தல், நடுக்கமடித்தல், வியர்த்தல், தேற்றம், களித்தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, குரற்சிதைவு என விவை" என்பது அடியார்க்கு நல்லாருரை. (எ)

231. பொருளும் பொறியுந் தலைப்பெய் தன்றி
யொருவகைச் சுவையு முற்றெழ லின்மையின்
"இருவகை நிலத்தி னியல்வது சுவையே"
யென்று நாடக நூலோ ரியம்பினர்.

பொருளும் – சுவைக்கப்படு பொருளும், பொறியும் - சுவைக்கும் பொறியும், தலைப்பெய்து அன்றி-ஒன்று கூடின் அல்லாமல், ஒன்று வகை சுவையும் உற்று எழல் இன்மையின்-எவ்விதமான சுவையும் பொருந்தி யுண்டாகாதாதலின், இரண்டு வகை நிலத்தின் இயல்வது சுவையே-சுவைக்கப்படு பொருள் சுவைக்கும் பொறி யென்னுமிரண்டிடத்தும் கூடி நடைபெறுவது சுவையாம், என்று நாடகம் நூலோர் இயம்பினர் - என்று நாடக விலக்கண ஆசிரியர் கூறினர்.

குறிப்பு:—"இருவகை நிலத்தினியல்வது சுவையே" என்பது தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் பேராசிரியருரை மேற்கோட் சூத்திரம். (தொல்.பொருள். 249 - உரை). "சுவைப் பொரு ளென்பன, அறுசுவைக்கு முதலாகிய வேம்புங்கடுவும் உப்பும் புளியும் பாக்கும் கரும்பும் போல்வன. அவையாமாறு: நகைச் சுவைக்குப் பொருளாவன ஆரியர் கூறுந் தமிழும், குருடரும் முடவருஞ் செல்லுஞ்செலவும், பித்தருங் களியருஞ் சுற்றத்தாரை இகழ்ந்தாருங் குழவி கூறும் மழலையும் போல்வன. அச்சப் பொருளாவன,

'வள்ளெயிற் றரிமா வாள்வரி வேங்கை
முள்ளெயிற் றரவே முழங்கழற் செந்தீ

யீற்ரு மதமா வேக பாதங்
கூற்றங் கோண்மா குன்றுறை யசுணம்,'

என்று சொல்லப்பட்டன போல்வன. இவற்றைச் சுவை கோடலென்பதென்னையெனின், நகையும் அச்சமு முதலா கிய உணர்வு முற்காலத்து உலகியலான் அறிலான் ஒருவன் அவற்றுக்கு ஏதுவாகிய பொருள்பிற கண்டவழித்தோன்றிய பொறியுணர்வுகள் அவ்வச்சுவை யெனப்படும். வேம்பென் னும் பொருளும் நாவென்பொறியுந் தலைப்பெய்துழி யல்லது கைப்புச் சுவை பிறவாததுபோல், அப்பொருள் கண்டவழி யல்லது நகையும் அச்சமுந்தோன்ரு. ஒழிந்த காமமுதலியன வும் அன்ன. இக்கருத்தே பற்றிப் பிற்காலத்து நாடக நூல் செய்த ஆசிரியரும், 'இருவகை நிலத்தினியல்வது சுவையே,' என்ருரென்பது. இனி இருவகை நிலனென்பன உய்ப் போன் செய்தது காண்போர்க் கெய்துதலன்ரேவெனின் சுவை யென்பது ஒப்பினையை பெயராகலான், வேம்பு சுவைத்தவன் அறிந்த கைப்பறிவினை நாவுணர்வினுற் பிற னுணரான், இவன் கைப்புச் சுவைத்தானெனக் கண்ணுணர் வினன் உணர்வதன்றி; அதுபோல அச்சத்துக்கு ஏதுவாகிய ஒரு பொருள் கண்டு அஞ்சியோடி வருகின்ருனெருவனை மற்ரொருவன் கண்டவழி இவன் வள்ளெயிற்றரிமா முத லாயின கண்டு அஞ்சினனென் றறிவதல்லது வள்ளெயிற்றரி மாவினைத் தான் காண்டல் வேண்டுவதன்று; தான் கண் டானையின், அதுவுஞ் சுவையெனவே படும். ஆகவே அஞ்சி னானைக் கண்டு நகுதலுங் கருணை செய்தலுங் கண்டோர்க்குப் பிறப்பதன்றி அச்சம் பிறவாதாகலான் உய்ப்போன் செய் தது காண்போனுய்த்த அறிவின் பெற்றியாற் செல்லாதாக லின் இருவகை நிலமெனப்படுவன சுவைப் பொருளுஞ் சுவைத்தோனுமென இருநிலத்தும் நிகழுமென்பதே பொருளாதல் வேண்டுமென்பது" என்னுந் தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் முதற் சூத்திரவுரையிற் பேராசிரியர் கூறி யது ஈண்டு நோக்கற்பாலது. (அ)

232. சுவையே குறிப்பு விறலே யென்னக்
காரண முறையாக் காண்டக வெழூஉம்
'எண்ணிய மூன்று மொருங்கு பெறுமென
நுண்ணிதி னுணர்ந்தோர் நுவன்றன ரென்ப';

சுவையே குறிப்பு விறலே என்ன - சுவை குறிப்பு விறல் என்று, காரணம் முறை ஆகாண் தக எழூஉம் - காரணகாரிய முறையாகக் காண்பதற்குப் பொருந்த உண்டாகும், எண்ணிய மூன்றும் - எண்ணப்பட்ட மூன்றும், ஒருங்கு பெறும் என - அம்மெய்ப்பாடு ஒருங்கே பெறும் என்று, நுண்ணிதின் உணர்ந்தோர் நுவன்றனர் என்ப - நாடக இலக்கணத்தை நுணுகி ஆராய்ந்தறிந்தோர் கூறினர் என்று பெரியோர் சொல்லுவார்.

குறிப்பு:—ஏகாரம் எண்ணேகாரம்; ஏகாரத்தைக் குறிப் பொடுங்கூட்டுக. சுவையடியாகக் குறிப்பும், குறிப்பினடியாக விறலும் உண்டாதலிற் 'காரண முறையாக் காண்டக வெழூஉம்' என்றனர். எழூஉம்: இன்னிசையளபெடை செய்யுளிசையும்நிறைத்தது. "எண்ணிய மூன்றும்" என்னுந்தொடக்கத்த அடிகள் செயிற்றியனார் சூத்திரம். "பொருளதிகாரத்துக் கூறுகின்ற வழக்கியலே அவையும் என்பது கூறி, அச்சுவைக்கு ஏதுவாய பொருளீன அரங்கினுள் நிறீஇ, அதுகண்டு குறிப்புஞ் சத்துவமும் நிகழ்த்துகின்ற கூத்தனையும் அரங்கிற்றந்து, பின்னர் அவையினோர் அவன் செய்கின்ற மெய்ப்பாட்டினை உணர்வாராக வருகின்ற முறைமையெல்லாம் நாடக வழக்கிற்கே உரிய பகுதியெனவும், அப்பகுதியெல்லாம் ஈண்டுணர்த்தல் வேண்டுவதன்றெனவுங் கூறிய வாறு. இங்ஙனம் அடங்குமென்பது நாடகநூலுள்ளுஞ் சொல்லுபவோவெனின், சொல்லுபவாகலினன்றே அதன் வழிநூல் செய்த ஆசிரியர் செயிற்றியனார் சுவையுணர்வும் பொருளும் ஒன்றுக வடக்கிச் சுவையுங் குறிப்புஞ் சத்துவமுமென மூன்றுக்கி வேறுவே றிலக்கணங்கூறி, அவற்றை

'எண்ணிய மூன்று மொருங்கு பெறுமென
நுண்ணிதி னுணர்ந்தோர் நுவன்றன ரென்ப,"

என்றேதினராயிற் றென்பது,'' என்னுந் தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் 2-ஞ் சூத்திரவுரையிற் பேராசிரியர் கூறிய தீண்டு நோக்குக. (கூ)

(ங) ஒற்றுமை

233. நாடக சாலையு ணடிக்கப் புகுந்தோ
னெடுத்துக் கொண்ட பாத்திரந் தன்னிற்
றான்வே றென்னுந் தனிநிலை யின்றி
''அவனே தானே யாகிய வன்மெறி
யேக ஞகி'' யியைந்திடு முடையு
மொன்றி யிலங்குவ தொற்றுமை யாகும்.

நாடகம் சாலையுள் நடிக்க புகுந்தோன்-நாடகசாலையரங் கின்கண் நடிப்பதற்குப் புகுந்த வொருவன், எடுத்து கொண்ட பாத்திரம் தன்னில் - நடிப்பதற்கு மேற்கொண்ட நாடக பாத்திரந் தன்னெடு, தான் வேறு என்னும் தனி நிலைவு இன்றி - தான் வேறுவன் என்னும் தனிப்பட்ட எண்ணம் இல்லாமல், அவனே தானே ஆகிய அ நெறி - அந்நாடக பாத்திரமே தானகைப் பாவித்த அவ்வழியானே, ஏகனகி - ஒருமையுற்றவனகி, இயைந்திடும் உடையும் ஒன்றி-பொருத்தமான உடையும் வாய்ந்து, இலங்குவது - விளங்குவது, ஒற்றுமை ஆகும் - நடிப்பியல்பிற் கூறப்படும் ஒற்றுமை என்பதாகும்.

குறிப்பு:—

''அவனேதானே யாகிய வன்மெறி
ஏகனகி''

என்பது, சிவஞானபோதப் பத்தாஞ் சூத்திரப் பகுதி; இஃது ஈண்டைச் சந்தர்ப்பத்துக்கேற்ற பொருடந்து அமையப் பொன்னேபோற் போற்றி மேற்கோளா யெடுத்தாளப்பட்ட நயம் உய்த்து நோக்கற்பாலது. ஆகி ஒன்றி இலங்குவது ஆகும் எனக் கூட்டி விணமுடிவு செய்க. (கo)

சுவைநிலைக்களன்

234. கதையின் றலைவனும் பாத்திரத் தலைவனும்
பின்னவ னடிப்புஞ் சுவைநிலைக் களனல
நடிக்குந் தலைவ னயமினி துணர்ந்து
காணுநன் போலக் கனியு முளமெனி
லவனே நிலைக்கள னகு மென்ப.

கதையின் தலைவனும் - நாடகக் கதைக்குத் தலைவனும், பாத்திரம் தலைவனும் - நாடக பாத்திரங்கட்குட் சிறந்து விளங்கும் தலைவனும், பின்னவன் நடிப்பும் - நாடகத் தலைவனது நடிக்குந் தொழிலும், சுவை நிலைக்களன் அல - சுவை நிலைக்களனாகக் கருதப்படா; நடிக்கும் தலைவன் - நாடகத் தலைவனாக நடிக்கப் புகுந்தோன், நயம் இனிது உணர்ந்து - நடிக்குமியல்பின் நற்பண்பினைச் செவ்விதின் அறிந்து, காணுநன் போல - அந் நற்பண்பினைக் கண்டு மகிழுஞ் சுவையினுள்ளான்போல, கனியும் உளம் எனில் - சுவைக் கண் ஈடுபட்டு மனமிளகுவானென்றால், அவனே நிலைக்களன் ஆகும் என்ப - அவனே சுவைநிலைக்களனாவான் என்று அறிஞர் கூறுவர்.

குறிப்பு:—இராமாயணத்தின் கதைத் தலைவன் இராமபிரான்; சுந்தரகாண்டச் செய்தி கூறும் 'மாருதி விஜயம்' என்னும் நாடகத்தலைவன் ஹநுமான். சூர்ப்பணகை என்னும் பிரகசனத்தில் இராமபிரான் கதைத் தலைவனாகவும் சீதாபிராட்டி தலைவியாகவும் அமைந்திருப்பினும் சூர்ப்பணகை நாடகபாத்திரத் தலைவியாக வருதல் காண்க. சுவை நிலைக்களன்: சுவை நிலைபெற்றிருக்கும் இடம் என்பது பொருளாம். நடிக்குந் தலைவன்: தலைவனாக நடிக்கப் புகுந்தோன். காணுநன்: நாடகங் காண்போன். கனிதல்: ஈண்டுச் சுவைக்கு ஈடுபடுதல். (கக)

(ச) அவிநயம்

235. எடுத்த தன்மைக் கியைந்த பாவக
மடுத்துக் காட்டுத லவிநய மெனலே.

எடுத்த தன்மைக்கு - சுவைக்கட்டோன்றும் உள்ளக் குறிப்பினை வெளியிட்டுக் காட்டும் பண்பிற்கு, இயைந்த பாவ கம் - பொருத்தமான பாவகத்தினை, அடுத்து காட்டுதல் - பொருந்துமாறு காண்பித்தல், அவிநயம் எனல் - அவிநய மென்று கூறுக.

குறிப்பு:—ஏகாரம். ஈற்றசை. சுவைக்கேற்ற குறிப்பினை வெளியிட்டுக் காட்டும் முக்கரணங்களின் தொழிலினை ஈண்டு அவிநயமென்றனர். அவிநயம், பாவகம் இவை யொருபொ ருட் கிளவிகள். (கஉ)

அவிநயவகை

236. அஃதே,
ஆங்கிகம் வாசிக மாகா ரியத்தொடுஞ்
சாத்து விகமெனச் சாற்றுநால் வகைத்தாம்.

அஃதே - அவ்வவிநயம், ஆங்கிகம்—, வாசிகம்—, ஆகாரி யத்தொடும் - ஆகாரியம் என்பதனோடும்—, சாத்துவிகம்—, என சாற்றும் நான்கு வகைத்து ஆம்-என்று சொல்லப்படும் நான்கு வகையினையுடையதாம்.

குறிப்பு:-இந்நான்கு வகைகளின் இலக்கணமும் பெயர்க் காரணமும் கீழ்வருஞ் சூத்திரங்களான் விளக்குவர். ஏகா ரம்: ஈற்றசை. (கங)

ஆங்கிகம்

237. உடலைப் பற்றி யுறுமவி நயங்க
ளாங்கிக மென்ன வறையப் படுமே.

உடலை பற்றி உறும் அவிநயங்கள் - உடம்பினைப்பற்றி யுண்டாகும் அவிநயங்கள், ஆங்கிகம் என்ன அறையப்படும்- ஆங்கிகம் என்று சொல்லப்படும்.

குறிப்பு:—அங்க ஸம்பந்தம் நிகழ்தலின் ஆங்கிகம் எனப்பட்டது. அங்கம் - தேகம். உடற்றொழிலானுண்டாம் அவிநயங்கட்குஆங்கிகம் என்பதுபெயராம்என்றவாறு.(கச)

வாசிகம்

238. ஒலிவேறு பாட்டினுங் குரல்வேறு பாட்டினு
மொழிவேறு பாட்டினும் விளையு மவிநயம்
வாசிக மென்ன வழங்க லாகும்.

ஒலி வேறுபாட்டினும்-வாயாற் செய்யும் சப்த வேற்று மையாலும், குரல் வேறு பாட்டினும் - கண்டத்தொனியின் வேறு பாட்டாலும், மொழி வேறு பாட்டினும் - வார்த்தை களின் உச்சரிப்பு வேறு பாட்டாலும், விளையும் அவிநயம் - உண்டாம் அவிநயங்கள், வாசிகம் என்ன வழங்கல் ஆகும் - வாசிகம் என்னும் வகையனவாகக் கூறப்படுவனவாம்.

குறிப்பு:—ஈண்டுக்கூறிய மூவகை வேறுபாடும் வாக்கின் கண் நிகழ்வனவாதலின் வாசிகமெனப்பட்டன. வாக்கு ஸம் பந்தமானது வாசிகம். எடுத்தும் படுத்தும் ஒலித்தல் முதலா யின ஒலிவேறுபாடாம்; குரல் கம்முதல் முதலாயின குரல் வேறுபாடாம்; தழுதழுத்துப் பேசுதல் முதலாயின மொழி வேறுபாடாம். (கடு)

ஆகாரியம்

239. உடைவேற் றுமையி னெங்கு மவிநய
நடைபெறு மாகா ரியமென நவில்ப.

உடை வேற்றுமையின் ஒங்கும் அவிநயம் - உடுக்கும் உடையின் வேறுபாட்டானே மிக்குத் தோன்றும் அவி நயம், நடை பெறும் ஆகாரியம் என நவில்ப - அவிநயவகை யுள் ஒன்று வழங்கலுறும் ஆகாரியம் என்று கூறுப.

குறிப்பு:—'நடைபெறும' என்று விசேடித்தமையானே இவ் வுடைவேறுபாட்டான் உண்டாகும் அவிநயம் மற் றைய ஆங்கிகம் முதலானவற்றைச் சிறப்பிக்கும் என்பது பெறப்பட்டது. இஃது கைவினைத் தொழிற்பாற் பட்டமை யின் ஆகாரியம் எனப்பட்டது. (கசு)

சாத்துவிகம்

240. மனவேறு பாட்டின் வழங்கு மவிநயஞ்
சாத்து விகமெனப் போற்றினர் கொளலே.

மனம் வேறுபாட்டின - மனத்தின் வேறுபாட்டானே, வழங்கும் அவிநயம் - உண்டாகும் அவிநயம், சாத்துவிகம் என்ன போற்றினர் கொளல் - ஸாத்துவிகம் என்னும் அவி நயவகை யென்று போற்றிக் கொள்க.

குறிப்பு:—ஸத்துவத்தாற் பெறப்படுதலின் ஸாத்விகம் எனப்பட்டது. மனவேறுபாட்டான் நிகழ்வன: கன்றுதல், கலங்குதல், விரும்பல், வெறுத்தல், வெகுளல், மகிழ்தல், மூனிவு, செருக்கு, உணர்தல், உணரா நிலைமை முதலிய பல வாம். இம்மனவேறுபாடுகள் உடம்பின்கட் டோன்றுங் கால் மிகத் தோற்றும் முகத்தின்கண்; முகத்தின்மிகத் தோன்றுங் கண்ணின்கண்; கண்ணின் மிகத்தோற்றுங் கண்ணின் கடையகத்தென்றுணர்க. (களை)

241. இந்நால் வகைய வவிநய மெல்லாஞ்
சுவைதொறும் பயின்று தோன்று மென்க.

இ நான்கு வகைய அவிநயம் எல்லாம் - ஈண்டுக் கூறிய நான்கு வகைப்பட்ட அவிநயம் யாவும், சுவை தொறும் பயின்று தோன்றும் என்க - ஒன்பான் வகைப்பட்ட சுவை கள் தோறும் பொருந்தித் தோன்றும் என்று கூறுக.

குறிப்பு:—மேற்கூறிய ஆங்கிகம், வாசிகம், ஆகாரியம், ஸாத்விகம் என்னும் நால்வகை அவிநயங்களும் வடநூலார் கூறிய பாகுபாடாம். சுவை வகைகளைப் பொதுவியல்பு பத் தொன்பதாஞ் சூத்திரத் தானுணர்க. (கஅ)

சுவையவிநயம்

242. ஒன்பான் சுவையினு மோங்கவி நயம்பல
வன்பான் மேற்கோ ளாவெடுத் தறைவாம்.

ஒன்பான் சுவையினும் ஓங்கு அவிநயம் பல - ஒன்பது வகைச் சுவைகளினும் மிக்குத் தோன்றும் பல அவிநயங்

களையும், அன்பான் மேற்கோள் ஆ எடுத்து அறைவாம் - பண்டையாசிரியர்தஞ் சூத்திரமுகமாக மேற்கோளாக எடுத்து அன்பொடு கூறுவாம்.

குறிப்பு:—ஒன்பான் சுவை: உவகை, பெருமிதம், நகை, சமநிலை, வெகுளி, வியப்பு, இழிப்பு, அவலம், அச்சம் என்பனவாம். இச்சுவைகளின் இலக்கணம் பொதுவியல் பில் விரித்து கூறப்பட்டுளது; ஆண்டு நோக்குக. ஆசிரியர் இவற்றிற்குரிய அவிநயங்களைப் பின்னர் வருஞ் சூத்திரங்க ளான் நிரலே யெடுத்துக் கூறுவர். சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை மேற்கோளான சுவை அவிநயச் சூத்திரங்களை இவ்வாசிரியர் பொன்னேபோற் போற்றிக் கூறுவராதலின் 'அன்பான் மேற்கோ ளாவெடுத் தறைவாம்' என்றனர். அன்பான்: அப்பண்டையோர் சூத்திரங்களின் மாட்டுள்ள அன்பு பற்றி என்றவாறு. (கசு)

உவகையவிநயம்

243. உவகைச் சுவையி னவிநய முரைப்பின்
"தூவுள் ளுறுத்த வடிவுந் தொழிலுங்
காரிகை கலந்த கடைக்கணுங் கவின்பெறு
முறுவன் மூரற் சிறுநில வரும்பலு
மலர்ந்த முகனு மிரந்தமன் கிளவியுங்
கலந்தன பிறவுங் கடைப்பிடித் தனரே."

உவகை சுவையின் அவிநயம் உரைப்பின் - உவகைச் சுவையினது அவிநயத்தைக் கூறுமிடத்து, தூ உள் உறுத்த வடிவும் தொழிலும் - கள்ளங்கபடமற்ற வடிவமும் செய்கையும், காரிகை கலந்த கடைக்கணும் - அழகு பொருந்திய கடைக்கண்ணும், கவின் பெறும் முறுவல் மூரல் சிறுமை நிலவு அரும்பலும் - அழகுபொருந்திய புன்னகையின் சிறிய நிலவுபோலு மொளிதோன்றலும், மலர்ந்த முகனும்-மலர்ச்சி பொருந்திய முகமும், மன் இரந்த கிளவியும் - பெரிதும் ஒன்றை இரப்பான் மொழிவதுபோலும் இனிய மொழியும், கலந்தன பிறவும் - இவற்றிற்குப் பொருத்தமாகக் கலந்த

பிற அவிநயங்களும், கடைப்பிடித்தனர்-அவ்வுவகைச் சுவையின் அவிநயங்களென உறுதியாகக் கொண்டனர் நாடக விலக்கண வாசிரியர்.

குறிப்பு:—நாடக விலக்கண வாசிரியர் என்பது தோன்ரு எழுவாய். தூ : வெண்மை, பரிசுத்தம்; ஈண்டுக் களங்க மின்மைமே னின்றது. தூவுள்ளுறுத்த வடிவாவது, நெஞ் சத்திற் களங்க மின்மையைக் காட்டும் வடிவமாம்: உள் - ஈண்டு நெஞ்சினைக் குறித்தது; ஆகுபெயர். 'தூவுள்ளுறுத்த' என்பதைத் 'தொழி'லோடுங் கூட்டுக. முறுவல் மூரல் : ஒருபொருட் பன்மொழி. முகன்: முகம்; போலி. மன் இரந்த என மாற்றுக; மன் - இடைச்சொல், மிகுதிப்பொரு ளைக் காட்டிற்று. காரிகை கலந்த கடைக்கண்: காரிகை என்னும் அழகு கண்ணிற்கே சிறந்ததுபோலும்.

"கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது." (திருக்குறள் 1272)

"கண்ணேட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு." (திருக்குறள் 571)

என்னுங் குறள்களை நோக்குக. 'கலந்தன பிறவும்' என் றமையான், பிறரைத் தழுவிக்கோடல், யாவர்மாட்டும் அன்பு பாராட்டுதல் முதலியனவுங் கொள்க. ஏகாரம்: ஈற்றசை. (20)

பெருமிதத்தவிநயம்

244. பெருமிதத் தவிநயம் பேசுங் காலை
"மூரிந்த புருவமுஞ் சிவந்த கண்ணும்
பிடித்த வாளுங் கடித்த வெயிறு
மடித்த வுதடுஞ் சுருட்டிய நுதலும்
திண்ணென வுற்ற சொல்லும் பகைவரை
யெண்ணல் செல்லா விகழ்ச்சியும் பிறவு
நண்ணு மென்ப நன்குணர்ந் தோரே."

பெருமிதத்து அவிநயம் பேசும் காலை - பெருமிதம் என்னும் வீரச் சுவையின் அவிநயம் இன்னதென்று கூறு

மிடத்து, முரிந்த புருவமும்-வளைந்த புருவமும், சிவந்த கண்ணும் - சிவப்பேறிய கண்ணும், பிடித்த வாளும் - கையிற் பற்றியவாளும், கடித்த எயிறும் - நெறுநெறென்று கடித்த பல்லும், மடித்த உதடும் - கௌவிய உதடும், சுருட்டிய முதலும் - புருவம் மேலேறுதலானும் ஒன்றையொன்று நெருங்குவதானும் தோலின் சுருக்கம் விழுந்த நெற்றியும், திண்மை என உற்ற சொல்லும் - திட்பமமைந்த சொல்லும், பகைவரை எண்ணல் செல்லா இகழ்ச்சியும் - பகைவரைப் பொருட்படுத்தா இகழ்ச்சியும், பிறவும் - இவற்றிற்கேற்ற பிற அவிநயங்களும், நண்ணும் என்ப நன்கு உணர்ந்தோர் - அவ்வீரச் சுவை அவிநயமாகப் பொருந்தும் என்று கூறுவர் நாடக விலக்கணத்தை நன்றாக அறிந்தோர்.

குறிப்பு:—பிடித்தவாள், கடித்த எயிறு என்று கூறினாலும் வாள் பிடித்தலும் எயிறு கடித்தலும் என்பதே பொருளாம். இகழ்ச்சி - இகழ்தல். பிறவும் என்றமையானே ஏக்கழுத்தம், இறுமாந்த நடை முதலியனவுங்கொள்க.(உக)

நகையவிநயம்

245. நகைச்சுவை அவிநய நவிலு மிடத்து
"மிகைபடு நகையது பிறர்நகை யுடையது
கோட்டிய முகத்தது சுரிந்த கவுளது
விட்டுமுரி புருவமொடு விலாவுறுப் புடையது
செய்வது பிறிதாய் வேறுசே திப்பதென்
றையமில் புலவ ராய்ந்தன ரென்ப."

நகை சுவை அவிநயம் நவிலும் இடத்து - நகைச்சுவை அவிநயம் இத்தன்மைத்தெனப் பேசுமிடத்து, மிகைபடு நகையது-அளவுகடந்த சிரிப்புடையது, பிறர் நகை உடையது-பிறர் பார்த்து நகைக்குந் தன்மை வாய்ந்தது, கோட்டிய முகத்தது - கோணிய முகத்தினையுடையது, சுரிந்த கவுளது-சுருங்கிய கன்னமுடையது, விட்டு முரி புருவமொடு விலா உறுப்பு உடையது - இடைவிட்டு வளைந்த புருவத்தோடு அங்ஙனமான விலா உறுப்பினையுமுடையது, செய்வது

பிறிது ஆய் வேறு சேதிப்பது - செய்யுந் தொழில் வேறுபட்டதாகி அதனை வேருகக் கெடுப்பது, என்று ஐயம் இல் புலவர் ஆய்ந்தனர் என்ப-என்று நாடக விலக்கணத்தை ஐயமற உணர்ந்த அறிஞர் ஆராய்ந்து கூறினர் என்று கூறுப.

குறிப்பு:—மிகைபடுநகை - பெருநகை. கோடுதல்-கோணுதல், கவுள் - கன்னம். 'விட்டுமுரி'தலை விலாவுறுப்பிற்கும் கூட்டுக. செய்வது பிறிதாய் வேறு சேதிப்பது: செய்யுந் தொழில் இடையீடு பட்டு வேருவதோடு அமையாது முன்னர்ச் செய்ததனையும் சிதைத்தலாம். (22)

சமநிலையவிநயம்

246. சமநிலை யவிநயஞ் சாற்றப் புக்குழிக்
"கோட்பா டறியாக் கொள்கையு மாட்சியு
மறந்தரு நெஞ்சமு மாறிய விழியும்
பிறழ்ந்த காட்சி நீங்கிய நிலையுங்
குறிப்பின் ருகலுந் துணுக்க மில்லாத்
தகைமிக வுடைமையுந் தண்ணென வுடைமையு
மளத்தற் கருமையு மன்பொடு புணர்தலுங்
கலக்கமொடு புணர்ந்த நோக்குங் கதிர்ப்பும்
விலக்கா ரென்ப வேண்டுமொழிப் புலவர்."

சமநிலை அவிநயம் சாற்ற புக்குழி - சமநிலைச் சுவையின் அவிநயம் இன்னதென்று கூறப்புகுமிடத்து, கோட்பாடு அறியா கொள்கையும் - பிறருள்ளத்தின் கோட்பாட்டினை அறிய விரும்பாத கொள்கையும், மாட்சியும் - பெருமையும், அறம் தரும் நெஞ்சமும் - தருமம் நிலைபெற்ற மனமும், ஆறிய விழியும் - சாந்தம் பொருந்திய கண்களும், பிறழ்ந்த காட்சி நீங்கிய நிலையும் - உண்மைக்குமாருன அறிவு நீங்கப் பெற்ற நிலைமையும், குறிப்பு இன்று ஆகலும் - ஒன்றினையடைய விரும்புங் குறிப்பு இல்லாதிருத்தலும், துணுக்கம் இல்லா தகை மிக உடைமையும் - அச்சம் நீங்கப்பெற்ற பெருமை மிகுதியும் உளதாதலும், தண் என உடைமையும்-குளிர்ந்த பண்புடைமையும், அளத்தற்கு அருமையும் - பிற

சான்; அளவிட்டு மதித்தற்கொண்ணு அருமைப்பாடும், அன் பொடு புணர்தலும்-பிறர்மாட்டு உள்ளன்பொடு கலத்தலும், கலக்கமொடு புணர்ந்த நோக்கும் - சலனம் பொருந்திய பார் வையும், கதிர்ப்பும் - ஒளியுடைமையும், விலக்கார் என்ப வேண்டும் மொழி புலவர் - உள்ளக் குறிப்பினை அறிய விரும் பும் வாக்குவல்லபமுடைய அறிஞர் இவற்றைச் சமநிலை யவிநயங்களாக விலக்காமற் கொள்வர் என்றுகூறுவர்.

குறிப்பு:—கோட்பாடறியாக்கொள்கை: பிறர்தங்கொள் கை எதுவாயிருப்பினும் அதனை யறிதல் வேண்டாவென் னுங் கோட்பாடு. ஆறிய விழி - கோபம் முதலியன நீங்கின விழி, எனவே சாந்தங் குடிகொண்ட விழி. ஆறிய விழிக்கு எதிர்மறை சீறிய விழியாம். காட்சி: அறிவு; பிறழ்ந்த காட்சி: உண்மைக்குமாறான காட்சி. சமநிலையுடையான் வேண்டுதல் வேண்டாமையிலானதலின் ஒன்றல் கண்ணுங் குறிப்பில னாவான். துணுக்கம்: அச்சம். தண்ணெனவுடைமை:

> ''அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்,
> செந்தண்மை பூண்டொழுக லான்,''

என்னுங் குறளைக்குக. ஒன்றன்கண்ணுங் குறிப்பிலனாகவே 'கலக்கமொடு புணர்ந்த நோக்கும்' பொருந்துவதாயிற்று. 'மொழிப்புலவர்: மொழிவன்மையுடையார். 'விலக்கார்' என வே வேண்டுவரென்பதாயிற்று. (உக)

வெகுளியவிநயம்

247. வெகுளி யவிநயம் விளம்புங் காலைப்
பிசைந்த கையுங் குலைந்த மெய்யு
மடித்த வாயுங் கடித்த விதழுஞ்
சிவந்த கண்ணும் வெய்ய வுயிர்ப்பு
மிக்க வேர்வு மொக்க விடைத்தாம்.

வெகுளி அவிநயம் விளம்பும் காலை - கோபச் சுவையின் அவிநயம் இன்னதென்று கூறுமிடத்து, பிசைந்த கையும் கைகளைப் பிசைதலும், குலைந்த மெய்யும் - மெய் குலைதலும், மடித்த வாயும் - வாய்மடித்தலும், கடித்த இதழும் - இதழ்

கௌவுதலும், சிவந்த கண்ணும் - கண் சிவத்தலும், வெய்ய உயிர்ப்பும் - வெப்பமாகப் பெருமூச்சு விடுதலும், மிக்க வேர்வும் - மிகுதியாக வேர்த்தலும், ஒக்க உடைத்தாம் - அவிநயங்களாகப் பொருந்துவதாம்.

குறிப்பு:—வெகுளி, கோபம், உருத்திரம் ஒரு பொருட் கிளவிகள். இச்சூத்திரம்,

"கைபிசையா வாய்மடியாக் கண்சிவவா வெய்துயிரா
மெய்குலையா வேரா வெகுண்டெழுந்தான்—வெய்யபோர்த்
தார்வேய்ந்த தோளான் மகளைத் தருகென்று
போர்வேந்தன் றூதிசைத்த போது"

என்ற தண்டியலங்கார உருத்திரச்சுவை யுதாரணச்செய்யுளைப் பின்பற்றி யெழுந்தது. (உச)

வியப்பவிநயம்

248. **வியப்பி** னவிநயம் மேவரக் கூறிற்
"சொற்சோர் வுடையது சோர்ந்த கையது
மெய்ம்மயிர் குளிர்ப்பது வியத்தக வுடைய
தெய்திய திமைப்பும் விழிப்புமிக வாதென்
றையமில் புலவ ரறைந்தன ரென்ப."

வியப்பின் அவிநயம் மேவர கூறில் - வியப்புச் சுவையின் அவிநயத்தைப் பொருந்தக் கூறுமிடத்து அது, சொல் சோர்வு உடையது - சோர்வுற்றுச் சொல்லும் சொல்லினை உடையது, சோர்ந்த கையது - சோர்ந்த ஒழுக்கத்தினையுடையது, மெய் மயிர் குளிர்ப்பது - உடம்பின் மயிர்க் கூச்செறிவது, விய தகவு உடையது பிறரானே வியக்குந் தன்மையுடையது, எய்தியது இமைப்பும் விழிப்பும் இகவாது - வியப்பிற்கு ஏதுவாக எய்திய பொருளை நோக்குமிடத்து கண் இமைத்தலையும் விழித்தலையும் நீங்காதிருப்பது, என்று ஐயம் இல் புலவர் அறைந்தனர் என்ப - என்று நாடக விலக்கணத்தைச் சந்தேகமற வுணர்ந்த அறிஞர் கூறுவ ரென்று சாற்றுவர்.

குறிப்பு:—வியப்பு, அற்புதம், ஆச்சரியம் என்பன ஒரு பொருட்கிளவிகள். சோர்ந்த கையது: கை சோர்ந்தது என்றுமாம்; இனிச் சோருந்தகையது எனக்கொண்டு சோருந்தன்மையினையுடையது எனலுமாம்: இப்பொருட்குச் 'சோரும்' என்பது 'சோர்ம்' எனச் செய்யுமெ என்னும் வாய்பாட்டெச்சவும்மை யுகரங் கெட்டு நின்றதாகக் கொள்க. மெய்ம்மயிர்குளிர்த்தல் - உடல் புளகித்தல். இனி, இமைப்பும் எய்தியது விழிப்பும் இகவாது என்று மாற்றிப் பொருள்கோடலுமாம். 'எய்தியதிமைத்தலும் விழித்தலுமிகவாத' தென்ற பாடமுமுண்டு. (உடு)

இழிப்பவிநயம்

249. "இழிப்பி னவிநய மியம்புங் காலை
யிடுங்கிய கண்ணு மெயிறுபுறம் போதலு
மொடுங்கிய முகமு முஞற்றுக் காலுஞ்
சேர்ந்த யாக்கையுஞ் சொன்னிரம் பாமையு
நேர்ந்தன வென்ப நெறியறிந் தோரே."

இழிப்பின் அவிநயம் இயம்பும் காலை - இழிப்புச் சுவையின் அவிநயங்களைக் கூறுமிடத்து அவை, இடுங்கிய கண்ணும் - சுருங்கி நெருங்கிய கண்களும், எயிறு புறம் போதலும் - பற்கள் வெளியே தோன்றுதலும், ஒடுங்கிய முகமும் - கூம்பிய முகமும், உஞற்று காலும் - தொழில் புரியாத கால்களும், சோர்ந்த யாக்கையும் - சோர்வடைந்த மெய்யும், சொல் நிரம்பாமையும் - சொற் குழறலும், நேர்ந்தன என்ப - அவிநயங்களாகப் பொருந்தின என்று கூறுவர், நெறி அறிந்தோர் - நாடகவிலக்கண நெறியினை யுணர்ந்தோர்.

குறிப்பு:—இடுங்குதல் - ஒடுங்குதல், சுருங்குதல். இழிப்பு, இளிவரல், அருவருப்பு, பீபத்ஸம் என்பன ஒரு பொருட் சொற்கள். (உசு)

அவலத்தவிநயம்

250. "அவலத் தவிநய மறிவரக் கிளப்பிற்
கவலையொடு புணர்ந்த கண்ணீர் மாரியும்

வாடிய நீர்மையும் வருந்திய செலவும்
பீடழி யிடும்பையும் பிதற்றிய சொல்லி
நிறைகை யழிதலு நீர்மையில் கிளவியும்
பொறையின் ரூகலும் புணர்த்தினர் புலவர்.''

அவலத்து அவிநயம் அறிவர கிளப்பில் - சோகரஸ மாகிய அவலச் சுவையின் அவிநயத்தை அறியுமாறு விளங்கக் கூறுமிடத்து, கவலையொடு புணர்ந்த கண்ணீர் மாரியும் - மனக்கவலையோடு சேர்ந்த கண்ணீர்ப் பெருக்கமும், வாடிய நீர்மையும் - வாட்டமுற்ற தன்மையும், வருந்திய செலவும் - வருத்தமுற்ற நடையும், பீடு அழி இடும்பையும் - பெருமையை அழிக்குந் துன்பமும், பிதற்றிய சொல்லும் - அழித்தழித்துப் பேசும் பேச்சும், நிறை கை அழிதலும் - நிறை கெடுதலும், நீர்மை இல் கிளவியும் - பண்பில் மொழியும், பொறை இன்று ஆகலும் - பொறுமை கெடுதலும், புணர்த்தினர் புலவர் - அறிவுடையார் அவலச் சுவையின் அவிநயங்களாகச் சேர்த்துக் கூறினர்.

குறிப்பு:— கண்ணீர் மாரி - மிகுந்த கண்ணீர்; உருவகம். பீடு அழியி டும்பை-பீடு அழிதற்குக் காரணமான இடும்பையு மாம். பிதற்றுதல் - பலகாற் பேசுதல்; குழறுதலுமாம். கை அழிதல்: கை உபசர்க்கம். இனிக் 'கை' ஒழுக்கமெனக் கொண்டு, நிறையும் ஒழுக்கமுமழிதல் எனப்பொருள் கூறுதலுமாம். இப்பொருட்கு 'நிறை கை' உம்மைத்தொகை. பண்பில் மொழி - பொருத்தமற்ற மொழி. (உள)

அச்சவவிநயம்

251. ''அச்ச வவிநய மாயுங் காலை
யொடுங்கிய வுடம்பு நடுங்கிய நிலையு
மலங்கிய கண்ணுங் கலங்கிய வுளனுங்
கரந்துவர லுடைமையுங் கையெதிர் மறுத்தலும்
பரந்த நோக்கமு மிசைபண் பினவே.''

அச்சம் அவிநயம் ஆயும் காலை - அச்சச்சுவையின் அவிநயத்தை ஆராயுமிடத்து, ஒடுங்கிய உடம்பும்—, நடுங்கிய

நிலையும்-நடிக்கமுற்ற நிலைமையும், மலங்கிய கண்ணும்-கலக்க முற்ற கண்களும், கலங்கிய உளனும் - கலக்கமடைந்த மனமும், கரந்துவரல் உடைமையும் - ஒளிந்து வருதலும், கை எதிர் மறுத்தலும் - கைகளான் எதிரில் மறுத்து விதிர்த்தலும், பரந்த நோக்கமும் - நாற்புறமும் பரவிய பார்வையும், இசை பண்பினவே - பொருந்திய அச்ச அவியங்களின் தன்மைகளாம்.

குறிப்பு:—உடம்பு ஒடுங்குதல் - உடம்பு குன்றுதல். அச்சம், பயானகம் ஒரு பொருட் சொற்கள். (உஅ)

252. இன்னும் விரிப்பிற் பன்னிய வவிநயம்
மெண்ணெ றென்ன வெண்ணவும் படுமே.

இன்னும் விரிப்பில் - அவிநயங்களை இன்னும் விரித்துக் கூறப்புகின், பன்னிய அவிநயம் - பல வேறுவிதமாகச்சொல்லப்பட்ட அவிநயங்கள், எட்டு ஆறு என்ன எண்ணவும் படும்-நாற்பத்தெட்டு என்னும் எண்ணிக்கையுடையன என்று கருதவும்படும்.

குறிப்பு:—எண்ணவும் படும் என்ற எச்ச உம்மையானே அவிநயங்களை இருபத்துநான்காகப் பிரித்தாரும் உளர் என்பது பெறப்பட்டது. சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் இருபத்து நான்கு அவிநயங்கூறியுள்ளார். இவ்வாசிரியர் நாற்பத்தெட்டாக விரித்தனர். (உக)

அவிநயவிரி

253. அவைதாம்,
அகந்தை யுற்றோ னழற்பட் டோனழுக்
கறுப்போ னழுவோ னலோ சிப்போ
னிரப்போ னிறந்தோ னின்ப மெய்திலை
னுடன்ன் பட்டோ னுவந்தோ னெழுதுவோ
னைய முற்றோன் கண்ணே வுற்றோன்
களித்தோன் கள்வன் கனவு காண்போன்
கொலைவினை செய்வோன் கொள்பொரு ளிழந்
[தோன்

ஞஞ்ஞை யுற்றோ னஞ்ஞை யொறுப்போன்
றண்ட முற்றோன் றலைநோ வாளன்
றுதிப்போன் றுயில்வோன் றுயிலுணர்வோன்
[பொய்யன்
றெய்வ முற்றோ னனைந்தோ னினவோன்
பசித்தோன் பைத்தியக் காரன் காமுகன்
பொருவோன் வென்றோன் வெருவி யோடுநன்
பனிப்பட் டோன்மடி துனிப்பட் டோஞெடும்
யோகி வீழ்ந்தோ ஞெள்விட முண்டோன்
விலைமக நீதுவன் வெட்க முற்றோன்
வெப்ப முற்றோன் வேட்டை யாடுநன்
கவிஞ னிவர்த மவிநய மாம்பிற.

அவைதாம்-மேற்சூத்திரத்தில் எண்ணுறென்னக்கூறிய அவிநயங்கள் தாம், அகந்தை உற்றோன்-செருக்குக்கொண்டவன், அழல் பட்டோன் - நெருப்பில் வீழ்ந்தோன், அழுக்கறுப்போன் - பொறுமை கொண்டவன், அழுவோன்—, ஆலோசிப்போன்—, இரப்போன் - யாசிப்போன், இறந்தோன் - செத்தோன், இன்பம் எய்தினோன் - சுகமடைந்தவன், உடன்பட்டோன் - இணங்கினோன், உவந்தோன் - மகிழ்ந்தோன், எழுதுவோன்—, ஐயம் உற்றோன் - சந்தேகம் அடைந்தவன், கண் நோவு உற்றோன்—, களித்தோன் - கள்ளுண்டோன், கள்வன் - திருடன், கனவு காண்போன்—, கொலை வினை செய்வோன் - கொலைத்தொழில் புரிபவன், கொள் பொருள் இழந்தோன் - கையிலுள்ள பொருளை யிழந்தவன், ஞஞ்ஞை உற்றோன் - மயக்கமடைந்தோன், அஞ்ஞை - அறிவில்லாதவன், ஒறுப்போன் - தண்டிப்போன், தண்டம் உற்றோன் - தண்டிக்கப்பட்டோன், தலை நோவு ஆளன் - தலைநோயுற்றோன், துதிப்போன் - தோத்திரம் செய்வோன், துயில்வோன் - தூங்குபவன், துயில் உணர்வோன் - தூங்கி விழித்தெழுபவன், பொய்யன் - பொய்கூறுவோன், தெய்வம் உற்றோன் - தெய்வம் ஏறினோன், நனைந்தோன் - மழை பெய்யப்பட்டோன், நைவோன் - உடல்

வருந்துபவன், பசித்தோன் —, பைத்தியக்காரன் —, காமுகன் - காமமுற்றோன், பொருவோன் - போர் செய்வோன், வென்றோன் - வெற்றியடைந்தோன், வெருவி ஓடுநன் - அஞ்சியோடுபவன், பனிப்பட்டோன் - பனியில் நனைந்தோன், மடி - சோம்பலுற்றோன், துனிப்பட்டோன் - துன்பமுற்றோன், யோகி - யோகம் பயில்வோன், வீழ்ந்தோன் - மேலிருந்து கீழ்விழுந்தவன், ஒண்மைவிடம் உண்டோன்-படுவிஷமுண்டவன், விலை மகள் - பரத்தை, தூதுவன் - தூதன், வெட்கம் உற்றோன் - நாணம் உற்றவன், வெப்பம் உற்றோன் - வெம்மை அடைந்தவன், வேட்டை ஆடுநன் - வேட்டையாடுபவன், கவிஞன் - கவிபாடும்புலவன், இவர் தம் அவிநயம் ஆம் - என்ற இவர்கள்தம் அவிநயங்களாம்.

குறிப்பு:—உடன் 'ன்' பட்டோன் - ஒற்றளபெடை. ஞஞ்ஞை: மம்மர் நோய், மயக்கம். அஞ்ஞை - அறிவிலி. இன்பம் எய்தினோன் - புணர்ச்சியான் வரும் இன்பம் அநுபவித்தவன். தெய்வம் உற்றோன் - தெய்வ ஆவேசமடைந்தவன். பனிப்பட்டோன் - குளிரடைந்தோன் எனினுமாம்; சீதமுற்றோனுமிவனே. முன்னூசிரியர் வேறுகக் கூறிய சீதமுற்றோனவிநயத்தினைப் பனித்தலைப்பட்டோன் அவிநயத்தினும், வெயிற்றலைப்பட்டோன் அவிநயத்தினை வெப்பமுற்றோனவிநயத்தினும் இவ்வாசிரியர் அடக்கினர்; அவர் தனியாகக் கூறிய வெகுண்டோன் அவிநயம் வெகுளிச் சுவை அவிநயத்திலடங்குதலானும், அதனைச் சுவைவகை அவிநயத்துள் முன்னார்க் கூறிவிட்டமையானும் இவர் ஈண்டுக்கூறாயினர். எனவே,முன்னோர்கூறிய இருபத்துநான்குவகையவிநயத்துள்சீதமுற்றோன்,வெயிற்றலைப்பட்டோன், வெகுண்டோன் இவர்தம் அவிநயம் நீங்கலாக இருபத்தொன்றனையும் மேற்கொண்டு புதியன புகுதலாக இருபத்தேழவிநயங்களையுடன் கூட்டி இவ்வாசிரியர் நாற்பத்தெட்டாக்கினர். 'பிற' என்ற மிகையானே ஈண்டுக் கூறப்பட்டனவேயன்றி, இவற்றின் வேறாய் வருவனவாகிய சோதிடஞ் சொல்வோன், வாதஞ் செய்வோன், வைத்தியம் வல்லோன், இரசவாதி, கழைக் கூத்தாடி, பாம்பாட்டி, சித்திரம் வரைவோன், இசைப்புல

வோனதியர்தம் அபிநயங்களும் ஈண்டடக்குக என்பதமைந்தது. அடியார்க்கு நல்லார் மேற்கோளாகக் காட்டிய முன்னூரியர்தம் இருபத்து நான்குவகை அவிநய விலக்கண சூத்திரங்கள் ஈண்டறியற்பாலன. அவை பின்வருமாறு:—

வெகுண்டோனவிநயம்

"வெகுண்டோ னவிநயம் விளம்புங் காலை
மடித்த வாயு மலர்ந்த மார்புந்
துடித்த புருவமுஞ் சுட்டிய விரலுங்
கன்றின வுள்ளமொடு கைபுடைத் திடுதலு
மன்ன நோக்கமோ டாய்ந்தனர் கொளலே."

ஐயமுற்றோனவிநயம்

"பொய்யில் காட்சிப் புலவோ ராய்ந்த
வைய முற்றோ னவிநய முரைப்பின்
வாடிய வுறுப்பு மயங்கிய நோக்கமும்
பீடழி புலனும் பேசா திருத்தலும்
பிறழ்ந்த செய்கையும் வான்றிசை நோக்கலு
மறைந்தனர் பிறவு மறிந்திசி னோரே."

சோம்பினோனவிநயம்

"மடியி னவிநயம் வகுக்குங் காலை
நொடியொடு பலகொட் டாவிமிக வுடைமையு
மூரி நிமிர்த்தலு முனிவொடு புணர்தலுங்
காரண மின்றி யாழ்ந்துமடிந் திருத்தலும்
பிணியு மின்றிச் சோர்ந்த செலவோ
டுணிதரு புலவ ராய்ந்தன ரென்ப."

களித்தோனவிநயம்

"களித்தோ னவிநயங் கழறுங் காலை
யொளித்தவை யொளியா வுரைத்த லின்மையுங்
கழைந்துஞ் சோர்ந்துந் தாழ்ந்துந் தளர்ந்தும்
வீழ்ந்த சொல்லொடு மிழற்றிச் சாய்தலுங்
களிகைக் கவர்ந்த கடைக்கணைக் குடைமையும்
பேரிசை யாளர் பேணினர் கொளலே."

உவந்தோனவிநயம்

"உவந்தோ னவிநய முரைக்குங் காலை
நிவந்திணி தாகிய கண்மல ருடைமையு
மினிதி னியன்ற வுள்ள முடைமையு
முனிவி னகன்ற முறுவனகை யுடைமையு
மிருக்கையுஞ் சேறலுங் கானமுட் பிறவு
மொருங்குட னமைந்த குறிப்பிற் றன்றே."

அழுக்காறுடையோனவிநயம்

"அழுக்கா றுடையோ னவிநய முரைப்பி
னிழுக்கொடு புணர்ந்த விசைப்பொரு ளுடைமையுங்
கூம்பிய வாயுங் கோடிய வுரையு
மோம்பா தது விதிர்க்குங் கைவகை யுடைமைய
மாரணங் காகிய வெகுளி யுடைமையுங்
காரண மின்றி மெலிந்தமுக முடைமையு
மெலிவொடு புணர்ந்த விடும்பையு மேவரப்
பொலியு மென்ப பொருந்துமொழிப் புலவர்."

இன்பமுற்றோனவிநயம்

"இன்பமொடு புணர்ந்தோ னவிநய மியம்பிற்
றுன்ப நீங்கித் துவர்த்த யாக்கையுந்
தயங்கித் தாழ்ந்த பெருமகிழ் வுடைமைய
மயங்கி வந்த செலவுநனி யுடைமையு
மழகுள் ளுறுத்த சொற்பொலி வுடைமையு
மெழிலொடு புணர்ந்த நறுமல ருடைமையுங்
கலங்கள்சேர்ந் தகன்ற தோண்மார் புடைமைய
நலங்கெழு புலவர் நாடின ரென்ப."

தெய்வமுற்றோனவிநயம்

"தெய்வ முற்றோ னவிநயஞ் செப்பிற்
கைவிட் டெறிந்த கலக்க முடைமையு
மடித்தெயிறு கௌவிய வாய்த்தொழி லுடைமையுங்

துடித்த புருவமுந் துளங்கிய நிலையுஞ்
செய்ய முகமுஞ் சேர்ந்த செருக்கு
மெய்து மென்ப வியல்புணர்ந் தோரே.''

ஞஞ்ஞையுற்றோனவிநயம்

''ஞஞ்ஞை யுற்றோ னவிநய நாடிற்
பன்மென் றிறுகிய நாவழி வுடைமையு
நுரைசேர்ந்து கூம்பும் வாயு நோக்கினர்க்
குரைப்போன் போல வுணர்வி லாமையும்
விழிப்போன் போல விழியா திருத்தலும்
விழுத்தக வுடைமையு மொழுக்கி லாமையும்
வயங்கிய திருமுக மழுங்கலும் பிறவு
மேவிய தென்ப விளங்குமொழிப் புலவர்.''

இஃதேதமுறுமாக்க ளவிநயம்.

உடன்பட்டோனவிநயம்

''சிந்தையுடம் பட்டோ னவிநயந் தெரியின்
முந்தை யாயினு முணரா நிலைமையும்
பிடித்த கைம்மே லடைத்த கவினு
முடித்த லுறுத கரும நிலைமையுஞ்
சொல்லுவ தாது முணரா நிலைமையும்
புல்லு மென்ப பொருந்துமொழிப் புலவர்.''

உறங்கிஞோனவிநயம்

''துஞ்சா நின்றோ னவிநயந் துணியி
னெஞ்சு தின்றி யிருபுடை மருங்கு
மலர்த்துங் கவிழ்த்தும் வருபடை யியற்றியு
மலர்த்துயிர்ப் புடைய வாற்றலு மாகும்.''

துயிலுணர்ந்தோனவிநயம்

''இன்றுயி லுணர்ந்தோ னவிநய மியம்பி
னென்றிய குறுங்கொட் டாவியு முயிர்ப்புந்
தூங்கிய முகமுந் துளங்கிய வுடம்பு
மோங்கிய திரிபு மொழிந்தவுங் கொளலே.''

செத்தோனவிநயம்

"செத்தோ னவிநயஞ் செப்புங் காலை
யத்தக வச்சமு மழிப்பு மாக்கலுங்
கடித்த நிரைப்பலின் வெடித்துப் பொடித்துப்
போந்ததுணி வுடைமையும் வலித்த வுறுப்பு
மெலிந்த வகடு மென்மைமிக வுடைமையும்
வெண்மணி தோன்றக் கருமணி கரத்தலு
முண்மையிற் புலவ ருணர்ந்த வாறே."

மழைபெய்யப்பட்டோனவிநயம்

"மழைபெய்யப் பட்டோ னவிநயம் வகுக்கி
னிழிதக வுடைய வியல்புநனி யுடைமையு
மெய்கூர் நடுக்கமும் பிணித்தலும் படாத்தை
மெய்பூண் டொடுக்கிய முகத்தொடு புணர்த்தலு
மொளிப்படு மனனி லுலறிய கண்ணும்
விளியினுந் துளியினு மடிந்தசெவி யுடைமையுங்
கொடுகிவிட் டெறிந்த குளிர்மிக வுடைமையும்
நடுங்கு பல்லொலி யுடைமையு முடியக்
கனவுகண் டாற்ற னெழுதலு முண்டே."

பனித்தலைப்பட்டோனவிநயம்

"பனித்தலைப் பட்டோ னவிநயம் பகரி
னடுக்க முடைமையு நகைபடு நிலைமையுஞ்
சொற்றளர்ந் திசைத்தலு மற்றமி லவதியும்
போர்வை விழைதலும் புந்திநோ வுடைமையும்
நீரோம் விழியுஞ் சேறு முளிதலு
மின்னவை பிறவு மிசைந்தனர் கொளலே."

வெயிற்றலைப்பட்டோனவிநயம்

"உச்சிப் பொழுதின் வந்தோ னவிநய
மெச்ச மின்றி யியம்புங் காலைச்
சொரியா நின்ற பெருந்துய ருழந்து

தெரியா நின்ற வுடம்பெரி யென்னச்
சிவந்த கண்ணு மயர்ந்த நோக்கமும்
பயந்த தென்ப பண்புணர்ந் தோரே.''

நாணமுற்றோனவிநயம்

''நாண முற்றோ னவிநய நாடி
னிறைஞ்சிய தலையு மறைந்த செய்கையும்
வாடிய முகமுங் கோடிய வுடம்புங்
கெட்ட வொளியுங் கீழ்க்க ணேக்கமு
மொட்டின ரென்ப வுணர்ந்திசி னோரே.''

வருத்தமுற்றோனவிநயம்

''வருத்த முற்றோ னவிநயம் வகுப்பிற்
பொருத்த மில்லாப் புன்க ணுடைமையுஞ்
சோர்ந்த யாக்கையுஞ் சோர்ந்த முடியுங்
கூர்ந்த வியர்வுங் குறும்பல் லுயாவும்
வற்றிய வாயும் வணங்கிய வுறுப்பு
முற்ற தென்ப வுணர்ந்திசி னோரே.''

கண்ணேவுற்றோனவிநயம்

''கண்ணே வுற்றோ னவிநயங் காட்டி
னண்ணிய கண்ணீர்த் துளிவிரற் றெறித்தலும்
வளைந்த புருவத்தொடு வாடிய முகமும்
வெள்ளிடை நோக்கில் விழிதரு மச்சமுந்
தெள்ளிதிற் புலவர் தெளிந்தனர் கொளலே.''

தலைநோவுற்றோனவிநயம்

''தலைநோ வுற்றோ னவிநயஞ் சாற்றி
னிலைமை யின்றித் தலையாட் டிடைமையுங்
கோடிய விருக்கையுந் தளர்ந்த வேரொடு
பெருவிர லிடுக்கிய தூதலும் வருந்தி
யொடுங்கிய கண்ணெடு பிறவுந்
திருந்து மென்ப செந்நெறிப் புலவர்.''

அழற்றிறம்பட்டோனவிநயம்

"அழற்றிறம் பட்டோ னவிநய முரைப்பி
னிழற்றிறம் வேண்டு நெறிமையின் விருப்பு
மழலும் வெயிலுஞ் சுடரு மஞ்சலு
நிழலு நீருஞ் சேறு முவத்தலும்
பனிநீ ருவப்பும் பாதிரித் தொடையலு
துனிவிர லீர மருநெறி யாக்கலும்
புக்க துன்பொடு புலர்ந்த யாக்கையுந்
தொக்க தென்ப துணிவறிந் தோரே."

சீதமுற்றோனவிநயம்

* "சீத முற்றோ னவிநயஞ் செப்பி
னேதிய பருவர லுள்ளமோ டுழத்தலு
மீர மாகிய போர்வை யுறுத்தலு
மார வெயிலுழந் தழலும் வேண்டலு
முரசியு முரன்று முயிர்த்து முரைத்தலுங்
தக்கன பிறவுஞ் சாற்றினர் புலவர்."

வெப்பமுற்றோனவிநயம்

"வெப்பி னவிநயம் விரிக்குங் காலைத்
தப்பில் கடைப்பிடித் தன்மையுந் தாகமு
மெரியி னன்ன வெம்மையோ டியைவும்
வெருவரு மியக்கமும் வெம்பிய விழியும்
நீருண் வேட்கையு நிரம்பா வலியு
மோருங் காலை யுணர்ந்தனர் கொளலே."

நஞ்சுண்டோனவிநயம்

"கொஞ்சிய மொழியிற் கூரெயிறு மடித்தலும்
பஞ்சியின் வாயிற் பனிநிரை கூம்பலுந்
தஞ்ச மாந்தர் தம்முக நோக்கியோ
ரின்சொ லியம்புவான் போலியம் பாமையும்
நஞ்சுண் டோன்ற னவிநய மென்ப."

ஈண்டுக் கூறிய இருபத்து நான்கு வகைக்குஞ் சொல்லிய அவிநயங்களேயன்றி வேறு அவிநயங்களும் வருவன வுள வெனில் அவற்றையுஞ் சேர்க்கவேண்டிய இடங்களிற் றக்க வாறறிந்து கூட்டிக் கொள்ளுதல் அமைவுடைத்தாம்.

"சொல்லிய வன்றியும் வருவன வுளவெனிற்
புல்லுவழிச் சேர்த்திப் பொருந்துவழிப் புணர்ப்ப,"

என்பது புறனடையாம்.

இனி இவ்வாசிரியர் கூறிய நாற்பத்தெட்டு வகை அவி நயவிரியுள், மேற் பண்டையாசிரியர்கூற்றுயெடுத்தோதிய அவி நய விலக்கணங்களுள் அடங்கும் இருபத்தொரு வகையும் நீங்க, ஏனைய இருபத்தேழு வகைக்கும் உரிய அவிநயங்களைப் பொருந்துமாற்று னறிந்து கொள்க. (கூ0)

254. இவ்விவ ரவிநய மவ்வப் போழ்தி
னடிக்குந ரினிதி னெடுத்துக் காட்டுப.

இ இவர் அவிநயம் - ஈண்டு மேற்சூத்திரத்திற்கூறிய நாற்பத்தெண்மர்தம் அவிநயங்களே, நடிக்குநர் - நாடக பாத்திரங்களே மேற்கொண்டு நடிப்பவர்கள், அ அ போழ்தின் - அந்த அந்தச் சமயங்களில், இனிதின் - ஏற்றவாறு செவ்வி தாக, எடுத்துக் காட்டுப - எடுத்துக் காட்டுவர்.

குறிப்பு:—இந்நாற்பத்தெண்வகை யொவ்வொன்றற்கும் உள்ள அவிநயங்கள் யாவற்றையும் முற்றக்கூறி முடியு மிலக் கணங் கடைபோகாதாதலின் நடிக்கும் வல்லபமுடையார் அம யத்துக்கேற்றவாறு செவ்விதின் எடுத்துக் காட்டும் அவிநயங் களே இலக்கணமாக அமைவனவாதலின் ஆசிரியர் இங்ஙனம் கூறினர். (கூக)

255. இன்னிதழ் சுவைத்த லிணைவிழைச் சோடு
மெண்ணெ யாட்டுமற் றிடக்க ரெல்லா
மெடுத்துக் காட்டும் வழக்கா றில்லை.

இனிமை இதழ் சுவைத்தல் - அதரபானஞ் செய்தல், இணை விழைச்சு - சம்போகஞ் செய்தல், எண்ணெய் ஆட்டு -

எண்ணெய் தேய்த்து முழுகுதல், மற்று இடக்கர் எல்லாம் - இவைபோன்ற பிற இடக்கரானவற்றை யெல்லாம் எடுத்து காட்டும் வழக்காறு இல்லை - அரங்கின்கண் அவிநயங் களாக எடுத்துக் காட்டும் வழக்கம் இல்லை.

குறிப்பு:—இவை இடக்கர் ஆனவையாதலின் அறி வுடையார் காட்டல் அடாதென வொதுக்கினர். பிற்காலத் தினர் நாடக மேடையில் தாராசசாங்கம் முதலிய நாடக நடிப்புழி இதழ் சுவைத்தலும் எண்ணெயாட்டுங் காட்டுவது நிகழினும் அஃது மரபறியார் செய்கை என்பது கருதியே ஆசிரியர் 'வழக்காறில்லை' என்றனர். (கூ)

256. "கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதி னுணரு
முணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியி
னன்னயப் பொருள்கோ ளெண்ணருங் குரைத்
[தே."

கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும் - கண்ணுனுஞ் செவியானும் செவ்விதின் அறியும், உணர்வு உடை மாந்தர்க்கு அல்லது - அறிவுடைய மாந்தருக்கன்றி, தெரியின் - ஆராயுமிடத்து, நன்மை நயம் பொருள் கோள் எண் அருங்குரைத்து - மெய்ப்பாட்டுப் பொருள் கோடல் எண்ணுதற்கு அருமையுடைத்து.

குறிப்பு:—இது மேற்கோட் சூத்திரம்; தொல்காப்பிய மெய்ப்பாட்டியற் புறனடைச் சூத்திரமாம். திண்ணிதின் உணர்தல் - யாபபுறவறிதல். மற்று மனத்து நிகழ்ந்த மெய்ப் பாட்டினைக் கண்ணுனுஞ் செவியானு முணர்தலென்ப தென்னையெனின், மெய்ப்பாடு பிறந்தவழி உள்ளம் பற்றி முகம் வேறுபடுதலும் உரை வேறுபடுதலு முடைமையின் அவை கண்ணுனுஞ் செவியானு முணர்ந்து கோடல் அவ் வத்துறைபோயினாரது ஆற்றலென்பது கருத்து. சத்துவம் அவிநயம் என்னுமிவற்றைக் கண்ணுனுஞ் செவியானுந் திண்ணிதினுணரும் வன்மை யுடையார்க்குக் குறிப்பும் மெய்ப்பாடும் இனிது விளங்கும் என்றதனால் அவற்றை

யுணர்தற்கு இஃது கருவி கூறியதாம். அருங்குரைத்து: அரிது; 'குரை' என்பது அசைநிலை யிடைச்சொல், 'அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே' (புறம். 5) என்ற இடத்துப்போல. (நாடு)

(ரு) நிலை

257. நிலையெனப் படுவது நிகழ்த்துங் காலைப்
பலதிற மாகிய பாஅத் திரங்களின்
வினைமுறை யென்ப விளங்கிய காட்சிய
ரவிநய நிலையென் றறைநரு முளரே.

நிலை எனப்படுவது நிகழ்த்தும் காலை - நிலையென்று சொல்லப்படுவது இன்னதென்றுசொல்லுமிடத்து, பல திறம் ஆகிய - பலவகைப்பட்ட, பாஅத்திரங்களின் - நாடகபாத்திரங்களின், வினை முறை என்ப - தொழிலின் முறைமை என்று கூறுவர், விளங்கிய - விளக்கமுற்ற அறிவினையுடையார்; அவிநயம் நிலை என்று அறைநரும் உளர் - இதனை அவிநயநிலை என்று கூறுவாரும் உண்டு.

குறிப்பு:—பாஅத்திரங்கள் - செய்யுளிசை யளபெடை. நிலை: இதனை யாங்கிலத்தில் 'Posture' என்று கூறுப. (நாசி)

258. அதுவே,
நிற்ற லியங்க லிருத்தல் கிடத்தல்
வருதல் போதலென் றிருமூ வகைத்தாம்.

அதுவே - அந்நிலைதான், நிற்றல்—, இயங்கல் - சஞ்சரித்தல், இருத்தல் - உட்கார்ந்திருத்தல், கிடத்தல் - படுத்துக் கிடத்தல், வருதல்—, போதல்—, என்று இரண்டு மூன்று வகைத்து ஆம் - என்று அறுவகைப்படும்.

குறிப்பு:—இவையே நாடகத்திற்குரிய அறுவகை நிலைகளாம்;

"அறுவகை நிலையு மைவகைப் பாதமு
மீரெண் வகைய வங்கக் கிரியையும்

வருத்தனை நான்கு நிருத்தக்கை முப்பது
மத்தகு தொழில வாகு மென்ப''

என்பதனை நிக. வைணவம், சமணிலை, வைசாகம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடமென்று கூறுவாருமுளர். (கூடு)

259. அவற்றுள்,
எல்லா நிலையும் விதூடகற் குரிய
வல்லார்க் கவரவர் பதமம யங்கட்
கேற்பக் கோட லியல்புணர்ந் தோரே.

அவற்றுள் - மேற் சொல்லிய அறுவகை நிலையுள், எல்லாம் நிலையும்–, விதூடகற்கு உரிய - விதூடகனுக்குரியனவாம்; அல்லார்க்கு - ஏனைய நாடக பாத்திரங்கட்கு, அவர் அவர் பதம் அமயங்கட்கு ஏற்ப கோடல் - அவ்வவர்தம் நிலைமை சமயம் இவைகட்குப் பொருந்தக் கொள்க; இயல்பு உணர்ந்தோர் - நாடக விலக்கணம் உணர்ந்தோர்.

குறிப்பு:—விதூடகன் யாவர் நிலையையும் மேற்கொள்ளுமியல்பினனுதலின் அவற்கு அறுவகை நிலையு முண்டென்றனர். பதம் - நிலைமை, பதவி அமயம் - சமயம், சந்தர்ப்பம். இயல்புணர்ந்தோர் கோடல் என வினைமுடிவு செய்க. (கூசு)

260. ஓதிய நிலையை யோவிய நூலோ
ரொருவகை வகுப்ப வோங்கிய நாடகத்
தாதி நூலோ ரைம்ப தெனமுதல்
விரிவரை யறையான் விளம்பிய பின்னர்த்
தொகைவரை யறையாற் சொல்லுவா ரவற்றை
யொன்பதி னடக்கி யுரைத்தன ரென்ப.

ஓதிய நிலையை - மேற்சொல்லிய நிலையினை, ஓவியம் நூலோர்-ஓவியநூலுணர்ந்தோர், ஒன்று வகை வகுப்ப - ஒரு வகையான் வகுத்துக் கூறுகிற்பவும், ஓங்கிய நாடகத்து ஆதி நூலோர் - மிக்க நாடகவிலக்கணங் கூறும் பண்டையாசிரியர், ஐம்பது என முதல் விரி வரையறையான் விளம்பிய பின்னர்-முதற்கண் விரித்துக் கூறும் வகையானே ஐம்பது என்று

வரையறை செய்து கூறியபின், தொகை வரையறையால் சொல்லுவார் - தொகுத்துக் கூறும் முறையானே வரையறை செய்து கூறுவான் புகுந்து, ஒன்பதின் அடக்கி உரைத்தனர் என்ப - அவற்றை ஒன்பதென்னும் எண்ணிக்கைபட அடக்கி உரைத்தனர் என்று பெரியார் கூறுவர்.

குறிப்பு:—சொல்லுவார் - முற்றெச்சம். ஓவிய நூல் - ஓவியம் (சித்திரம்) வரைதற்கு இலக்கணங்கூறும் நூல்; இவ்விலக்கணம் கூறும் இப்பெயரிய பழையநூலொன்று உளதாகவும் பெரியார் கூறுவர். நாடக ஆதி நூலோர் - பழைய நாடகவிலக்கணங்கூறிய முதலாசிரியர்கள். சண்டிச் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் தமது வேனிற்காதை உரையிற் கூறியுள்ளது ஆராயற்பாலது. "இதனுள் விருத்தியென்பது இருப்பு; ஓவியநூலுள் நிற்றல், இருத்தல், கிடத்தல், இயங்குதலென்னும் இவற்றின் விகற்பங்கள் பலவுள. அவற்றுள் இருத்தல், திரிதரவுடையனவும் திரிதரவில்லனவுமென இருபகுதிய. அவற்றுள் திரிதரவுடையன: யானை, தேர், புரவி, பூனை முதலியன: திரிதரவில்லன ஒன்பது வகைப்படும். அவை: பதுமுகம், உற்கட்டிதம், ஒப்படியிருக்கை, சம்புடம், அயமுகம், சுவத்திகம், தனிப்புடம், மண்டிலம், ஏகபாதம் எனவிவை; என்னை ?

"பதுமுக முற்கட் டிதமே யொப்படி
யிருக்கை சம்புட மயமுகஞ் சுவத்திகந்
தனிப்புட மண்டில மேக பாத
முளப்பட வொன்பது மாகுந்
திரிதர வில்லா விருக்கை யென்ப,"

என்றாராகலானும்,

"பன்னுள் கழிந்த பின்னர் முன்னு
ளெண்மெய்ப் பாட்டினு ளிரக்க மெய்ந்நிலீ இ
யொண்வினை யோவியர் கண்ணிய விருத்தியுட்
டலையத னும்பர்த் தான்குறிக் கொண்ட
பாவை நோக்கத் தாரணங்க கெய்தி,"

எனப் பெருங்கதையுட் கூறினமையானுங் கொள்க. இனி நாடக நூலார் இவ்விருப்பை ஐம்பதென விரிவரையறையாற் கூறித் தொகை வரையறை கூறுவார், அவற்றை ஒன்பதினடக்கினு ரெனவுணர்க; என்னை ?

"ஆதிப்பா விருத்தி யைம்பதிற் புலவோ
ரோதிக் கொண்டன ரொன்பான் விருத்தி"

என்றராகலின். அவற்றுள் தலைக்கண் விருத்தியாவது பதுமாசனம்," என்பது அடியார்க்கு நல்லாருரை. (கூஎ)

கோலம்

261. இருந்திசைக் கோல நின்றிசைக் கோலம்
வெறுங்கோ லம்மே யாப்பிசைக் கோலம்
வெறுப்பிசைக் கோலங் கரந்தாடு கோல
மேங்கிசைக் கோல மிரட்டிசைக் கோலஞ்
சிறந்திசைக் கோல மிணங்கிசைக் கோல
மென்னக் கோல மீரைந் தாகும்.

இருந்திசைக் கோலம்–, நின்றிசைக்கோலம்–, வெறுங் கோலம்—, யாப்பிசைக்கோலம்–, வெறுப்பிசைக்கோலம்–, கரந்தாடு கோலம்—, ஏங்கிசைக் கோலம்—, இரட்டிசைக் கோலம்–, சிறந்திசைக் கோலம்—, இணங்கிசைக் கோலம்–, என்ன கோலம் இரண்டு ஐந்து ஆகும் - என்று கோலம் பத்து வகைப்படும்.

குறிப்பு:—இருந்திசைக்கோலம்: இருக்கையில் வீற்றி ருந்தவண்ணம் யாழின் இன்னிசைக் கிணங்கப்பாடுதலாம் நின்றிசைக்கோலம்: நின்றவண்ணமிசைத்தலாம். வெறுங் கோலம்: துக்க மேலீட்டால் அணியாதியவற்றைக் களைந்து இசைக்கருவிகளுமின்றி யோரிடத்திருந்து இரங்கி யிசைத் தலாம். யாப்பிசைக்கோலம்: இசைக்கருவிகளின் ஒலிக கிணங்க இசைகூட்டிப் பற்பல யாப்பின் விகற்பங்களைத் தெரிப்ப இசைத்து ஆடவரும் பெண்டிருந் தத்தம் இயற் கைக்கு மாறாய் நடத்தலாம். வெறுப்பிசைக்கோலம்: தலை வன் மற்றொருத்திபால் விருப்புற்றனனென்றுணர்ந்த தலைவி

தலைவன்பாற் முன்கொண்ட அன்பினை வெறுத்தவளாய் யாழிசைக்கிணங்க இன்குரலெழுப்பி யிரங்கிப் பாடுதலாம். கரந்தாடுகோலம்: ஆடவர் பெண்டிர்தம் உடைபுனைந்து கரந்து நின்றெழுகுதலாம். இக்கோலத்திற்குச் செவ்வியவுதார ணஞ் ஜோதிமாலை யென்னு நாடிகையில் மன்னன் ஜய பரலன் மாறிவேடம் புனைதலாம். ஏங்கிசைக்கோலம்: ஓரி டத்துக் குறித்த நேரத்துத் தலைவன் வாராது காலநீட்டித் தமையின் தலைவியின்னிசைப்பண்ணை யினிதெழுப்பி யிரங்கி யிசைத்தலாம். இரட்டிசைக்கோலம்: வாதஞ் செய்கிலை யுடன் மனவெழுச்சியையுங் கவர்ச்சியையுமுடைய இனிய பாடல்களை யிசைத்தலாம். சிறந்திசைக்கோலம்: இன்னி சை பொருந்திய வரிப்பாடல்களை வெகுளிச் சுவையா லாதல் இன்பச் சுவையாலாதல் ஆழ்ந்த கருத்துடனும் பற்பல இசைவேறுபாட்டுடனும் எடுத்தநிலையும் உற்றுணர் நிலையுமாகிய இருநிலன் விளங்க இசைத்தலாம். எடுத் தநிலை - ஹாவம், உற்றுணர்நிலை - ஹேளம்; இவற்றினிலக் கணங்களைப் பொதுவியல்பு நாலேழ்நிலன் கூறும் 92-ஞ் சூத் திர வுரையிற் காண்க. இணங்கிசைக் கோலம்: உல்லாசத் தொடுகூடிப் போலிக் கண்டனங்களும் இயைந்து பாட்டினி சைக்கப்படும் ஸம்பாஷணையாம். இவ்வீரைந் கோலத்தினை யும் முறையே கேயபதம், ஸ்திதபாட்யம், ஆஸீநம், புஷ்ப கண்டிகா, ப்ரச்சேதகம், த்ரிகூடம், ஸைந்தவம், த்விகூடம், உத்தமோத்தமகம், உத்தப்ரத்யுத்தம் என்று கூறுப வட நூலார். இச்சூத்திரத்திற்கூறிய கோலங்களின் தமிழ்ப் பெயர் கள் சொல்லின் முடியு மிலக்சணத்தனவாம் இயல்பினவாதலை யுய்த்துணர்க. (நஅ)

262. இவற்றை யிலாசிய மென்று முரைப்ப.

இவற்றை இலாசியம் என்றும் உரைப்ப - மேற்சூத் திரத்திற்கூறிய கோலங்களை இலாசியம் என்றும் அறிவுடை யார் கூறுவார்கள்.

குறிப்பு:—வடநூலார் இக்கோலங்களை இலாசிய மென்று கூறுவர். (நக)

(சு) நாடகசாலை

263. பருநகர் நாப்பட் பலர்குழூஉ மன்றத்
தெடுத்த நாடக நடித்திடற் கியைந்த
காவ லாளர் மேவிய தானமே
நாடக சாலையா நாடுறு மதுதான்
"தேவர் குழாமுஞ் செபித்த பள்ளியும்
புள்ளின் சேக்கையும் புற்று நீங்கிப்
போர்க்களி யானைப் புரைகூடஞ் சாராது
மாவின் பந்தியொடு மயங்கல்செய் யாது
செருப்புகு மிடமுஞ் சேரியு நீங்கி
நுண்மை யுணர்ந்த திண்மைத் தாகி
மதுரச் சுவைமிகூஉ மதுர நாறித்
தீரா மாட்சி நிலத்தொடு பொருந்தி"
நேபத் தியமு மரங்குங் காணுங
ரிருக்கையு மென்ன வியன்மூ வகைய
விடனு முடைய திசைக்குங் காலே.

பருமை நகர் நாப்பண் - பெரிய நகரத்தின் நடுவில், பலர் குழூஉ மன்றத்து - பலர் கூடுஞ் சபையிடத்து, எடுத்த நாடகம் நடித்திடற்கு இயைந்த - ஆடுதற்கு எடுத் துக்கொண்ட நாடகத்தினை நடித்தற்குப் பொருந்திய, காவல் ஆளர் மேவிய தானமே - காவலைப் புரிபவர் கூடிய இடமே, நாடகம் சாலையும்—நாடகசாலை யென்னப்படும் நாடு உறும் அதுதான் - ஆராய்தற்குப் பொருந்திய அந் நாடகசாலை, தேவர் குழாமும் - தெய்வங்கள் கூடுமிடமும், செபித்த பள்ளியும் - முனிவர்கள் இருந்து மந்திரஞ் செபிக் கும் பள்ளிகளும், புள்ளின் சேக்கை - பறவைகள் தங்கும் கூடுகள் அமைந்த இடங்களும், புற்றும் - பாம்பு முதலிய வைகள் தங்கும் புற்றுக்களும், நீங்கி—,போர் களி யானை புரை சாராது - போரினைச் செய்யும் மதக்களிப்பினையுடைய யானைகள் கட்டுங் கூடங்கள் சேராமல், மாவின் பந்தியொடு மயங்கல் செய்யாது-குதிரைகள் கட்டுஞ் சாலைகள் கலவாமல்,

செரு புகும் இடமும் சேரியும் நீங்கி - போர் புரிவோர் போரினைப்பயிலும் இடங்களும் அன்னோர்தஞ் சேரிகளும் நீங்கியிருப்பதாய், நண்மை உணர்ந்த திண்மைத்து ஆகி - நுட்பமான மண் செறிந்த திட்பமான நிலப்பான்மை வாய்ந்ததாகி, மதுரம் சுவை மிகூஉம் மதுரம் நாறி - தித் திப்புச் சுவையும் இனிமை மிக்க நாற்றமும் உடையதுமாகி, தீரா மாட்சி நிலத்தொடு பொருந்தி - நீங்குதலில்லாத பெருமை வாய்ந்த நிலத்தின்கட் பொருந்தி யிருப்பதாய், நேபத்தியமும்—, அரங்கும் - நாடக மேடையும், காணுநர் இருக்கையும் - நாடகம் பார்ப்பவர் வீற்றிருக்கும் இடமும், என்ன இயல் மூன்று வகைய இடனும் உடையது - என்று சொல்லப்பட்ட மூவகை இடங்களையும் உடையதாம், இசைக்கும் கால் - சொல்லுமிடத்து.

குறிப்பு:—அதுதான் இசைக்குங்கால் நீங்கிச் சாராது செய்யாது நீங்கி ஆகி நாறி பொருந்தி உடையது எனக் கூட்டி வினைமுடிவு செய்க. மன்றத்தின்கண் எடுத்த தானம் என இயைத்தலும் அமையும். தேவர் குழாம் - ஈண்டு ஆகு பெயர்; தெய்வத்தானங்களைக் குறித்து நின்றது. காவலாளர்- காவல் புரிவோர். செபித்தபள்ளி - இடத்து நிகழ் பொருளின்றெழில் இடத்தின்மே லேற்றப்பட்டது.

'தேவர்குழாம்' முதலிய நான்கின் அணிமை நாடகசாலைக்கு இடையூறுவதோடு, இதனாலும் அவைகட்கு இடையூறுண்டாவதாற் பாவமு நேரிடுமாதலான் அவற்றின் நீங்குதல் ஒருதலையாய் வேண்டுவதாயிற்று. யாணர்ப்புரை :யாணர்க்கூடம். மாவின்பந்தி : மந்துரை. சேரி : சேருமிடம் ; உறையுள். நண்மை யுணர்ந்த திண்மைத்தாகி : 'கனந், தோற்றிய திண்மைச் சுவட துடைத்தாய்' என்பதனோடு ஒப்பிடுக. தீரா மாட்சி நிலம் - துவர் வரி வளை பொருக்கன் முதலிய குற்றங்கள் நீங்கின நிலம் என்பர் சிலப்பதிகார அரும்பதவுரைகாரர். சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் அரங்கினமைதி கூறும்,

'எண்ணிய நூலோ ரியல்பினின் வழாஅது
மண்ணக மொருவழி வகுத்தனர் கொண்டு,'

என்ற அடிகளுக்கு உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கூறும் உரை ஈண்டு இன்றியமையாது நோக்கற்பாலது.

"எண்ணப்பட்ட சிற்ப நூலாசிரியர் வகுத்த இயல்புகளின் வழுவாதவகை அரங்கு செய்தற்கு நிலக்குற்றங்கள் நீங்கினவிடத்திலே நிலம்வகுத்துக்கொண்டு என்க.

மண்ணகநிலமாவது :—

'தந்திரத் தரங்கிங் கியற்றுங் காலை
யறனழித் தியற்று வழகுடைத் தாகி
நிறைகுழிப் பூழி குழிநிறை வாற்றி
நாற்றமுஞ் சுவையு மதுரமு மாய்க்கனந்
தோற்றிய திண்மைச் சுவடது டைத்தா
யென்புமி கூர்ங்கல் களியுவ ரீளை
துன்ப நீறு துகளிவை யின்றி
யூரகத் தாகி யுளோமான் பூண்ட
தேரகத் தோடுந் தெருவுமுக நோக்கிக்
கோடல் வேண்டு மாடரங் கதுவே,'

என்பது. தந்திரவழி அரங்கு இவ்வுலகத்துச் செயயுமிடத்துத் தெய்வத் தானமும் பள்ளியும் அந்தணரிருக்கையும் கூபமும் குளனும் காவு முதலாக வுடையன அழியாத இயல்பினை யுடைத்தாய் நிறுக்கப்பட்ட குழிப்பூழி குழிக்கொத்துக் கல்லப்பட்ட மண் நாற்றமும் மதுரநாறி இரதமும் மதுரமாகித் தானும் திண்ணிதாய், என்பும் உமியும் பரலுஞ் சேர்ந்த நிலம் களித்தரை உவர்த்தரை ஈளைத்தரை பொல்லாச் சாம்பற்றரை பொடித்தரை என்று சொல்லப்பட்டன ஒழிந்து, ஊரின் நடுவணதாகித் தேரோடும் வீதிகளெதிர்முகமாக்கிக் கொள்ளல் வேண்டுமென்க. நிலந்தான் வன்பால் மென்பால் இடைப்பாலென்று மூன்று வகைப்படும். அவற்றுள், வன்பாலாவது: குழியின் மண்மிகுவது; மென்பாலாவது குறைவது; இடைப்பாலாவது ஒப்பு. ஈண்டு இவை பெரும்பான்மையாற் கொள்ளப்படும். அதுவே

யென்ற இலேசினனே துவர்ப்புப் பயமும், புளிப்பு நோயும், காழ்ப்புப் பசி நீடுதலும், கைப்புக் கேடும், உவர்ப்புக் கலக்க மும் பண்ணுமாதலான் நீக்கப்பட்டன. என்னை ?

'உவர்ப்பிற் கலக்கமாங் கைப்பின் வருங் கேடு
துவர்ப்பிற் பயமாஞ் சுவைக — ளவற்றிற்
புளிநோய் பசிகாழ்ப்புப் பூங்கொடியே தித்திப்
பளிபெருகு மாவ தரங்கு,'

என்னூர் பரதசேனபதியார். இதனுள் நாற்றமென்பன கொள்ளிலையும் செந்நெல்லும் சண்பகமும் சுரபுன்னையு மெனவிவை. ஒழிந்தன - தீமைப்பால. இங்ஙனம் ஒரு வகையான் அரங்கிற்கு நிலம் வகுத்துக் கொண்டென்க," என்பது அடியார்க்கு நல்லாருரை.

'ஆடலும் பாடலும் கொட்டும் பாணியும்
நாடிய அரங்கு சமைக்குங் காலைத்
தேவர் குழாமுஞ் செபித்த பள்ளியும்
புள்ளின் சேக்கையும் புற்று நீங்கிப்
போர்க்களி யாணைப் புரைசா ராது
மாவின் பந்தியொடு மயங்கல் செல்லாது
செருப்புகு மிடமுஞ் சேரியு நீங்கி
நுண்மை யுணர்ந்த திண்மைத் தாகி
மதுரச் சுவைமிகூஉ மதுர நாறித்
தீரா மாட்சி நிலத்தொடு பொருந்திய
வித்திறத்த தாகு மரங்கினுக் கிடமே,"

என்ற சுத்தானந்தப் பிரகாச சூத்திரத்தினடிகள் ஈண்டு இவ் வாசிரியரான் மேற்கோளாக எடுத்தாளப்பட்டன. நேபத்தி யம், அரங்கு, காணுநரிருக்கை யென்பன மூன்றும் நாடக சாலையின் பகுதிகளாம். இவற்றின் இலக்கணங்களைப் பின் னர் வருஞ் சூத்திரங்களா னுணர்க. (சு0)

நேபத்தியம்

264. நாடக சாலையின் புறனே பத்திய
மின்றி யமையா விசைக்கரு விகளு

மவற்றை யிசைக்கு மரிய பாணருங்
கானஞ் சான்ற காயகர் தாமும்
பாத்திரங் கட்கியை பணிகளு முடைகளும்
பாத்திர மினிதுறை பண்புறு மிடங்களுங்
கரந்துபோக் கிடனுங் கண்ணுளர் குடிஞையுங்
களங்கட் குரிய கவினுறு பொருள்களு
முடைய தாகி நடைபெறு வதுவாம்.

நாடகசாலையின் புறன் நேபத்தியம் - நாடகசாலையி னெருபுறத்துள்ள நேபத்தியம், இன்றி அமையா இசை கருவிகளும் - அவசியம் வேண்டுவன வாகிய வாத்தியங்களும், அவற்றை இசைக்கும் அரிய பாணரும் - அவ்வாதியங்களை வாசிக்கும் இசைப்புலமை சிறந்த வித்துவான்களும், கானம் சான்ற காயகர் தாமும் - இசை நன்கமைந்த பாடகர்களும், பாத்திரங்கட்கு இயை பணிகளும் உடைகளும் - நாடக பாத்திரங்கள் புனைதற்கு இயைந்தனவாய அணிகலன்களும் உடுக்கும் உடைகளும், பாத்திரம் இனிது உறை பண்பு உறும் இடங்களும் - நாடக பாத்திரங்களாக வருபவர் தங்குதற்குரிய பண்பு வாய்ந்த இடங்களும், கரந்து போக்கு இடனும் - ஒளிந்து செல்லுதற்குரிய இடங்களும், கண்ணுளர் குடிஞையும் - கூத்தர்கள் தங்கும் அறைகளும், களங் கட்கு உரிய கவின் உறு பொருள்களும் - நாடகக் காட்சி களை யமைத்தற்கு வேண்டிய அழகு பொருந்திய பொருள் களும், உடையது ஆகி நடை பெறுவது ஆம் - பெற்றிருப்ப தாகி அமைந்ததாம்.

குறிப்பு:—நேபத்தியம் நாடக சாலையின் ஓர் புறத்தே அமைக்கப்படும் இயல்பினதாதலின் 'புறனேபத்தியம்' என விசேடித்தனர்; அன்றிப் 'புறன்' ஏழனுருபெனக் கோடலு மாம். இசைக் கருவிகள் - மத்தளம், குழல் முதலிய வாத் தியங்கள். 'அரிய பாணர்':

"குழலினும் யாழினுங் குரன்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டி
மரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையும்"

என்ற சிலப்பதிகார அடிகளையும், "தொளைக்கருவியானும் நரப்புக்கருவியானுங் குரன் முதலாயுள்ள ஏழிசையினையும் சரிகமபதநி என்னும் ஏழெழுத்தினையும மூவகை வங்கியத்தினும் நால்வகை யாழினும் பிறக்கும் பண்களுக்கு இன்றியமையாத மூவேழு திறத்தையுங் குற்றமின்றாக இசைத்துக் காட்டவல்ல பெறுதற்கு அரிய இசை மரபை யறிந்த குழல் பாணர் முதலாய பெரிய இசைக்காரரிருக்கு மிடங்களுமென்க" என்ற அடியார்க்கு நல்லாருரையினையும் ஈண்டு நோக்குக. காயகர்-பாடகர். பாத்திரங்கட் கியை பணிகளும் உடைகளும் - நாடக பாத்திரங்களாக வேடம் பூணதற்கு வேண்டிய அணிகலன்களும் உடைகளும். கண்ணுளர்: சாந்திக் கூத்தரென்பர் அடியார்க்கு நல்லார்; மதங்க ரென்பாரு முளர். சாந்திக் கூத்தாவது:

> "வாசிகை வைத்து மணித்தோ டணியணிந்து
> மூசிய சுண்ண முகத்தெழுதித்—தேசுடனே
> யேந்துசுடர் வாள்பிடித்திட் டீசனுக்குங் காளிக்குஞ்
> சாந்திக்கூத் தாடத் தகும்"

என்பதனானறிக. கலங்கட்குரிய கவினுறு பொருள்கள் - களங்கோடித்தற்குரிய பொருள்கள். குடிஞை: 'குடிகை' என்பதன் சிதைவு போலும். (சக)

265. இதணப் பாசறை யென்மரு முளரே.

இதணை பாசறை என்மரும் உளரே - இங்நேபத்தியத்திணைப் 'பாசறை' என்று வழங்குவாரும் உளர்.

குறிப்பு:—இங்நேபத்தியத்தினை யாங்கில நாடக நூற் புலவர் "Green Room" என்று கூறுப. இவ்வாங்கிலப் பெயரின் மொழிபெயர்ப்பாக இதணப்'பாசறை'எனவழங்குநரும் உண்டு; பசுமை + அறை, பாசறை என்க. (சஉ)

அரங்கு

266. நாடக சாலையின் முகனே யரங்கஃ தியர்ந்த சமதல முடைத்தாய்ப் பல்வகைக்

களங்களுங் காட்டுங் கவினுறு திரைபல
வேண்டிய போது வீழுந் தகைத்தாய்க்
காண்பவர் நெஞ்ச மாண்பொடு கவரு
மோவியத் தொழினல மாவியப் புறுநவும்
தாழ்ச்சியி லெந்திரச் சூழ்ச்சியுஞ் சான்றதாய்
பாயிருள் கடிந்து ஞாயி றெழுந்ததோ
வென்ன வொளிதவ மன்னி விளங்குந்
தூணிழற் புறப்படா மாண்விளக் கெடுத்து
நிலவிளக் கேற்றியு நலமுறப் பாத்திர
நடிப்பிட மாகி நனியியல் வதுவே.

நாடகசாலையின் முகனே அரங்கு-நாடகசாலைக்கு முகம் போலமைந்துள்ளது அரங்காகும்; அஃது உயர்ந்த சமம் தலம் உடைத்து ஆய்-அவ்வரங்கு உயர்ந்த மேடையான சம தலத்தை உடையதாய், பல வகை களங்களும் காட்டும் கவின் உறு திரை பல வேண்டிய போது வீழும் தகைத்து ஆய் -பல வகையான நாடகக் காட்சிகளையும் காட்டும் அழகுவாய்ந்த பலதிரைகளும் வேண்டியபொழுது விழும் தகுதியுடைய தாய், காண்பவர் நெஞ்சம் மாண்பொடு கவரும் ஓவியம் தொழில் நலம் மா வியப்பு உறுநவும் - நாடகம் பார்ப்பவர் மனத்தைச் செவ்விதாகக் கவரும் சித்திரத் தொழிலின் பெரிதும் வியக்கத்தக்க அழகுவாய்ந்த உருவங்களும், தாழ்ச் சி இல் எந்திரம் சூழ்ச்சியும் சான்றது ஆய் - குறைவற்ற யந்திரோபாயங்களும் வாய்ந்ததாய் பாய் இருள் கடிந்து ஞாயிறு எழுந்ததோ என்ன - பரவிய இருளைக் கெடுத்துப் பகலவன் உதயமாயினனே என்று கருதும்படி, ஒளி தவ மன்னி விளங்கும் - மிக்க ஒளி அசைவற நிலைபெற்று விளங் கும், தூண் நிழல் புறம் படா மாண் விளக்கு எடுத்தும் - தூண்களின் நிழல் வெளிப்பட்டு விழாதபடிப் பெருமை வாய்ந்த விளக்குக்கள் தூக்கப்பட்டும், நிலம் விளக்கு ஏற்றி யும் - நிலத்தின்பாலமைத்த விளக்குக்கள் ஏற்றப்பட்டும்,

கலம் உற - அழகுபொருந்த, பாத்திரம் நடிப்பு இடம் ஆகி- நாடகபாத்திரராய்வரும் நடிகர்கள் நடிப்பதற்கு இடமாகி, நனி இயல்வது - நன்கு பொருந்துவதாம்.

குறிப்பு:—இயல்வதுமேவ: ஏகாரம் ஈற்றசை. முகன் - முன்னிடம். உயர்ந்த சமதலம் எனவே மேடையாயிற்று. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் அரங்கமைதி கூறும் அடிகளும் அவற்றின் உரையும் ஈண்டு நோக்கற்பாலன. அவை பின்வருமாறு:—

"புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்
கண்ணிடை யொருசாண் வளர்ந்தது கொண்டு
நூனெறி மரபி னரங்க மளக்குங்
கோலள விருபத்து நால்விர லாக
வெழுகோ லகலத் தெண்கோ னீளத்
தொருகோ லுயரத் துறுப்பின தாகி
யுத்தரப் பலகையோ டரங்கின் பலகை
வைத்த விடைநில நாற்கோ லாக
வேற்ற வாயி லிரண்டுடன் பொலியத்
தோற்றிய வரங்கிற் றெழுதன ரேத்தப்
பூதரை யெழுதி மேனிலை வைத்துத்
தூணிழற் புறப்படா மாண்விளக் கெடுத்து,"

என்பது சிலப்பதிகாரம்.

'புண்ணிய.....விரலாக' வென்றது - பொதியின் மலை முதலாய புண்ணியவரைப் பக்கங்களிலே நெடிதாகி உயர வளர்ந்த மூங்கிலிற் கண்ணெடு கண்ணிடை ஒரு சாணுக வளர்ந்தது கொண்டு நூல்களிற் சொல்லுகின்றபடியே அரங் களஞ்செய்ய அளக்குங்கோல் உத்தமன்கைப் பெருவிரலில் இருபத்துநாலு கொண்டது ஒரு கோலாக நறுக்கி யென்க. என்னை?

"ஒத்த வணுமுத லுயர்ந்துவரு கணக்கி
னுத்தமன் பெருவிர லிருபத்து நாலள
கோலே கோடல் குறியறிந் தோரே.'

என்றுராகலின்.

இதனுள் அணுமுதற் பெருவிரலளவு உயர்ந்து வரு மாறு: அணு எட்டுக் கொண்டது தேர்த்துகள்; தேர்த்துகள் எட்டுக் கொண்டது இம்மி; இம்மி எட்டுக் கொண்டது எள்ளு; எள்ளு எட்டுக் கொண்டது நெல்லு; நெல்லு எட்டுக் கொண்டது பெருவிரலெனக் கொள்க.

உத்தமராவார்: கழிய நெடுமையும் கழியக் குறுமையு மில்லோர்.

'எழுகோல்.....உறுப்பினதாகி' என்றது - இக் கோலால் எழுகோ லகலமும் எண்கோ னீளமும் ஒருகோற் குறட்டியரமு முடையதா யெடுக்க. என்னை ?

'அக்கோ லேழகன் றெட்டு நீண்டி
மொப்பா லுயர்வு மொருகோ லாகு
நற்கோல் வேந்த னயக்குறு வாயின்
முக்கோ ணுணு முயரவு முரித்தே;'

என்னூர் செயிற்றியனார்.

'அக்கோ லொருகோ லளவுறக் கல்வி
மிக்க கம்மியர் வடகலி விதிமுறைக்
கூறின ரன்றியுங் குறிவகைக் கேற்றன
வேற்கச் செய்க வியல்புணர்ந் தோரே.'

எனக் கூறினரு முளர்.

'உத்தரப் பலகை.....அரங்கில்' என்றது-தூணத்துக்கு மீதுவைத்த உத்தரப் பலகைக்கும் அரங்கினிடத்து அகலத் துக்கிட்ட பலகைக்கும் இடைநின்ற நிலம் நான்கு கோலாக உயரங்கொண்டு இத்தன்மையவாய அளவுக்குப் பொருந்த வகுத்த வாயில் இரண்டினை யுடைத்தாகச் செய்யப்பட்ட அரங்கினிடத்து எனக.

'வாயிலிரண்டி' என்றது - அரங்கிற்கு உட்புகவும் புறப் படவுஞ் சமைத்த வாயில் எனக் கொள்க. 'ஏற்ற' என்றதனால் கரந்துபோக்கிடனும், கண்ணுளர் குடிஞைப் பள்ளியும், அரங்கமும், அதனெதிர் மன்னர் மாந்தரோ டிருக்கும்

அவையரங்கமும், இவற்றினைச் சூழ்ந்த புவிநிறை மாந்தர் பொருந்திய கோட்டியும் முதலாயின கொள்க.

'தோற்றிய அரங்கு' என்றது - இப்படியாகச் சமைக்கப்பட்டு நூல் சொல்லுகின்றபடி யெல்லாந் தோற்றிய வரங்கு என்க.

'தொழுதன ரேத்த.....மேனிலை வைத்து' என்றது- அந்தணர் அரசர் வணிகர் சூத்திரரென்று சொல்லப்பட்ட நால்வகை வருணப் பூதரையும் எழுதி மேனிலத்தே யாவரும் புகழ்ந்து வணங்கவைத்து என்க.

என்னை? 'கூறிய வுறுப்பிற் குறியொடு புணர்ந்தாங்
காடுநர்க் கியற்று மரங்கி னெற்றிமிசை
வழுவில் பூத நான்கு முறைப்பட
வெழுதின ரியற்ற லியல்புணர்ந் தோரே,'

என்றாராகலின்.

இப்பூத நான்கின் உண்டியும் அணியும் ஆடையும் மாலையும் சாந்தமும் பொழுதும் செயல் முதலிய எல்லாம் அழற்படு காதைக்கண்ணே விரித்துக் கூறுதும்.

தூணிழற்.....எடுத்து' என்றது - தூண்களின் நிழல் நாயகப்பத்தியின் கண்ணும் அவையின்கண்ணும் படாதபடி மாட்சிமைப் பட்ட நிலைவிளக்கு நிறுத்தி என்க. என்னை? 'விளக்கியல் வனப்பும்' என்றாராகலின்," என்பது அடியார்க்கு நல்லாருரை.

" அரங்கி னுயரமு மகலமு நீளமும்
பொருந்த நாடி யுரைக்குங் காலைப்
பெருந்தண் மால்வரைச் சிறுகழை கண்ணிற்
கண்ணிடை யொருசாண் வளர்ந்தது கொண்டே
இருபத்து நால்விரற் கோலள வதனை
லெழுகோ லகலத் தெண்கோ னீளத்
தொருகோ லுயரத் துறுப்பின தாகி
யுத்தரப் பலகையோ டரங்கின் பலகை

வைத்த விடைநில நாற்கோ லாகப்
பூதரை யெழுதி மேனிலை வைத்து
நந்தி யென்னுந் தெய்வமு மமைத்துத்
தூணிழற் புறப்படா மாண்விளக் கெடுத்து
.. ..
கோவும் யானையுங் குரங்கும் பிச்சனும்
பாவையும் பாங்குடைப் புருடா மிருகமும்
யாவையு மெழுதி யிந்நிலம் விளங்கப்
பாவையர்க் கியற்றவ தரங்கெனப் படுமே,''

என்ற சுத்தானந்தப்பிரகாச சூத்திரம் ஈண்டு நோக்கற்பாலது. பண்டையாசிரியர் கூறியுள்ள அரங்கினிலக்கணத்தில் இறந்தது விலக்கலென்பதான் விலக்கற்பாலனவற்றை நீக்கி, எதிரது போற்ற லென்பதனானே கொள்ளற்பாலனவற்றைக் கூட்டி நமது ஆசிரியர் இவ்வரங்கிலக்கணச் சூத்திரம் வகுத்துளார் என்பது இதனை யாராய்குநர்க்குப் புலனும். முற்கால அரங்கத்திற் காணப்பெறுது இக்கால நாடக அரங்கிற் காணக் கிடக்கும் வேறுபாடுகள் பலவற்றையும் இச்சூத்திரத்திலமைத்துக் கோடற் பொருட்டே ஆசிரியர் 'நனி இயல்வதுவே' என்று விசேடித்துக் கூறினர். 'தூணிழற்புறப்பட' என்று பாடங்கொள்பவர், 'புறப்பட' என்பதற்குப் புறம்பே விலக என்று பொருள் கூறுவர். தாழ்ச்சியி லெந்திரச் சூழ்ச்சி: என்றது நீருண்மூழ்குதல், நெருப்பிற் பாய்தல், வானின்றுகீழிழிதல், ஆகாய கமனஞ் செய்தல் முதலிய பல வாய்விரிந்து கிடக்கும் செயல்கள்பலவற்றையுங் காட்டுதற்கு உபயோகமாகுங் கருவிகளின் அமைப்பினை. அரங்கு-நாடக மேடை. (சுரு)

எழினி

267. இவ்வயிற் கூறிய செவ்வி யரங்கி
னிடத்தூ ணிலியி னிடத்தி னின்று
முருவு திரையா மொருமுக மொழினியு
மிரண்டு வலத்தூ ணிடத்து மினிதி

ஒருவு திரையாம் பொருமுக வெழினியு
மேலசைத் திழிந்து நாலுறுந் திரையாங்
கரந்துவர லெழினியும் பரிந்து வகுப்ப.

இ வயின் கூறிய செவ்வி அரங்கின்-ஈண்டு முற்கூத்திரத் தின்கட் கூறிய அழகிய அரங்கின், இடம் தூண் நிலையின் இடத்தில் நின்றும் - இடது பக்கத்து நிலையாகப் பொருந் திய தூணிடத்திலிருந்தும்,உருவு திரை ஆம் ஒன்று முக எழி னியும் - உருவி வாங்கும் திரையாகிய ஒரு முக வெழினியும், இரண்டு வலம் தூண் இடத்தும் இனிதின் உருவு திரை ஆம் பொருமுக எழினியும் -வலப்பக்கத்திலுள்ள இரு தூணிடத் தும் இருந்து உருவி வாங்கும் பொருமுக எழினியும், மேல் அசைத்து இழிந்து நால் உறும் திரை ஆம் கரந்துவரல் எழி னியும்-மேலே கட்டப்பெற்றிருந்து வேண்டுங்கால கீழே இறங் கித் தொங்கற்பால திரையாகிய கரந்துவரலெழினியும், (என்று) பரிந்து வகுப்ப-நாடக விலக்கண வறிஞர் விரும்பி வகுத்தனர்கள்.

குறிப்பு:—எனவே எழினி, ஒருமுகவெழினி பொரு முகவெழினி கரந்துவரலெழினி என மூவகைப்படும் என்ப தாயிற்று. எழினி - திரை. அரங்கின் ஒரு புறத்தே நின்று அரங்கின்முன் மற்றோர்புறம் முற்றும் செல்லும் ஒரு முகத்தையுடையதாதலின் ஒரு முக எழினி யென்றும்; இருபுறத்துமுள்ள திரையின் முகங்கள் நெருங்கி வந்து இடையே கூட அமைந்தவற்றைப் பொருமுகவெழினியென் றும், மேலே கரந்து நின்றிருந்து வேண்டும் போழ்து கீழே யிழிந்துவரும் இயல்பினதாகிய திரையினைக் கரந்து வர லெழினி யென்றும் பண்டையாசிரியர் காரணக் குறியான் வழங்குவது இதனானே விளங்கும்.

'ஆங்கு,
ஒருமுக வெழினியும் பொருமுக வெழினியும்,
கரந்துவர லெழினியும் புரிந்துடன் வகுத்து,'

என்ற சிலப்பதிகார அடிகளும்,

'ஒருமுக வெழினி.....வகுத்து' என்றது - இடத் தூணிலே யிடத்தே உருவு திரையாக ஒருமுக வெழினியும், இரண்டு வலத்தூணிடத்தும் உருவு திரையாகப் பொருமுக வெழினியும், மேற்கட்டுத் திரையாகக் கரந்துவர லெழினியும் செயற்பாட்டுடனே வகுத்து என்க.

மேற்கட்டுத் திரையாய் நிற்பது ஆகாய சாரிகளாய்த் தோன்றுவார்க்கெனக் கொள்க; என்னை?

'முன்னிய வெழினிதான் மூன்று வகைப்படும்,'
என்றூர் மதிவாணனார்,

'அரிதரங்கிற்,
செய்தெழினி மூன்றமைத்துச் சித்திரத்தாற் பூதரையு,
மெய்த வெழுதி யியற்று,'

என்றூர் பரதசேனாபதியாரும்," என்ற அவ்வடிகளின் அடியார்க்கு நல்லாருரையும் ஈண்டு நோக்கற்பாலன. (சச)

காணுநரிருக்கை

268. அரங்கினி னிகழு மனைத்தையும் பலரு
மினிதி னிருந்து காண்டற் கேற்ற
வாதனந் தரந்தர மாக வுடையது
காணுந ரிருக்கையாங் கருதுங் காலே.

அரங்கினில் நிகழும் அனைத்தையும் - நாடக அரங்கின் கண் நிகழ்ச்சிபெறும் செயல்கள் யாவற்றையும், இனிதின் இருந்து காண்டற்கு ஏற்ற ஆதனம் - செவ்வையாக வீற்றிருந்து பார்த்தற்குப் பொருத்தமான இருக்கைகள், தரம் தரம் ஆக உடையது - காண்பவர்தம் தரத்திற்கு ஏற்றவாறு பொருந்தியிருக்குமிடம், காணுநர் இருக்கை ஆம் கருதுங் கால் - ஆராயுமிடத்து நாடகம் பார்ப்போர் இருக்கும் இடமாம்.

குறிப்பு:—தரம் - தகுதி. ஏகாரம்: ஈற்றசை, இனிதின் இருத்தல்: இடர்ப்பாடின்றி வீற்றிருத்தல். (சநி)

269. உரிமையோ டரசருற்றெழூஉ மவையமுங்
தெரிவையர்க் கேற்ற பரிவமை பள்ளியும்
புவிநிறை மாந்தர் பொருந்திய கோட்டியுங்
கவினுற மேவுங் காணுந ரிருக்கை.

உரிமையோடு அரசர் உற்று எழூஉம் அவையமும் - தம தூரிமைமகளிரோடு அரசர்கள் பொருந்தி எழுந்தருளும் சபையையும், தெரிவையர்க்கு ஏற்ற பரிவு அமை பள்ளியும் - மாதர்கள் இருந்து நாடகங் காண்டற்குப் பொருத்தமான அன்புடன் அமைத்த இடத்தையும், புவி நிறை மாந்தர் பொருந்திய கோட்டியும் - உலகத்துக் கல்வி கேள்விகளா னிறைந்த மக்கள் பொருந்தி வீற்றிருக்கும் இடப்பகுதியையும், கவின் உற மேவும் - அழகு பொருந்த உடையதாகும், காணுநர் இருக்கை—.

குறிப்பு:—காணுநரிருக்கை கவினுறமேவும் எனமுடிக்க; அன்றிக் காணுநரிருக்கைக்கண் அவையமும் பள்ளியும் கோட்டியும் மேவும் என முடித்தலுமாம். உரிமையோடரசர் உற்றெழூஉம் என்ற இடத்து உபலக்கணத்தால் அமைச்சர் சேனாதிபதியர் முதலிய அரசபரிவாரமுமடங்குமென்க. மன்னர் அமைச்சர் முதலியோர் உரிமை மகளிரொடும் இருக்கும் இவ்வவை நாடக வரங்கினெதிருள்ள இடமாம். இவ்வவைக்கு ஓர்பால் மகளிரிருக்கும் பள்ளியும் மற்றோர் பால் 'புவிநிறைமாந்தர் பொருந்திய கோட்டி'யும் அமைத்தல் மரபாம். மாதர்கட்குத் தனியே இடம் வகுத்தும் அவர்களுக்கு இன்றியமையாத சில சௌகரியங்களும் அமைத்துள பண்பால் 'பரிவு அமை பள்ளி' என ஆசிரியர் விசேடித்தனர். எனவே காணுநரிருக்கை, அரசர் வீற்றிருக்கும் அவை மாதர்பள்ளி மாந்தர்கோட்டி யென்னும் மூன்று பெரும்பகுதியுடையதென்பதும், இப்பகுதி யொவ்வொன்றினும் தரத்திற்கேற்ற உட்பகுதிகளுண்டென்பதும் இதனானே போதரும். (சசு)

270. காணுநர் வேட்ட மாணியற் பொருளவண்
விற்றலு மியல்பெனச் சொற்றனர் புலவர்.

காணுநர் - நாடகம் பார்ப்பவர், வேட்ட - விரும்பின, மாண் இயல் பொருள் - பெருமை வாய்ந்த பொருள்களை, அவண் விற்றலும் இயல்பு என சொற்றனர் புலவர் - அங்கு விற்பதும் மரபாம் என நாடக நூற்புலவர் கூறினர்.

குறிப்பு:—மாண் இயற்பொருளாவன : சிற்றுண்டி தின் பண்டம் முதலிய உண்டி வகைகளும், பால் முதலிய பான வகைகளும், பூமாலை அத்தர் பனிநீர் ஆதிய வாசனைப் பொருள்களும், வெற்றிலை பாக்கு நறுஞ்சுதை முகவாச முதலியனவும், விளையாட்டுக்கருவிகளும் பிறவுமாம். (சள)

நடிப்பியல்பு புறனடை

271. "சொல்லிய வன்றியும் வருவன வுளவெனிற்
புல்லுழிச் சேர்த்துப் பொருந்துழிப் புணர்ப்ப."

சொல்லிய அன்றியும் - இவ்வியல்பிற்கூறிய இலக்கணங்களன்றியும், வருவன உள எனில் - நடிப்பியல்பிற் சாரத்தக்கனவாகும் பிற இலக்கணங்களும் வருபவை யுளவேல் அவற்றினை, புல் உழி சேர்த்து - சேர்க்கத்தக்க இடங்களிற்சேர்த்து, பொருந்து உழி புணர்ப்ப - பொருந்து மாற்றான் உரிய இடங்களிற் புணர்த்துக் கூறுவர்.

குறிப்பு:—அறிவுடையார் புணர்ப்ப எனத்தொல்லெழுவாய் வருவித்து முடிக்க. புல்லுழிச்சேர்த்தல்: இவ்விலக்கணம் இப்பகுதியின்பாற்பட்டதென்று சேர்த்துக்கோடல்; பொருந்துழிப்புணர்த்தல் : கூறுமல் விட்ட இலக்கணங்களை உரியசூத்திரங்களில் உத்தியானும் உபலக்கணத்தானுமமைத்துக்கோடல். 'புல்லுவழிச் சேர்த்துப் பொருந்துவழிப் புணர்ப்ப' என்பதூஉம் பாடம். இச்சூத்திரம் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை மேற்கோள்; ஈண்டும் மேற்கோளாக நடிப்பியல்பின் புறனடையாப் பொன்னேபோற் போற்றி யாளப்பட்டது. (சஅ)

(எ) நூற்புறனடை

272. "பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே."

பழையன கழிதலும் - முற்காலத்து உள்ள இலக்கணங்களுட் சில பிற்காலத்து ஒழிதலும், புதியன புகுதலும் - முற்காலத்து இல்லாத சில பிற்காலத்து இலக்கணமாக வருதலும், வழு அல - குற்றமல்லவாம்; காலம் வகையினான் - அங்ஙனம் ஒழிதலும் வருதலும் கால வேறுபாடு பற்றியன வாதலான்.

குறிப்பு: — இஃது நன்னூற் சூத்திரம். இவையிற்றுக் குதாரணம் முன்வந்தவற்றுட்கண்டு கொள்க. ஏகாரம்: ஈற்றசை. இதனை,

'Old order changeth yielding place to new'

என்று ஆங்கிலக் கவிஞர்பெருமானாகிய Lord Tennyson (தெனிஸன் பிரபு) கூறிய பாவடியோடு ஒப்பிடுக. (சசு)

நாடகவியல் முற்றிற்று

*

நூற்பொருளகராதி

குறியீடு

[ப: பக்கம்; சூ: சூத்திரம; வ: வரி.]

அங்கம் ப. 144, 145. (நாடகச் சாதி) இலக்கணம் சூ. 131. சிறப்பங்கம். சூ. 132

அங்கம். ப. 188. (நாடக வுறுப்பு) இலக்கணம். சூ. 187, 189, (190)

அச்சம். ப. 73. இலக்கணம் சூ. 53

அச்சவவிநயம். ப. 238. இலக்கணம் சூ. 251

அரக்கி. ப. 124. இலக்கணம் சூ. 106

அரங்கு. ப. 260. இலக்கணம் சூ. 266

அரசர். ப. 40. (நாடகவகுப்பு) வகுப்பு. சூ. 29

அல்லீசம். ப. 166. இலக்கணம் சூ. 156

அவலத்தவிநயம். ப. 237. இலக்கணம் சூ. 250

அவலம். ப. 70, இலக்கணம் சூ. 51. பிரிந்துறையின்பத்தின் வேறுதல் சூ. 52

அவிநயம். ப. 227. இலக்கணம் சூ. 255. பொது சூ. 241. வகை சூ. 236, 242, 252.

அவிநயவிரி. ப. 239. வகை சூ. 253. தோற்றம் சூ. 254. விலக்கு சூ. 255. தெரிகுநர் சூ. 256

அறம். ப. 35. இலக்கணம் சூ. 22

ஆகாரியம். ப. 229. இலக்கணம் சூ. 239

ஆங்கிகம். ப. 228. இலக்கணம் சூ. 237

ஆரபடி. ப. 174. இலக்கணம் சூ. 170

இசைப்பாட்டு. ப. 90. இலக்கணம் சூ. 71. வகை சூ. 72, 75, 76.

இடப்பொருத்தம். ப. 82. இலக்கணம் சூ. 62

இடிமம். ப. 142. இலக்கணம் சூ. 129

இராதி. ப. 79. அன்பின் பெயர் சூ. 58. வ - 1. பத்தி. வ - 3. வாற்சலியம் வ - 4. இரக்கம். வ - 5.

இராசகம். ப. 159. இலக்கணம் சூ. 148

இலாசியம். ப. 254. கோலத்தின் வேறுபெயர் சூ. 262

இழிப்பவிநயம். ப. 237. இலக்கணம் சூ. 249

இழிப்பு. ப. 68. இலக்கணம் சூ. 50

இன்பம். ப. 37. இலக்கணம் சூ. 24, 25.

ஈகாமிநகம். ப. 143. இலக்கணம் சூ. 130

உண்ணுடகம். ப. 169. இலக்கணம் சூ. 160

உபசாதி. ப. 149. வகை சூ. 136, 137
உபநாயகன். ப. 113. இலக்கணம் சூ. 92. வ - 1. இலக்கியம் இலக்குவன் வ - 2
உல்லாப்பியம். ப. 156. இலக்கணம் சூ. 144. பிறர் கோள் சூ. 145
உவகை. ப. 51. இலக்கணம் சூ. 40. வகை சூ. 41. உடனுறை பிரிந்துறை வ - 1. நால் வகைப் பிரிந்துறை சூ. 42
உவகையவிநயம். ப. 231. இலக்கணம் சூ. 243
உள்வரி. ப. 204. இலக்கணம் சூ. 209
உறுப்பியல்பு. ப. 178 - 216. இலக்கணம் சூ. 174. வ 1 - 3. பொதி பொருள் சூ. 174. வ. 3 - 6.
உறுப்பியல்பு புறனடை. ப. 216. சூ. 223
எடுத்துக்கோள்வரி. ப. 208. இலக்கணம் சூ. 214
எழினி. ப. 265. இலக்கணம் சூ. 267.
ஒழிபு. ப. 168. சூ. 159 - 173.
ஒழிபு. ப. 214. சூ. 221 - 223.
ஒற்றுமை. ப. 226. இலக்கணம் சூ. 233.
கண்கூடுவரி. ப. 202. இலக்கணம் சூ. 207
கதாநீதம். ப. 127. இலக்கணம் சூ. 12. வ - 1 - 2. வகை சூ. 12. வ - 3 - 4.
கதை. ப. 31. இலக்கணம் சூ. 12. வ - 1 - 2. வகை சூ. 12. வ - 3 - 4.
கதை நிறை களம். ப. 189. இலக்கணம் .சூ 188.
கருப்பம். ப. 45. இலக்கணம் சூ. 35
கவிகூற்று. ப. 107. இலக்கணம் சூ. 79
களம். ப. 190. இலக்கணம் 191, 192. விலக்கு சூ. 193
காட்சிவரி. ப. 207. இலக்கணம சூ. 213
காணுநரிருக்கை. ப. 267. பொதுவிலக்கணம் சூ. 268. சிறப்பிலக்கணம் சூ. 269-270.
காண்வரி. ப. 203. இலக்கணம் சூ. 208
கானல்வரி. ப. 96. இலக்கணம் சூ. 77. வ. 7-9
காமினி. ப. 124. இலக்கணம் சூ. 101
காலப்பொருத்தம். ப. 83. இலக்கணம் சூ. 63
காவியம். ப. 157. இலக்கணம் சூ. 146
கிளர்வரி. ப. 205. இலக்கணம் சூ. 211
கீர்த்தனம். ப. 93. இலக்கணம் சூ. 73. வகை சூ. 74
கீழ்மக்கள்பா. ப. 89. சூ. 70
குரவைக்கூத்து. ப. 197. இலக்கணம் சூ. 202
குறிப்பு. ப. 186. இலக்கணம் சூ. 184-186

கூத்து. ப. 195. இலக்கணம் சூ. 200. வ.1. வகை. வ. 2-3
கூத்துநூல். ப. 171. இலக்கணம் சூ. 165. வகை.சூ. 166
கூற்று. ப. 192. வகை. சூ.195, 199
கைசிகி. ப. 175. இலக்கணம் சூ. 171
கோட்டி. ப. 152. இலக்கணம் சூ. 140
கோலம். ப. 253. வகை சூ. 261. வேறு பெயர் இலாசியம் சூ. 262
சட்டகம். ப. 152. இலக்கணம் சூ. 141
சந்தி. ப. 42. இலக்கணம் சூ. 32. வ. 1-3. வகை. வ. 4-5
சமநிலையவிநயம். ப. 234. இலக்கணம் சூ. 246
சமம். ப. 63. இலக்கணம் சூ. 46. பொதிபொருள். சூ. 47
சமவகாரம். ப. 141. இலக்கணம் சூ. 128
சழலாபகம். ப. 160. இலக்கணம் சூ. 149
சாதி. ப.135. வேறுபெயர். உருவகம் சூ. 119-121. வகை. சூ. 122-125
சாதிப்புறனடை. ப. 167. இலக்கணம் சூ. 158
சாத்துவதி ப. 173. இலக்கணம் சூ. 169
சாத்துவிகம். ப. 230. இலக்கணம் சூ. 240
சாந்தை. ப. 123. இலக்கணம் சூ. 105
சாயல்வரி. ப. 97. இலக்கணம் சூ. 77. வ. 21-25
சார்த்துவரி. ப. 96. இலக்கணம் சூ. 77. வ. 4-6
சிறப்பியல்பு. ப. 135-177. பொதிபொருள் சூ. 118
சிறப்பியல்பு புறனடை.ப. 177 சூ. 173
சிற்பகம். ப. 162. இலக்கணம் சூ. 152
சுதிணை. ப. 123. இலக்கணம் சூ. 104
சுவை. ப. 48. இலக்கணம் சூ. 38. வகை. சூ. 39
சுவைத்துணை. ப. 78 இலக்கணம் சூ. 55
சுவைநிலைக்களன். ப. 227. இலக்கணம் சூ. 234
சுவைப் பாதுபாடு. ப.80. மென் சுவை. சூ. 59. வ. 1,3. வன் சுவை.வ. 2,4. நடுநிலைச்சுவை. சூ. 60
சுவையவிநயம். ப. 230. இலக்கணம் சூ. 243-252
சுவைவிளக்கம். ப. 79. அவி நயச் சால்பு, களன், காலம், சூ.56. சுவையிணைதல். சூ.57
சூத்திரதாரன். ப. 181. இலக்கணம் சூ. 180. வேறு பெயர் தாபகன் சூ.180
செய்யுள். ப. 85. இலக்கணம் சூ.67. காரணப்பெயர் சூ.68.
செய்யுளியக்கம். ப. 87. முதனடை சூ. 69. வ.1 வாரம். வ-2. கூடை. வ-3. திரள். வ - 4.

செயற்பொருத்தம். ப. 83. இலக்கணம் சூ. 64
சேடன். ப. 117. இலக்கணம் சூ. 100
தலைமக்கள். ப. 108. இலக்கணம் சூ. 83. வகை சூ. 84
தலைவர். ப. 109. இலக்கணம் சூ. 85. வகை. சூ. 86,91
தலைவற்குற்றார். ப. 114. இலக்கணம் சூ.94. வ. 7-8. அமைச்சன் வ-2. ஆசான் வ-3. குல குரு முனிவர். வ - 3. விதூடகன் வ-4. விடன்
தலைவியர். ப. 117. இலக்கணம் சூ. 101, 102. வகை சூ. 103-108
தாபகன். ப. 182. இலக்கணம் சூ. 181
தினைநிலைவரி. ப.97 இலக்கணம் சூ. 77 வ. 18-19
திருக்கதிதம். ப. 161. இலக்கணம் சூ. 150 பிறர்கோள் சூ. 151
தீப்பொருளிறுதி. ப. 128. இலக்கணம் சூ. 112
தீரசாந்தன். ப. 111. இலக்கணம் சூ. 58
தீரலலிதன். ப. 112. இலக்கணம் சூ. 90
தீரோதாத்தன். ப. 110. இலக்கணம் சூ. 87
தீரோத்ததன். ப. 111. இலக்கணம் சூ. 86
துயித்தல். ப. 47. இலக்கணம் சூ. 37
துரோடகம். ப. 151. இலக்கணம் சூ. 139
துன்மல்லிகை. ப. 164. இலக்கணம் சூ. 154
தேரீச்சிவரி. ப. 206. இலக்கணம் சூ. 212
நகை. ப. 61. இலக்கணம் சூ. 44 - 45
நகைக்கூத்து. ப. 198. இலக்கணம் சூ. 203 - 204
நகையவிநயம். ப. 233. இலக்கணம் சூ. 245
நடாத்துநர். ப. 180. இலக்கணம் 177. யாவர் ? சூ. 182
நடி. ப. 182. இலக்கணம் சூ. 182
நடிப்பியல்பு. ப.217-270 இலக்கணம் சூ. 224 வ.1-2. பொதிபொருள் சூ. 224 வ. 3-9 சேடன், வ-5. தண்டத் தலைவன் வ-6. தூதர். வ-6
நடிப்பியல்புபுறனடை. ப. 269. இலக்கணம் சூ. 271
நடை. ப. 84. இலக்கணம் சூ. 65 வ-1. வகை. வ. 2-3
நயநிலைப்படலம். ப. 168. இலக்கணம் சூ. 159
நற்பொருளிறுதி. ப. 128 இலக்கணம் சூ. 111
நாடகசாலை. ப.255 இலக்கணம் சூ. 263 வ. 1-12 பொதிபொருள் வ. 12-15
நாடகக்கரிப்பியம். ப. 171 இலக்கணம் சூ. 164
நாடகநூல். ப. 171. இலக்கணம் சூ. 163

நரிடகமியற்றமிழாமாறு.ப. 132 இலக்கணம் சூ. 116
நாடகம். ப. 137. இலக்கணம் சூ. 123-124
நாடிகை. ப. 150. இலக்கணம் சூ. 138
நாட்டியராசகம். ப. 153 இலக்கணம் சூ. 142
நாற்பொருள். ப. 35. இலக்கண வகை சூ. 20. வேறு பெயர் சூ. 21 பிறர்கோள் சூ. 27
நீலக்கருத்து. ப. 76. சுவையின் வேறு பெயர் சூ. 54
நீலை. ப. 250 இலக்கணம் சூ. 257 வகை சூ. 258, 260 உரிமை சூ. 259
நீலைமெயிப்பாடு. ப. 219. இலக்கணம் சூ. 227
நீலைவரி. ப. 97. இலக்கணம் சூ. 77 வ. 10-14
நூல். ப. இலக்கணம் சூ. 10 வ. 4. பொதி பொருள் வ.4-6
நூற்புறனடை. ப. 270 இலக்கணம் சூ. 272
நேபத்தியம். ப. 258 இலக்கணம் சூ. 264. வேறு பெயர் பாசறை சூ. 265
படைப்புவரி. 97. இலக்கணம் சூ. 77. வ. 32-35
பதாகைநீலை. ப. 129. இலக்கணம் சூ. 113. வகை. சூ. 114
பரதநாட்டியம். ப. 196. இலக்கணம் சூ. 201
பரதவாக்கியம். ப. 213. இலக்கணம சூ. 220
பாணம். ப. 140. இலக்கணம் சூ. 126
பாணிகை. ப. 167. இலக்கணம் சூ. 157
பாத்திரசிறப்பியல்பு. ப.132. இலக்கணம் சூ. 115
பாத்திரம். ப. 108. இலக்கணம் சூ. 81. வகை. சூ. 82
பாயிரம். ப. 19. வாழ்த்து. ப. 19. விநாயகர். ப. 20. சூ. 1. முருகக் கடவுள். ப. 20. சூ. 2. நாமகள் ப. 21. சூ. 3. நடராசர். ப. 21. சூ. 4. ஞானகுரு. ப. 22. சூ. 5. தமிழ் வித்யாகுரு. ப. 23. சூ. 6. அவையடக்கம். ப. 24. சூ. 7. இந்நூலியற்றற் காரணம். ப. 25. சூ. 8. ஆக்கியோன் பெயர் ப. 26. சூ. 9.
பாரதி. ப. 176. இலக்கணம் சூ. 172.
பிரகசனம் ப. 146. இலக்கணம் சூ. 134.
பிரகரணம் ப. 139. இலக்கணம் சூ. 125
பிரகரணி. ப. 165. இலக்கணம் சூ. 155
பிரத்தானம். ப. 155. இலக்கணம் சூ. 143.
பிரதிழகம். ப. 44. இலக்கணம் சூ. 34
பிராமணர் (வகுப்பு) ப. இலக்கணம் சூ. 28.

பிரேங்கணம். ப. 157. இலக்கணம் சூ. 147
பிறதலைவரி. ப. 113. இலக்கணம் சூ. 91-100. உபநாயகன் சூ. 91 - வ 2. பீடமர்த்தன். சூ. 91. வ. 2
பின்னுரை ப. 211. இலக்கணம் சூ. 217-218. விலக்கு. 219.
பீடமரீத்தன். ப. 113. இலக்கணம் சூ. 93. வ. 2-4 இலக்கியம் சுக்கிரீவன். வ - 1
புறக்கூற்று. ப. 192. இலக்கணம் சூ. 196.
புறவரி ப. 205. இலக்கணம் சூ. 210
புனைந்துரை. ப. 33. இலக்கணம் சூ. 16
புனைவுமுறை. ப. 215. இலக்கணம் சூ. 222
டெயரீடு. ப. 214. வகை. சூ. 221
பெருமிதத்தவிநயம். ப. 232. இலக்கணம் சூ. 244
பெருமிதம். ப. 59. வகை. சூ. 43
பொதுமெய்ப்பாடு. ப. 220. இலக்கணம் சூ. 228
பொதுவியல்பு. ப. 29-134 பொதிபொருள். சூ. 11
பொதுவியல்பு புறனடை. ப. 134 இலக்கணம் சூ. 117
போய்யுரை. ப. 32. இலக்கணம் சூ. 14
பொருத்தம். ப. 81. இலக்கணம் சூ. 61. வ. 1, வகை சூ. 61, வ-2-3.
பொருள். (நாற்பொருள்) ப.37. இலக்கணம் சூ. 23
மயங்குதிணைநிலவரி. ப.9 7. இலக்கணம சூ. 77. வ. 20. 21
மாநாடகம். ப. 169. இலக்கணம் சூ. 161
முகம். ப. 43. இலக்கணம் சூ. 33
முகமில்வரி. ப. 97. இலக்கணம் சூ. 77. வ. 29-31
முகமுடைவரி. ப. 97. இலக்கணம் சூ. 77. வ. 6-28
முதலிடைகடைக்கூத்துக்கள். ப. 210. இலக்கணம். சூ. 215
முந்நாடகம். ப. 170. இலக்கணம் சூ. 162
மூரிவரி. ப. 97. இலக்கணம் சூ. 77. வ. 15-17
முன்னிலைக்கூற்று. ப. 193. இலக்கணம் சூ. 197
முன்னுரை. ப. 182. இலக்கணம் சூ. 183
மெய்ப்பாடு. ப. 218. இலக்கணம் சூ. 225
மெய்யுரை. ப. 32. இலக்கணம் சூ. 15
யாற்றுவரி. ப. 96. இலக்கணம் சூ. 77. வ. 1-3
யோனி. ப. 33. இலக்கணம் சூ. 17. வேறு பெயர்ஒளி சூ. 18. வகைப்படுத்தல். சூ. 19
வதுப்பு. ப. 40 இலக்கணம் சூ. 28-31
வணிகர். (வகுப்பு) ப. 41. இலக்கணம் சூ. 30.

வரிக்கூத்து. ப. 200. இலக்கணம் சூ. 205. வகை சூ. 206
வரிப்பாட்டு. ப. 94. இலக்கணம் சூ. 76. வகை சூ. 77
வாசகம். ப. 85. இலக்கணம் சூ. 66
வாசிகம். ப. 229. இலக்கணம் சூ. 238.
வாழ்த்து. ப. 178. இலக்கணம் சூ. 175, 176
விட்புலக்கூற்று. ப. 193. இலக்கணம் சூ. 198.
விடன். ப. 117. இலக்கணம் சூ. 99
விதூடகன். ப. 115. இலக்கணம் சூ. 96. விலக்கு சூ. 98
வியப்பு. ப. 67. இலக்கணம் சூ. 49.
வியப்பவிநயம். ப. 236. இலக்கணம் சூ. 248.
வியாயோகம். ப. 140. இலக்கணம் சூ. 127
விருத்தி. ப. 172. இலக்கணம் சூ. 167. வகை. சூ. 168.
விலாசிகை. ப. 163. இலக்கணம். சூ. 153
விளவு. ப. 46. இலக்கணம் சூ. 36
விறல். ப. 220. இலக்கணம் சூ. 229. வகை சூ. 230-232
வீடு. (நாற்பொருள்) ப. 39. இலக்கணம் சூ. 26.
வீதி. ப. 145. இலக்கணம் சூ. 133.
வெதுளி. ப. 65. இலக்கணம் சூ. 48
வெதுளியவிநயம். ப. 235 இலக்கணம் சூ. 247
வேளாளர் (வகுப்பு) ப. 41. இலக்கணம் சூ. 31

சூத்திர முதற் குறிப் பகராதி

முதற் குறிப்பு.	பக்கம்.	முதற் குறிப்பு.	பக்கம்.
அஃதே, ஆங்கிகம்	228	ஆடகமன்றினு	21
அகப்பொருட்கருத்தி	94	ஆடல்பாட	175
அங்கதான்கிற்றூய்	142	ஆதியினியன்ற	25
அங்கத்தொடங்குமு	184	இஃதனுபல்லவி	94
அங்கமொன்றனு	152	இசைப்பப்போதத்	205
அச்சவவிநய	238	இடைப்பொருளுடனே	42
அணங்கேவிலங்கே	73	இதனே, நாடகச்	190
அதுதான், நற்பொரு	127	இதனேப்பாசறை	260
அதுதான், நிலையும்	219	இந்நால்வகைய	230
அதுதான், மெய்ம்மயிர்	222	இம்மையிற்பாத்திர	215
அதுவே, நிற்ற	250	இயற்கைநிலையு	118
அந்தணன்வணிக	139	இரதியென்ப	79
அரங்கினினிகழு	267	இராமற்குற்ற	113
அரசமரபின	204	இருந்திசைக்கோல	253
அரசனீதியு	37	இவற்றையிலாகிய	254
அரண்மனைக்காவ	115	இவ்வியிற்கூறிய	265
அவர்தாஞ்சூத்திர	180	இவ்விரவிநய	248
அவர்தாம், அசுரர்	108	இழிப்பினவிநய	237
அவலச்சுவைத்தா	144	இழுமெனுமோதையி	96
அவலத்தவிய	237	இளிவிழிவசைவு	70
அவலமோகை	160	இன்பச்சுவைமுழு	163
அவற்றுள், எல்லா	251	இன்பமுமறிவு	28
அவற்றுள்முன்னது	34	இன்னிசைப்பாட்டு	153
அவற்றை, ஆக்கம்	31	இன்னிதழ்சுவைத்த	248
அவைதாம், அகந்தை	239	இன்னும்விரிப்பிற்	239
அவைதாம், சாத்து	173	ஈண்டுக்கூறிய	116
அவைதாம், நாடகம்	137	ஈண்டைச்சுவைசில	79
அவைதாம், மக்கட்	35	ஈதிதனீயல்பென்	177
அறம்பொருளாக	173	உடலேப்பற்றி	228
அறம்பொருளின்ப	40	உடனுறையின்பம்	54
அறம்பொருளின்பம்	35	உடைவேற்றுமையி	229
அன்புகாரணமாத்	207	உண்மையாயுலகி	32
அன்றியும், நாடக	136	உபசாதியாகிய	149

முதற் குறிப்பு.	பக்கம்.
உபநாயகன்மு	113
உரனும்வீரமு	112
உரிமையோடரச	268
உருவுமொழுக்கமு	110
உவகைச்சுவையி	231
உவகைச்சுவையினுக்	78
உவகையுநகையு	140
உவகையுமவலமு	80
உவமையும்பொருளு	136
உழுவலன்புமா	55
உளத்தோடுளஞ்சென்	39
உள்ளோன்றலேவலு	33
உறுப்பறைகுடிகோ	65
உறுப்பியல்பென்ப	178
உறுப்பினின்றும்	145
உற்றநாற்பொருளு	40
உற்றுநோக்குழிச்	132
ஊழ்வலியுரைத்த	40
ஊழ்வலியுரைத்தலு	39
எடுத்ததன்மைக்	227
எடுத்துரைகதைதா	43
எடுத்துரைகதையி	127
எதிர்பாராவண	129
எத்தகையோரையு	124
எல்லாந்தானு	178
எவரையேனு	198
எழுவரேயெண்மரே	197
எள்ளல்பகைமை	61
ஐந்திற்குறையா	137
ஐந்தேபாத்திர	159
ஒருநாடகத்தி	169
ஒருபாத்திரமே	145
ஒருபெருவிடயத்	170
ஒருவருய்ப்ப	205
ஒரேதொடைப்பட்ட	191

முதற் குறிப்பு.	பக்கம்.
ஒலிவேறுபாட்டினுங்	229
ஒவ்வொன்றின்கணு	151
ஒளிமிக்கபாத்திரக்	109
ஒளியுமலர்ச்சியு	109
ஒளியும்யோனியு	34
ஒன்பான்சுவையு	138
ஒன்பான்சுவையினு	230
ஒன்றுமுதலாப்	189
ஓதியநிலையை	251
ஓரங்கமேவி	140
ஓவாமூர்க்க	124
கட்புலனின்றச	193
கண்கூடுவெளியே	201
கண்ணினுஞ்செவியினுங்	249
கதைதழ்ச்சியினிற்	115
கதைமெய்யுரையாக்	161
கதையினிகழ்ச்சியிற்	108
கதையினேப்பெய்து	84
கதையினேயாதல்	186
கதையின்றலேவனும்	227
கதையெனப்படுவது	31
கமழுறுவெட்சி	20
கலஞர்கிரம்பிய	24
கல்விதறுக	59
கவிகூற்றினிடையே	171
கவிகூற்றென்பது	107
களத்துறுபலரு	193
களவிறுதியினெலாங்	191
காணுநர்வேட்ட	269
காண்போர்மனத்தைக்	217
காதலிற்றோன்றுங்	202
காய்த்தகதிரினே	47
காரணகாரிய	83
காலவரையறைக்	48
கீர்த்தனந்தானு	93

முதற் குறிப்பு.	பக்கம்.	முதற் குறிப்பு.	பக்கம்.
கீழ்மக்களியல்பிற்	89	தீப்பொருளிறுதி	128
குதித்தாடுறுவது	195	தீரோதாத்தன்	110
குறமும்பள்ளுங்	172	தொழில்பிறிதாக	166
குறையுறவெளியேங்	216	தோற்றுவாய்ச்செய்தலாச்	188
கூத்துக்கூரு	211	நகைச்சுவையவிநய	233
கூற்றெனப்படுவது	192	நகையெனப்படுவ	63
கைக்கிளையன்பி	37	நடியுநடனு	181
கைசிகிவிருத்தி	150	நடித்துக்காட்டு	171
கையாறெய்துபு	208	நல்லொழுக்கத்தை	35
சமநிலைநகையிவை	162	நற்கலைத்தேர்ச்சியு	117
சமநிலையவிநயஞ்	234	நாடகசாலையின்பு	258
சமநிலையொழிசுவை	41	நாடகசாலையின்மு	260
சவனிகைப்பெயரிய	152	நாடகசாலை	226
சற்குணஞ்சான்ற	123	நாடகத்தலைவ	128
சாதியென்பது	135	நாடகத்தி	165
சாதிவகையினு	147	நாடகத்திற்கெழி	172
சிந்துமானந்தக்	105	நாடகத்தெங்கணு	129
சிறந்தனசில்பொருள்	134	நாடகநீதியை	211
சிறப்பியல்பமைதி	135	நாடகநூலு	76
சூருணைதலைவியு	157	நாடகந்தன்னைநடித்	180
சுவையேகுறிப்பு	225	நாடகந்தன்னைநன்	182
சுவையையேன்மே	79	நாடகப்புலவ	107
சூத்திரதாரனுஞ்	212	நாடகப்பேருறுப்	188
சொல்லியவன்றியும்	269	நாடகமுடிவி	213
சொற்றநடியே	182	நாடிகைதுரோடகங்	149
தகவுறுதலைவனுஞ்	167	நாலேழ்நலனு	117
தயைபொறைதயங்கு	64	நால்வகைப்பதாகை	169
தலைமக்கடமது	214	நால்வர்தலைவியர்	156
தலைவற்குற்றூர்	114	நாற்றுமுதலாக்	45
தலைவன்றீரோ	156	நிலனிகர்பொறையு	111
தலைவியர்தாமுஞ்	123	நிலையெனப்படுவது	250
தனித்தனிவேறெணத்	141	நுகரத்தகுவ	220
தாளவியல்பொடு	200	நுகர்ச்சியுள்ளளவு	219
தானேதனக்குரை	192	பகருமோரிடத்தினே	190
தீருமொழியெடுத்து	162	பகர்ந்தசாதியுட்	167

முதற் குறிப்பு.	பக்கம்.
பண்ணுந் திறமும்	90
பண்ணெடுகலந்து	86
பயனின்றுபல்காற்	82
பருந்கர்நாப்பட்	255
பல்லவியோடனு	93
பல்வகைச்சுவையினும்	220
பல்வகைத்தாதுவி	85
பல்வகைப்பட்ட	155
பழையனகழிதலும்	270
பன்னியசேடன்	117
பாத்திரங்கட்கெலாம்	108
பாத்திரச்சிறப்பியல்	132
பாரியலும்பைங்	26
பாவினைசான்ற	196
பாவைக்கூத்தினுட்	181
பிரிந்துறைபோழ்திற்	206
பின்னுரையெடுத்துப்	213
புகன்றநாற்றலெவ்ரு	113
புதுமைபெருமை	67
புலங்களிற்பற்றறப்	63
புலவன்கூற்றிற்	171
புலனேசெல்வம்	51
புறக்கூற்றென்பது	192
பூவளர்கொன்றைப்	20
பெரியோர்தலெவரா	168
பெருமிதஞ்சமநிலை	41
பெருமிதத்தவிநயம்	232
பேசுந்தமிழிற்	85
பொதுவியல்பெனறது	29
பொய்யுரையென்பது	32
பொருத்தமென்ப	81
பொருந்துறுமாசை	72
பொருளும்பொறியும்	223

முதற் குறிப்பு.	பக்கம்.
பொருள்பொருளாகப்	174
பொறுமைசான்ற	123
மடந்தைதெரிவை	125
மதுரைமாநகரிற்	23
மற்போர்விற்போர்	157
மற்றையகுணத்தினும்	111
மனவேறுபாட்டின்	230
மனனிகழ்பெற்றி	50
யாணர்ஞான	21
மானெனமருளு	143
மிகவுந்தாழ்ந்து	87
முதலிடைகடையெனு	210
மூன்றைநற்றவத்தி	22
மூளத்தன்முதலா	44
முற்படக்கிளத்து	182
முற்றினின்ற	46
முனிவர்தேவர்	146
முன்னேமூன்றும்	176
மூப்பேபிணியே	68
மெய்க்கட்பட்டு	218
மெய்யுரைதன்னெடு	33
மென்சுவைப்பாலவும்	81
வரிப்பாட்டும்மிசைப்	94
வரியெனப்படுவது	200
வருகெனவந்து	203
வாழ்த்துக்கூறுவோன்	180
வாழ்த்துநாடாத்துநர்	188
விடன்றணிலீலை	164
வியப்பினவிநயம்	236
வியப்புமொழிநிலை	194
வீணைகாலரீட்	83
வெகுளியவிநயம்	235
வேறுபாத்திரம்	116

மேற்கோள் செய்யுட் முதற்குறிப் பகராதி

(உரையாசிரியர் எடுத்தாண்டவை)

அக்கோலேழகன்	263	இன்பவனப்பு	100
அக்கோலொருகோ	263	இன்றுயிலுணர்ந்தோ	244
அகழ்வாரைத்	111	உச்சிப்பொழுதின்	245
அடையல்குருகே	104	உண்மைநிலை	70
அதுலநித்யாநந்த	133	உயர்ந்தசமதலத்	91
அந்தணரென்போ	235	உருட்டுவெண்ண	102
அம்மேயுன்செங்கை	105	உரையிடையிட்ட	134
அம்மேயென்சொலை	105	உலகின்உயிர்கள்	184
அரங்கினுயரமு	179,264	உலகெலாநின்	187
அரிதரங்கிற்	267	உவந்தோனவிநய	243
அருளென்னு	111	உவர்ப்பிற்கலக்க	258
அவற்றுள்மாற்ரு	199	உவமையும்பொருளும்	136
அவனேதானே	226	உழுதுண்டுவாழ்வரே	44
அழலணங்குதாம	95	உள்வரிக்கொண்டங்	204
அழற்றிறம்பட்டோ	247	உள்வரிக்கோலத்து	204
அழுக்காறுடையோ	243	உள்வரியென்பது	204
அறுவகைநிலையு	250	உள்ளோற்குள்ளது	34
அன்பெனப்படுவது	111	உறையுட்குடிகை	204
அன்றிஇன்றி	82	ஊதுதல்காமத்திற்	56,121
ஆகம்பலமருவு	71	எடுத்தவியலு	101
ஆகையின்மாதே	106	எடுத்துக்கோளே	208
ஆங்கு, ஒருமுக	266	எடுத்துரைத்த	127
ஆடலும்பாடலும்	258	எண்ணியநூலோ	257
ஆடன்மறந்திட்	106	எண்ணியமூன்று	225
ஆதிப்பாவீருத்தி	253	எப்போதென்ஞை	58
ஆவல்கூர்சுவீ	126	எனவீவைதாவத்	200
ஆவியோநிலையிற்	61	என்றனிதயத்தி	57
இப்படித்திரும்பி	68	என்றனுடனிறத்தை	54
இரவிதன்னொளி	88	என்றென்றலைவனைக்	106
இருநிலமாந்தர்க்	64	என்னுதன்வந்திடுவா	58
இருந்திசைக்கோலம்	154	என்னே! யுலகம்!	64
இவற்றையிலாசிய	154	ஏச்சுக்கிட்டு	89
இன்பமொடுபுணர்ந்	243	ஏனைவிவ்வேவ	58

ஓடிவிளையகன் 57
ஓத்தவணுமுத 262
ஓருநிறப்பாட்டினும் 133
ஓருநாட்புனிற்றுப் 69
ஓழுகுறுகிணமுடைய 103
ஓழுகுவண்ண 99
ஓளியாகியுலகாகி 96
ஓன்றுமிருபது 92
ஓங்கியமூங்கி 91
ககரங்கொட்டே 92
கட்புலனின்றச 146
கடல்புக்குயிர் 103
கண்கூடென்பது 203
கண்ணிறைந்த 232
கண்ணேட்டமெனுங் 232
கண்ணேவுற்றே 246
கயலெழுதி 102
கலவிதனிற் 127
கலையெலாநிறைந் 52
கவிதையேபொரு 187
களித்தோனவிநயங் 242
கறையொன்றிய 58
கன்னியரெல்லா 53
காட்சிவரியென்பது 208
காண்வரியென்பது 203
காமவிந்தைசேர் 187
காணுறுபூவின் 185
கீளர்வரியென்பது 206
குதித்தாடுறுவது 158
குரவையென்பது 198
குழலினும்யாழினுங் 259
குற்றெழுத்தியலாற் 101
குறிஞ்சிபாலை 38
குன்றெறுத்திடுவாகு 53
கூறியவுறுப்பிற் 264
கைக்கிளையைந்திணை 38
கைபிசையாவாய் 236
கையினிற்போந்தி 56
கொஞ்சியமொழியிற் 247
கொட்டியளக்கினு 59
கொட்டுமசையுங் 92
கோவைவகப்படுத்தி 131
சிந்தையுடம்பட்டோ 244
சீதமுற்றோனவிநயஞ் 247
சுண்ணநான்கடி 195
சுத்தரகலாவதி 88
சூழ்மதிப்பிறையி 187
சேத்தோனவிநயஞ் 245
செய்யாய்நீயுன் 73
சொல்லியவன்றியும் 248
சொற்றநின்ற 57
சோலைதன்னிற் 104
ஞஞ்ஞையுற்றே 244
ஞாலமிசைத் 73
தங்கியினடையுஞ் 184
தந்திரத்தரங்கிங் 257
தலைநோவுற்றே 246
தவமருகக் 127
தள்ளரியமுல்லை 55
தாதவிழ்மாமலர் 66
தாமரையேகல் 53
தீங்கண்மாலை 104
திடத்தொடு 86
திலகமுமளகமு 209
தீங்கரும்பீன்ற 60
துஞ்சாநின்றே 244
துறைமேய் 102
துன்பமெலாமற 53
தெய்வமுற்றே 243
தேமாவெதிர் 185
தேர்ச்சியென்பது 207
தோட்டலர்குழவி 204

நந்தர்தங்குலத் 62
கன்னீர்த்திலத்தின் 103
நாடகசாலையை 218
நாடகப்பேருறுப் 145
நாடுவேண்டேன் 69
நாணமுற்றோனவி 246
நிலமுதலாகிய 101
நிற்றலியங்கலிருத்தல் 218
நிறையெனப்படுவது 122
நோண்டிப்போட்ட 89
பகருமோரிடத்தினே 164
பண்புகொள் 74
பத்தங்கத்திற் 190
பதுமுகமுற்கட் 252
பரவியசந்தியன்றி 198
பல்லிருங்கூந்தன் 59
பல்வகையுருவமும் 199
பற்கழன்றுகண்ணி 69
பன்னூள்கழித்த 252
பனவர்குலமுப்பொ 213
பனித்தலைப்பட்டோ 245
பாட்டுடைத்தலைவன் 101
பாடகச்சீறடிப் 72
பாடுபணியில 199
பாண்டியநாட்டா 66
பாண்டியன்றென் 183
பாவைக்கூத்தினுட் 159
பாவோடணை த 90
புண்கொண்ட 103
புண்ணியநெடுவரைப் 262
புறவரியென்பது 205
பூந்தளிர்க்குழையும் 185
பெண்ணைப்பிறப்பா 71
பேரியாழ்பின்னு 92
போய்யில்காட்சிப் 242
பொறையெனப் 111
போந்திகொலை 72
போவாய் வருவாய் 100
மங்கல மங்கலத் 106
மடியினவிநயம் 242
மணம்புரிந்து 126
மல்லயுத்தமாவீர 60
மலர்மணம்போ 179
மழைபெய்யப்பட் 245
மற்றதற்குயிர் 194
மறந்து தம்மை 103
மன்னுயிர்கள்மகிழ் 214
மாரவேள்போலு 52
மீன்னனையாளையிவ் 36
மினைநேருகின்ற 88
முற்படக்கிளத்து 158
முன்னூளுஞற்று 71
முன்னியவெழினீ 267
முடியுபுகழினுற்கு 199
மேலசைத்திழிந்து 191
மோதுமுதுதிரையான் 101
யார்க்குமிப்பெரியர் 62
ராசாமகளை 89
வரியெனப்படுவது 201
வருத்தமுற்றோ 246
வருவர்கொலருள் 106
வள்ளையிற்றரிமா 223
வனப்புடையா 102
வாசிகைவைத்து 260
வாரல்சகோரமே 104
வாரார்கொங்கை 87
வான்முகில்கள் 214
வானிறத்த வயிரமணி 52
விண்டலையாவர் 100
விதவிதமாய்க் 54
விருந்தும் வென்றியும் 131
விதுநிகர்முகனு 88

வீசுமிளந்தென்றல்	55	வெவ்வரவின்	65
வேகுண்டோனவிநயம்	242	வென்றிவசையே	199
வெட்சிநிரை	161	வென்றிவிளங்கும்	56
வெப்பினவிநயஞ்	247	வேட்கையொருதலை	223

மேற்கோள் நூல்களின் அகராதி

1. இலக்கணவிளக்கவுரை
2. இழிசினர்வழக்குரை வரையறை
3. கலாவதி
4. கலித்தொகை
5. சரசாங்கி
6. சிங்காரரசமஞ்சரி.
7. சிந்தாமணி
8. சிலப்பதிகாரம்
9. சிலப்பதிகார வடியார்க்கு நல்லாருரை
10. சிலப்பதிகார வரும்பத வுரை
11. சீபுராணம்
12. சுகுணசுகேசர்
13. சுத்தாநந்தப்பிரகாசம்
14. சூர்ப்பணகை
15. சூளாமணி
16. ஜோதிமாலை
17. தசரதன்தவறு
18. தஞ்சைவாணன்கோவை யுரை
19. தண்டியலங்காரம்
20. தனிப்பாசுரத்தொகை
21. தாமரைநாண்மலர்
22. திருக்குறள்
23. திருக்கோவையார்
24. திருமுருகாற்றுப்படை
25. தொல்காப்பியம்
26. தொல்காப்பிய நச்சினர்க் கினியம்
27. ஷே பேராசிரியம்
28. நளவெண்பா
29. நன்னூல்
30. நாற்கவிராஜநம்பியகப் பொருள்
31. பாவலர் விருந்து
32. பிங்கலநிகண்டு
33. பிரயோகவிவேகவுரை
34. மகாநாடகம்
35. மண்ணியல்சிறுதேர்
36. மணிமேகலை
37. மதிவாணன்
38. மத்தவிலாசப்பிரகசனம்
39. மனோன்மணீயம்
40. மாருதிவிஜயம்
41. மாலதிமாதவம்
42. மானவிஜயம்
43. முருச்சகடிகம்
44. முத்திராராட்சசம்
45. முராரிநாடகம்
46. யாப்பருங்கலவிருத்தி
47. ரூபாவதி
48. வல்லீபரிணயம்
49. விக்கிரமோர்வசீயம்
50. வில்லிபுத்தூரார்பாரதம்
51. வீரசோழியம்
52. வீரசோழியவுரை
53. வெனிஸ்வணிகன்
54. ஹநுமாந்நாடகம்
55. ஹாஸ்யார்ணவம்
56. Antony and Cleopatra
57. As you Like It
58. Hamlet
59. Keats' Poetical Works
60. Othello
61. Tennyson's Poetical Works

The B. N. Press, Educational Printers, Mount Road, Madras